EISSN 2456-5571

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 2

FEBRUARY 2025 | E-ISSN: 2456-5571

## திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி

தெ. கள்ளிகுளம்

தேசியதர மதிப்பீட்டில் “A” அங்கீகாரம் பெற்றது

தமிழ்த்துறை (S.F) & அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் வெளியிடும் பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

# இலக்கியமும் இயற்கையும்

தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் அ. சவரிராயம்மாள்**

**முனைவர் சு. பால்மோகன்**

// BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

Vol.9 | Special Issue 2 | February 2025 | E-ISSN: 2456-5571

CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

# BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India


## SPECIAL ISSUE EDITORIAL BOARD


**முனைவர் அ. சவரிராயம்மாள்**

(ஒருங்கிணைப்பாளர்)

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**முனைவர் சு. பால்மோகன்**

*(ஒருங்கிணைப்பாளர்)*

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

# TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE

(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )

**T. KALLIKULAM - 627 113, Tamil Nadu.**

**E-mail : tdmnsoffice@gmail.com**

**Office : 04637 - 220250**

**V.P. RAMANATHAN NADAR** M.Com., M.B.A., Secretary & Correspondent

**Dr. (Major) D. RAJAN** M.Sc., M.Phil., Ph.D., Principal


Ref.No. : ......................... Date : 11/01/2025

## வாழ்த்துரை

நாம் நம் வாழ்நாள் முழுவதையும் இயற்கையோடு இயைந்து தான் வாழ்கிறோம். ஆனால் அதன் அழகைப் பற்றி உணர்வது அரிது தான். நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாக போற்றினார்கள். ஆனால், இன்று நம்மவர்கள் இயற்கையைச் சீரழித்து வருகின்றனர். அதனால் பருவ நிலை மாறுபாடுகள் ஏற்பட்டு மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இதனால் நாம் இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிறது. இன்றைய இளைஞர்களிடம் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக "இலக்கியமும் இயற்கையும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் காரணிகளுள் முதன்மையானது. இயற்கை நம் பாரத நாட்டின் பிரதான வளம் என்பதை எல்லா விதமான மக்களும் உணரும் விதம் தொகுக்கப்பட்டுள்ள 'இலக்கியமும் இயற்கையும்' என்ற இந்த ஆய்வு நூல் சிறக்க வாழ்த்துகிறேன்.

SECRETARY
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T.KALLIKULAM.

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**
(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )
(Affiliated to Manonmaniam Sundaranar University)
**T. KALLIKULAM - 627 113**
Tirunelveli District, Tamil Nadu.

**Dr.** (Major) **D. RAJAN, M.Sc., M.Phil., Ph.D.,**
Principal

Off : 04637-220250
E-mail : tdmnscollege@rediffmail.com
tdmnscollege@gmail.com

Date : .......................

## வாழ்த்துரை

இலக்கியமும் இயற்கையும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சிந்திக்க வைக்கும் புதிய அறிவுகளை எடுத்துக் கொடுக்கின்றது. படிக்கத் தொடங்கியவுடன் ஒரு புதிய உலகிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இலக்கியமும் இயற்கையும் மனிதன் உள்ளத்தின் ஆழங்களை வெளிப்படுத்துகின்றன. தொகுக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் இயற்கையின் அழகும் அதன் வெற்றிடங்களிலும் இலக்கியத்தின் நுணுக்கங்களை நாம் அறிந்ததைத் தாண்டி ஒரு புதிய பார்வையை நமக்கு அளிக்கின்றன. மனிதனின் உள்ளார்ந்த சிந்தனைகளை எழுப்ப ஒரு மாற்றியமைந்த உலகைக் காண்பிக்கின்றன. சூரிய மண்டலத்தில் புதிய ஒரு ஒளியைக் காட்டி ஒவ்வொருவரின் உள்ளத்திற்கும் எளிதாக அணுகும் அழகான ஒரு பயணத்தைத் தருகிறதென நம்புகிறேன். இயற்கையின் புதுமையை இலக்கியத்தின் வளமையை நாடும் அனைவருக்கும் இந்த ஆய்வுக் கட்டுரைகள் ஓர் அர்ப்பணிப்பு மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். ஆய்வுக்கட்டுரைகள் சிறக்க வாழ்த்துக்கள்.

11.1.2025

PRINCIPAL
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T. KALLIKULAM.

# வாழ்த்துரை

‘‘வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு…..’’ அந்தத் தமிழ்நாட்டின் கல்விக் கடவுளாகப் போற்றப்படுபவர் நமது முன்னாள் தமிழக முதல்வராகிய காமராஜர் ஐயா அவர்கள். அவரின் கல்விக் கொள்கைகளை நினைவு கூறும் வகையாக தென் தமிழகத்தின் சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி தெக்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மற்றும் அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 14.02.2025 இன்று நடைபெறுகின்ற இந்த கருத்தரங்கு வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றாக திகழ்கின்றது. ஏனெனில் இக்கருத்தரங்கினை நடத்துவதற்கு இவர்கள் கடந்து வந்த பாதை மிகக் கடினமானது. அந்த வகையில் இவர்களின் வரலாற்றில் 2018ஆம் ஆண்டு ‘‘கோயிற்கலை பன்முகப் பார்வை’’ மற்றும் 2019 ஆம் ஆண்டு ‘‘தென் தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்’’ என்ற இரு பயிற்சிப் பட்டறைகளையும் மேலும் 2020இல் ‘‘புறநானூற்றுப் பொருண்மை’’ மற்றும் ‘‘சங்க இலக்கியமே அறிவியலாக’’ என்ற இரண்டு நாள் இணைய வழி கருத்தரங்கினையும் நடத்தியுள்ளது. தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவானது கிராமியக்கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து 2022இல் ‘‘நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்’’ என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தியுள்ளனர். அக்கருத்தரங்கில் நானும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு திறவுசொல் பேச்சாளராக கலந்ததையிட்டு மனம் பேருவகை கொள்கின்றது. அதனைத் தொடர்ந்து ‘‘வனைதலும் முடைதலும்’’ என்ற தலைப்பில் மாநில அளவிலான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு ‘‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’’ என்ற தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2024ஆம் ஆண்டு கிருஷ்ணாபுரம், ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் ஒருநாள் தொல்லியல் பயிற்சிப் பட்டறையையும் நடத்தியது. இவ்வாறு ஏராளமான கருத்தரங்குகளையும், பயிற்சிப் பட்டறைகளையும் சிறந்த கருப்பொருள்களைக் கொண்டு நடத்திய தன் பயனாகத் தற்போது 2025 ஆம் கல்வியாண்டில் ‘‘இலக்கியமும் இயற்கையும்’’ என்ற பொருன்மையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கிலும் நான் திறவுச்சொல் பேச்சாளராகக் கலந்து கொள்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கருத்தரங்க குழுவாகக் கூட்டு முயற்சியில் பன்னாட்டுக் கருத்தரங்கை திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்ற கொடைவள்ளல்களாகிய திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தலைவர் திரு.ஆர்.கே.காளிதாசன் நாடார் அவர்களுக்கும், செயலாளர் மற்றும் தாளாளர் திரு.வி.பி.ராமநாதன் நாடார் அவர்களுக்கும், பொருளாளர் திரு.ஏ.செல்வராஜ் நாடார் அவர்களுக்கும், கல்விக்குழு உறுப்பினர் திரு.எஸ்.கே.டி.பி.காமராஜ் நாடார் அவர்களுக்கும், முதல்வர் முனைவர் மேஜர் டி.ராஜன் அவர்களுக்கும், அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ.புஷ்பராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிபிரிவு)திருமதி சு.கிரிஜா அவர்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்பட்டு ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று அவற்றினைச் சிறந்த முறையில் சரிபார்த்து சிறப்பாகக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கின்ற தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்களான முனைவர் அ. சவரிராயம்மாள் மற்றும் அன்பு நண்பர் முனைவர் சு. பால் மோகன் அவர்களுக்கும் கருத்தரங்க

ஆலோசனைக் குழுவைச் சார்ந்த முனைவர் செ. சோனாகிருஷ்டி, முனைவர் சு. முருகவேல் மற்றும் திருமதி.டே.கிரேஸ் புஸ்பா ஜுலியட் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவு அறிஞர்களின் கூட்டுமுயற்சியால் உருவான இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் மிகவும் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவ்வாறே தொடர்ந்தும் திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் கல்விப்பணி தொடர வேண்டும் அதன் மூலம் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மென்மேலும் ஏராளமான பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி தமிழுக்கும் ஆய்வுத்தளத்திற்கும் தங்கள் சேவை தொடர வேண்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்ப்பணி.

**முனைவர் சி. சூரியகுமார்.**
முதுநிலை விரிவுரையாளர்,
இசைத்துறை (வாய்ப்பாட்டு),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Dr.A. PUSHPARAJ Ph.D.,**
Associate Professor & IQAC Coordinator,
Department of Zoology,
T.D.M.N.S.College,
T. Kallikulam - 627 113, Tamil Nadu.

Phone : 04637-220250 (Off)
Mobile : +91-9994097004
E-mail : tdmnspushparaj@gmail.com

## வாழ்த்துரை

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று உயிரினும் மேலான தமிழ்த்தாயை வணங்கி இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கும் தகுதியுடையன. இவ்வுலகில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கிலும் சமூகத்தில் உள்ள அனைவரும் **'இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்'** என்பதை உணரும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களின் சரியான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதற்கு இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் தலைமுறைகளுக்கான பொக்கிஷம்.

முனைவர் அ. புஷ்பராஜ்
(அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்)

Residence: No: 7, Jeyam Cottage, Karunya Nagar, Vallioor - 627 117, Tirunelveli (Dt.), Tamil Nadu, India.

# வாழ்த்துரை

பயிற்றிப் பல கல்வி தந்து -இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றான் முண்டாசுக்கவி பாரதி. கல்வி மூலமே சமூகம் உயர்வு காண முடியும் என்பதை அழுத்தமாக பதிவு செய்தவர்.அவர்.அந்த வகையில் எமது திருநெல்வேலி தெ'ண மாற நாடார்சங்கமானது ஏழை மாணவர்களின் கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இந்த கல்விகூடத்தை களிகையில் ஆரம்பித்தனர். சான்றோர் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி. இன்று 53 ஆண்டுகளைக் கடந்து பொன்விழா கண்டு பொலிவுபெற்று திகழ்ந்து வருகின்றது. 2014 - 2015 ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளங்கலைத் தமிழ் பாடப்பிரிவானது நிர்வாகம், முதல்வர், அலுவலர்கள், மாணவர்களின் தனித்தன்மையாலும் திறமையாலும் பல்கலைக்கழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பல சாதனைகளையும் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. வருடம் தோறும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் தேசிய, மாநிலக் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் கலை இலக்கிய நிகழ்வுகளையும், போட்டிகளையும் நிகழ்த்தி அசத்தி வருகின்றது. பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் வருடம் தோறும் எமது துறை மாணவர்கள் இடம் பெற்று அலங்கரித்து வருகின்றனர். இதுவரை இரண்டு தங்கப்பதக்கங்களும் இருபத்து இரண்டிற்கும் மேற்பட்ட சிறந்த இடங்களையும் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்று கல்லூரிக்கும் துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். கலை இலக்கியப் போட்டிகளிலும் சாதனைகளை பெற்று செம்மாந்து நிற்கிறது, எமது தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் அ.சவரிராயம்மாள் முனைவர் சு. பால் மோகன் ஆகியோர் இலக்கியமும் இயற்கையும் என்ற பொருண்மையில் தலைப்பினை தேர்ந்தெடுத்து கருத்தரங்கினை நடத்த எண்ணம் உதயமாகியது வியப்பிற்குரியது. பாராட்டிற்குரியது. இயற்கை பற்றிய சிந்தனைகள் கட்டுரைகளை எழுதியுள்ளவர்களின் எண்ணங்களில் விதைத்ததே இக்கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றியாகும். சங்க இலக்கியங்கள் முதல் இக்காலம் வரை உள்ள இலக்கியங்கள் வரை கருத்துக்களை ஆய்ந்து எடுத்து கட்டுரைகளை எழுதியுள்ளனர். அனைத்துக் கட்டுரைகளும் அருமை. கதம்ப மாலையாகத் தொடுக்கப்பட்டுள்ள இக்கட்டுரைப் பூக்கள் தமிழ்த்தாயினை அலங்கரிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை

நன்றி!

**திருமதி சு.கிரிஜா**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு)
திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்

# தொகுப்புரை

தமிழகத்தின் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் தாலுகாவில் உள்ள தெ.கள்ளிகுளத்தில், திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியானது 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கடந்து பவள விழாவை நோக்கி பொலிவுடன் நடைபயில்கிறது. 54 ஆண்டுகள் கிராமப்புற மாணவர்களின் மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கல்விப்பணியை செய்து தேசிய தரமதிப்பீட்டில் 'A' பெற்று திகழ்கின்ற எமது கல்லூரியில் 2014-2015 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத்தமிழ் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

2018 ஆம் ஆண்டு 'கோயிற்கலை- பன்முகப்பார்வை' மற்றும் 2019 ஆம் ஆண்டு 'தென்தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்' என்ற பயிற்சி பட்டறையும் மேலும் 2020 இல் 'புறநானூற்றுப் பொருண்மை', 'சங்க இலக்கியமே அறிவியலாக' என்ற இரண்டு நாள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கத்தினையும் நடத்தியுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 'நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்' என்ற தலைப்பிலும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்' என்ற தலைப்பிலும் இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்கினை போதி பன்னாட்டு ஆய்விதழுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

'இலக்கியமும் இயற்கையும்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற இருக்கிறது. பண்டையத் தமிழ்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதை உலக மக்கள் அறியும் நோக்கில் இக்கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. தமிழ்த்துறையோடு கல்லூரி அகத்தர மதிப்பீட்டுக்குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பல்வேறு தரப்பினரையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

'இலக்கியமும் இயற்கையும்' என்ற பொருண்மையில் அமைந்த இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் சங்க இலக்கியத்தில் இயற்கை, தொல்காப்பியத்தில் இயற்கை, காப்பியங்களில் இயற்கை, சிற்றிலக்கியங்களில் இயற்கை, பக்தி இலக்கியங்களில் இயற்கை, நீதி இலக்கியங்களில் இயற்கை, நாட்டுப்புற இலக்கியத்தில் இயற்கை, இக்கால இலக்கியங்களில் இயற்கை இது போன்ற பல பொருண்மைகளில் ஆய்வுகளை அமைத்துக் கொள்ள நினைத்தோம். அதனடிப்படையில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டு தரமான 100 ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரைகளை நான்கு தொகுதியாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ் இலக்கியக் களங்களான இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற இலக்கியம், நீதி இலக்கியம், நவீன இலக்கியம் என பல்துறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்ட எங்களுக்கு இது மனநிறைவைத் தந்தது. எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எண் திசையிலிருந்தும் கட்டுரைகளை அனுப்பித் தந்தனர். தமிழ் ஆய்வுலகில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு தொய்வு இல்லை என்று நம்பிக்கையூட்டிய அத்தனை நல் நெஞ்சங்களையும் மனதார வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்.

'இலக்கியமும் இயற்கையும்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவதற்கு அனுமதித் தந்த கல்லூரி மற்றும் சங்கத் தலைவர் திரு.R.K.காளிதாசன் நாடார், சங்க செயலாளர் திரு.T.ராஜகுமார் நாடார், பொருளாளர் திரு.A.செல்வராஜ் நாடார் மற்றும் கல்லூரி செயலர் & தாளாளர் திரு.V.P.இராமநாதன் நாடார், கல்லூரிக்குழு உறுப்பினர் S.K.T.B.காமராஜ் நாடார், கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர்.D.ராஜன் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். மேலும் இக்கருத்தரங்கு நடத்த தீர்மானித்தது முதல் விழா நடைபெறுவதற்கு உரிய நாள் வரை பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் A.புஷ்பராஜ் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்புற அமைய உதவிப் புரிந்த தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) திருமதி.சு.கிரிஜா மற்றும் எமது துறை பேராசிரியர்களுக்கும் நூலாக வடிவமைத்த போதி பன்னாட்டு ஆய்விதழ் நிறுவனர் முனைவர் S.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். மேலும் கருத்தரங்கிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மகிழ்வுடன்

**முனைவர் அ.சவரிராயம்மாள்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**முனைவர் சு.பால்மோகன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

# BODHI
# INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol. 9** **Special Issue 2** **February 2025** **E-ISSN: 2456-5571**


**Aim & Objectives**

Academic Excellence in research is continued promoting in research support for young Scholars. Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in an multidisciplinary views, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of Books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**


| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 1 | மணிக்காக்கையின் மாண்பு<br>**முனைவர் ஆ. சுலோச்சனா** | 1 |
| 2 | கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய “கொஞ்சம் தேநீர் நிறைய வானம்” என்ற கவிதை நூல் காட்டும் இயற்கை<br>**திருமதி. பெ. சர்மிளா** | 8 |
| 3 | சங்க இலக்கியத்தில் மரம்-குறித்த வழிபாட்டு மரபுகள்<br>**இரா.பிரதீப் ராஜ் &**<br>**முனைவர் அ. மரிய செபஸ்தியான்** | 12 |
| 4 | ‘ஆனைமலை’ மலைவாழ் மக்களின் இயற்கையோடியைந்த வாழ்வு<br>**திருமதி. க. ராமு** | 18 |
| 5 | சிகரங்களை நோக்கிய இயற்கை<br>**முனைவர் மு. தமீம் மன்சூர்** | 22 |
| 6 | விஜயா கிருஷ்ணன் சிறுகதைகளில் இயற்கை<br>**பா. தமிழ் செல்வி &**<br>**முனைவர் மு. சாந்தினி** | 29 |
| 7 | ஔவையாரும் இயற்கையும்<br>**முனைவர் வ. மேரிகுயின்** | 34 |
| 8 | மதுரையின் இயற்கை அழகு<br>**முனைவர் சு. மலர்விழி** | 37 |
| 9 | இயற்கை உயிர்களின் அகவாழ்வியல்<br>**முனைவர் இரா. அச்சுதன் &**<br>**இரா. ஜெயலட்சுமி** | 41 |
| 10 | தமிழர்களின் இயற்கை விஞ்ஞானமும் வானியல் அறிவும்<br>**முனைவர் நா. முருகன்** | 47 |
| 11 | சங்கத்தமிழர் வாழ்வில் நீர்<br>**முனைவர் கே. சி. ஆர். ஷிஜி** | 51 |
| 12 | ‘சிகரங்களை நோக்கி’ புதினத்தில் இயற்கையின் கோணம்<br>**பேரா. ஜ. ஹர்ஷத் பாஷா** | 56 |
| 13 | மணிமேகலை காப்பிய உருவாக்கத்தில் இயற்கை<br>**ர. விஜி &**<br>**முனைவர் இரா. அச்சுதன்** | 60 |
| 14 | சங்க இலக்கியத்தில் மலர்கள்<br>**ரா. அர்ச்சனா** | 66 |
| 15 | வண்ணதாசன் படைப்புகளில் இயற்கைச் செய்திகள்<br>**ஏ. ஷைனி** | 71 |

| | | |
|---|---|---|
| 16 | நாலடியார் சுட்டும் இயற்கை உவமைகள்<br>**முனைவர் ஞா. செந்தில்** | 77 |
| 17 | குறுந்தொகையில் இயற்கை வளமும் வருணனையும்<br>**முனைவர் அ. ம. ஜெ. ரஃபீக் பாஷா** | 81 |
| 18 | சிலப்பதிகாரத்தில் இயற்கை சித்தரிப்பு<br>**ஆ. சுதா** | 86 |
| 19 | எட்டுத்தொகை அக இலக்கியங்களில் மரங்கள்<br>**செ. சிவசூர்யா** | 90 |
| 20 | அண்மைக்காலச் சூழலியல்சார் தமிழ்க் கட்டுரைப் பனுவல்களின் உள்ளடக்கப் பொருண்மைகள்<br>**முனைவர் ஆ. பூமிச்செல்வம்** | 95 |
| 21 | சங்கப் பெண்பாற் புலவர்கள் கூறும் இயற்கை<br>**திருமதி. ம. மாதவி** | 101 |
| 22 | தொல்காப்பியம் காட்டும் இயற்கை<br>**த. மகேஸ்வரி &**<br>**முனைவர் தா. ஜெயந்தி** | 105 |
| 23 | தொல்காப்பியத்தில் இயற்கை<br>**ஜெ. செந்தில்குமாரி** | 109 |
| 24 | நாட்டுப்புற இலக்கியங்களில் இயற்கை<br>**சு. முத்துமாரி** | 112 |
| 25 | நற்றிணையில் இயற்கை<br>**முனைவர் கு. அழகேசன்** | 115 |

# மணிக்காக்கையின் மாண்பு

**முனைவர் ஆ. சுலோச்சனா**
*முதுகலைத் தமிழாசிரியர்*
*எம்.சி.என்.மேல்நிலைப்பள்ளி, தி.நகர், சென்னை*

**ஆய்வுச் சுருக்கம்**

*மக்களின் கலாச்சாரம், பண்பாடு வாழ்வியல் இவற்றோடு இணைந்து விட்டப் பறவை காக்கை. அண்மை காலத்தில் நான் பணிக்குச் செல்லும் போதெல்லாம் சாலையில் ஓரிரு காக்கைகள் இறந்து இடப்பதைக் காண நேரிடுகிறது. மிகவும் மனம் வருத்தமளிக்கிறது. முன்பெல்லாம் காக்கை இறப்பு என்பதும், அதன் உடலை நாம் காண்பது என்பதும் அரிய நிகழ்வாக இருந்தது. ஆனால், இப்போது இயல்பாகி விட்டது. இந்த தாக்கம் தான் இக்கட்டுரை எழுத என்னைத் தூண்டியது. இக்கட்டுரையில் முன்னுரை, காக்கையின் பெயர், பெயர்க்காரணம், வகைகள், உணவு, வாழ்க்கை, குணங்கள், அறிவுத்திறன். இலக்கியங்களில் காக்கை, காக்கைப்பாடினியார், காக்கைப்பாடினியம், புராணங்களில் காக்கை போன்றவை ஆராயப்பட்டுள்ளன. முடிவுகள் முடிவுரையில் தரப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்:*** *காக்கை, கரைதல், பலி, காக்கைப் பாடினியார் போன்றவை.*

## முன்னுரை

மனித குலத்திற்குக் கிடைத்த இயற்கையின் கொடை காக்கை. மனித இனம், உடல், மனம் நலமுடன் வாழ சுற்றுப்புறம் தூய்மையாக இருப்பது இன்றியமையாதது. அத்தகைய தூய்மைக்குப் பெரும்பங்கு வகிப்பது காக்கை ஆகும். தொன்மை காலத்திலிருந்தே மனிதர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்திருக்கும் பறவை காக்கை ஆகும். அத்தகைய காக்கையின் பண்புகளை ஆய்வதும், இலக்கியங்களில் காக்கையின் இடம் குறித்தும் ஆய்வதே ஆய்வின் நோக்கமாகும். ஆய்வின் எல்லை கருதி காக்கை குறித்த சில செய்திகளையும், சில இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள காக்கை குறித்தப் பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## காக்கை

காகம், காக்கா, காக்கை என்றெல்லாம் நம்மால் அழைக்கப்படும் காக்கை பெரும்பான்மையாக இரு வகைகளில் நாம் பொதுவாக காண்கிறோம். உடலெல்லாம் கருமையாகவும், கழுத்து சாம்பல் நிறத்திலும் காணப்படும் காக்கை மணிக்கழுத்துக் காக்கை அல்லது மணிக்காக்கை என்று அழைக்கப்படுகிறது. உடல் முழுவதும் கருமை நிறங்கொண்ட காக்கை அண்டங்காக்கை எனப்படுகிறது.

## காக்கையின் பெயர்கள்

மணிக்காக்கைக்குக் கரடம், கொடி, பலிபுட்டம், காரி, வாயசம், கரும்பிள்ளை, அரிட்டம் ஆகிய ஏழு பெயர்களைச் சுட்டுகிறது பிங்கல நிகண்டு. மேலும், அண்டங்காக்கைக்குக் காலோலம் என்ற ஒரு பெயரும், நீர்க்காக்கைக்கு அர்க்கம், கரண்டம் என்ற இரு பெயர்களையும், செம்போந்து காக்கைக்குக் குக்கில்,சகோரம் என்ற இரு பெயர்களையும் தருகிறது.

## காக்கையின் பெயர்க்காரணம்

காக்கை கா, க்ரா, கா, கா போன்ற ஒலி எழுப்புவதால் காக்கா எனப் பெயர் பெற்றது. கா என்றால் காத்தல் என்று பொருள். காக்கை என்பதற்குப் பாதுகாத்தல் என்ற பொருள் தருகிறது திவாகர நிகண்டு. மண்ணுலகைப் பாதுகாக்கும் பாதுகாவலன் என்பதாலேயே இதற்குக் காக்கை என்ற பெயர் பொருந்தும்.

இது திருவரங்கத் திருவந்தாதி ஒன்பதாவது பாடலில்,

> **“கைக்குஞ்சரமன் றளித்தாயரங்கமண் காக்கைக்கு”**

என்ற வரியில் காக்கை என்பது பாதுகாத்தல் என்ற பொருளைத் தருகிறது.

காக்கை கத்துவதைக் கரைதல் என்கின்றனர். கரைதல் என்பதற்குச் சொல், அழைத்தல் போன்ற பொருளைத் தருகிறது திவாகர நிகண்டு.

## காக்கை விலங்கியல் பெயர்

Crow என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் காக்கை கார்விஸ் (Corvus) என்னும் உயிரியல் வகைப்பாட்டைச் சேர்ந்தது. கார்விடே என்னும் குடும்பத்தைச் சேர்ந்த கார்விஸ் கோராக்கன் என்னும் விலங்கியல் பெயர் கொண்டது என்கிறது பேராசிரியர் சபாதியாகராஜன் எழுதிய முதுகு தண்டுடையன தொகுதி-II என்ற நூல்.

இலத்தீன் மொழியில் கார்வுச் என்ற சொல்லுக்குப் பெரிய உடலமைப்பு உடையவை என்று பொருள். காக்கைகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. சிறிய புறா அளவிலிருந்து பெரிய ஜாக்டா என்னும் இனம் வரை இவற்றுள் அடங்கும்.

## காக்கைகளின் வகைகள்

மணிக்கழுத்துக் காக்கை கார்வஸ் கோராக்ஸ் என்றும் மிகப்பெரும் பறவையான பாஸ்ஸரைன் என்று அழைக்கப்படும் அண்டங்காக்கை கழுத்துப் பகுதியில் சீரற்ற அடர்த்தியான, பல வண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியதுமான இறகுகள் உள்ளன என்கிறது பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்.

கள்ளிக்காக்கை உடல் சிவந்து கறுப்பு நிறம் கலந்து இருக்கும். இதனை, செம்பொந்து என்பர் ஊர்ப்புற மக்கள் இதனை ஜெம்பு காக்கை எனகின்றனர். இதனைச் சமைத்து உண்பாரும் உளர். நீர்க்காக்கை இதன் பாதம் நீரில் நீந்துவதற்கு ஏதுவாக உள்ளது. இவ்வகை காகத்தை ஜைனர்களும், ஜப்பானியர்களும் மீன்பிடிக்கப் பயிற்றுவிக்கின்றனர். இது மீன்பிடித்து வந்து தன் முதலாளியிடம் கொடுக்கும். கத்தரி மூக்கன் காக்கை (சிசர் ஸ்பில்பார்ட்) இது அமெரிக்க கடற்கரைகளில் காணப்படுகிறது. நீர் காக்கை வகையைச் சேர்ந்தது. சாம்பல் நிறக்காகம் வால் நீண்டு இருக்கும். இதனை மகபீ, பைப்கா, கித்தா எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். இங்கிலாந்து, இத்தாலி, கிரீஸ் போன்ற நாடுகளில் காணப்படுகிறது. இது மற்ற பறவைகளின் முட்டைகளைத் திருடி குடித்து விடும் என்பதால், மற்ற பறவைகள் இதனை எதிரியாக பார்க்கின்றன.

மாட்டுப்புழு எடுக்கும் காக்கை, இது ஆப்பிரிக்கக் கண்டத்தில் வாழ்கிறது. நம் நாட்டுக் காக்கை வடிவத்தின் அளவை விடச் சிறியது. நம் நாடுகளிலும் மாட்டுப் புழுவைக் காக்கைகள் கொத்தி திண்பதை நாம் இயல்பாக காணக்கூடிய காட்சி என்பது நோக்கத்தக்கது. இரப் (சுரகக) எனும் காக்கை இது ஐரோப்பாவில் காணப்படுகிறது. இது மேக வண்ணம் கொண்டது என்கிறது அபிதான சிந்தாமணி. வெள்ளைக் காக்கை இது அரிதாக காணப்படும். இது தனி இனம் இல்லை. நிறமி குறைப்பாட்டினாலேயே வெள்ளை நிறமானது என்கின்றார் சென்னை விலங்கு மருத்துவக் கல்லூரி பேரா.டாக்டர் குமரவேலு அவர்கள். மேலும் பல வகைகள் காணப்படுகின்றன.

ஹவாயன் காக்கை, மரியானா காக்கை அழிந்து வரும் இனங்களாக அமெரிக்கா மீன் மற்றும் வன உயிரினங்கள் சேவை மையத்தால் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. மேலும், இந்த இனத்தில் 45 விழுக்காடு காக்கைகள் வெடிசனல் வைரஸ் என்னும் ஒரு வகை நுண்ணுயிரி நோயினால் அழிந்து விட்டன எனத் தெரிவிக்கிறார்.

காகங்கள் இல்லாத நாடாக நியூசிலாந்து அறியப்பட்டுள்ளன. இதற்கு காரணம் அறிய முடியவில்லை என்கின்றனர் அறிஞர்கள்.

## காக்கை வெருட்சி

காக்கை வெருட்சி அல்லது காக்கை விரிச்சி என அழைக்கப்படும் பறவை காக்கையிலிருந்து வேறுபட்டதாகும். இது காக்கைகளுக்கு மன வெருட்சியைத் தருவதால் இப்பெயர் பெற்றது. இது வெளவால் இனத்தின் ஒரு வகை.

இதனை பெரும்போலி காட்டேரி வௌவால் என்றும் இந்திய போலி காட்டேரி வௌவால் என்றும் குறிப்பிடுகிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் பேரகராதி.

**காக்கை உணவு**

காக்கை அனைத்துண்ணி ஆகும். இது தானியங்கள், புழுக்கள், விதைகள், கொட்டைகள், தவளை, நண்டு, அழுகிய பொருள்கள், இறந்த உயிரினங்கள் என்று பலவற்றையும் உண்ணும். மக்களால் வீசப்படும் வீண் பொருள்களை உண்டு தூய்மைப்படுத்துவதால் இதனை ‘‘மக்களின் நண்பன்’’ என்றும், ஊர்த்தோட்டி என்றும் கூறுகிறது அபிதான சிந்தாமணி. வயல்களில் உள்ள பூச்சிகளை உணவாக உட் கொள்வதால் ‘‘உழவர்களின் நண்பன்’’ எனப் போற்றப்படுகிறது.

**காக்கை வாழ்க்கை**

மனிதர் வாழும் பகுதியில் கூட்டமாக வாழும் தன்மை கொண்டது காக்கை. இரவில் கூட்டமாக மரங்களில் தங்கும். ஆனால் கூடு கட்டும் போது மட்டும் தனியாக கட்டும். காக்கைகள் எந்தப் பருவ நிலையிலும் வாழும் தன்மை கொண்டது. அதனால் உலகமெங்கும் பரவலாகக் காணப்படுகிறது. முதன் முதலில் மத்திய ஆசியாவில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இவை 20 ஆண்டுகள் வரை உயிர் வாழும். பெண் காக்கைகள் மூன்று வயதிலும், ஆண் காக்கைகள் 5 வயதிலும் பருவமெய்தும். காகங்கள் சேர்ந்திருக்கும் போது ஒரு காக்கை மற்றொரு காக்கையின் அலகு, நகம், உடல் போன்ற பகுதிகளிலுள்ள கடினமான ஓடு உடைய பேன்களைச் சுத்தம் செய்யும். இச்செயல் காகங்களிடையே ஓர் ஈர்ப்பை ஏற்படுத்துகிறது. கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் தன்மை கொண்டது.

**காக்கையின் முட்டை**

காக்கையின் முட்டை நீலமும், பச்சையும் கலந்த வண்ணத்தில் சிறியதாக இருக்கும். குயிலின் முட்டை சிறியதாகவும், இளம் சாம்பல் பச்சை நிறம் கலந்திருக்கும். குயிலுக்குத் தனியாக கூடுகட்டத் தெரியாது. அது தன் முட்டைகளைக் காக்கையின் கூட்டில் வைத்துவிடும். காக்கையே குயிலின் முட்டைகளையும் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். வண்ணங்களைக் கண்டறியும் ஆற்றல் காக்கைக்கு இல்லை.

**காக்கையின் அறிவுத்திறன்**

பறவைகளிலேயே அதிக அறிவுத்திறன் படைத்தது காக்கை. இதன் அறிவுத்திறனுக்குக் காரணம் அவற்றின் மூளைப் பகுதியில் அமைந்துள்ள நிடோபோடாலியம் ஆகும். இது பறவைகளின் மூளையின் அறிவுத் திறனுக்குக் காரணமான செயல்பாட்டுப் பகுதியாகும். இது மனிதன், சிம்பான்சியின் மூளைப் பகுதியில் அமைந்துள்ள நியோகார் டெக்ஸ் பகுதிக்குக் கிட்டத்தட்ட நிகரானதாக உள்ளது என்கின்றனர் விலங்கியல் வல்லுநர்கள்.

காக்கை முக வடிவமைப்பைக் கொண்டு ஒரு மனிதனை மற்றொருவரிடமிருந்து வேறுபடுத்திக் காணக்கூடிய திறன் படைத்தது.

ஆஸ்திரேலியாவில் வாழும் ஒரு வகை காக்கை, நச்சுத்தன்மையுடைய தேரையைப் பிடித்து அதன் தொண்டையைக் கிழித்து அதன் நச்சுப்பையை நீக்கிவிட்டு மற்ற பகுதிகளை உட்கொள்கிறது.

கிளிகளைப் போல காக்கைகளும் சொன்னதைத் திரும்பச் சொல்லும் ஆற்றல் கொண்டவை. காக்கைகளை இலகுவாகப் பயிற்றுவிக்க முடியும். இதனால் தான் சில சமூக விரோதிகள் காக்கைகளைப் பழக்கி சட்ட விரோத செயல்களில் ஈடுபடுத்துகின்றன. இதனால் சில நாடுகளில் காக்கைகளைச் செல்லப் பிராணியாக வளர்ப்பது சட்டவிரோதமானது.

காக்கைக்குக் கருவிகளைப் பயன்படுத்தும் ஆற்றல் உண்டு. அதனால்தான் நம் நாட்டிலும், காக்கை ஜாடியில் கற்களைப் பொறுக்கிப் போட்டு இருந்த சிறிதளவு நீரையும் மேலே வரவழைத்துக் குடித்தது

என்ற கதை இன்றளவும் வழக்கத்தில் உள்ளது.

**காக்கையின் குணங்கள்**

காலையெழுதல், காணாமல் புணர்தல், மாலை குளித்தல், மனைக்கேகல், உற்றாரோடுண்ணல், உறவோம்பல் என்று காக்கையின் நற்குணங்களைக் கூறுகிறது அபிதான சிந்தாமணி. இதனையே தமிழ் லெக்சிகள் மடியின்மை, கலங்காமை, நெடுகக்காண்டல், பொழுதிடவாழிடம் புகுதல், மறைந்த புணர்ச்சி இவைஐந்தும் காக்கைக்குரிய நற்குணங்களாகக் காட்டுகிறது.

காக்கை தனக்குப் படைக்கும் உணவை அல்லது கிடைக்கும் உணவை மற்ற காக்கைகளையும் அழைத்து ஒற்றுமையாக உண்ணும். ஆனால், தான் கொண்டு வந்த உணவை எதனோடும் பங்கிடாமல் தானே உண்ணும் என்பது கவனிக்கத் தக்கது. ஆயா சுட்ட வடையைத் திருடிய காக்கையின் கதையும் இதன் வழி வந்ததே. ஒரு காக்கை இறந்து விட்டால், காக்கைகள் கூட்டமாகவந்து ஒப்பாரி வைக்கும்.

**காக்காய் குறவர்**

காக்கைக் குறவன் என்பவன் காக்கையைத் தின்னும் குறவன் என்கிறது தமிழ் லெக்சிகன். இவர்கள் காக்காய்களுக்குச் சோற்றில் கள்ளிப்பால் கலந்து காக்கைகளை மயக்கமுற செய்து பிடித்துத் தின்பர் என்கிறது அபிதான சிந்தாமணி. களிப்பால் நச்சுத்தன்மை வாய்ந்தது என்பது நாம் அனைவரும் அறிந்தது. அதனைக் கொண்டு காக்கையை மயக்கமுறச் செய்து உண்டனர் என்பது இங்கு சிந்திக்கத்தக்கது.

**பதார்த்தகுண சிந்தாமணி**

பதார்த்தகுண சிந்தாமணி அண்டங்காக்கை கறி, நீர்க்காக்கைக் கறியின் குணங்கள், காக்காய் நெய்யின் குணம் என்று தலா ஒரு பாடல் தருகிறது இதில்,

'காக்கை நெய் காமாலைக்காய் காண்'' என்கிறது. நீர்க்காக்கையின் கறிக்குப் பாண்டு வீக்கம், மகோதரம் இவைபோம் என்றும், அண்டங்காக்கைக் கறியின் குணங்களாக பித்தமேகம், வீக்கம், பாண்டு, ரோகங்கள், காமாலை இவைபோம் என்கிறது. இதனால் தான் காக்கை குறவன், நரிக்குறவர்கள் காக்கையின் கறியை உண்கின்றனர் போலும்,

ஆனால் காக்காய் வலிப்பு நோய்க்கும், காக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கால், கை வலிப்பு தான் காலப்போக்கில் காக்காய் வலிப்பானது.

**இலக்கியங்களில் காக்கை**

இலக்கியங்களில் காக்கைக்கு என்று தனி இடம் உண்டு. காக்கை தனக்குக் கிடைத்த உணவை மறைக்காது தன் சுற்றத்தாரைக் கூவி அழைத்து அவற்றுடன் உண்ணும் என்பதை,

'காக்கை கரவா கரைந்துண்ணும்'' என்கிறது திருக்குறள். இது காக்கையின் மாண்பு. இது மணிக்காக்கைக்கு மட்டுமே பொருந்தும் அண்டங்காக்கை தனித்தே உண்ணும்.

தொன்மை காலம் முதலே காக்கை கரைதலை நன்னிமித்தமாய்ப் பார்க்கப்படுகிறது. திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருமொழியில் 10-10 திருத்தாய் பதிகத்தில்,

**கரையாய் காக்கைப் பிள்ளாய்**
**கரு மாமுகில் போல் நிறத்தன**
**உரை ஆர் தொல் புகழ்**
**கரையாய் காக்கைப் பிள்ளாய்**

என்ற பாடலில் திருமங்கையாழ்வார் தன்னைப் பெண்ணாக கற்பனை செய்து கொண்டு கண்ணன் வர கரையுமாறு காக்கையிடம் வேண்டுகோள் விடுக்கிறார். காக்கை கரைந்தால் விரும்பியவர் வீடு தேடி வருவார் என்ற நம்பிக்கை நிலவியிருந்ததை இதன் வழி அறிய முடிகிறது.

கீரியையும்,அணிலையும், கிளியையும்தான் கீரிப்பிள்ளை, அணில் பிள்ளை, கிளிப்பிள்ளை என்பது மரபு. இங்கு காக்கையைக், காக்கைப் பிள்ளாய் என விளிப்பது நோக்கத்தக்கது. குறுந்தொகையில் (210) காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்,

**'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'**

என்றும் ஐங்குநூறு இலக்கியத்தில் மறுதரவு பத்தில், பாலை திணை பாடிய ஓதலாந்தையார்,

**'மறுவி றூவிச் சிறுகரும் காக்கை'**

எனத் தொடங்கும் பாடலில் உடன்போகிய தன்மகள், அவள் கணவனோடு வீட்டுக்கு வர வேண்டி கரைந்திடும்படி காக்கையை அழைக்கிறாள் நற்றாய் ஒருத்தி. அதற்காக பொன்கலத்தில் பசிய இறைச்சியைச் சமைத்துத் தருகிறேன் என்கிறாள். இதில் கலமும், உணவும் உயர்வானதாக கூறப்பட்டுள்ளன. இது காக்கை கரைந்தால் உறுதியாக நடக்கும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு. உனக்கு மட்டுமல்ல உன் உறவுகளுக்கும் உணவு தருகிறேன் சேர்ந்து உண்ணும்படி கூறுவது காக்கை உறவுகளோடு பகிர்ந்து தான் உண்ணும் என்பது உள்ளிடை, இது காக்கையின் மாண்பு.

### பலி

காக்கைக்கு உணவிடும் வழக்கம் சங்க காலத்திலிருந்தே இருந்துள்ளது. ஒற்றுமைக்கும், பகிர்ந்துண்ணலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் காக்கைக்கு இடும் உணவுக்குப் பலி என்று பெயர். பலி என்பதற்குக் காக்கை முதலிய பிராணிகள் உண்ண இடுஞ்சோறு என்கிறது தமிழ் லெக்சிகன். பலி என்பதற்குத் தெய்வவுணவு, பிச்சை, ஐயம், சோறு போன்ற பொருள்களைத் தருகிறது பிங்கல நிகண்டு. அவை,

**'அவிழ்தும், அவியும் தெய்வ வுணவே**
**பலியும் சருவு அப்பெயர் பால"**

என்றும், பிச்சை என்பதனை,

**பலியும், ஐயமும், பிண்டமும், பாகமும்**
**சரியையும், பிச்சையின் பெயர்**
**என்ச்சாற்றுவர்**

என்றும் கூறுகிறது தமிழ் லெக்சிகன்.

முடத்தாமக்கண்ணி இயற்றிய பொருநராற்றுப்படை (183) பாடல் வரியில்

**"செஞ்சோற்ற பலி மாந்திய"** என்கிறது.

இவை தவிர்த்து யாகத்தில் இடும் உணவுப் பொருள்களுக்கும், கிராம தேவதைகளுக்கும் பலியிடுவதன் பொருட்டு விடப்பட்ட மானியம் போன்றவையும் பலி என்றே குறிப்பிடப்படுகிறது. வழிபாட்டின் போது பூசையில் அர்ச்சிக்கப்படும் பூ முதலியப் பொருள்களும் பலி என்றே குறிக்கப்படுகிறது. ஐங்குறு நூறு (259) நூலில் அன்னாய் வாழிப்பத்துதலைப்பில் கபிலர் பாடிய குறிஞ்சித்திணையில்,

**'தேம்பலி செய்த வீர் நறுங்கையன்'**

என்ற அடிகள் தேனாகிய பலியை அள்ளிச் சொரித்தலானே என்கிறது.

### காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்

சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் ஒருவர். இவரின் இயற்பெயர் நச்செள்ளை காக்கையைச் சிறப்பித்துப் பாடியதால் இவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்ற அடைமொழி பெற்றவர். இவர் காக்கைப் பாடினியம் என்னும் யாப்பிலக்கண நூலை இயற்றியுள்ளார். காக்கைப்பாடினியம் என்று நூலுக்கும் பெயரிட்டிருந்தாலும் கூட காக்கை குறித்த செய்திகள் ஏதும் அதில் இல்லை என்பதை அறிய முடிகிறது. பதிற்றுப் பத்தில் ஆறாம் பத்தில் ஆட்கோட்பாட்டு சேரலாதனைப் பாடியதால் ஒன்பது துலாம்பொன்னும், நூறாயிரம் பொற்காசுகளும் பரிசாகப் பெற்றார் என்பதை அறிய முடிகிறது. பதிற்றுப்பத்து ஆறாம் பத்தின் பதிகத்தில் "இதனை காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடினார் பத்துப்பாட்டு" எனக் குறிப்பிட்டுள்ளதால் அறிகிறோம்.

### சிறுகாக்கைப் பாடினியார்

அகத்தியரின் மாணவர்கள் பன்னிருவருள் ஒருவர் காக்கைக்பாடினியார். இவரும் சிறுகாக்கைப்பாடினியம் என்னும் யாப்பிலக்கணம் இயற்றியுள்ளார். நச்செள்ளையார்க்கும், இவருக்கும் வேறுபாடு அறிய இவரைச் சிறுகாக்கைப் பாடினியார்

என்ற பெயரால் அழைக்கப்படுகிறார் என்கிறார். முதுமுனைவர் இரா.இளங்குமரனார் தன் காக்கைப்பாடினியத்தில் இவருக்கும், காக்கை குறித்த செய்திகளுக்கும் ஒரு தொடர்புமில்லை என்பது இதன் வழி அறிய முடிகிறது.

### காக்கை விடுதூது

'காககை விடு தூது' என்று பொதுவாக அறியப்படும் நூல் க.வெள்ளைவாரணனாரால் இயற்றப்பட்டது. இதனை அன்றைய முதலமைச்சரான ச.இரா.கோபாலாச்சாரியரிடம் அளிக்கப்பட்ட போது இதில் வெண்கோழியுய்த்த "காக்கை விடு தூது" என்ற பெயர் காணப்படுகிறது. ஆசிரியர் இந்நூலை வெண் கோழியார் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இந்நூல் இந்தி கட்டாயமாக்கப்பட்டதை எதிர்த்து எழுதப்பட்டதாகும். இந்நூலின் வழி காக்கையை இழிவான ஒரு பறவையாக சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

### புராணங்களில் காக்கை

பல நூற்றாண்டுகளாக நாட்டுப்புறக்கதைகள், புராணங்கள் கலை மற்றும் இலக்கியங்களில் காக்கைப் பாடு பொருளாக இருந்துள்ளது. இந்து சமய பற்றாளர்கள், காகங்களை மூதாதையர்களின் வடிவமாகக் கருதுகின்றனர். இதனால், சிறப்பு நாள்களில் முதலில் காக்கைக்கு உணவு படைக்கப்படுகிறது. அண்மை காலங்களில் பல வீடுகளில் காக்கைக்குப் படைப்பது ஓர் அன்றாட நிகழ்வாக உள்ளது.

சனிபகவானின் வாகனம் காக்கையாகும். காக்கைக்கு உணவு கொடுத்தால் அது கா கா வென கரைவது காப்பாற்ற நான் வருகிறேன் என்ற பொருளாகவும் இதனால் சனியின் பாதிப்பிலிருந்து காப்பாற்றப்படுவோம் என்றும்,

அகத்தியரின் கமண்டல நீரைப் பிள்ளையார் காக்கை வடிவில் வந்து கவிழ்த்து விட்டதாகவும், அது காவிரியானது என்றும்,காகத்தைச் சின்னமாகக் கொண்ட கொடி இலட்சுமி தேவியின் தமக்கையான மூத்த தேவி என்னும் மூதேவிக்குரியது. (The Goddess of ill luck) என்றும்,

தேவேந்திரன் மகன் காக்கை வடிவில் வந்து சீதையின் மார்பை காயப்படுத்தியதாகவும், இராமபாணம் அவன் கண்களைத் தாக்கியதாகவும் ஒரு கண்ணின் பார்வை மட்டுமே மிஞ்சியதாகவும் ஒரு கதை உண்டு. அதனால் தான் காக்கை ஒரு பக்கம் சாய்ந்து பார்க்கிறது என்றும்,

காகபுசண்டர் என்னும் சித்தர் மயிலாடுதுறையில் பிறந்தவர் மயூரநாதர் அருளால் சாகாவரம் பெற்றவர் இவர் காக்கை வடிவெடுத்து பல ஆண்டு காலம் வாழ்ந்தார் என்றும்,

வெளிநாடுகளிலும், பழங்குடி மக்களிடையேயும் பொதுவாக காக்கை கடவுள் போன்றோ, ஆன்மீக உருவமாகவோ மதிக்கப்படுகிறது என்றும் நம்பிக்கை நிலவுவதைக் காணமுடிகிறது.

### முடிவுரை

- மண்ணுலகப் பாதுகாவலன், ஊர்த்தோட்டி, மனிதனின் நண்பன், உழவனின் நண்பன் என்றெல்லாம் சிறப்புப் பெயர்களால் காக்கை அழைக்கப்படுகிறது.
- பறவைகளிலேயே அறிவுத்திறன் மிக்க பறவை காக்கை இதற்கு பயிற்சி அளித்தால் நம்மைப்போல பேசும், சொல்லும் வேலைகளைச் செய்யும்.
- காக்கை தனக்கிடும் உணவை ஒற்றுமையாகப் பகிர்ந்துண்ணும். ஆனால் திருடிய உணவைப் பகிராது.
- காக்கையை மூதாதையராக எண்ணி உணவளிக்கும் வழக்கம் சங்க காலம் முதலே இருந்துள்ளது. காக்கை கரைந்தால் நன்னிமித்தம் என்று நம்பப்படுகிறது.
- காக்கை கத்துவதை கரைதல் என்றும், அதற்கு அளிக்கப்படும் உணவு பலி என்றும் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது.

- காக்கைப் பாடினியம் என்னும் நூல் காக்கையைப் பற்றியதல்ல யாப்பிலக்கண நூல்.
- காக்காய் வலிப்புக்கும், காக்கைக்கும் தொடர்பில்லை. கால், கை வலிப்பே காலப்போக்கில் காக்காய் வலிப்பானது.
- கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, அணில் பிள்ளை என்று செவியுற்ற நமக்கு திருமங்கையாழ்வார் காக்காய்ப்பிள்ளை என்று அழைப்பதைக் காணமுடிகிறது.
- முன்பெல்லாம் காக்கைகள் இறந்து கிடப்பதைக் காண்பது அரிதான நிகழ்வாகும். ஆனால் அண்மை காலத்தில் ஆங்காங்கே காக்கைகள் இறந்து கிடப்பதை இயல்பாக காணமுடிகிறது.

தொலைபேசி கோபுரங்களினால் (Cell Phone Tower) சிட்டுக்குருவிகள் மட்டுமல்ல காக்கைகளும் அழிந்து வருகின்றன. மனிதனின் வாழ்வியலோடு கலந்து மனிதவாழ்க்கைக்கு முக்கியபங்கு வகிக்கும் காக்கையைக் காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மனிதன் வாழ்வுக்குக் காக்கையின் பங்கு இன்றியமையாதது என்பதை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டும். குறிப்பாக, மாணவர்கள் காக்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு பெற வேண்டும். ஆசிரியர்கள் இதனை முன்னெடுக்க வேண்டும். சென்னையில் காக்கை கூடு என்னும் அமைப்பு காக்கைகளைப் பாதுகாக்கும் செயல்களை முன்னெடுக்கிறது. இதைப் போன்று காக்கைகளைப் பாதுகாக்கும் செயல்களை நாமும் செயல்படுத்துவோம். அரசும் இதனைக் கருத்தில் கொண்டு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

**துணை நூற்பட்டியல்**


1. அபிதான சிந்தாமணி, தமிழ்க்கலைக் களஞ்சியம், ஆ.சிங்காரவேலு முதலியார், கீதை பதிப்பகம், பத்தாம் பதிப்பு-2012.
2. அஷ்டபிரபந்தம் (திருவரங்கத்தந்தாதி), பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், சென்னை கணேச அச்சிற் பதிப்பு.
3. ஐங்குறுநூறு, பெருமழைப் புலவர். பொ. வே.சோமசுந்தரனார் உரை, திருநெல்வேலி தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு 2009,
4. காக்கை பாடினியம்,முதுனைவர் இரா.இளங்குமரனார், நிலவன் பதிப்பகம், மீள் பதிப்பு 2018.
5. குறுந்தொகை, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், ஏழாம் பதிப்பு-2020.
6. தமிழ் நிகண்டுகள், பதிப்பாசிரியர் முனைவர். ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், முதல் பதிப்பு-2008.
7. திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி, 10.10.திருத்தாய்
8. பதார்த்த குண சிந்தாமணி, பதிப்பித்தார் காசிம் முகைதீன் ராவுத்தர், சங்கர் பதிப்பகம், முதல் பதிப்பு - 2016.
9. பதிற்றுப்பத்து, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், முதல் பதிப்பு-2020.
10. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா (இந்தியா) பிரைவேட் லிமிடெட், விகடன் பிரஸ், 2007.
11. முதுகு தண்டுடையன, பேரா.சபா. தியாகராசன், முதல் பதிப்பு 2012, ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்.
12. Modern Text Book of Zoology, Vertebrates, R.L.Kotpal, Third Edition 2010-2011, Published by Rakesh Kumar Rastogi.
13. Tamil Lexicon, Volume-V, University of Madras, 1982.

# கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய “கொஞ்சம் தேநீர் நிறைய வானம்” என்ற கவிதை நூல் காட்டும் இயற்கை

**திருமதி. பெ. சர்மிளா**
*உதவிப் பேராசிரியர்*
*மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருத்திப்பட்டு, ஆவடி சென்னை*

### முன்னுரை

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களை உள்ளடக்கியதே இந்த நிலவுலகம் ஆகும். அப்பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்தில் தோன்றிய தாவரங்கள், உயிரினங்கள் உள்ளிட்ட இயல்பாக தோற்றம் பெற்ற. இன்று நாம் வியந்து உற்று நோக்கும் இயற்கையைத் தன்னுணர்வேற்றிப் பாடாத கவிஞர்களே இல்லையென்று சொல்லலாம். ஏனெனில், இலக்கியப் படைப்பின் அடி நாதமே இயற்கையாகும். அவ்வகையில், கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய கொஞ்சம் தேநீர் நிறைய வானம் என்ற கவிதை நூல் காட்டும் இயற்கைக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

### இயற்கையின் மொழி

ஒவ்வொரு மனிதனுக்கும் எண்ணங்கள் ஒன்றாக அமைவதில்லை. அவர்கள் செயலாலும், சிந்தனையாலும் வேறுபட்டவர்கள். அதனால்தான் ஒவ்வொரு படைப்பாளர்களும் பார்க்கும் காட்சிகள் வெவ்வேறு கோணங்களில் தெரிகின்றன. மெஞ்ஞான வாழ்க்கை வாழ்வதற்கு நம்மை சுற்றி இருக்கும் புறஉலகை அகக்கண் கொண்டு உற்று நோக்க வேண்டும். அப்படி உற்று நோக்கும் போது தென்றல் நம்மிடம் கொஞ்சி உறவாடும். விண்மீன்கள் பல கதை சொல்லும். நதிகளும், பறவைகளும், பூக்களும் தங்கள் மொழிகளால் அள்ளி அரவணைக்கும்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மெய்ஞ்ஞான வாழ்க்கை வாழ்வதற்கு சுற்றம் துறப்பது மட்டும் ஏற்புடைத்தன்று. அதற்கு நில உலகில் இயல்பாக இருக்கும் சப்தங்களைக் கடந்து இயற்கையை ரசிக்க வேண்டும் என்கின்றார். ஏனெனில், ஒவ்வொரு காட்சியும் ஒரு மொழிகளால் நம்மிடம் உரையாடுமென்பதனை,

**“பிறை வளரும் ஒலிக் கேட்டேன்**
**விண்மீன்கள் மொழி கேட்டேன்**
**மொட்டுக்கள் மலரும் நுண்ணொலி கேட்டேன்**
**விடியலை நோக்கி**
**இரவு நகரும் இசை கேட்டேன்**
**எனக்குள்**
**கண்ணீர் ஊறும் ஓசை கேட்டேன்”**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம்-5)** என்ற வரிகளில் இயற்கையால் தோற்றம் பெற்ற ஒவ்வொன்றிற்கும் ஒரு மொழி உண்டு அதனை உள்வாங்குபவர்களால் மட்டுமே உணர முடியும் என்பதனை வெளிப்படுத்தி உள்ளார்.

இதனையே, கவிக்கோ அப்துல் ரகுமானும் இயல்பான உலக வாழ்க்கை வாழும் மனிதன் போலல்லாது தன்னிச்சையாக அவன் மனம் போன போக்கில் செல்லும் பித்தன் காணும் இயற்கை காட்சிகளுக்கெல்லாம் மொழியும், அர்த்தங்களும் உள்ளதாக உணர்கிறான் என்பதனை,

**“ஒவ்வொரு பூவிலும்**
**ஒரு வேதம்**
**வெளிப்படுகிறது**
**பூவின் மொழி**
**ஆழமானது**
**அதனால் தான்**
**அதில் சத்தம் இல்லை”**

**(கவிக்கோ கவிதைகள் -முதல் பாகம், அப்துல் ரகுமான், பக்கம்-437, நேஷனல் பப்ளிஷர்ஸ் சென்னை-17)**
என்ற வரிகளில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**இயற்கையும் மனித வாழ்க்கையும்**

கணவனை மட்டுமே மனதில் சுமந்து வாழும் பெண்களிடம் அவளின் உடலை மட்டுமே யாசிக்கும் எத்தனை காமுகர்கள் அணுகினாலும் அவளின் மன உறுதியை அசைக்க முடியாததைப் போலவே மரங்கள் அடர்ந்த கானகத்தில் சூரியன் எத்தனை முறை முயன்றாலும் தன் கதிர்களை கொண்டு கானகத்தில் ஒளிபரப்ப முடியாததனை கவிப்பேரரசு வைரமுத்து

**“கற்புடைப் பெண்டிர்நெஞ்சில்**
**புக முடியாத காமுகன் போல்**
**காடு புகவியலாமல்**
**கதிரொளி தவிக்கும்”**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம்-2)** என்ற கவிதை வரிகளில் கவிஞர் தான் கண்ட இயற்கைக் காட்சிகளை மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்

**“காரிருள் நீக்கக் கதிர் வந்து பூத்தது”**
**(பாரதிதாசன் -தமிழச்சியின் கத்தி)**

**நகரமயமாதல்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலப் பிரிவுகளாக இருந்த நம் தமிழகம் இன்று காடுகளும், மலைகளும், வயலும் அழிந்து எங்கும் கட்டிடங்களாக உருமாறிப் போயின. தூர்வாரக் கூடிய ஏரிகள் கூட தூர்க்கப்பட்டு பல அடுக்கு மாடிக் கட்டிடங்களாகின. பருவம் தவறாது மழை பெய்த வானத்தின் கருணையால் மண்வளம் செழித்து, விளைச்சலும் பெருகியிருந்தது. ஆனால், இன்று திசைக்கெட்டிய தூரம் பயிர்கள் இல்லை. மாறாக, பலவித நிறங்களில் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன. இதனை கவிப்பேரரசு வைரமுத்து’

**“மனுசப் பயக்கூடி**
**மண்ண ஏமாத்த**
**மழையெல்லாம் கூடி மனுசன மாத்த**
**இன்னைக்கு தேதிக்கு**
**இல்லைன்னு போன கொளம்”**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம்-23)**, என்ற கவிதை வரிகளில் மனிதன் மண்ணை மறந்ததால் மண்ணும் மனிதனை மறந்தது. மாதம் மும்மாரி பெய்த மழை மேகங்கள் மழை தர மறுத்ததால் நீர்நிலைகளும் வற்றிதண்ணீர் பற்றாக்குறையைப் பரிசளித்து நம் கண்ணீரைக் குளமாக்கியது என்று இன்றைய சமகால வாழ்வியல் சூழலைநயம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

**இயற்கையும் அக வாழ்க்கையும்**

மனிதன் தோன்றிய காலந்தொட்டு இயற்கையோடு இணைந்தே வாழத் தொடங்கினான். அதில் அவன் அகவாழ்க்கையும் விதிவிலக்கல்ல. புன்னை மரத்தை தன் தமக்கையாகக் கருதி அம்மரத்தடியில் தன் காதலனை சந்திக்க மறுப்புத் தெரிவித்த நற்றிணை தலைவியின் செயலை,

**“நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே”**

**(நற்றிணை-பாடல்-172)**, என்ற வரிகள் நம் தமிழரின் அக வாழ்வியலை அழகாக சுட்டிக்காட்டுகிறது.

காதலுற்றும் காதலை உணர்த்தறியாத பருவ வயதில் பொற்காசுகளை ஆற்று மணலில் புதைத்து விளையாடி தொலைத்து விட்டு திரும்பிய போது பொற்காசுகளின் மதிப்பறியாத மனம் அன்பை மட்டுமே ஞாபகச் சின்னங்களாக மனதிற்குள் பதித்துக் கொண்டதனைக் கவிப்பேரரசு வைரமுத்து,

**“ஆற்று மணல் பரப்பில் -நாம்**
**அன்புற்ற ஞாபகங்கள்**
**நேற்று நிகழ்ந்தவை போல் -என்**
**நெஞ்சை அழுத்துமடி”**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம்-52)** என்றவரிகளில்

மக்களின் இயற்கையோடு இணைந்த அகவாழ்க்கையை உணர்த்தியுள்ளார்.

**கவிஞரும் கற்பனை நயமும்**

உலகத்தில் தோற்றம் பெற்ற உயிர்கள் அனைத்தும் மறைவதும், மலரும் பூக்கள் அனைத்தும் வாடுவதும் உலகத்தியற்கை. ஆனால், பல படைப்பாளர்கள் அதில் தன் கற்பனைத் திறனையேற்றிப் படைப்புகளை அழகுபடுத்தி உள்ளனர். கவிப்பேரரசு வைரமுத்து,

**"வண்டுகட்க்கு இனி வழி தெரியாததென**
**இலைகளை அரைகுறையாய் இழுத்துப் போர்த்துத்**
**தூங்கிப்போன நந்தவன பூக்கள்"**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம்-25)**, என்ற வரிகளில் மாலைப்பொழுதில் சுருங்கும் மலரைக் கண்டு அது வண்டுகள் தேனெடுக்க வழி தெரியாமல் இருப்பதற்காக இலைகளுக்கு மத்தியில் உறங்கிப் போய்விட்டதாகத் தன் கற்பனை திறனேற்றி கவிதைக்கு மெருகூட்டி உள்ளார்.

**இயற்கையைத் தொலைத்தவர்கள்**

**"தாவரங்களின் வீடு எனப்படுவது நிலம். நிலத்திலிருந்து தான் செடிகள் தங்களுக்கு தேவையான உணவுப் பொருள், தண்ணீர், வேர்களுக்கு வேண்டிய காற்று முதலியவற்றைப் பெறுகின்றன"**

**(இயற்கை அறிவு நூல், யு. நாராயணசாமி டீ.யு.டு.ஐ, பக்கம் -13, முருகன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி-3)**

மரங்களும், செடிகளும், கொடிகளும் மனிதனை சார்ந்து அமைவதில்லை. மனிதன் மட்டுமே தன்னுடைய தேவைகளுக்காக அவற்றை சார்ந்துள்ளான். மரக்கன்றுகளை நடுவதற்கு சிந்திக்கும் நாம் மர வேலைபாடுகள், கப்பல் கட்டுதல், எரிபொருள், பொம்மைகள் தயாரித்தல், தாள்கள் தயாரித்தல் போன்றநம்முடைய சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இருக்கும் மரங்களை வெட்டி தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறோம். ஆனால் அந்த மரத்திற்கும் உணர்வு உண்டு என்ற உணர்வை "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலார் வழியில்

**"சல்லி வேர்விட்ட**
**சந்தோசம் தீரு முன்னே**
**கிளை அறும் ஓசை**
**கிழிக்கிறது காதை என்றேன்**
**அனுபவம் என்றது இழப்பு"**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம் -59)** என்ற வரிகளில் காடுகள் எல்லாம் பாலைவனமாக மாறிப் போனதை வேதனையுடன் விளம்பியுள்ளார்.

மரங்களே மழை பொழிவிற்கு வழி வகுக்கின்றன அப்படிப்பட்ட மரங்களை எல்லாம் அழித்து இயற்கையை பாதுகாக்க தவறிய நாம் இன்று மழைக்காக நமது மூட பழக்கவழக்கங்களால் வரம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**"பூவரம் கேட்டுக் கேட்டுப்**
**பொழுதெல்லாம் தவமிருக்கும்**
**தாவரம் குளியல் போட்டுத்**
**தலையெல்லாம் பூக்கள் வைக்க**
**தேவரும் இறங்கி வந்து சிறுவயல் நடவு செய்ய**
**நீ வரம் தருக! நீண்ட**
**நிலமெல்லாம் நிறைந்து பொங்க"**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்-வைரமுத்து-பக்கம் -67)** என்ற வரிகளில் கவிப்பேரரசு வைரமுத்து மழை நீரை உள்வாங்கிய தாவரங்கள் செழித்துப் பூக்கள் பூக்க ஆரம்பிக்கும். வானுலக தேவர்கள் கூட வியந்து தேவலோகத்திலிருந்து தானே இறங்கி வந்து வேளாண்மை செய்யக் காத்திருக்கும் இயற்கை வளம் கொண்டதாக இருந்த தமிழகம் இன்று மழைக்காக மழை விருத்தம் பாடி கொண்டிருக்கின்றது என்கின்றார்.

**ஒரு கோப்பை தேநீரில் பஞ்சபூதங்கள்**

மனிதனுக்கு மனிதன் நேரிடையாகப் பேசிக் கொள்வதே அரிதாக மாறிப் போன இக்காலத்தில் உண்ணும் உணவு முதல் வாழும் வாழ்க்கை வரை இயந்திரத்தனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், கவிப்பேரரசு வைரமுத்துவுக்கோ ஒரு கோப்பை தேநீர் காதலியின் முத்தமாகவும், மோட்சமாகவும், முறைப் பெண்ணின் முந்தானை உரசும் இன்பமாகவும்,நிலம், நீர்,காற்று, தீ, ஆகாயம் என பஞ்சபூதங்களின் உள்ளடக்கமாகவும் இருப்பதனை தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**"தேயிலைச் செடியின் வேர் வழிப்புகுந்து**
**பச்சிலை எங்கும் பரவிய மண்**
**தேயிலையின் சாரம் வாங்கித்**
**தன் நிறமிழந்து செந்நிறமான நீர்**
**தேநீர் சுட வைக்கத் தித்திக்க பரப்பியத்**
**தீபிஞ்சுத் தேயிலை மனத்தை**
**பிரச்சாரம் செய்யும் ஒரு துண்டுக்காற்று இலை**
**தலைகுனிந்த மழை வழியே**
**துளித்துளியாய் ஆகாயம்**
**ஐம்பூதங்களையும் இப்படி**
**உள்வாங்கி நுரைக்கும்**
**ஒரு கோப்பை"**

**(கொஞ்சம் தேநீர் நிறைய வானம்- வைரமுத்து-பக்கம் -28-29)** என்ற வரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

இறைவன் படைப்பில் இயற்கை தனித்துவமானது. அறிவியலின் அசுர வளர்ச்சியால் உலகம் உயிர்களுக்கு எல்லாம் ஆதாரமாக இருக்கும் இயற்கையும் அழிந்து வருகிறது. கவிப்பேரரசு வைரமுத்து கொஞ்சம் தேநீர் நிறைய வானம் என்ற கவிதை நூலின் வழி சிறுவயதிலிருந்தே பசுமரத்தாணி போல மனதில் பதிந்த இயற்கை காட்சிகள் இன்று உலகமயமாதலில் மாறிப் போனதைத் தனது கவிதை வழி உலகுக்கு எடுத்துக்காட்டி உள்ளார்.

**ஆதார நூல்**

1. கொஞ்சம் தேநீர் நிறைய வானம் வைரமுத்து-வெளியீடு: சூர்யா, சென்னை -24.

# சங்க இலக்கியத்தில் மரம் - குறித்த வழிப்பாட்டு மரபுகள்

**இரா. பிரதீப் ராஜ் (8438986500)**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்*

**முனைவர் அ. மரிய செபஸ்தியான்**
*உதவிப் பேராசிரியர்*
*வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்*

**ஆய்வுச்சுருக்கம்**
*மரபு வழியில் வழிபாட்டு முறைகள் என்பது, நாட்டுப்புற மக்களிடம் இன்றும் காணப்படுகிறது. சில இடங்களில் ஆட்டுப்பலிக்குப் பதிலாக குங்குமம் கலந்து பூசணிக்காய் உடைக்கப்படுகிறது. இறைவனைச் சாந்தப்படுத்தவும் தங்களது குடும்பம் தழைக்கவும் பலிகொடுக்கின்றனர். தற்கால சமுதாயத்திலும் சில இந்துக் கோயில்களில் பலிகொடுக்கும் நிகழ்வும், பக்தர்களின் தலையில் தேங்காய் உடைக்கும் நிகழ்வுகளும் நடத்தப்படுகிறது. இத்தகைய வழிபாட்டு முறைகள் பண்டைய கால மக்களிடத்தில் பல்வேறு நிலைகளில் மாறுபட்டு காணப்பட்டன. அதிலும் வழிபாட்டு நிலையில் இயற்கைக்கு சங்ககால மக்கள் பெரிதும் முக்கியத்துவதுவம் அளித்தனர். சங்க இலக்கியமும் இயற்கையும் இடைவிடாத இணைப்பைக் கொண்டவை. இவை இயற்கையை மட்டுமல்ல, அதன் மூலம் மனித வாழ்க்கையின் முக்கிய அம்சங்களையும் வெளிப்படுத்துகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றின் சங்ககாலம் இயற்கையுடன் ஒற்றுமை கொண்ட வாழ்க்கை முறையையும் அதன் செழுமையையும் தெய்வீகமாகக் கொண்டாடிய காலம் ஆகும். சங்க இலக்கியத்தில் ஐந்திணைகள் இயற்கையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டன. ஒவ்வொரு திணையிலும் குறிப்பிட்ட நிலப்பகுதி, பருவநிலை, மக்கள் வாழ்க்கை, மற்றும் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியம் இயற்கையை மட்டுமின்றி, அதில் மனித வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்தையும் தத்ரூபமாகச் சித்தரிக்கிறது. இயற்கை என்பது சங்க இலக்கியத்தின் வாழ்வியல் மையமாக இருந்து, தமிழ் இலக்கியத்தின் அடிப்படைக் கல்லாக விளங்குகிறது. இதன் வாயிலாக சங்க இலக்கியத்தில் இயற்கை வழிபாட்டில் மரங்களின் நிலைகளை குறித்து இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.*

## இயற்கையும் வழிபாட்டு முறையும்

இயற்கையும் வழிபாட்டு முறையும் மனித வாழ்க்கையின் அடிப்படையான பகுதிகளாக இருக்கின்றன. தமிழ் பண்பாட்டிலும் பாரம்பரியத்திலும் இயற்கை வழிபாடு என்பது முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது அதில், பஞ்சபூதங்கள் வாழ்வின் அடிப்படையானத் துணைவிடமாகக் கருதப்பட்டன. இவை ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்த தேவதைகளாகவும் வழிபட்டன. இயற்கையை வழிபடுவது என்பது, மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ வேண்டும் என்ற செய்தியை வழங்குகிறது. இன்று சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கும் சூழலில், இந்த வழிபாட்டு முறைகள் பசுமை யுகம் உருவாக்குவதற்கு உதவுகின்றன.

## மரத்தை வணங்கும் முறை

வம்ச மரங்கள், வேப்பமரம், இலுப்பை மரம் போன்றவை புனிதமாக கருதப்பட்டு வழிபட்டன, சிலை வடிவம் இல்லாமல் மரங்களை நேரடியாகவே தெய்வமாக கருதி வழிபட்டனர். அத்தகைய மரத்தை வணங்கும் போது, மக்கள் மரத்தை நீராடுவர். பின்னர் மரத்தை மூன்று முறை சுற்றி வலம் வந்து பலியிட்டுப் பூசை செய்வர். வழிபடுகின்ற மரத்தைக் கடவுள் மரம் மாசில் மரம், கடவுள் முதுமரம் என்றழைத்தனர். நாள் தோறும் மரத்திற்கு வழிபாடு செய்து பலியிட்ட உணவைக் காக்கைகள் உண்ட நிகழ்வைப் பின்வரும் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இயற்கையை மையமாகக்

கொண்டு வாழ்ந்த பழமையான பண்பாடு, மனிதனின் நலனுக்கான வழிகாட்டியாகவே இருந்து வருகிறது.

**“.............கடவுள் ஆலத்து**
**உருபலி அருந்திய தொகுவிரந் காக்கை”**
**(நற்: 343:4-5)**

**”மாசுஇல் மரத்த பலிண் காக்கை”**
**(நற்: 281 : 1)**

ஆலமர முற்றத்தை மகளிர் விடியற்காலையில் எழுந்து தூய்மை செய்ததை அகநானூற்றுப் பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

**“ஆல முற்றங் கவின்பெறத் தைஇய**
**பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர்”**
**(அகம்: 181:17-18)**

## குழந்தைப் பேற்றை வழங்குதல்

மரத்தை வழிபட்டால் அதே ஆற்றல் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எழுந்ததே மரவழிபாடு. அரசமரமும், வேப்ப மரமும் சேர்ந்து காணப்படும் இடம் வழிபாட்டு இடங்களாகும். இம்மரத்தடிகளில் நாக உருவம் வைக்கப்பட்டிருக்கும். அரச மரம் ஆணாகவும், வேம்பு பெண்ணாகவும் உருவகிக்கப்படுகின்றது. ”நாக உருவம் மானுடவியலின்படி, புணர்ச்சியைக் காட்டும் குறியீடாகும். (Sexual Symbol). இங்கே பதிக்கப்பட்டுள்ள நாக உருவங்களில் ஆண் நாகமும் பெண் நாகமும் சேர்ந்து பின்னி உடலுறவுக் கொள்ளும் சிற்பங்களும் காணப்படுவது மேற்கண்ட கருத்தை அரண் செய்கிறது. அரசும், வேம்பும் சேர்ந்து இருக்கும் ஊர்ப் பொது மன்றங்கள் பெரும்பாலும், தெருச் சந்திப்பிலோ, ஊர் முனையிலோ, ஆற்றங்கரையிலோ, குளத்தங்கரையிலோ அமைந்திருக்கும்” (1995: ப.236) என்று க.ப. அறவாணன் குறிப்பிடுகின்றார். இம்மர வழிபாடுகள் பிற்காலத்தில் மணமகனைத் தேடும் இடமாகவும். குழந்தை வரம் அருளும் இடமாகவும் அமைந்தன. நாக உருவங்கள் இருப்பதன் காரணமாக இன்றும் பெண்கள் நாக உருவங்களுக்கு பாலூற்றி தாலி பாக்கியம், குழந்தை வரமும் வேண்டி நிற்பதைக் காணலாம். இது பழங்காலப் பண்பாட்டின் வழி வந்த பழக்கமாகும்.

## வணங்கும் மரங்கள்

மரவழிபாடானது ஆதி காலந்தொட்டு தற்காலம் வரை வழக்கிலுள்ளது. பழங்காலத்தில் இடம் விட்டுப் பெயரும் மனிதனுக்கு உணவளிக்கும் தாயாகவும் ஓய்வு எடுக்கும் உறைவிடங்களாகவும் மரங்கள் இருந்தன. கால மாறுதல்களால் ஓரிடத்தில் நிலையான வாழ்வு தொடங்கியவுடன் முன்னைய நினைவின் காரணமாக மரவழிபாட்டைத் தொடர்ந்து செய்யத் தொடங்கினான். தமிழ்ச் சமுதாய மக்கள் காலம் காலமாக அரசமரம், ஆலமரம், வேப்பமரம், கடம்பமரம், வாகைமரம், வில்வமரம், கொன்றைமரம் போன்றவைகளை வணங்குகின்றனர்.

## மரவழிபாட்டின் வகைகள்

- கடவுள்மரவழிபாடு
- அணங்குமரவழிபாடு
- பேய் மரவழிபாடு
- காவு(மர) வழிபாடு

## கடவுள் மரங்கள்

முருக பெருமானின் மரமாக கடம்ப மரமும். சிவனின் மரமாகக் கொன்றைமரமும் விளங்குகின்றன. திருமால் “ஆல” இலையினின்று உதித்தவன் என்றும், பலராமன் பனைக் கொடியோன் என பெயர் பெற்றான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. வேம்பு, கடம்பு, வேங்கை முதலியவை மிகப் பழங்காலந்தொட்டு வழிபடப்பட்டு வருகின்றன. கடவுள், மரத்தடியில் உறை பவன் என்னும் நம்பிக்கை பழங்காலம் முதல் இன்று வரை நம்பப்படுகின்றது. மரத்தடியிலும் மரத்திற்கும் வழிபாடு செய்வதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

கடவுள் உறைகின்ற இடமாகக் கருதப்பட்ட மரத்தினடியில் பொதுமக்கள் கூடுவதால் அவ்விடம் மன்றம் என பெயர் பெற்றதற்குக் கீழ் வரும் பாடலடிகள் சான்றாக அமைகிறது

**"தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை**
**மன்றப் பெண்ணை வாங்குமடக் குடம்பைத்"**
**(நற்: 303:3-4)**

**ஆலமரம்**

ஆலமரம் மிகவும் பரந்து விரிந்து தழைத்துக் காணப்படும். எளிதில் சாயாதது, நிழல் தரும் மரமாக இருப்பது. முற்காலத்தில் ஊர் சபைகள் ஆலமரத்தடியில் அமைவது வழக்கம். சிவன் ஆலமரத்தினடியில் தவம் புரிவதாக நம்பிக்கை உள்ளது. எனவே சிவபெருமானை ஆலமர் செல்வன" என்றழைத்தனர் பண்டை மக்கள். ஆலமரத்தை தெய்வமரமாக வழிபட்டதை கீழ்வரும் பாடலடிகள் வாயிலாக அறியலாம்.

**"..........புறம் தீண்டும்**
**நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து"**
**(புறம்: 343:3-4)**

இவ்வகையான மர வழிபாட்டு முறையானது இன்றும் காணப்படுகிறது. "இன்றும் இராஜஸ்தான், உத்தரப்பிரதேச மாநில மக்கள் ஜெய்ஷ்த (Jyaishta) மாதத்தின் மூன்றாம் நாள் நள்ளிரவில் ஆலமரத்தை வழிபடும் சடங்கை நிகழ்த்துகின்றனர். ஆலமரத்தை அன்னோர் வழிபட, அவர் சொல்லும் காரணம். சாவித்திரி, ஒரு பத்தினிப் பெண். ஒரு நாள் வழியில் உடல்நலம் குறைவுற்ற,அவளது கணவனது உயிர், ஓர் ஆலமரத்தின் கீழ் பிரிகிறது. பதறி அழுத சாவித்திரி, தன் கணவனின் உடலை ஆலமரத்தடியில் பாதுகாக்குமாறு விட்டு, அவன் ஆன்மாவைத் தேடி ஓடுகிறாள். இறப்புலகில் கணவனது உயிரை மீட்டுப் பெறுகிறாள். இதுவரை, ஆலமரத்தால் மெய்க்காவல் செய்யப்பட்ட சாவித்திரியின் கணவன். மீண்டும் உயிர் பெறுகிறான். இந்தக் கதை அடிப்படையிலேயே மணமான மங்கையரால் தாலி பாக்கியத்திற்காக மேற்கண்ட சடங்கு இன்றும் பின்பற்றப்படுகிறது" (1995: ப. 290) என க.ப. அறவாணன் குறிப்பிடுகின்றார்.

ஒரு சிற்றூர், அவ்வூரில் பொதுமக்கள் கூடும் பொதியிலில் ஆலமரம் இருந்தது. அது கடவுள் மரம் என்றழைக்கப்பட்டது. நாள்தோறும் பூசைகள் பெற்று வந்த மரம் தற்போது அவ்வூரில் ஊர்மக்கள் இல்லாததால் பாழூரில் நிற்கும் மரத்திற்கு நாட்பூசையோ நரபலிலோ இல்லை என கூறுகிறது அகநானூற்றுப்பாடல்.

**"சுரை இவர் பொதியில் அம்குடிச் சீறூர்**
**நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை,**
**புரிசை மூழ்கிய பொரிஅரை ஆலத்து"**
**(அகம் : 287:5-7)**

ஒரு காலத்தில் தனி மரமாக இருந்த ஆலமரம் வழிபாடு முறை தோற்றம் பெற்ற போது அதன் கீழ் உருவங்கள் பொறிக்கப்பட்டன. சிவபெருமான் இருந்த இடத்தை "ஆலமுற்றம்" என அகநானூறும் (181), "ஆலமர் கடவுள்" என புறநானூறும் (198) குறிப்பிடுகிறது. திருமால் பிரளயக் காலத்தில் ஆலிலையில் படுத்திருந்தார் என்று புராணக்கதைகள் கூறுகின்றன.

**வேப்பமரம்**

வேப்பமரம் அம்மன் என்ற தாய்த்தெய்வச் சின்னமாகக் கருதப்படுகிறது. வேண்டுதல்களை நிறைவேற்றும் போது பக்தர்கள் வேப்பிலையை ஏந்தியும் வேப்பஞ்சேலை அணிந்தும் கோயில்களில் வலம் வருவதை இன்றும் காணலாம். "வேப்பமரம். காளியம்மனின் மரமாகக் கருதப்படுகிறது. காளி கோயில் அனைத்தும், தலமரமாக வேப்பமரத்தையே பெற்றிருக்கும். காளியை வழிபட வருவோர், வேப்பிலையைக் கையில் ஏந்தியும் இடையில் சொருகியும், கோயிலை வலம் வருவர். வேறு சிலர், வேப்பிலையைக் கூப்பிய இரண்டு கைகளிலும் பற்றிக் கொண்டு, படுத்துப் புரண்டே கோயிலை மும்முறை வலம் வருவர். இன்னும் சிலர், தம் ஆடைகளைக் களைந்து விட்டு அதற்கு

மாறாக, வேப்பிலையைத் தழையுடையாகத் தரித்து வருவர்” (1995: ப.292) என்று க.ப. அறவாணன் குறிப்பிடுக்கின்றார்.

இன்றும் அம்மை நோய் வந்தவர்கள் படுக்கையில் வேப்பிலையை வைப்பர். குழந்தைப் பிறந்த வீடுகளில் தீட்டுக் கழியும் வரை வேப்பிலையை வாசலில் சொருகி வைப்பர். வேப்பமரம் முழுவதும் அம்மனுடன் தொடர்புப்படுத்தப்படுகிறது.

வேப்பமரத்தின் கிளையை ஒடித்ததாலும், காஞ்சிப் பண்ணைப் பாடியதாலும், நெய்யப் பெற்ற கையினாக வெண்சிறு கடுகைக் புகைத்ததாலும் எல்லாருடைய வீடுகளும் ஆரவாரத்தை உடையதாக காணப்பட்டது என்பதற்கு கீழ்வரும் பாடலடிகள் சான்றாக அமைகிறது.

**“வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்**
**நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்**
**எல்லா மனையும் கல்லென் றவ்வே”**

**(புறம்: 296:1-3)**

போரில் கலந்துகொண்ட வீரர்க்கு ஏற்பட்ட புண்ணை ஆற்றுவதற்கு பெண்கள் நாச சம்பங்கி இலையையும், வேப்பிலையும் சொருகி வைக்கின்றனர். வீரர்களை இரவில் தனியே விட்டால் பேய் அண்டும் என்றும் யாழை மீட்டி பாடுகின்றனர். பேய் நெருங்காவண்ணம் வெண்சிறு கடுகை பிசைத்துக் காஞ்சிப்பண் பாடியுள்ளனர்.

**பாலை மரம்**

ஐவகை நிலங்களில் உள்ள கடவுளர்களில் பாலை நில தெய்வம் மட்டுமே கொற்றவை. கொற்றவை வெற்றித் தெய்வமாக அழைக்கப்படுகிறாள். கொற்றவையானவள் காளி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறாள்.

**“ழ்கம் வம்போ தோழி! பாழ்பட்டுப்**
**பைதற வெந்த பாலைவெங் காட்டு”**

**(ஐங்: 317: 1-2)**

கோடைக்காலத்தில் பாலை மரங்கள் பசுமையை இழந்த வெம்மைமிக்க காடு வழியாக தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளான் என்று கூறுகின்றது மேற்கூறியப்பாடல்.

கேரளாவில் உள்ள விஷாரிகாவில் பாலை மரம் வளர்க்கப்பட்டு பாலை மரத்தாலேயே நேர்ச்சைப் பொம்மைகளைச் செய்கின்றனர். ‘‘கேரளாவில் உள்ள விஷாரிகாவில் இளைய பகவதி கோயில் வடக்கு நோக்கியுள்ளது. காளிகோயில் பொதுவாக வடக்கு நோக்கியே இருக்கும். வடக்குவாய் செல்லி“ என்பது தமிழிலக்கிய வழக்கு. இந்தக் கோயிலுக்கு முன்பாக ஏழிலைப் பாலை மரம் வளர்க்கப்பட்டுள்ளது. காளி பூசைக்குரிய பந்தக்கால்கள், மரக்கால் முதலான அனைத்துப் பொருட்களும் பாலை மரத்திலிருந்து தான் செய்யப்படும். பாலை மரம் காளியின் தல விருட்சம். “முற்றத்தில் உள்ள தெய்வப்பாலை” வெட்டி என்பது மலையாள நா வேறுபாடு. இம்மரத்தைத் “தெய்வப்பாலை” என்றும், “வலிய பாலை” என்றும் குறிப்பர். பஸ்தர் என்ற மீனவர் குலத்தினர், இம்மரத்தை மருள்வந்து ஆடுவதற்குப் பயன்படுத்துவர். பாலை மரத்தால் நேர்ச்சிப் பொம்மைகள் செய்வர். அவற்றைத் தெய்வங்களுக்கு அளிப்பர். இவ்வூர், விழா நாள்களில், பகவதி அம்மன் ஊர்வலம் பாலைமரம் இருக்கும் இடத்திலிருந்துப் புறப்படும்” (1995: ப.296) க.ப. அறவாணன் குறிப்பிட்டுள்ளார். இம்மரத்தில் தெய்வம் உறைவதாக நம்பப்படுகிறது.

**வாகை மரம்**

மறவர்கள் போரில் வெற்றி பெற்றவுடன் வாகைப் பூ அணிந்து கொண்டாடுவர். வெற்றியின் அடையாளக் குறியீடே வாகை. இதனை கடவுள் மரமாகவும் கூறுவர்.

**“போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த**
**கடவுள் வாகைத் துய்வீ ஏய்ப்ப’’**

**(பதிற். : 66:14-15)**

**கடம்ப மரம்**

கடம்ப மரம் முருகபெருமானுக்கு உகந்த மரமாகும். கடம்பமரத்தை வழிபட்டால் முருகனையே வழிபட்டதாக மக்கள் நம்பினர்.

கடம்பமரத்திற்கு "வெண்கடம்பு" என்றும் "மராஅம்" என்றும் பெயர்கள் உண்டு. கடம்ப மரக்கடவுளை வழிபட்டால் கொடியோரைத் தண்டிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. இதனை,

**"மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப"**

**(குறுந்: 87)**

என்றப் பாடலாலும், இளைஞர்கள் ஏறுதழுவச் செல்லும் முன் களத்திலுள்ள தெய்வம் உறையும் மரங்களான ஆலமரத்தையும் கடம்பமரத்தையும் வழிபட்டதை.

**"துறையும் ஆலமும், தொல்வலி மராஅமும**
**முறையுளி மராஅய், பாய்ந்தனர் தொழூஉ"**

**(கலி: 101:13-14)**

எனும் பாடல் வரியாலும் அறியலாம்.

**வேங்கை மரம்**

வேங்கை மரம் வயல்களை ஒட்டியப் பகுதிகளில் வளர்ந்து இருக்கும். வேங்கை மரத்தை வணங்கினால் வயல்களில் நெல் அதிகமாக விளையும் என்று மக்கள் நம்பினர்.

**"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் கழனியின் இதணத்து ஆங்கண"**

**(நற்: 216:6-7)**

வேங்கைமரம் மரம் பூக்கும் காலம் திருமணக் காலமாகக் கருதப்பட்டது. வேங்கை மரநிழலில் திருமணம் செய்வது மங்கலமாகக் கருதப்பட்டது.

**அணங்கு மரம்**

பெருங்கடவுள் அமர்ந்து நன்மைச் செய்யும் மரங்கள் கடவுள் மரம் என்றழைக்கப்படுகின்றன. இம்மரங்கள் ஊர் மன்றங்களிலும், அம்பலங்களிலும், பொது இடங்களிலும் காணப்பட்டது. இவையன்றி அச்சந்தரும் மரங்களும் இருந்தன. கடம்ப மரம் அச்சம் தரும் மரமாகக் காணப்பட்டது. "மலை, மரம், நீர் ஆகியவற்றில் உறையும் தெய்வங்களில் பெரும்பாலானவும் வருந்தும் தெய்வங்களேயாம். அச்சமும் வருத்தமும் விளைவிக்கும் காரணம் பற்றி இத்தெய்வங்களை அணங்கு என்றும் சூர் என்றும் குறிப்பிடுகின்றனர்" (1996: ப.121) என்று மு. சண்முகம் பிள்ளை கூறுகின்றார். கடம்ப மரத்தில் அணங்கு வீற்றிருப்பதற்கு

**"அங்குடைக் கடம்பின் முழுமுதல்**
**தடித்து"**

**(பதிற்: 88:6)**

எனும் பாடலடி சான்றாக அமைகிறது. மந்திக் குரங்குகள் மரத்தினின்று இறங்கி வந்து அணங்குடை முற்றத்தைச் சீர்குலைக்கும் செய்தியும் கீழ்வரும் பாடலில் பதிவாகியுள்ளது.

**"மடமான் பெருநிரை வைகுதுயில் எடுப்பி**
**மந்திசீர்க்கும் அணங்குடை முன்றிலில்"**

**(புறம்: 24745)**

**தொகுப்புரை**

மரவழிபாட்டின் தொன்மை மிகப் பழமையானது, இது மானிடத்தின் ஆரம்ப காலங்களிலேயே உருவாகி, பல நாகரிகங்களில் புனிதச் சடங்காக விளங்கியது. மரங்கள் மனிதனின் வாழ்வியல் தேவைகளில் அடிப்படைப் பங்காற்றியதால், அவற்றை தெய்வீகமாகக் கருதி வழிபட்டனர். தமிழர் பண்பாட்டிலும் உலகின் பல தொன்ம நாகரிகங்களிலும் மர வழிபாட்டின் தொன்மைகளை காணலாம். மரங்களை இயற்கையின் "தெய்வீக வடிவம்" எனக் கூறுகிறது. அத்தி, வேம்பு, வில்வம் ஆகிய மரங்கள் புனிதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. என்பதனை மேற்கண்ட சான்றின் வழி நம்மால் அறிய முடிகின்றது, மரவழிபாட்டின் உட்கருத்தாக அமைவது, மரங்கள் மனிதனுக்கு தங்குமிடத்தையும் உணவையும் கொடுதக்கின்றன, மரங்களை வழிபடுவதன் மூலம், வாழ்க்கையின் அடிப்படையை மதிப்படுகிறது என்ற உணர்வும் அதன் மூலம் அறிய முடிகின்றது. அதுமட்டும் இல்லாமல் மரவழிபாடு மர வழிபாடு மனிதனின் இயற்கை மேலாண்மைச் சிந்தனையையும் காட்டுகிறது. மரங்களை அழிக்காமல் பாதுகாப்பது நாகரிகத்தின் கடமையாகக் கருதப்பட்டது.

**துணை நின்ற நூல்கள்**


1. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல் நெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
2. பேராசிரியர் எஸ் திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் (பொருள்), (உரையாசிரியர்) கதிர் பதிப்பகம், திருவையாறு
3. முனைவர் இராசமாசிக்கனார், கலித்தொகை (உரையாசிரியர்), மூலமும் உரையும் பூம்புகார் பதிப்பகம்
4. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு (உரையாசிரியர்), மூலமும் உரையும், கௌரா பதிப்பகம்
5. மு. இராகவ ஐயங்கார், குறுந்தொகை மூலமும் உரையும், சாராதா பதிப்பகம்
6. நா.மு வேங்கடசாமி நாட்டார், ஐங்குறுநூறு மூலமும் உரையும், கௌரா பதிப்பகம்
7. முனைவர் இராசமாசிக்கனார், நற்றிணை (உரையாசிரியர்), மூலமும் உரையும் பூம்புகார் பதிப்பகம்.

# ‘ஆனைமலை’ மலைவாழ் மக்களின் இயற்கையோடியைந்த வாழ்வு

**திருமதி. க. ராமு**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*வீட்டு முகவரி 6, இந்திரா நகர் முதல் தெரு, பீ.பீ.குளம், மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**
*மலைகளைத் தங்கள் பூர்விட இடமாகக் கொண்ட மக்களை மலைவாழ் மக்கள் எனலாம். ஆனைமலையைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்ட மலசர் இன மலைவாழ் மக்களைப் பற்றி ‘ஆனைமலை’ புதினம் குறிப்பிடுகிறது. இயற்கையை அரணாகக் கொண்ட மலைவாழ் மக்களின் வாழ்வென்பது இயற்கையோடு இயைந்தது. கவின்மிகு கதிரவனும், மயக்கும் நிலவும், கத்தும் கடலும் சமவெளி மக்களுக்குத் தெரிந்த இயற்கையென்றால், சமவெளி மக்களின் கற்பனைக்கும் எட்டாத அடர்மிகு காடும், ஆர்ப்பரிக்கும் அருவியும், உறுமும் புலியும் கொண்டு உயர்ந்து நிற்கும் மலைதான் மலைவாழ் மக்கள் அறிந்த இயற்கை் அவர்கள் வணங்கும் தெய்வம் அவர்களின் வாழ்விடம் எல்லாம்! வாழ்வின் அனைத்து நிலைகளுக்கும் அவர்கள் இயற்கையைத்தான் சார்ந்திருக்கிறார்கள். இயற்கையை வணங்குகிறார்கள் இயற்கைச்சூழலில் வாழ்கிறார்கள் இயற்கைசார்ப் பொருட்களை உட்கொள்கிறார்கள் இயற்கை மருத்துவமே செய்கிறார்கள் இயற்கையை நேசிக்கிறார்கள் இயற்கையிடமிருந்தே கற்றும் கொள்கிறார்கள்.*

**முன்னுரை**

மலைகளைத் தங்கள் வாழ்விடங்களாகக் கொண்ட மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறையானது, சமவெளியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் வேறானது. மலைவாழ் மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் மலையும் மழையும் மட்டுமே. அவர்களின் பாதங்கள் மலைகளை நன்கறியும். அவர்களின் பாதங்களைத்தான் மலைகளும் அறியும். கரடு முரடான மலைகளைக் கூட மலைவாழ் மக்களின் பாதங்கள் எளிதில் கடந்து விடும். மலைகளில் பல்லாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் இவர்கள் முதலில் வேட்டையாடுதலை மட்டுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். குால மாற்றத்தின் காரணமாகவும் மலைகளில் ஆதிக்க வர்க்கத்தினரின் ஆக்கிரமிப்புக் காரணமாகவும் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் தங்கள் உணவுக்கான அடிப்படைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். மலையினின்று மலை வாழ்மக்களைப் பிரிக்க முடியா வண்ணம் மலைவாழ் மக்களின் வாழ்வு அம்மலையோடு இரண்டறக் கலந்துள்ளது. மலைக்கும் மலைவாழ் மக்களுக்கும் உள்ள பிணைப்பானது தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவினைப் போன்றது. தாய் குழந்தையை வழிநடத்தும். ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. ‘ஆனைமலை’ புதினம் எடுத்துரைக்கும் மலைவாழ் மக்களின் இயற்கையோடியைந்த வாழ்வினைப் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**புதின அறிமுகம்**

ஆசிரியர் பிரசாந்த் வே. எழுதிய ‘ஆனைமலை’ புதினம் இவரது முதற் புதின படைப்பாகும். ஆனைமலையைக் களமாகக் கொண்டு அங்கு வாழும் மலசர் இன மலைவாழ் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. இளன் என்ற வனக் காப்பாளரின் வழி வனத்துறையின் மலைவாழ் மக்கள் மீதான அத்து மீறல்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனைமலை புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டவுடன் ஏற்படும் மலைவாழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் அம்மக்களின் வாழ்வைப் பாதிப்பதைப் புதினம் வழி எடுத்தரைத்துள்ளார் ஆசிரியர்.

**மலைக்கும் மலைவாழ் மக்களுக்குமான பிணைப்பு**

**'**ஆனைமலை**'** புதின ஆசிரியர், புதினத்தில் காட்டுராசாவை அறிமுகப்படுத்தும் பாங்கில் மலைக்கும் மலைவாழ் மக்களுக்கு மிடையேயிருக்கும் பிணைப்பை கூறுகிறார். "செருப்பு இல்லாத பாதங்கள் கல், மண், மேடு, பள்ளம் எனப் பார்க்காமல் சீரான வேகத்தில் சென்றுகொண்டே இருந்தன. உறங்கும், உண்ணும் நேரம் தவிர்த்துப் பெரும்பாலும் அக்கால்கள் ஓரிடத்தில் நிற்காமல், நடந்து கொண்டேயிருக்கும். அப்படி காட்டிலும், மலைமேட்டிலும் ஓய்வில்லாமல் நடந்து நடந்து காட்டினை நன்கு அறிந்திருந்த கால்கள் அவை. எத்தகைய செங்குத்தான சரிவுகளிலும், மலைமேடுகளிலும் அக்காலகள் அலட்சியமாக ஏறியிறங்கும். தரைதளத்தில் நடக்கச் சிரமப்பட்ட அக்கால்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல் மலை மீது ஓடியவை. யாருக்கு எது என்றாலும், ஓடோடிச் செல்பவை. எந்நேரத்திலும் அச்சமின்றி அடர் வனத்தடங்களுக்குள் ஊடுருவிச் செல்லும். சாமர்த்தியம் கொண்டவை. அந்த மண்ணிற்கும், அந்தக் கால்களுக்கும் ஒரு பிணைப்பு இருந்தது." (ஆனைமலை, ப. 26) மலைகளையும் மலைவாழ் மக்களையும் தனித்துப்பிரிக்க இயலாது, பிரித்துப் பார்க்க இயலாது. மலைகளுடனான மலைவாழ் மக்களின் பிணைப்பு அலாதியானது. மலைகளில் எங்கு மேடு இருக்கும்? எங்கு பள்ளம் இருக்குமென்பது மலைகளோடு உறவாடும் மலைவாழ் மக்களின் பாதங்களுக்குத் தெரியும்.

**இயற்கையே தெய்வம்**

மலைவாழ் மக்கள் கல்லையும் மண்ணையும் கும்பிட்டனர். இயற்கையை வழிபட்டனர். ஏனென்றால் அவர்களது வாழ்வே இயற்கையை நம்பித்தான். மழை பொய்த்தால் அவர்களது வாழ்வும் பொய்த்துவிடும். வனத்தை வணங்கினால் தான் அவர்கள் அவ்வனங்களில் உயிர்தப்ப முடியும் என்று நம்பினர். "பதியின் எல்லையைக் கடக்கும் போது, காட்டுராசா வனதேவதையை வணங்கியபடி சென்றான். வேங்கைப்பதியின் நான்கு திசைகளிலும் வனதேவதை வீற்றிருந்தாள். எதிர்வரும் ஆபத்துகளிலிருந்து அவள் காப்பாற்றுவாள் என்பது பதியினர் நம்பிக்கை. மரங்களும், காடும், சூரியனும் அவர்கள் வணங்குபவையாக இருந்தன." (ஆனைமலை, ப. 26) வனங்களுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால், அதற்கொரு தைரியம் வேண்டும். அத்தைரியத்தை வனதேவதையை வணங்குவதின் வழி பெறமுடியும் என்று அம்மக்கள் நம்பினர்.

மலைவாழ் மக்கள் தங்களின் வழிபாடும் இயற்கைக்குரியதாகவே அமைந்திருந்ததை 'ஆனைமலை' புதினத்தின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. ஆண்டுக்கொரு முறை மலைவாழ் மக்கள் தாங்கள் வணங்கும் வனதேவதைக்குச் சிறப்பான வழிபாடு நடத்துவதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். வேங்கை மரத்தினடியில் அமைந்திருக்கும் வன தேவதைக் கோயிலுக்கு சூடம் காட்டின பிறகு, கதிரவனையும், சுற்றியுள்ள மரங்களையும் மலைகளையும் வணங்கி தங்கள் வழிபாட்டினை நிறைவு செய்கின்றனர்.

**மலைவாழ் மலசர் இன மக்களின் இருப்பிட அமைப்பு**

'ஆனைமலை' புதினம் காட்டும் மலைவாழ் மலசர் இன மக்களின் குடியிருப்புகள் இயற்கையோடியைந்து காணப்பட்டது. சுற்றுச்சூழலுக்கும் எவ்விதப் பாதிப்புமில்லாமல் அமைக்கப்பட்டிருந்தமையைப் புதினம் பதிவு செய்கிறது. மலைகளில் நன்கு முற்றி விளைந்த மூங்கில்களைக் கொண்டு சுவர் எழுப்பப்பட்டிருந்தது. குடிசைகளின் மேற்கூரையானது புற்களால் வேயப்பட்டிருந்தது. மிதமான மழையை ஓரளவு இக்குடிசைகள் தாங்கும் என்றாலும், கனத்த மழைக் காலங்களில் இக்குடியிருப்புகள் வாழ்வதற்கு உகந்தவையாக இல்லையாதலால், மிகுதியான மழை பெய்யும் காலங்களில்

மலைக்குகைகளையே இம்மக்கள் தங்கள் வாழ்விடங்களாகக் கொண்டனர் என்பதைப் புதினம் வழி அறிய முடிகிறது.

### இயற்கையின் இயல்பைக் கெடுக்காமை

நாம் இயற்கைக்குச் செய்யும் பெரும்பேறே இயற்கையை அதன் இயல்பிலேயே இருக்க விடுதலே ஆகும். 'ஆனைமலை' புதினம் குறிப்பிடும் மலசர் இன மலைவாழ் மக்கள் இயற்கையை அதன் இயல்பிலேயே விட்டுவிடுகிறார்கள். உணவுத் தேவைக்காகக் கிழங்கு எடுக்கும் போது கூட, செடியிலிருக்கும் அத்தனை கிழங்குகளையும் எடுக்கமாட்டார்கள். கிழங்குகளை விளைவித்த செடிகளுக்கென்று சில கிழங்குகளை விட்டு விடுவார்கள். தேனெடுக்கும் போது கூட, தேன் கூட்டைக் கலைத்து முழுவதுமாக அதிலிருக்கும் தேனை எடுக்காமல், தேன் கூட்டுக்கென்று சிறிதளவு தேனை விட்டுவிடுகிறாரகள். அப்படி விடப்படும் தேன்கூட்டை மீண்டும் தேனீக்கள் புதுப்பித்துக் கொள்வதையும் 'ஆனைமலை' புதினம் பதிவு செய்கிறது. எந்தவொன்றையும் அதன் சுவடு இன்றித் துடைத்தெடுக்காமல், அதன் எச்சத்தை விட்டு வருவதை மலைவாழ் மலசர் இன மக்கள் தங்கள் பழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

உணவிற்காகப் பயிரிடப்படும் நிலங்களைக் கூட மலைவாழ் மக்கள் அந்நிலங்களின் தன்மை கெட்டு விடாமல் இருக்க, நிலங்களில் குறிப்பிட்ட கால இடைவெளி விட்டே பயிர் செய்கின்றனர். மண்ணில் ஒரு முறை கேழ்வரகு பயிரிட்டு அறுவடை செய்த பின்னர், சில காலத்திற்கு அம்மண்ணை பயிரிடாமல் விட்டு விடுகின்றனர். அதேபோல், ஒரு முறை கேழ்வரகு பயிரிட்டால், அடுத்த முறை சோளம் பயிரிடுகின்றனர். இவ்வாறு பருவத்திற்கு ஏற்றாற்போலும், மண்ணின் தன்மைக்கேற்றாற் போலவும் பயிரிடுகின்றனர். இயற்கையின் இயல்பில் மாற்றம் ஏற்படுத்தாமல், அதன் இயல்புக்கேற்றவாறு மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்க்கை முறையைத் தகவமைத்துக் கொண்டிருக்கின்றனர்.

### வனவிலங்குகளுக்கும் மலைவாழ் மக்களுக்குமான தொடர்பு

மலைவாழ் மக்கள் தாம் வாழும் மலைகளில் வனவிலங்குகள் வாழ்வதாக எண்ணியது இல்லை. மாறாக தாமும் அவைகளுடன் வாழ்வதாகவே எண்ணினர். முன்பு மலைவாழ் மக்கள் வேட்டையாடுதலை மட்டுமே அறிந்திருந்த போதிலும், வனவிலங்குகளைக் குறித்த உள்ளார்ந்த அறிதல் அவர்களுக்கு இருந்தமையால் வன விலங்குகளின் எண்ணிக்கை மலைவாழ் மக்களால் குறைந்ததேயில்லை. வேட்டையாடுவதற்கான காலமெது? எவ்வகை விலங்குகளை வேட்டையாட வேண்டும் என்ற அறிவு அவர்களது சமூக நடைமுறையின் வழி அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. சினையண்ட விலங்குகளை வேட்டையாடக் கூடாது, விலங்குகளை அவற்றின் இனப் பெருக்கக் காலத்தின் போது வேட்டையாடக் கூடாது, அரிய விலங்குகளை வேட்டையாடக் கூடாது, அரிதாகி வரும் விலங்குகளை வேட்டையாடக் கூடாது, நோயாலோ, முட்களாலோ பாதிக்கப்பட்டுப் பலவீனமடைந்து இருக்கும் விலங்குகளை வேட்டையாடக் கூடாது என்ற புரிதல்கள் மலைவாழ் மக்களுக்கு இயல்பாகவே இருந்தது. வனவிலங்குகளினூடே வாழ்வதால் அவை எந்நேரத்தில் எவ்வாறாக நடந்து கொள்ளும் என்ற அறிதல் மலைவாழ் மக்களுக்கு இருந்தது. அவற்றின் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளுக்கான காரணங்களையும் அறிந்து வைத்திருந்தனர். வனப் பாதுகாப்பாளர் இளனை மக்னா என்ற யானை தாக்க வருகிறது. அப்போது மலசர் இன மலைவாழ் மக்களுள் ஒருவனான காட்டுராசா காட்டிலிருக்கும் குறிப்பிட்ட சில இலைகளை மக்னா யானையின் முன் காண்பித்து அதை விரட்டுகிறான். மக்னா யானையும் காட்டுராசாவிற்குப் பயந்து இளனைத் தாக்காமல் காட்டுக்குள் ஓடிவிடுகிறது. மதம் கொண்டு பிளிறி வரும் யானையை அடக்கும் நுட்பம் மலைகளையே வாழ்விடமாகக் கொண்ட காட்டுராசாவிற்குத் தெரிந்திருக்கிறது.

**முடிவுரை**

மலைவாழ் மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வினை மேற்கொள்கின்றனர். இயற்கையையே அரணாகக் கொண்ட அவர்களின் இருப்பிடச் சூழலும், இயற்கையோடான அவர்கள் வாழ்க்கைக்குக் காரணமாக அமைகிறது எனலாம். மலைவாழ் மக்களின் பாதங்கள் மலைகளில் படாத இடங்கள் இல்லை எனுமளவிற்கு மலைகளுடனான மலைவாழ் மக்களின் வாழ்வு ஒன்றோடொன்று கலந்திருந்தது. இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வினைக் கொண்ட மலைவாழ் மக்கள் வணங்குவதும் இயற்கையையே. வனதேவதையும், கதிரவனையும், மரங்களையும், மலைகளையும் தெய்வங்களாக வழிபடுகின்றனர். மலைகளில் கிடைக்கும் மூங்கில்களைக் கொண்டு தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றனர். நிலங்களின் தன்மையறிந்து பயிரிடுகின்றனர். இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களை முற்றிலுமாக தங்களுக்கென்று எடுத்துக் கொள்ளாமல், அப்பொருட்களை அளித்த இயற்கைக்கென்று சிறிதளவு விட்டுவிடுகின்றமையையும் “ஆனைமலை” புதினம் வழி அறிய முடிகிறது.

1. மீன் குகைவாசிகள் ப.14
2. மேலது, ப.11
3. மேலது., பக். 7, 8

**துணைநின்ற நூல்கள்**


1. கீரனூர் ஜாகிர் ராஜா, மீன் குகைவாசிகள், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி – 642002, இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட் 2013

# சிகரங்களை நோக்கிய இயற்கை

**முனைவர் மு. தமீம் மன்சூர்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி), மேல்விஷாரம், இராணிப்பேட்டை மாவட்டம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*மனிதன் தோன்றிய காலம் முதல் மறையும் காலம் வரை இயற்கையோடு இயைந்தவனாகவே வாழ்கிறான். இயற்கை மண்ணில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் எண்ணிலடங்கா நன்மைகள் பலவற்றை தந்தவனவாகவே விளங்குகிறது. இயற்கையின் பெருமைகளைத் தொடாத கவிகள் இல்லை. கவிஞர் வைரமுத்துவும் அதற்கு விதிவிலக்கன்று. அவர் இயற்றிய 'சிகரங்களை நோக்கி' சிந்தனையைத் தூண்டக் கூடியது. இயற்கையின் பெருமை பேசுகின்றது. காதலுக்காக இயற்கைப் பொருட்கள் உவமைகளாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் இங்கே இயற்கையைக் கொண்டாடுவதற்காக காதல் உவமையாக்கப்பட்டுள்ளது. அத்தகைய இயற்கையை ஐம்பூதங்களில் நிலம், நீர், காற்று, ஆகாயம் போன்றவற்றின் வாயிலாகவும், தாவரங்களில் விதை, பூ, கொடி, மரம், இயற்கை உணவு போன்றவை மூலமும் உயிரினங்களில் பூச்சிகள், பறவைகள், நுண்ணுயிர்கள் வழியாகவும் வகைமைப்படுத்தி இயற்கையின் சக்தியை முன்வைக்க இக்கட்டுரை முற்படுகிறது.*

## முன்னுரை

ஐவகை நிலங்களில் வாழ்ந்த சூழலில் பழந்தமிழர் பெற்ற நாகரிக வாழ்க்கையையே புலவர்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். தொல்காப்பியர் தொடங்கி இன்றுவரை படைப்பிலக்கியங்களை உருவாக்குகின்ற படைப்பாசிரியர்கள் இயற்கையையும் முன்னிறுத்தி பாடுபொருளாகக் கொள்கின்றனர். இயற்கை மனித சக்திகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதென்றும், மனிதன் இயற்கையை வென்றுவிட முடியாது என்பதையும் படைப்பாளர்கள் முன்னிறுத்துகின்றனர். அது உண்மை என்பதைப் போல் நடப்பு நிகழ்வுகளும் சூழல்களை நம் கண் முன் நிறுத்துகின்றன. நவீன தமிழ்ப் புனைகதைகளில் கவிஞர் வைரமுத்து இயற்றிய 'சிகரங்களை நோக்கி' சிந்தனையைத் தூண்டக் கூடியது. அதன் வகையில் இந்நூலில் இடம்பெறும் இயற்கை குறித்த தரவுகளை இங்கே காண்போம்.

## சிகரங்களை நோக்கி

நூலின் தொடக்கத்திலேயே நூலாசிரியர். **"மனிதநேசம் இருக்கட்டும் இந்த மண்மண்டலம் இருக்கட்டும். நமக்கு முன்னே வாழ்ந்தவர்களின் சுவாசமெல்லாம் இந்தக் காற்று மண்டலத்தில் இன்னும் இருக்கிறது இருக்கட்டும்."**[1] என்று ஐம்பூதங்களில் மண்ணையும் காற்றையும் முன்னிலைப்படுத்துகிறார்.

இயற்கையை விரும்புபவன் இதயம் உள்ளவனாக இருப்பான் என்பதை உணர்த்தும் வகையில் கதையைக் கவிதையாக்கியிருக்கிறார் வைரமுத்து.

திருஞானம் நகர வாழ்க்கையை நரக வாழ்க்கையாகக் கருதி, இயற்கையைத் தேடிச்செல்கிறான். அவன் சென்றது மலையூத்து என்னும் மலைக்கிராமம். இயற்கையை ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்தவனுக்கு மலையூத்து மக்களின் உணர்வுகளும் உள்ளங்களும் இயற்கைக்கு முரணாகவே இருந்தன. ஆனால் இவன் இதயத்திற்கு ஆதரவாக ஓவியா அமைந்தாள். ஒத்த அலைவரிசை கொண்ட இரு இதயங்களும் இடம் மாறின.

ஓவியாவின் தந்தை ஒரு நுண்ணுயிர் விஞ்ஞானி. இந்திய நாட்டில் தனக்குரிய மரியாதை கிடைக்காமல் போனதால் அந்நிய நாட்டிற்கு அடைமானமாகிறான். நுண்ணுயிர் ஆய்வால் தாய்நாட்டை அழிக்கத் திட்டமிடுகிறான். இறுதியில் இயற்கை வெற்றி பெறுகிறது.

**இயற்கை**

இயற்கை இவ்வுலக உயிர்கள் வாழ்வதற்கான சூழலைத் தகவமைத்துக் கொள்ள உதவிடும் வழியாகும். இயற்கை அழகின் மூலம் வெளிப்படுகின்ற காட்சிகள் ஓசைகள், நறுமணங்கள் மனிதனைப் புத்துணர்ச்சி ஊட்டி வாழ்வினை மேன்மைப்படுத்துகின்றது. மனித மற்றும் உயிரின அடிப்படைத் தேவைகளாக விளங்குகின்ற உணவு, தண்ணீர், காற்று போன்றவற்றை வழங்கி ஆரோக்கியத்திற்குப் பாதுகாப்பாக அமைகின்றது. அத்தகைய இயற்கையை ஐம்பூதங்கள், தாவரங்கள், உயிரினங்கள், மற்றும் நுண்ணுயிர்கள் என நான்காகப் பகுத்து புதினத்தில் இடம்பெறும் இயற்கை வெளிப்பாடு விரித்துரைக்கப்படுகிறது,

**ஐம்பூதங்கள்**

ஆதியில் கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார். கடவுள் பூமியைப் படைத்த பிறகு சூரியனையும் சந்திரனையும் படைத்தார். பிறகு பறவை விலங்குகளையும் மனிதனையும் படைத்தார். என்பதை பொதுவாக எல்லா மத வேதங்களிலும் காணமுடிகிறது. சைவத் திருமுறைகளின் முதலில் தோன்றிய நூலான திருமந்திரத்தில்,

**“பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்”**[2]

என்ற வரிகள் இறைவன் பஞ்ச பூதங்களை இயக்குவதாகவும், பஞ்ச பூதங்களில் இறைவன் மறைந்ததாகவும் குறிப்பிடுகிறது.

ஆனால் அறிவியலோ **“சூரியனிலிருந்து உருவான சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த பல கோள்களில் ஒன்றுதான் பூமி என்ற இந்த உலகம். இந்த உலகம் தோன்றி 4600 மில்லியன் அதாவது 460 கோடி ஆண்டுகள் ஆயின என்பர்.”**[3] என்று மு.பழனியப்பன் குறிப்பிடுகிறார். கவிஞர் வைரமுத்து ஐம்பூதங்களைப் பார்க்கின்ற கவிப்பார்வை சிந்திக்கத் தகுந்தது.

**நிலம்**

திருஞானம் நகர வாழ்க்கையை வெறுத்து மலையூத்து கிராமத்திற்கு வரும்போது மலை நிலத்தின் அழகை ஆசிரியர் கண்முன் நிறுத்துகிறார்.

**“பள்ளத்தாக்கில் மலைகள் தொட்டில் கட்டிக் கொடுத்திருக்கும் கிராமம் அது/ நட்சத்திரங்களாய் ஒன்றையொன்று உரசிக் கொள்ளாத வீடுகள்/இந்தியாவில் விவசாயமே சரிவுதான் என்பது மாதிரி சரிவுகளில் விவசாயம்/ விண்ணில் ஏவ மண்ணே தயாரித்திருக்கும் ஏவுகணைகளாய் வான்தடவி நிற்கும் நெடுமரங்கள்”**[4]

**நீர்**

இன்று நீருக்கான தேவை வேகமாக அதிகரித்து வருகிறது. தண்ணீரின் தேவை பாசனம், தொழில்துறை, வீட்டு உபயோகம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இம்மூன்றில் பாசனத்துக்கான நீர் தேவையே அதிகமாகும். இதனடிப்படையில் உருவாக்கப்பட்டது நதிநீர் இணைப்புத் திட்டமாகும். **“தேசிய நதிகள் இணைப்பு என்பது நடைமுறையில் தென்னிந்திய நதிகள் இணைப்புதான்”**[5] என்று ஏ.வைத்தியநாதன் குறிப்பிடுகிறார்.

திருஞானம் தன் ஆசைகளுக்கு முட்டுக்கட்டை போடும் பெற்றோரிடத்தில் தன் எதிர்ப்பை பதிவு செய்கிறான். **“மேகம் கடலுக்குப் பிறந்ததுதானே, ஆனால் மழையெல்லாம் தனக்கே சொந்தமென்று கடல் கையொப்பம் கேட்பதில்லை”**[6]

கிராமத்தை அடைந்த திருஞானம் மலையருவியைக் கண்டவுடன் தாய்நாடு சேர்ந்த அகதியைப்போல தாவிக் குதித்தான். **“சாலை ஓரமாய் பாறைகளின் பிளவிலிருந்து குதித்துக் கொண்டிருந்தது ஒரு குழந்தை அருவி/ உள்ளங்கையில் நீர் அள்ளி உயிர் நனைத்தான் / சட்டென்று அருவிக்கு நெற்றி காட்டி மூக்குத் தண்டில் வழியவிட்டான்/ஒரு கை நீரை உறிஞ்சிக் குடித்தான்/”**[7]

அருவி நீரை நினைத்து மகிழ்கின்ற நாயகன் இயற்கைக்கு நடக்கும் அநீதியையும் நினைத்து குமுறுகிறான். **“இந்த பூமிகது மூன்று பங்கு நீர் தந்தது இயற்கை அதைக் கொண்டு ஒரு பங்கு தாகத்தைத் தீர்க்க முடியவில்லையே! என்ன விஞ்ஞானம் உன் விஞ்ஞானம் என்று எச்சில் துப்புவேன்”**[8]

மலையூத்துக் கிராமத்தில் உள்ள ஏரியில் சில இளைஞர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அக்காட்சியை விளக்கும் ஆசிரியர், **“காட்டுக்குள் ஓர் ஏரி படுத்திருந்தது/ நான்கைந்து இளைஞர்கள் அந்த ஏரியின் தூக்கத்தின் மேல் தூண்டில் வீசிக் கலைத்துக் கொண்டிருந்தார்கள்.”**[9] என்று ஏரியையும் உயர் திணையாக்கி மகிழ்கின்றார்.

**காற்று**

கண்களால் காண முடியாத உணரக்கூடிய இயற்கை வடிவமே காற்று. இக்காற்று மண்டலத்தால் வெப்பநிலை மற்றும் பருவ நிலை மாற்றங்களும் நம்மிடையே உருவாகின்றன. இக்காற்று குறித்து தமிழ் இலக்கியங்கள் பலவிடங்களில் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களில் காற்று உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. திருவள்ளுவர் தமது அருளுடைமை அதிகாரத்தில்

> **“அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
> **மல்லல்மா ஞாலம் கரி”**[10]- குறள் 245

என்கிறார். இதன் பொருளானது, அருளுடையவர்க்கு இம்மையிலும் ஒரு துன்பம் உண்டாகாது. அதற்கு காற்று இயங்குகின்ற வெப்பத்தை உடைய பெரிய ஞாலத்து வாழ்பவரே சான்று ஆகும். இதனைக் கருத்தில் கொண்டே கவிஞரும் காற்றை அடையாளப்படுத்துகிறார்.

நகர வாழ்க்கையில் நெறியின்மை அதிகம் என்பதை கூறும்போது, **“செவிப்பறையைச் சல்லி செய்யும் இந்த சப்தங்கள் காற்றில் விஷம் கலக்கும் டீசல் கலாசாரம்.”**[11] என்று தமது எதிர்ப்பை உதிர்க்கின்றார்.

அதே காற்று மலையூத்து கிராமத்தில் அவனை வரவேற்கும்போது, **“திடீரென்று ஒரு சில்லென்ற காற்று சிறகு முளைத்த காற்று கண்களுக்குள் புகுந்து படலங்களில் பசை தடவிய காற்று/தான் எழுந்துவந்து வரவேற்க முடியாது என்பதால் தான் மலைராணி வாடைக் காற்றின் கையில் பூச்செண்டு கொடுத்து வரவேற்கிறாள்.”**[12] என்று காற்றோடு கை குலுக்குகின்றார்.

மலையூத்து மலைச் சாலையில் சிரித்துக் கொண்டும் காற்றைக் கிழித்துக் கொண்டும் நடந்தபோது, திருஞானத்தின் எண்ணமாக **“ஆகா! இந்தக் காற்றை அழுந்தச் சுவாசித்தால் ஆயுள் கூடும்.”**[13] என்று தமது எண்ணத்தை படைப்பாசிரியர் நிலை நிறுத்துகின்றார்.

**ஆகாயம்**

பக்தி இலக்கியங்களிலும், புராணங்களிலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட இயற்கைப் பதிவுகளில் ஆகாயமும் ஒன்றாகும். அளவிடமுடியாத உலகத்துப் பொருண்மைகளுக்கு உதாரணமாக குறிப்பிடுவது ஆகாயம் மட்டுமே. அது மன்னனின் புகழாக இருந்தாலும், அன்பின் எல்லையாக அமைந்தாலும், கொடையின் உயர்வாகக் கூறினாலும் படைப்பாசிரியர்கள் தொடுவது வானத்தின் எல்லையை மட்டுமே.

**“வளிமண்டலத்தினால் ஏற்படுகிற பாதிப்புகள் எல்லாம் 400 கிலோ மீட்டர்களுக்கு உள்ளேதான். அதற்கும் மேலே ‘மின்னனுத் தாரைகள்’ என்று சொல்லப்படும் எலக்ட்ரோ ஜெட்டுகள் (Electro – Jets) 32000 கிலோ மீட்டர் உயரத்திற்குள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை இயங்கிக் கொண்டிருக்கும் மண்டலத்திற்கு அப்பால் நாம் போய்விட்டால் நமக்குப் பயமில்லை”**[14] என்று நெல்லை சு.முத்து குறிப்பிடுகிறார்.

மலைச்சரிவில் இருக்கின்ற மலையூத்து கிராமமானது ஆகாயத்திற்கு அடுத்து இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது.

அதனை விளக்க முற்படும்போது **“அங்கே ஒரு மேகம் நனைத்துவிட்டுப் போக மறுமேகம் துவட்டி விட்டுப் போகும் ஒரு மூங்கில் வீடு”**[15] என்று கவிஞர் உவமிக்கின்றார். இதிலிருந்து அந்த மண், மலை, மரங்கள் அதனைப் போர்த்தி நிற்கும் வானம் எத்தனை அழகானது என்பதை உணர முடிகிறது.

கவிஞர் வைரமுத்து நெருப்பென்று தனியாகக் குறிப்பிடவில்லை. ஆனால் நெருப்பை விட பேராபத்தைத் தருகின்ற மஞ்சள் அமில மழையைப் பற்றி எச்சரிக்கின்றார்.

**“இந்த மஞ்சள் மழைத்தூளை வாயு மண்டலத்தில் விதைத்தால் போதும், திருவிழாக்களில் - ஊர்வலங்களில் - பொதுக் கூட்டங்களில் - போர்க்களங்களில் - ஹெலிகாப்டர்கள் பூத்தூவுவது போல இந்தப் பொடி தூவினால் போதும் தன் ரத்தத்தில் மனிதன் தானே மூழ்கிப்போவான்.”**[16] இதிலிருந்து இயற்கையை அழிக்கின்ற சக்திகளிடமிருந்து பாதுகாப்புடன் நிற்க வேண்டும்.

### தாவரங்கள்

நிலவுடைமைச் சமூகம் பயிரிடும் முறையை அறிந்த பிறகே உருவானது. காட்டு விலங்குகள் வழியாகவே உழுகின்ற தொழிலைக் கற்றார்கள். பன்றிகள் மண்ணில் புதைந்த கிழங்குகளைப் பறிக்கக் கொம்புகளால் உழுத குழிகளில் விழுந்த விதைகள் வளர்ந்தன. இதனை சங்க இலக்கியப் பாடலும் உறுதி செய்கின்றது.

**“கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பில்**
**தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்”**[17]
**- ஐங்குறு. 270**

கவிஞர் வைரமுத்துவும் தாவர வகைகளை தம் படைப்பில் ஆங்காங்கே படரவிடுகின்றார்.

### விதை, பூ

திருஞானம் சராசரி மனிதர்களிலிருந்து வேறுபட்டவன் என்பதைக் கூற வந்த கவிஞர், **“விதைக்குப் பிறந்தாலும் பூவுக்கு வேறு குணம். நீங்கள் கூட்டுப்புழுக்கள் நான் சிறகுகளைச் சிநேகிப்பவன்”**[18] என்று இயற்கையை அடையாளப்படுத்துகிறார்.

### கொடிகள்

மலைக் கிராமத்திற்கு வருகின்ற திருஞானம் இயற்கையைக் கொண்டாடி மகிழ்கின்றான். **“அதோ! அதோ! எங்கள் பெண்களைக் கேலி செய்ய தங்கள் கொண்டையில் பூ வைத்த கொடிகள் ஆனால் எங்கள் பெண்களை விடக் கொடிகள் சீர்திருத்தவாதிகள் / பூவறுத்தால் கொடிகள் புலம்புவதில்லை. மறுபடியும் பூத்துக் கொள்கின்றன.”**[19]என்று சமூக சீர்திருத்த நெடி கலந்த வார்த்தைகளைத் தூவுகிறான்.

### மரம்

மலைச் சரிவில் நிற்கின்ற மரத்தைக் கண்ட திருஞானம் மரத்தின் வளர்ச்சியை மனித சக்தியோடு ஒப்பிடுகிறான். **“பாறை மீது பசுமரம்/ வெடிகுண்டுக்குப் பிளக்காத பாறை வேருக்குப் பிளந்திருக்கிறதே/நான் யாருக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க? பாறைக்குள் புகுந்த வேருக்கா? அல்லது வேருக்கு நெகிழ்ந்த பாறைக்கா?/ நன்றியுள்ள மரம்/ தனக்கு இடம் கொடுத்த பாறைக்குக் குடை பிடித்து நிற்கிறதே!/முளைப்பதற்கு எந்தப் பாறையிலும் இடமிருக்கிறது, மனிதனுக்குத் தான் வேர்களில்லை/”**[20] என்பதிலிருந்து மனிதர்களின் இயலாமையை இயற்கை வேடிக்கை பார்க்கிறது.

### இயற்கை உணவு

மலைக் கிராமத்திற்கு வந்தவுடன் உணவு சமைக்க திருஞானம் காய்கறி கடைக்குச் செல்கின்றான். காய்கறிகளுக்குத் தண்ணீர் தெளிக்கின்ற கடைக்காரரோடு இயற்கை விவாதத்தைத் தொடங்குகிறான். **“வாடிப் போனாலே காய்கறியின் சத்தழியும் என்று வாடுகின்றவரே! அவிக்கிறீர்களே அப்போது...? சமைக்கிறீர்களே அப்போது.... சாறு வழியவிட்டுச் சக்கை உண்பீரே அப்போது...”**[21]

என்ற வார்த்தைகளோடு நாம் ஒப்புக் கொண்ட சமையல் முறையும் தவறானது என்று எச்சரிக்கின்றான். **“மனிதர்களே! நீங்கள் இறைச்சியைச் சாகடித்துச் சமைக்கிறீர்கள். காய்கறிகளைச் சமைத்து சாகடிக்கிறீர்கள்”**[22]

**உயிரினங்கள்**

உயிரினங்களின் பங்களிப்பு மனித வாழ்வியலுக்கு இன்றியமையாததாகின்றன. சுற்றுச் சூழலுக்கும், தனி மனித கற்றலுக்கும் உயிரினங்கள் வாழ்க்கை முறை காரணிகளாகின்றன. மனிதன் உயிரின வாழ்விடத்தை தன்வசமாக்கிக் கொள்கின்ற காரணத்தால் அவைகள் அச்சமடைகின்றன. தங்களை தற்காத்துக் கொள்ள பாதுகாப்பிற்காக மனிதர்களை வேட்டையாடுகின்றன. **“தமிழகத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியைப் போர்த்தியிருந்த முதுபெரும் மழைக் காடுகளில் இப்போது எஞ்சியிருப்பது ஆறு விழுக்காடு பரப்பு மட்டுமே.”**[23] என்று ஊடகங்களும் காட்டுயிர்களும் என்ற கட்டுரையில் தியோடர் பாஸ்கரன் குறிப்பிடுகிறார்.

**வண்ணத்துப்பூச்சி**

சராசரி மனிதர்களின் எண்ணங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் திருஞானம் கூறும்போது மற்ற மனிதர்கள் ஒவ்வொரு ரூபாயையும் தூக்கிப் பிடித்து, நடுவில் ஓட்டை சோதித்துப் பார்ப்பவர்கள் ஆனால் **“நானோ வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளை வாசிப்பவன்”**[24] என்று அடையாளப்படுத்துகிறான்.

**பறவைகள்**

பெற்றோர்கள் தங்கள் கருத்துக்களைப் பிள்ளைகளின் மீது நிர்பந்தித்தல் தவறு என்பதை குறிப்பிட விரும்பிய படைப்பாசிரியர் **“குஞ்சு பறக்கும்வரை சிறகுகளுக்குச் சிக்கெடுத்துவிட்ட தாய்ப்பறவை – அது கூட்டைவிட்டுப் பறந்ததும் வானத்தில் கோடு கிழிப்பதில்லை.”**[25] என்றும் தான் குயில். **“என்னைக் கசாப்புக் கடையில் கறிக்கு விற்று விடாதீர்கள் அப்பா”**[26] என்றும் பறவைகள் வழி வாழ்க்கைச் சிந்தனைகளைப் பறக்கவிடுகின்றார்.

**நுண்ணுயிர்கள்**

இந்த மண்ணில் வளர்கின்ற கோடிக் கணக்கான நுண்ணுயிர்களால் நன்மைகள் மட்டுமல்லாது தீங்குகளையும் உருவாக்கிட முடியும். ஓவியாவின் தந்தை நுண்ணுயிர்களால் இந்த தேசத்தை அழிக்க முற்படும் போது அதனை எதிர்த்து திருஞானம் குரல் கொடுக்கின்றான். அதில் பல வரலாற்று உண்மைகள் பரிமாறப்படுகின்றன.

‘ஆதிகால அமெரிக்கா செவ்விந்தியர்களின் பிடியில் இருந்தபோது பிரிட்டிஷ்காரர்களால் எதிர்க்கத் துணிவில்லை. எனவே அவர்கள் பெரியம்மை கண்டவர்கள் போர்த்தியிருந்த போர்வைகளை வழங்கினார்கள். இதனால் பெரியம்மை கண்டு செவ்விந்தியர்கள் சிதைந்தார்கள். மாவீரன் நெப்போலியன் இத்தாலியின் மன்த்வா கோட்டையைக் கைப்பற்ற கோட்டையைச் சுற்றி நீர் நிரப்பி மனிதர்களைக் கொல்கின்ற மலேரியாவால் வீழ்த்தினான். மேலும் சில நேரங்களில் கோட்டையை முற்றுகையிட செத்த பிணங்களையும் குதிரைகளையும் எந்திர வில்லில் வைத்து கோட்டைக்குள் அடிப்பார்கள். பிணங்கள் பிளேக் நோயை எளிதாகப் பரப்பின.’ இத்தகைய நுண்ணுயிர்கள் மனிதனை எளிதாக வீழ்த்தின.

இத்தகைய எதிர் வினைகளை நுண்ணுயிர்கள் நிகழ்த்தினாலும் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான ஆக்கப்பூர்வ நிகழ்வுகளையும் ஏற்படுத்துகின்றன. இதனை ஆசிரியர், **“நுண்ணுயிர்களால் ஐம்பூதங்களை வேலை வாங்கலாம்./ இந்த வறட்டு பூமி மலட்டு பூமியாய் மாறிவிடாமல் பாதுகாப்பவை நுண்ணுயிர்கள்/ இறந்த உடல்களைத் தின்று தீர்த்தும் சுற்றுப் புறத்தைச் சுத்திகரிப்பவை நுண்ணுயிர்கள்/ செத்த கழிவுகளை**

**சிதிலப்படுத்திச் சத்துக்களாய் மாற்றுபவை நுண்ணுயிர்கள்/ திராட்சை ரசத்தைக் கொதிக்க வைத்து மதுத்துளிகளாய் மாற்றுபவை நுண்ணுயிர்கள்"**[27] என்று திருஞானத்தின் கூற்றாக முன்வைக்கின்றார்.

## முடிவுரை

ஒரு விஞ்ஞானி இந்தச் சமூகத்தை மூளையால் பார்க்கிறான். ஒரு படைப்பாளனோ இதயத்தால் பார்க்கிறான். இந்த இரண்டு பார்வைகளையும் ஒரே இருப்புப் பாதையில் இயற்கை என்ற தொடர் வண்டியைக் கொண்டு வாசகச் சிகரங்களை நோக்கி சரியான காலத்திலும் களத்திலும் படைப்பாளர் கொண்டு சேர்க்கிறார்.

## தொகுப்புரை

- பழந்தமிழர் வாழ்வு இயற்கையோடு இயைந்திருந்ததைப போல தற்போதும் தமிழர் வாழ்க்கை முறையை இயற்கையோடு பொருந்தியுள்ளனர்.
- நவீன புனைகதைகளில் குறிப்பாக, கவிஞர் வைரமுத்துவின் 'சிகரங்களை நோக்கி' என்ற நூலில் இயற்கை வியந்து பாராட்டப்பட்டுள்ளது.
- இக்கட்டுரையில் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்னும் பஞ்ச பூதங்களில் முதல் நான்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- மேலும் இந்நூலில் கவிஞர் வலியுறுத்துகின்ற தாவரங்கள், உயிரினங்கள், நுண்ணுயிரினங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- தாவரங்களாக விதை, பூ, கொடிகள், மரங்கள், மற்றும் இயற்கை உணவும், உயிரினங்களாக வண்ணத்துப்பூச்சி, பறவைகளும் மற்றும் நுண்ணுயிரிகளாக மலேரியா, பிளேக், போன்றனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
- இயற்கை நாம் என்ன கொடுக்கின்றோமோ அதனையே திரும்ப பரிசாகக் கொடுக்கும் என்ற உண்மையை நூல் வழி கவிஞர் விளக்குகின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. வைரமுத்து, சிகரங்களை நோக்கி ப.3, சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு - 2010
2. ஜி.வரதராஜன், (உ.ஆ) திருமந்திரம், ப.123,பழனியப்பா பிரதர்ஸ், சென்னை பதிப்பு –1983
3. க.பூரணசந்திரன் (தொ.ஆ) அறிவியல் கட்டுரைகள் ப 22, அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை. பதிப்பு – 2012
4. வைரமுத்து, சிகரங்களை நோக்கி ப.20, சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
5. க.பூரணசந்திரன் (தொ.ஆ) அறிவியல் கட்டுரைகள் ப 67 அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை. பதிப்பு – 2012
6. வைரமுத்து, சிகரங்களை நோக்கி ப.8 சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
7. மேலது ப.17
8. மேலது ப.27
9. மேலது ப. 9
10. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், முத்தமிழ்ப் பதிப்பகம், நங்கநல்லூர், சென்னை – 61 பதிப்பு - 2009
11. வைரமுத்து சிகரங்களை நோக்கி ப 9 சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
12. மேலது பக்.13,14
13. மேலது ப 22
14. க.பூரணசந்திரன் (தொ.ஆ) அறிவியல் கட்டுரைகள் ப 29 அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை. பதிப்பு – 2012
15. வைரமுத்து சிகரங்களை நோக்கி ப.10 சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
16. மேலது ப.158

17. எம்.நாராயண வேலுப்பிள்ளை (உ.ஆ), ஐங்குநுறூறு, ப.174, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,
18. அம்பத்தூர், சென்னை 98 பதிப்பு - 2007
19. வைரமுத்து சிகரங்களை நோக்கி ப.6 சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
20. மேலது பக்.14,15
21. மேலது ப.16
22. மேலது ப.23
23. மேலது ப.24
24. க.பூரணசந்திரன் (தொ.ஆ) அறிவியல் கட்டுரைகள் ப 29 அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை. பதிப்பு– 2012
25. வைரமுத்து, சிகரங்களை நோக்கி, ப.7, சூர்யா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2010
26. மேலது ப.8
27. மேலது ப.9
28. மேலது ப.92

# விஜயா கிருஷ்ணன் சிறுகதைகளில் இயற்கை

**பா. தமிழ் செல்வி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*
*மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**முனைவர் மு. சாந்தினி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

## முன்னுரை

இன்றைய படைப்பிலக்கியங்களின் கதைக்கரு மனித வாழ்விலிருந்தே உருவாகிறது. இவ்வகையில் மனிதா்களின் அனுபவங்களும், எண்ணங்களும் சிறப்பாக சுதந்திரமாக வெளிப்படும் பொழுது படைப்பிலக்கியங்கள் தோன்றுகின்றன. இவ்விலக்கியங்கள் நாவல், சிறுகதை, நாடகம், கவிதை என்று பல்வேறு வடிவங்களைக் கொண்டு விரிவு பெறுகின்றன. இவற்றுள் சிறுகதை மனித வாழ்க்கையோடு மிக நெருங்கி இருக்கும் இலக்கிய வகையாகிறது.

## சிறுகதை இலக்கியம்

சிறுகதை, உரைநடைப் படைப்பிலக்கியத்திற்கு உரியது. இருபதாம் நூற்றாண்டின் புதுமைகளாக இவை உருவாகியுள்ளன. நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், கற்பனைகள் சிறுகதைகளாக மலா்கின்றன. இக்காலப் படைப்பிலக்கியங்களுள் சிறந்ததாகச் சிறுகதை இலக்கியம் கருதப்படுகிறது. உயிராக உணர்ச்சியும், உருவமாக மொழியும் அமைந்து சிறுகதை வாழ்வு பெற்றுள்ளது. மக்களை இன்புறுத்தும் வகையிலும், அறிவுறுத்தும் வகையிலும் சிறுகதைகள் தோன்றியுள்ளன.

இந்தியாவில் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி, அறிவியல் புரட்சி, தேசிய எழுச்சி ஆகியன உரைநடை இலக்கியத்தை வளா்ப்பதற்கான காரணிகள் ஆயின. இந்திய மொழிகளிலும் மரபுக் கவிதைகள் படிப்படியாய்க் குறைந்து புதிய கவிதைகள் தோன்றின. அவ்வாறே கதைகளிலும் மரபுநிலை மாறி, புதுமை இடம்பெறத் தொடங்கியது. இதன் விளைவு சிறுகதை இலக்கியம் சிறந்த இலக்கிய வடிவமாய் மலர ஆரம்பித்தது. சிறுகதை ஐரோப்பியா் வரவால் தமிழுக்குக் கிடைத்தது என்பது அறியத்தக்கது.

## சிறுகதையின் அமைப்பு

கற்பனை ஆற்றல், சொல் நயம், நடை அமைப்பு மிக்க படைப்பாளரின் படைப்பே சிறுகதையின் தோற்றத்திற்கு அடிப்படையாகிறது. அளவிற் சிறியதாய் அமைந்து, ஆற்றல் மிக்கதோா் இலக்கிய வடிவமாய்ச் சிறுகதைகள் திகழ்கின்றன. சொல்கின்ற கருத்தில் தெளிவும், வெளியீட்டில் சிக்கனமும், தெளிவான ஓட்டமும், தொய்வில்லாத ஈர்ப்பும் சிறுகதைக்கு அவசியம்.

சிறுகதைப் படைப்பாளா்கள் தங்கள் உள்ளத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ப, புறவாழ்க்கையில் தாம் காணும் காட்சிகளை, அனுபவங்களைக் கொண்டு சிறுகதைகளைப் படைக்கின்றனா். இப்படைப்புகள் மனித சமூகத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் அமைதல் வேண்டும். சிறுகதைகள் மூலம் படைப்பாளரின் கற்பனை, மனநிலை, ஆளுமை ஆகியவை வெளிப்பட வேண்டும். பொதுவாகச் சிறுகதைகள் ஒரு படிப்பினையை அடிப்படையாகக் கொண்டு உயா்ந்த குறிக்கோள்களை வலியுறுத்துகின்றன.

**இயற்கை – சுற்றுச்சூழல்**

புவியின் இயற்கை நிலைகள் அனைத்தும் ‘சுற்றுச்சூழல்’ என்பதில் அடக்கப்படுகின்றன. ‘உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்று, நீர் போன்றவை அடங்கிய இயற்கை நிலை (Environment)’[1] மனிதன் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலும் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்குமான நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

‘சூழல் மண்டலத்தில் (Eco System) உள்ள உயிரற்ற (Abiotic) காற்று, நீர், வெப்பம், ஒளி, இன்ன பிறவும், உயிருள்ள (Biotic) தாவரங்கள், உயிரினங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியதே சுற்றுச்சூழலாகும்’.[2] மேலும், மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவைச் சுட்டும் வகையில், ‘சுற்றுச்சூழல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நுண்மையான சமன்படுத்தப்பட்ட மென்மையான உறவாகும்’.[3]

**சுற்றுச்சூழல் சீர்கேடு**

சூழலோடு இயைந்து இயங்கும் வாழ்வே வளத்தைத் தரும். எதிர்திசையில் மனிதன் பயணிக்கும்போது இயற்கையின் சீற்றங்களுக்கு ஆளாக நேரிடுகிறது. இயற்கையைப் புறந்தள்ளும் பொழுது இயற்கை அவனைப் புறந்தள்ளுகிறது.

‘உயிர்ப் பொருள்களின் வாழ்வியக்கத்திற்குத் தேவையான நீர், நிலம், காற்று போன்ற பொருட்கள் மாசடையாமல் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வே சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வு’[4] என்று உலகின் உயிர் மூலங்களான நீர், நிலம், காற்றின் பாதுகாப்புச் சுட்டப்படுகிறது. இம்மூன்றின் தன்மைகளே உலகச் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்றன.

சுற்றுப்புறச்சூழல் என்ற புவியின் மிகப்பெரிய பாதுகாப்பு அரணை, மனிதன் என்ற சமூகப் பொறுப்புள்ள காரணி பாதிப்பிற்கு உள்ளாக்காமல் வாழ்தல் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நற்பயனை விளைவிக்கும். தன்னுடைய தற்காலிகத் தேவைகளுக்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ மனிதன் மேற்கொள்ளும் சுற்றுச்சூழலுக்கு எதிரானச் செயல்பாடுகள் மனிதகுலத்தை மட்டுமல்லாது ஒட்டுமொத்த உயிரினத்திற்கே கேடு விளைவிப்பதாக அமையும்.

**இயற்கை – மரங்கள்**

தாவரங்களைக் குறிப்பாக மரங்களை உறவுகளாக, தெய்வங்களாக, அரசின் கௌரவச் சின்னங்களாக, வாழ்வோடு இணைந்த அனைத்துமாகப் பார்த்தவர்கள் நம் பழந்தமிழர்கள். ஆனால், இன்று அவை வெட்டப்பட்டு வருகின்றன. இதனால் கூடுகட்ட எத்தனிக்கும் பறவைகள் ஏமாந்து போகின்றன. இந்நிலையில் வனங்களின் மரங்களின் அழிவு பற்றியதான பதிவுகள் இக்கால இலக்கியங்களில் மிகுதியும் காணப்படுகின்றன.

விஜயா கிருஷ்ணனின் ‘நெறஞ்ச மனசு’ என்னும் சிறுகதைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ‘இயற்கையை நேசித்தவள்’ என்னும் கதையில் வருகின்ற காயத்ரி தான் பிறந்த போது வீட்டைச் சுற்றி நடப்பட்ட பத்து தேக்குமரக் கன்றுகளை விற்று வரதட்சணைக் கொடுக்க அவளது பெற்றோரான மீனாட்சியும், சிவராமனும் முடிவெடுக்கின்றனர். இருபத்தி இரண்டு வருடங்களாக வளர்த்த இந்த மரங்களின் அழிவிலா என் வாழ்வு தொடங்க வேண்டும் என்று எண்ணுகிறாள். ஏதேச்சையாக மாப்பிள்ளை காயத்ரியை சந்திக்கும் போது விபரங்களை அறிந்து பெற்றோரிடம் கூற, அவர்களும் காயத்ரியைப் போலவே மரங்களை நேசிக்கின்றவர்கள் என்பதால் வரதட்சணை வேண்டாம் எனக் கூறி விடுகிறார்கள்.

மரங்கள் தான் நமது பூமியைக் காக்கின்றன. மாசில்லா காற்றை நமக்குத் தருகின்றது. மரமில்லை என்றால் மழையில்லை. பூமிக்கு வளமும் இல்லை. வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம். நாட்டிற்கு வளம்

சேர்ப்போம் என்ற கொள்கையில் என் தந்தைக்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் கூட என்று பிரபு கூறுவதிலிருந்து இயற்கையை நேசிக்கும் மனிதர்கள் இன்றளவும் இருக்கிறார்கள் என்பதை நமக்குக் காட்டுகிறது.

**மரங்களை அழித்தல்**

'மரங்கள் என்றால் வெறும் மழைக்காக மட்டுமா? மரம் பூச்சி புழுக்களுக்காக் மரம் பறவைகளுக்காக் மரம் விலங்குகளுக்காக் மரம் மனிதருக்காக் மரம் எல்லாருக்காகவும் தான். சரக்குந்துகளில் பென்னம்பெரிய மரங்களை ஏற்றிச் செல்கிறார்கள். எத்தனையோ பறவைகளைக் கொன்று எத்தனையோ புழுபூச்சியைக் கொன்று,'[5] என்பதில் மரங்களின் சிறப்பும் இன்று அவை அழிக்கப்படுவதும் சுட்டப்படுகிறது. மரங்களோடு சேர்ந்து உயிரினங்களும் அழிக்கப்படுவது சுற்றுச்சூழல் அழிவைக் காட்டுகிறது.

'மரம் வைத்துதான் நிலத்தையும் அடையாளப்படுத்துவார்கள். ஏற்றம் இருந்தது மரங்களால் கமலையாய் இருந்தது வண்டியாய் இருந்தது செக்காய் இருந்தது தேராய் இருந்தது தெய்வச்சிலையாய் இருந்தது ஏராய், நுகத்தடியாய், மோட்டுக்குச்சியாய், இப்படி திரும்பின பக்கமெல்லாம் மரங்கள், இன்று வெட்டி வெட்டிச் சரக்குந்தில் பட்டணத்திற்கு ஏற்றுகிறார்கள். 'சாமில்'லின் இராட்சத வாய்க்குள் அரைபடுகின்றன மரங்கள். ஒவ்வொரு மரமும் சாயும் போதும் கேட்கிற பெருமூச்சால் காற்று விம்முகிறது,' என்பதில் மரங்களின் அழிவு சுட்டப்படுகிறது.

**இயற்கை –நீர்வளம்**

ஒரு நாட்டின் வளத்தை உறுதிப்படுத்துபவை அந்நாட்டின் நீர்நிலைகளே.

**"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு"**

**(குறள்: 20)**

என்று நீரின் மேன்மையைச் சுட்டிக் காட்டியுள்ளார் வள்ளுவர். மேலும்,

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது".**

**(குறள்: 16)**

மழை இல்லையானால் ஓரறிவு உயிர்கூட வாழமுடியாது என்கிறார் வள்ளுவர்.

உடலின் செந்நீர் போல உலகிற்குப் பற்றுக்கோடாக விளங்கும் நீரின் தேவை குறித்தும், நீரினைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பழந்தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன.

விஜயா கிருஷ்ணனின் 'நெறஞ்ச மனசு' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இரண்டாவதாக இடம் பெற்றுள்ள 'மனிதம்' என்னும் சிறுகதையில் வரும் காவேரி குழாயடிக்கு தண்ணீர் பிடிக்கச் செல்கிறாள். ஒரு வாரத்திற்கு பிறகு இன்றைக்குத் தான் தண்ணீர் வந்ததாகவும், காலையிலே ஆறு மணிக்கே குடம் கொண்டு போய் போட்டும் எனக்கு குடிக்கக்கூட ஒரு குடம் தண்ணீர் கிடைக்கல என்று கூறுவதிலிருந்தும், குடிக்கவோ, சமைக்கவோ, குழந்தையைக் குளிப்பாட்டவோ கூட தண்ணீர் இல்லை என்று கூறுவதிலிருந்தும் தினம் தினம் நடக்கும் குழாயடி சண்டைகளும் நீரின் இன்றியமையாமையைக் காட்டுகிறது.

**நீர்வள மாசுபாடு**

நீர் நிலைகள் குப்பை கொட்டும் பள்ளங்களாக மாறி வருகிறது. குப்பைகளால் நன்னீர் சாக்கடையாதலும், கொசுக்களுக்குக் கூடாரமாதலும் சுற்றுச்சூழல் பாதிப்பாகும். 'பயன்பாட்டிற்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய வகையில் நீரின் வேதியியல், இயற்பியல், உயிரியல் நிலைகளில் ஏற்படும் மாற்றம் நீர் மாசுபாடு எனப்படுகிறது. இவ்வாறு மாற்றமடைந்த நீர் மக்களின், பிற உயிர்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதாக மாறிப்போய் விடுகிறது.'[7]

நவீன கண்டுபிடிப்புகள் மனித வாழ்வின் ஓட்டத்தை விரைவுபடுத்தியது என்பது எந்த அளவிற்கு உண்மையோ அதே அளவிற்கு

இயற்கைக்கு எதிரான ஓட்டத்தையும் விரைவுபடுத்தியது என்பதில் ஐயமில்லை. வேளாண்துறையில் மின்இறைப்பான்கள் வந்த பிறகு நீரின் நிலத்தடி நீர்மட்டம் வெகுவிரைவாக உள்வாங்கியதையும், வற்றியதையும், நிலம் வறண்டு வேளாண்வளம் குன்றியதையும் இன்றைய இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

'இரவு பகலாக போட்டி போட்டுக் கொண்டு மோட்டார்கள் ஓடுகின்றன. ஒவ்வொரு கமலைக் கிணறாக உயிர்விடத் தொடங்கின'[8] என்று மின் இறைப்பான்கள் விவசாயத்துறையில் நுழைந்ததன் விளைவு சுட்டப்படுகிறது. 'மயக்கங்கொண்ட ஒரு பிச்சைக்காரனைப் போல கிணறு புதர் மண்டிக்கிடக்கிறது'[9] என்று அறிவியல் கண்டுபிடிப்புகள் இயற்கைக்கு எதிராகிப் போன நிலை சுட்டப்படுகிறது. இன்றைய இலக்கியங்கள் நீர்நிலைகள் மாசுபடுத்தப்படுவதையும், அழிக்கப்படுவதையும் பதிவு செய்கின்றன. இவ்வகைப் பதிவுகள் இன்றைய சூழலைப் பதிவு செய்து, எதிர்காலச் சமூகம் எதிர் கொள்ளவிருக்கும் சிக்கல்களை உணர்த்துவதாக உள்ளன.

விஜயா கிருஷ்ணனின் 'மனிதம்' என்னும் கதையில் காவேரி தன் கணவர் ராஜுவிடம் கிணத்திலே தண்ணி வத்திப் போச்சு, ஆத்திலேயும் தண்ணீர் ஓட்டம் அதிகமில்லே. எல்லோரும் குப்பைகளை அதிலே கொட்டி அசிங்கப்படுத்தி வைச்சிருக்காங்க என்று கூறுவதிலிருந்து நீர்மாசுபாடு அடைந்து வருகிறது என்பது புலனாகிறது.

## இயற்கை – நிலவளம்

நம்மிடம் உள்ள விளைநிலத்தின் மூலமாகத் தான் நமது மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்ப உணவு உற்பத்தி செய்ய முடியும். வேளாண்துறை வளர்ச்சி மட்டும் சரியாக இருந்தால், இந்தியாவின் வளர்ச்சிப் பாதை மிகவும் பாதுகாப்பாக இருக்கும். 'சீக்கு வந்தவனின் உடம்புபோல் வெளுத்துக் கிடக்கின்றன வயல்கள். ஒரு நண்டு நத்தையில்லை. ஒரு தவளை கூக்குரலில்லை. ஒரு சில் வண்டில்லை. ஒரு நாக்கு பூச்சியில்லை'.[10]

விஜயா கிருஷ்ணனின் 'வேரூன்றும் விழுதுகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன' 'மாமனாரின் உயில்' என்னும் கதையில் வரும் மாமனார் விஸ்வநாதன் தனது இளைய மகன் சிவா காஷ்மீரில் எல்லைக் காவல் பணியில் இறந்து விடவே, தனது சுய சம்பாத்தியம் முழுவதையும் மருமகள் மீராவின் பெயரில் மாற்றி எழுதுகிறார். இது மீராவிற்கு பாதுகாப்பு உணர்வை அளிக்கும் என்பதை அவர் நம்புகிறார். இதன் மூலம் நில வளத்தின் முக்கியத்துவம் தெரியவருகிறது.

மேலும், விஜயா கிருஷ்ணனின் 'வேரூன்றும் விழுதுகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள காத்திருந்து... காத்திருந்து...' என்னும் கதையில் கங்கா, கவிதா மற்றும் காவேரி ஆகிய மூன்று தங்கைகளையும் அழைத்து நிலத்தை பகிர்ந்தளிக்க எண்ணுகிறான் அவர்களது அண்ணன். இதிலிருந்து நிலவளம் பெண்களின் வாழ்க்கைக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது என்பது புலனாகிறது.

## நிலவள மாசுபாடு

இந்தியாவில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் நோக்கம் உடனடி உற்பத்திப் பெருக்கம் என்பதில் இருந்த அளவிற்கு, மண்வளப் பாதுகாப்பு, சீரான வளர்ச்சி, நிரந்தர உணவு உற்பத்தி என்பதில் இல்லாமல் போனது நற்பயனின்மையே. அதன் விளைவே மண் மாசுபாடு, உற்பத்தி முடக்கம், விளைநிலம் தரிசாதல் போன்றவை. மற்றொரு நலக்கேடு வேளாண் உற்பத்தியில் இரசாயனப் பொருள்களின் மிகுதியான பயன்பாடு ஆகும்.

'தலைமுறை தலைமுறையாய்க் காப்பாற்றிய நிலம் தாயைப் போல் சோறு போட்ட நிலம் உடைந்த பானையாய்க் கிடக்கிறது. வந்த விலைக்கு நிலத்தை

விற்றுவிட்டோ, அல்லது விற்க ஆள் பார்த்தோ பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் ஒரு உழவரை எல்லா ஊரிலும் நீங்கள் சந்திக்கலாம்’[11] என்பதிலிருந்து இருக்கின்ற குறைந்தளவு விளைநிலங்களும் தொழிற்சாலைகளாக தொகுப்பு வீடுகளாக, பன்னாட்டு நிறுவனங்களாக உருமாறி வளர்ந்து நிற்கின்றன. நல்ல நிலையில் உள்ள விளைநிலத்தையும் மனிதன் தன் தொலைநோக்கில்லா செயல்பாடுகளால் மாசுபடுத்தி வீணடித்து வருகிறான். மனிதச் செயல்பாடுகளால் மண்ணின் தன்மை நாளுக்கு நாள் மாசடைந்து வருகிறது. இன்றைய இச்சூழலை இக்கால இலக்கியங்கள் பதிவு செய்ய தவறவில்லை.

## முடிவுரை

ஐம்பூதங்களை விஞ்சக்கூடிய ஆற்றல் மனிதனுக்கு இல்லை என்பதை உணர்தல் வேண்டும். அவை தன் நிலை திரிந்தால் அவற்றைக் கட்டுப்படுத்துதல் இயலாத ஒன்று என்ற அனுபவ உண்மையை மறத்தல் கூடாது. அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் என்ற விரைவுப் பயணத்தில் இயற்கை அன்னையைப் பலியாக்கிவிடக் கூடாது. சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடுகள் எவையும் மனிதகுலத்திற்கு எதிரான செயல்களே என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் உணர்தல் வேண்டும். மனித வாழ்வில் மகிழ்ச்சியும் நிறைவும் அவன் வாழும் சூழலைப் பொறுத்து அமைகிறது. அதனை வடிவமைத்துக் கொள்பவனும் வளமாக்கிக் கொள்பவனும் மனிதனே. இதை உணர்ந்து, இயற்கையைப் பாதுகாத்து இயற்கையோடு இயைந்து வாழ்தல் தனக்கு மட்டுமல்லாது எதிர்கால சமூகத்திற்கும் நற்பயன் விளைவிப்பதாய் அமையும்.

## அடிக்குறிப்புகள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, பக். 462
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு. பக். 401
3. மேலது,பக். 415
4. மேலது,பக். 295
5. தும்பிகள் மரணமுறும் காலம், இரா. பச்சையப்பன், பக். 55, 2012, பொன்னி பதிப்பகம்.
6. மேலது, பக். 55
7. சுற்றுச்சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம், பக். 36
8. தும்பிகள் மரணமுறும் காலம், இரா. பச்சையப்பன், பக். 27, 2012,பொன்னி பதிப்பகம்.
9. மேலது,பக். 27
10. மேலது,பக். 35
11. மேலது,பக். 59.

# ஔவையாரும் இயற்கையும்

**முனைவர் வ. மேரிகுயின்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மரியாகலைமற்றும் அறிவியல், மகளிர் கல்லூரி, வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கை என்பது நம்மைச் சுற்றியுள்ள இயற்பியல் சூழலுக்கும், வளிமண்டலம், சுற்றுச்சூழல், தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் மனிதர்களின் வாழ்க்கைக்கு இடையேயான தொடர்புகளைக் குறிக்கிறது. இயற்கை பூமிக்குக் கடவுள் கொடுத்த விலைமதிப்பற்ற பரிசு. இயற்கையானது நம் வாழ்வின் முக்கியமான மற்றும் பிரிக்க முடியாத பகுதிகளில் ஒன்றாகும். முழு மனித இனமும் பலவழிகளில் இயற்கையை சார்ந்துள்ளது. நாம் சுவாசிக்கும் காற்று, நாம் வாழும் நிலம், நாம் குடிக்கும் தண்ணீர், உண்ணும் உணவு அனைத்தும் இயற்கை மனிதனுக்கு அளிக்கும் மிகப்பெரிய கொடையாகும். இயற்கை மிகவும் சக்தி வாய்ந்தது மற்றும் தனித்துவமானது. இயற்கை கல்வியின் ஆதாரமாகவும் கருதப்படுகிறது. மரங்களிலிருந்து மனத்தாழ்மையையும் மலைகளிலிருந்து உறுதியையும் பூக்கள் மற்றும் மொட்டுகளிலிருந்து வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளிலும் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்பதையும் கற்றுக் கொள்ளலாம். சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை ஏராளமான புலவர்கள் இயற்கையை அழகாக சித்தரித்து அதன் அழகையும் முக்கியத்துவத்தையும் நமக்கு உணர்த்தி இருக்கிறார்கள். அவ்வையாரும் இயற்கை பற்றியும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றியும் பாடியுள்ளவற்றை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

## முன்னுரை

“இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்” இயற்கைஎன்பது இயல்பானது. தொல்காப்பியம் குறிப்பிடும் நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும். மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்திருக்கின்றன சங்க இலக்கியங்கள் சங்க இலக்கியத்தில் 30க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் ஒருவர் அவ்வையார் என்ற பெண்பார் புலவர். இவர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ள இயற்கை பற்றிய செய்திகளைக் காண்போம்.

## ஞாயிறும் திங்களும்

தகடூரில் அதியமான் நல்லாட்சி புரிந்து வருகிறான் சேர மன்னனுடன் ஏற்பட்ட போரின் காரணமாக அதியமான் இறந்து விடுகிறான் அதியமானின் ஆட்சியை அவ்வையார் சூரியனுக்கும் நிலவுக்கும் ஒப்பிட்டு பாடுகிறார். வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்து கொண்டு திங்கள் போல் மக்களுக்கு நிழல் தந்த இவனது ஞாயிறு போன்ற புகழ் மறையவே மறையாது.

**“திங்கள் அன்னவெண்குடை**
**ஒண் ஞாயிறுஅன்னான் புகழ் மாயலவே”**(1)

அதியமானின் ஆட்சியானது திங்களைப் போல குளிர்ச்சி உடையது. அவனது புகழானது ஞாயிறைப் போன்றது. கதிரவனின் ஒளியையாராலும் மறைக்க முடியாது அதனைப் போன்றே அதியமானின் சிறப்பான ஆட்சியையும் யாராலும் மறைக்க முடியாது என்று குறிப்பிடுகிறார்.

## சூறைக்காற்று

தலைவன் தலைவியை விட்டு பிரிந்து செல்கிறான் தலைவியின் வருத்தத்தை கண்ட தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள் தலைவி தோழியிடம் அவர் சென்ற வழி மிகவும் வெண்மையான காற்று வீசும் பாலை நிலம் என்று கூறுகிறார்களே அதைக் கேட்ட பிறகும் நான் எப்படி வருந்தாமல் இருக்க முடியும்? என்று கூறுகிறாள். இதனை

**“வெந்திறந் கடுவளிபொங்கர்ப் போந்தென**
**நெற்றுவிளைஉழிஞ்சில்வற்றல் ஆர்க்கும்**
**மலையுடைஅருஞ்சுரம்என்பநம்**
**முலையிடைமுனிநர் சென்றஆறே”(2)**

வெம்மையான பாலை நில சூறைக்காற்றானது வேகமாக வீசி மரக்கிளையுடன் பறக்கிறது. அவ்வாறு பரவிவரும் காற்றானது உலர்ந்து இருக்கும் வாகை நெற்றுகளைத் தாக்கி ஒலியைக் கிளர்ந்தெழச் செய்கிறது என்று பாலை நிலக் காட்சிகளைக் கூறியுள்ளார்.

**நீர்நிலைகள்**

ஒன்றோடு ஒன்றாக பின்னி கிடக்கும் அடர்ந்த பிரம்பக் கொடியில் விளைந்த புறத்தே வரிகளை உடைய பழத்தை ஆழமான நீரை உடைய குளத்தில் உள்ள கெண்டை மீன் கவ்வும் காட்சியை

**“அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புறவிளைகனி**
**குண்டுநீரிலஞ்சிக் கெண்டைகதூஉம்**
**தண்டுறை ஊரன்”(3)**

என்ற பாடலில் கெண்டை மீன்கள் நிறைந்த நீர் நிலையை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**இடிமின்னல்**

மேகத்தின் திரளானது மலை இடுக்கின் சாரலில் வாழும் பாம்புகள் பயப்படும்படி இடியோசையானது வருத்துகிறது. இடியின் துணையுடன் காற்றோடு கலந்து வரும் மேகத்திறளானது அனைவரையும் அஞ்சச் செய்கிறது என்பதை

**“கேழ் கிளர் உத்திஅரவுத் தலைபனிப்ப**
**படுமழைஉருமின் உரற்றுகுரல்**
**நடுநாள் யாமத்தும் தமியம் கேட்டே”(4)**

என்னும் பாடல் மூலம் உணர்த்துகிறார்

**ஞாயிறு**

வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் சூரியன் நெருப்புக் கட்டியாகிக் கிடப்பது போல இலை இல்லாமல் செந்நிற பூக்களாகவே பூத்து கிடந்தது. அது விழா கொண்டாடும் மகளிர் ஆயக்கூட்டம் சர விளக்குகளை ஏந்திச் செல்வது போல் இருந்தது, என்பதை

**“வானம் ஊர்ந்தவயங்குஒளிமண்டிலம்**
**நெருப்புஎனச்சிவந்தஉருப்புஅவிர்**
**அம்காட்டு**
**இலை இல மலர்ந்தமுகை இல் இலவம்**
**கலிகொள் ஆயம் மலிபுதொகுபுஎடுத்த**
**அம்சுடர் நெடுங்கொடிபொற்பதத் தோன்றி”(5)**

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார்.

**பறக்கும் நாரைகள்**

வானில் பறக்கும் நாரை கூட்டத்தினைப் பற்றி பாடுகையில் கூதள மலர்களைக் கொண்டு கட்டிய ஒரு மாலையினை வானில் வீசி எறிந்தால் எப்படி இருக்குமோஅவ்வாறு இருந்தது என்று வர்ணிக்கிறார்.

**“விசும்புவிசைத்துஎழுந்த**
**கூதளங்கோதையின்**
**பசுங்கால் வெண்குருகுவாப்பறை வளைஇ”(6)**

**மேகம்**

மேகமானது எந்த எதிர்பாப்புமின்றி மக்களுக்கு நீரை மழையாகப் பொழிந்து வருகிறது. இந்த மழையை நம்பியே உயிர்கள் அனைத்தும் வாழ்ந்து வருகின்றன. எந்த எதிர்பார்ப்புமின்றி மழையைக் கொடுக்கும் மேகத்தைப் போல கைம்மாறு கருதாது உதவும் வள்ளல் தன்மை மிகுந்தகையை உடையவன் அதியமான்.

**“ஓவாதீயுமாரிவண்கைக்**
**கடும்பகட்டியானைநெடுந்தேரஞ்சி”(7)**

என்று அதியமானின் கொடைத் திறனை மேகத்தோடு ஒப்பிட்டுப் பாடுகிறார்.

**முடிவுரை**

சங்ககால புலவர்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும் இயற்கையை வைத்து செய்யுள் இயற்றும் மரபும் இன்றளவும் வியப்பைத் தருகின்றன. மானிட உணர்வுகளோடு இயற்கையின் அழகைச் சிறப்புறப் பாடுவது பண்டைய இலக்கிய மரபாகும். இறைவன் நமக்குக் கொடுத்த இயற்கையினைப்

பேணிக் காப்பது மனிதர்களாகிய ஒவ்வொருவரின் கடமை ஆகும். இருக்கின்ற காலம் வரையிலும் இயற்கையோடு இணைந்து வாழ உறுதி ஏற்போம்.

**அடிக்குறிப்புகள்**

1. புறநானூறு : பா.231, பக்.241
2. குறுந்தொகை: பா.39, பக்.46
3. குறுந்தொகை: பா.91, பக்.98
4. நற்றிணை: பா.129, பக்.135
5. அகநானூறு: பா.11, பக்.25
6. அகநானூறு: பா.273, பக்.546
7. குறுந்தொகை: பா.91, பக்.98

**துணைநூற்பட்டியல்**


1. புலியூர்க்கேசிகன் (உ.ஆ) – அகநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
2. புலியூர்க்கேசிகன் (உ.ஆ) – குறுந்தொகை, சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
3. புலியூர்க்கேசிகன் (உ.ஆ) – நற்றிணை, சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
4. புலியூர்க்கேசிகன் (உ.ஆ) – புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, 2021.

# மதுரையின் இயற்கை அழகு

**முனைவர் சு. மலர்விழி**
*உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*
*செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் மதுரை மாநகர் சிறந்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது. நான்மாடக்கூடல் என்றும் ஆலவாய் என்ற வேறு பெயர்களும் உண்டு. மதுரை மாநகர் வரலாற்றுச் சிறப்புடையது. மதுரையைப் பதினெண் வகைப் பாடல்களில் விளக்கி உரைக்கும் கலம்பகம் மதுரைக் கலம்பகம், திருவிளையாடற்புராணம், காஞ்சித்திணை, மதுரைக்காஞ்சி என பல இலக்கியங்கள் மதுரையின் இயற்கை சிறப்பை குறிப்பிடுகின்றன.

## இயற்கை வளமிக்க மதுரை

மதுரை மாநகரினை இயற்கை வளம் கொண்ட மதுரை என குமரகுருபரர் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகிறார். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் தாலப்பருவத்தில் மதுரையின் இயற்கை வளத்தினை மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். மதுரையை அடுத்து ஒரு பூஞ்சோலை உள்ளது. அதில் ஆண் குரங்கு துள்ளிக் குதிக்கின்றது. முயல் உள்ள சந்திரன் மீது துள்ளிக் குதிக்கின்றது அந்தக் குரங்கு. அந்த ஒளியில் கருமேகம் அஞ்சுகின்றது. அதனால் நெல் படைப்பின் மீது ஏறுகின்றது. கரிய மேகத்தைக் கள்ளுண்ட உழவர்கள் எருமை என எண்ணுகின்றனர். அதனால் எருமைகளோடு அதனையும் பிணைத்து அடிக்கின்றனர். துன்பம் தாங்காத கருமேகம் தம் இடிக்குரலால் ஒலிக்கின்றது. இதோ அந்த அழகிய பாடல்:

**“தூர்க்கும் பொதும்பின் முயற்கலைமேல்**
**துள்ளி யுகளு முசுக்கலையின்**
**துழனிக் கொதுங்கிக் கழனியினெற்**
**கட்டுப் படப்பை மேய்ந்துகதிர்ப்**
**போர்க்குன் றேருங் கருமுகிலை**
**வெள்வாய் மள்ளர் பிணையலிடும்**
**பொருகோட் டெருமைப் போத்தினொடும்**
**பூட்டி யடிக்க விடிக்குரல்விட்**
**டார்க்கும் பழனத்தமிழ் மதுரைக்**
**கரசே தாலோ தாலேலோ”**

அழகும் வளமும் நிறைந்த கோவில் மாநகரமாகத் திகழும் மதுரை மாநகரில் மாளிகையின் மீது மயில் ஆடுவதை,

**“தகரம் நூறு ஐம்பால்**
**சேயரிக்கருங்கட் பசுங்கொடி நுடங்குஞ்**
**செவ்விற் சிறைமயிலகவ”**

அசைந்தாடுவதற்கு உவமிக்கின்றார். மேலும்,

**“கன்னல் செந்நெல் வயல் வண்ணம்**
**பண்ணை மதுரை”**
**“நீடு நான் மாடக் கூடல்”**
**“செல்லிட்ட பொழின் மதுரை”**
**“மூவா முதலார் மதுரை இது அன்றோ”**
**“வைகை ஒன்றிய கூடல்”**

என்று மதுரை மாநகரின் இயற்கை அழகினை மதுரைக் கலம்பகத்தில் குமரகுருபரர் சிறப்பித்துள்ளார்.

## சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை

மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் தம் ஆட்சிக்குட்பட்டதாகச் தமிழகம் விளங்கியது. மேற்குநாடு என்னும் மலைநாட்டினைச் சேரரும், குணகடல் நாட்டினைச் சோழரும், தென்னாட்டினைப் பாண்டியரும் ஆட்சி செய்தனர். இம்மூவேந்தருள் பாண்டியரே சங்கம் வைத்துத் தமிழராய்ந்த தனிச் சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தனர்.

பாண்டியர்களின் ஆட்சியில் மையப்பகுதியாக விளங்கி, கடல் கோளால் அழிந்து விட்ட தென்மதுரை முதற்சங்க காலத்தின் தலைநகரமாக விளங்கியது.

இந்நகரில் தான் முதல் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. காய்சின வழுதி முதல் கடுங்கோன் மன்னன் வரை 89 மன்னர்கள், முதல் தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருந்து தமிழைப் பேணிக் காத்தனர். அகத்தியம் என்ற இலக்கணநூல் முதல் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது.

தென்மதுரை கடல்கோளால் அழிந்த பின்னர் 'கபாடபுரம்' என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் ஆட்சி செய்தனர். இந்நகரம் இரண்டாம் தமிழ்ச்சங்கத்தின் பிறப்பிடமாகும். 'வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன்' ஈறாக 79 மன்னர்கள் இச்சங்கத்தைத் தோற்றுவித்து வளர்த்துள்ளனர். தமிழ்மொழிக்குச் சிறந்த அரணாக விளங்குகின்ற தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் இச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. இவ்விரு சங்கங்களின் அங்கத்தினர்களாக இருந்து புகழ்பெற்ற புலவர்கள் பல்வேறு நூல்களை அரங்கேற்றித் தமிழை வளர்த்துள்ளனர்.

பல ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்த கடல்கோளால் கபாடபுரம் அழிந்த பின்னால் மணவூர் பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கிற்று என்பது வரலாறு கூறும் உண்மையாகும். பின்னர் தலைநகரமாக அமைந்த மதுரையில் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழை வளர்த்தனர். இச்சங்கத்தில் புலவர் நக்கீரர் தலைமைப் புலவராக விளங்கினார் என்பதும், இறைவன் சிவபெருமான் இச்சங்கத்தில் தோன்றித் தருமிக்குப் பொற்கிழி (நிதி) கிடைக்கச் செய்தார் என்பதும் அறியக் கிடைக்கின்ற தகவல்களாகும்.

## இலக்கியச் சான்றுகள்

பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரைநகர் பற்றிய இலக்கியச் சான்றுகளைச் சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், பக்திப் பனுவல்களிலும் காணலாம்.

**"தொல்லானை நல்லாசிரியர்**
**புணர்கூட்டு புகழ்சால் சிறப்பின்**
**நிலந்தரு திருவின் நெடியோன்"**

என்று மதுரைக்காஞ்சியும்,

**"புலன்நா உழவர் புதுமொழி கூட்டுண்ணும்**
**புரிசை சூழ் புனல் ஊர"**
**"நிலன் நாவில் திரி தரூஉம் நீன் மாடக் கூடலார்**
**புலன் நாவில் பிறந்த சொல் புதிது உண்ணும்"**

என்று கலித்தொகையும்,

**"தமிழ்கெழு கடல்"**

என்று புறநானூறும்,

**"தமிழ்நிலை பெற்ற தாங்களுமரபின்**
**மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே"**

என்று சிறுபாணாற்றுப்படையும்,

**"தமிழ் வையைத் தண்ணம் புனல்"**

என்று பரிபாடலும்,

**"பதிஏழு அறியாப் பண்பு மேம்பட்ட**
**மதுரைமூதூர் மாநகர்க் கண்டு"**

என்று சிலப்பதிகாரமும்,

**"தென்தமிழ் மதுரை"**

என்று மணிமேகலையும்,

**"நண்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி**
**நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்"**

என்று அப்பரது தேவாரமும்,

**"அற்றன்றி அந்தணர் மதுரைத் தொகையாக்கினானும்"**

என்று திருஞானசம்பந்தரின் தேவாரமும்,

**"சிறைவான் புனல் தில்லைச்**
**சிற்றம்பலத்து என் சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதில் கூடலின்**
**ஆய்ந்த வொண் தீந்தமிழின்"**

என்று திருக்கோவையார், சான்று பகர்கின்றது.

## மதுரையின் வேறுபெயர்கள்

சிவபெருமானின் பல்வேறு சிறப்புக்களை எடுத்துக் கூறியதுடன், மதுரையம் பதியின் தலப்பெருமையையும் எடுத்துக் கூறும்

திருவிளையாடற்புராணத்தில் இறைவனோடும் அவனது திருவிளையாடலோடும் இணைத்து மதுரைக்குப் பல்வேறு பெயர்கள் தரப்பட்டிருக்கின்றன. சிவபெருமான் தமது சடையில் கூடிய பிறையினிடத்துள்ள அமிர்தமாகிய மதுவைத் தெளித்து, நாகம் உமிழ்ந்த நஞ்சை நீக்கிப் புனிதமாக்கியதால் 'மதுரை' என்னும் பெயரைப் பெற்றது. இதனை

**"திருவர் அருள்சேர் சொக்கன் தேவர்கள் தேவன் வெய்ய**
**அரவுமிழ் ஆலவாற்றை மதுரமாக்குதலால் ஆங்கு**
**வருபுகழ் பதிக்கு நாமம் மதுரைமா நகரியென்றே**
**பிரிவுற அன்று முன்னாப் பரந்தது பாரின்மீது"**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

சிவபெருமானுக்கு அணிகலனாக இருந்த பாம்பு வட்டமாகத் தன்வாலை வாயாற் கவ்வி எல்லையைக் காட்டியதால் 'ஆலவாய்' என்னும் திருப்பெயர் இத்திருத்தலத்திற்கு உண்டாயிற்று.

"பாண்டியரின் தலைநகர் 'மணவூர்' என்பதாக இருந்தது. அவ்வூரில் இருந்த 'தனஞ்செயன்' என்னும் வணிகன் வணிகத்திற்காகச் சென்று கடம்பவனத்தின் வழியே வந்து கொண்டிருந்த பொழுது இரவாகி விட்டது. அப்பொழுது விண்ணில் இருந்து பேரொளியுடன் ஒரு விமானம் இறங்கிக் கடம்பவனத்திற்கு வந்ததைத் தனஞ்செயன் கண்டான். அதிலிருந்த சிவலிங்கத்தை வணங்கினான். அவ்விமானத்தில் வந்த தேவர்கள் அச்சிவலிங்கத்தை நான்கு யாமங்களிலும் வணங்கிச் செல்வதைக் கண்டான். மறுநாள் விடியற் காலையில் விமானத்தையும், சிவலிங்கத்தையும் மட்டுமே அங்குகண்ட தனஞ்செயன், அவ்வியப்பான நிகழ்ச்சியை மதுரையை ஆட்சி செய்த குலசேகர பாண்டிய மன்னனிடம் தெரியப்படுத்தினான். மன்னன் அச்செய்தியைக் கேட்ட அன்று உறங்கும் போது இறைவன் கனவில் தோன்றிக் கடம்பவனத்தை அழித்து நாடாக்க வேண்டுமென்று கட்டளையிட்டு அருள் செய்தார். அப்படியே கடம்பவனம் சென்ற பாண்டியன் வனத்தைத் திருத்தி நகராக்கினான். கடம்பமரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் 'கடம்பவனம்' எனப்பெயர் ஏற்பட்டது."

மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடிக் காத்தமையால் 'நான்மாடக்கூடல்' என்றும் 'கூடல்' என்றும் திருப்பெயர்கள் உண்டாயின. இதனை,

**"வாடுவோர் தம்மைப் போன்று வயங்கொளி மாநகர்க்கண்**
**கூடரு மேகநான்கும் மாடமாக் கூடலாலே**
**நாடவரதி சயிப்ப நான்மாடக் கூடலென்று**
**பீடுடை நகர்க்கு நாமம் எங்கணும் பிறங்கிற்றன்றே"**

என்ற திருவிளையாடற்புராணப் பாடலின் வழி அறியலாம்.

தடாதகைப் பிராட்டியார் கன்னியாயிருந்து அரசு புரிந்தமையால் 'கன்னிபுரீசம்' என்னும் திருப்பெயர் தோன்றியது. சிவபெருமான் சுந்தரபாண்டியனாக இருந்து அரசாண்ட காரணத்தால் 'பூலோகக்கயிலாயம்' என்றும், 'சிவராஜதானி' என்றும் 'சிவநகரம்' என்றும் திருப்பெயர்கள் ஏற்பட்டன.

சங்கப்புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்த இடமாதலால் இம்மதுரைக்குத் 'தமிழ்மதுரை' என்றும், 'தமிழ்க்கூடல்' என்றும், 'விரிதமிழ்க்கூடல்' என்றும், 'முத்தமிழ் மதுரை' என்றும் பல்வேறு பெயர்கள் உண்டாயின.

சமய அடிப்படையில் மதுரைக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டாலும், சங்கஇலக்கியங்களில் மதுரை என்ற பெயர் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

**"மதுரைப் பெருமுற்றம்"**

என்று கலித்தொகையிலும்,

**"மகிழ்நனை மறுகின் மதுரை"**

என்று சிறுபாணாற்றுப்படையிலும்,

**"பெரும் பெயர் மதுரை"**

என்று மதுரைக்காஞ்சியிலும்,

**"மதுரை மதில் பெருஉம்"**
**"அடல் மதுரை"**

என்று பரிபாடலிலும், 'மதுரை' என்னும் பெயரே இடம்பெற்றுள்ளது.

கிராமப்புற மக்கள் 'மதுரை'யை 'மருதை' என்று அழைக்கின்றனர். இக்கருத்து மதுரையில் மருதமரம் நிறைந்து இருந்ததைத் தெளிவுபடுத்துவதாகக் கருத இடமுண்டு. மேலும் மருதமரம் நிறைந்து காணப்பட்டதாலும் மருதநிலமாக இருந்ததாலும் 'மருதை' என்று சொல்லி வந்தனர் எனலாம். மெய்யிடம் பெயர்தல் என்னும் மொழியியல் முறைப்படி

**இடறி - இறடி**
**தசை - சதை**

என்று மாறியது போல் மதுரையும்

**மதுரை - மருதை**

என்று மாறுபட்டு வழங்கியிருக்கலாம்.

இவ்வாறு மதுரை நகருக்குப் பல்வேறு பெயர்கள் வழக்கத்திலிருந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது.

## முடிவுரை

தமிழ் நிலைபெற்ற மாண்புக்குரிய மதுரை, புகழ் வளர்த்து பொலிவுடன் விளங்கும் மதுரை, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரியது மதுரை நகரம். தத்துவத் துறையில் மதுரையைத் துவாதசாந்தத்தலம் என்று பாராட்டுவர். மதுரையில் இடைவிடாது திருவிழாக்கள் நடைபெறுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் மதுரை மாநகர் சிறந்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது.

**வன்திறல் வருணன்விட்ட மாரியை விலக்க - ஈசன்**
**மின்திகழ் சடையினின்று நீங்கிய மேகம் நான்கும்**
**குன்றுபோல் நிவந்து நான்குகூடமாகக் கூடலாலே**
**அன்று நான்மாடக்கூடல் ஆனதால் மதுரை மூதூர்**

## துணைநூற்பட்டியல்


1. பால சுப்பிரமணியன். கு.வெ., பரிபாடல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை 98 அக்டோபர் 2011.
2. புலியூர் கேசிகன், புறநானூறு, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை 600108.

# இயற்கை உயிர்களின் அகவாழ்வியல்

**முனைவர் இரா. அச்சுதன்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசு கலைக்கல்லூரி(த), சேலம்*

**இரா. ஜெயலட்சுமி**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக்கல்லூரி(த), சேலம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்களுள் தொன்மையும் தனித் தன்மையும் வாய்ந்தவை சங்க இலக்கியங்களே. இவ்விலக்கியங்கள் கிரேக்கம், லத்தீன் போன்ற பிறமொழி இலக்கியங்களுக்கு முன்னோடியாகத் திகழ்வதால் தாய்மை இலக்கியம் எனப் போற்றப்படுகிறது. தமிழர் வாழ்வியல் முறைக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் அடிப்படையாக அமைவதே அகம், புறம் என்ற இரு பாகுபாடுகளே. இவ்விரு பாகுபாடுகளோடும். இரண்டற கலந்த ஒன்றாக விளங்குவது இயற்கை இன்பமேயாகும். இயற்கைக்கு இடையூறுயின்றி மனித குலம் இயற்கையோடு இணைந்து இயற்கை இன்பம் கண்டகாலமே சங்க காலம்.மேலும், சங்கப் புலமைச் சான்றோர்கள் இயற்கைச் சூழ்நிலையில் வாழ்ந்து மரம், செடி, கொடி, புல், பறவை, விலங்கு முதலான இயற்கையுயிர்களின் வாழ்வியலையும் உணர்வியலையும் அறிந்தவர்கள். அவர்களின் இயற்கை நுண்ணறிவை புலப்படுத்தும் விதமாக எட்டுத்தொகையில் அக இலக்கியத்தில் இயற்கை உயிர்களின் அன்பு வாழ்வியலை விளக்கி ஆராய்வதே இவ்வாயின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

சங்க இலக்கியத்தில் அகம், புறம் என்ற இரண்டும் சிறக்கக் காரணம் இயற்கையே. இவ்வியற்கையே அகவாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. இயற்கையை மட்டுமே வருணிப்பதாக எந்தசங்கப் பாடலும் இடம்பெறவில்லை. மனிதர்கள் தவறிழைக்கும் போதும், இன்பத்திலும், துன்பத்திலும், ஆறுதலும், மாறுதலும் தரும் ஓர் உற்ற உயிர்த் துணையாக சங்கப் புலவர்கள் தம் படைப்புகளில் இயற்கையை இடம் பெறச் செய்துள்ளனர். இயற்கை மனிதர்களுக்குப் பல அறிவுரைகளை அவ்வப்போது வழங்கி வந்துள்ளது. இயற்கையின் மொழியை உணர்ந்த புலவர்கள் இயற்கை அறிவுரையை சங்கப் பாடல்களில் உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் கருப்பொருள்களைக் கையாண்டுள்ளனர். எல்லா உயிர்களுக்கும் உரியதாக விளங்கும் குணம் அன்பு. இயற்கை அறிவுறுத்தும் இவ்அன்பு வாழ்வியலை விளக்கி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இயற்கை அகராதி விளக்கம்**

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தி இன்றி தானே தோன்றிய அனைத்து பொருட்களுமே இயற்கையாகும். இயற்கை என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் (nature) நேச்சர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இச் சொல் நோட்சுரா என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இயற்கை என்ற சொல்லிற்கு “இலக்கணம் பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை”[1] என்று பல பொருள்களைக் கழக அகராதி கூறுகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி “மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மழை, நீர்) போன்ற பொருட்கள் (அ) (இடி, காற்று) போன்ற சக்தி”[2] என்று பொருள் தருகிறது. இவற்றில் இருந்து இயற்கை என்பது நம்மை சுற்றியுள்ள நம் சக்திக்கு அப்பாற்பட்ட அனைத்து படைப்புக்களுமே என அறிய முடிகிறது.

**தொல்காப்பியத்தில் இயற்கை**

முதலில் நமக்குக் கிடைத்த இலக்கண நூலான தொல்காப்பயத்தில் இயற்கை என்பது ஐம்பூதங்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**"வளி எனவருஉம் பூதக்கிளவியும்**
**அவ்வியல் நிலை செவ்விதென்ப"**
**(தொல் -எழு-நூ -242)**

என விளக்கியுள்ளார். பொருளதிகாரத்தில் மற்றொரு நூற்பாவில்,

**"நிலம் நீர் விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**
**(தொல்.பொ.நூ-90)**

என்று இயற்கையை விளக்கியுள்ளார்.

தொல்காப்பியத்தில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று விளக்குவதிலிருந்தே இயற்கை வெளிப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**இயற்கையும் வாழ்க்கைப் பின்னணியும்**

சங்கப்பாடல்கள் இயற்கையாகிய பின்னணியையும் அவ்வியற்கைப் பின்னணிக்கேற்ப அமைந்த மனித உணர்ச்சிக் கூறுபாடுகளையும் இணைத்து அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் இயற்கையின் அழகில் மனதைப்பறி கொடுத்தப் புலவர்களாகவே அனைத்துப் படைப்பாளிகளையும் காண முடிகின்றது. இவ்வாறு இயற்கையின் அழகில் மயங்கக் காரணமாக அமைந்தவை "இயற்கையின் ஒவ்வோர் அசைவும் மனிதர்களின் நுட்பமான ஒவ்வொரு உணர்வுடனும் நுணுகி உணர்ந்து பாடப்பட்டுள்ளன"[3] என்ற சாரதாம்பாள் அவர்களின் கருத்து ஏற்புடையதாகின்றது.

இயல்பாய் உள்ள இயற்கை நிகழ்வுகளை நுட்பமாய் கையாண்டு நாடு, நகர்களைத் தலைவியின் அழகுடன் ஒப்பிட்டுக் கூறிவதிலும் இன்ப துன்பத்திற்கு இடையே பாலமாய் அமைவதும் மனிதனின் காதல் உணர்வுக்கும் இயற்கையின் காதல் உணர்வு தான் பின்னணியாக அமைந்துள்ளன என உணர முடிகின்றது.

**இறைச்சி**

இறைச்சி என்பது கருப்பொருள், உயிரினமாகும். இவ்உயிரினத்தின் பாலுறவும், பாலுணர்வும் காதல் காட்சிகளும் உரிக்குப் புறத்தே வரும் இதனை

**"இறைச்சி தானே உரிப் புறத்துவே"**
(தொல்.நூற்.1174)

என தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**உயிரின அன்புக் காட்சிகள்**

சங்க இலக்கியத்தில் இடம்பெறும் உயிரின அன்பு காட்சிகளை அக நூல்களின் வழி சிலவற்றைக் காணலாம். அவை

1. மானின் அன்பு வாழ்க்கை
2. யானையின் அன்பு வாழ்க்கை
3. குரங்கின் அன்பு வாழ்க்கை
4. புறாவின் அன்பு வாழ்க்கை
5. ஆண்குருவியின் அன்பு வாழ்க்கை
6. பருந்தின் அன்பு வாழ்க்கை.

**1. மானின் அன்பு வாழ்க்கை**

முல்லை நிலத்திற்குரிய கருப்பொருட்களில் ஒன்றாக மான் இடம்பெறுகிறது. "புலவர்கள் ஆன்மானைக் கலை,இரலை எனவும், பெண் மானைப் பிணை எனவும் குட்டியினை மறி எனவும் வழங்குவர்"[4].

**ஆண் மானின் காதல்**

பாலை நில வழியில் கொடுமையான வெயில் சுட்டெரிக்கும் காட்டில் இரண்டு மான்கள் நிழல் இன்றி தவிக்கின்றன. ஒன்று ஆண் மான், மற்றொன்று பெண் மான். மலையில் உள்ள மூங்கில் எல்லாம் வாடும் படியாக வெயில் காயும் காட்டில் தன் காதல் பிணைக்கு வெயிலில் தங்க நிழல் இல்லாதக் காரணத்தால் வாடி போகும் என்று கருதிய ஆண் மான் நிழலைத் தேடி அலைந்து திரிந்தது ஆனால் அஃது முடியாமல் போகவே ஆண் மான் தன் நிழலைக் கொடுத்து தன் பெண் மானின் உயிரைக் காக்கின்றது. இக்காட்சியினை,

**“இன்னிழல்இன்மையான்**
**வருந்திய மடப்பிணைக்குத்**
**தன் நிழலைக் கொடுத்து அளிக்கும்**
**கலை எனவும்” (கலித்.11)**

என்ற வரிகளில் நல்லதுவனார் விளக்கியுள்ளார். வறண்ட பாலை நிலத்திலும் அன்புத் தலைக்கும் என்பதை அறிய முடிகிறது.

**ஆண் மானின் கையறு நிலை**

ஆண் மான், பெண் மான், குட்டிமான் என்று வாழ்ந்த அழகியகுடும்பத்தில் வேட்டுவன் தொடுத்த அம்பினால் பெண் மான் இறந்துவிட்டது. அந்த இறப்பைத் தாங்காது துயருற்ற ஆண் மான் சிறிதும் புல் மேயவில்லை, சிறிதும் நீர் அருந்தவில்லை நடக்கவும் முடியவில்லை தன்னுடலில் அம்பு தைத்தது போல் வலிமை இழந்து சோர்ந்து கிடந்தது. அதே சமயத்தில் துள்ளிக் குதித்து விளையாடும் குட்டிகளை நினைத்தும் கவலை கொண்டது. அவ் ஆண் மான் மனம் மாறி இருந்தால் பெண் மான் இறந்த துயரத்தால் செத்தும் இருக்கலாம். ஆனால் தன் குட்டிகளைக் காக்க வேண்டிய பொறுப்பை உணர்ந்து மடியவில்லை இதனை,

**“நெய்தலம் படுவில் சில்நீர் உண்ணது”**
**(அகம் -371)**

என்ற அகநானூற்று பாடலில் விளக்குகிறார் இளங்கீரனார். இப்பாடல் படிப்பவர் நெஞ்சத்தையும் உருக்கிவிடும் அன்பை எடுத்துரைக்கின்றது.

இப்பாடலில் “இரலைக் கணவன்மான் மனையாளிடத்தும் மறிக் குழந்தைகளிடத்தும் கொண்ட அன்பும் குடும்பப் பொறுப்பும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன, வழிக் காட்டவும் செய்கின்றன.”[5] என வ.சுப. மாணிக்கம் அவர்கள் தம் நூலில் விளக்கியுள்ள கருத்துச் சாலச் சிறந்தது. இப்பாடலைப் படிப்பவரின் உள்ளத்தில் தன்னை அறியாமலும் ஒரு வித அன்பு ஊற்றெடுக்க செய்வதே இயற்கையின் தன்மை என அறிய முடிகிறது.

இதே போன்று ஐந்திணை ஐம்பது பாடலில், “சுனையில் உள்ள சிறிய அளவு நீரை இரு மான்களும் குடிக்கப் போதாது என்று கருதி, ஆண்மான் குடிக்கட்டும் என்று பெண்மான் நினைத்தது. பெண் மான் குடிக்கட்டும் என்று ஆண் நினைத்தது இறுதியில் இருமான்களும் நீரைச் சேர்ந்து குடிப்பதானது ஆனால் ஆண் மான் குடிப்பது போன்று நடித்தது பெண் மான் நீரைக் குடித்தது”[6]. இத்தகைய காதல் காட்சிகளைக் காண்பவர் உள்ளத்திலும் காதல் தோன்றும். இது போன்ற பாலுணர்வு பாடல்கள் உள்ளுறையாக அமைந்து வரும்.

“கருப்பொருள்கள் பற்றிய நிகழ்ச்சி பிறிதொன்றற்கு உவமையாகச் செய்தல் உள்ளுறை உவமம் ஆகும்.”[7] உன் காதலர் சென்ற வழி இப்படிப்பட்ட அன்புக் காட்சிகள் நிறைந்த வழி அதனால் அவருக்கு உன் நினைவு வரும். இவ்வாறு கூறித் தோழி தலைவியைத் தேற்றுவது உள்ளுறை உவமத்தில் அமையும் இவ்வாறு உள்ளுறை உவமத்தில் இயற்கையே சிறப்பிடம் பெறுகின்றன என அறிய முடிகிறது.

**யானையின் அன்பு வாழ்க்கை**

ஆண் யானையும் பெண் யானையும் பலாமரங்கள் நிறைந்த பக்க மலையில் மூங்கில்களும் சுரபுன்னை மரங்களும் வாழை மரங்களும் நிறைந்த பகுதியில் உணவு தேடி அலைந்தன. ஆழமான நீர்த் தேக்கத்தில் ஆண் யானை அகப்பட்டுக் கொண்டது அதன் துன்பத்தை நீக்கப் பெண் யானை பெரிய மரங்களை முறித்து போட்டு ஆண் யானை ஏறுவதற்கு படிகளை அமைத்து தந்தது இத்தகைய அன்பு கலந்த வாழ்கையை அகநானூற்றில்

**“பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்”**
**(அகம்-8)**

என்ற பெருங்குன்றூர்கிழார் பாடல் புலப்படுத்தும். மற்றொரு பாடலில் “ஆண் யானைப் பெண் யானையின் பசியைப் போக்க தனது நீண்ட கையால் யா மரத்துக் கிளைகளை உரித்து தரும் அதனை உண்டு பெண் பிடி தன் பசியைத் தீர்த்துக் கொள்ளும் இத்தகைய அன்பு கலந்த பாச உணர்வை”[8] குறுந்தொகைப் பாடல் வெளிப்படுத்துகிறது. இதே போன்ற காதல் காட்சியைக் கலித்தொகைப் பாடலிலும் காண முடிகிறது. “நெருப்பு போன்று அடிப்பொறுக்கும் அளவு இல்லாமல் சுட்டெரிக்கும் காடுகள் நிறைந்த பாலை நில வழியில் நீர் தேடி அலையும் போது உடுக்கை போன்ற அடிகளை உடைய யானைக்கன்று கலக்கிய சிறிய அளவு நீரை முதலில் பெண் யானையைப் பருகச் செய்து பின் ஆண் யானை பருகும்.”[9] இப்பாடலில் ஆண்யானையின் அன்பு வெளிப்படக் காண முடிகிறது.

இதே போன்று குறுந்தொகைப் பாடலில், “வாழையால் மதனிழந்து கிடக்கும் களிற்றைத் தன் கையால் தடவி உபசரிக்கும் பிடி யானையையும் காண முடிகிறது”[10]. ஆண்யானை தன் வலிமை இழந்து வாடும் சூழலில் துணையாக நான் இருக்கிறேன் என்பது போல் பெண் யானை தடவி தரும் பாசம் அஃறிணையின் காதல் வாழ்வை புலப்படுத்தும். இக்காட்சி உயர் திணைக்காதலை மிகுவிக்க புலவர்களால் கையாளப் பட்டுள்ளதை அறிய முடிகிறது. இவ்யானையின் அன்புக் காட்சியைக் காணும் பொழுது.“துன்பம் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு”[11]என்னும் பாடல் வரியை அஃறிணை உயிர்கள் உயிர்ப்பிக்கும் வகையில் அன்பு வாழ்க்கைக் கொண்டு அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

### குரங்கின் அன்பு வாழ்க்கை

டார்வின் கொள்கைப்படி குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன். அத்தகைய குரங்கினத்தில் “ஆண் குரங்கு கடுவன், கலை என்றும் பெண் மந்தி என்றும் குட்டி, குருளை, பார்ப்பு”[12] என்றும் வழங்கப்படுகின்றது. கடுவனும் மந்தியும் ஒன்றோடு ஒன்று அன்பு பூண்டு வாழும் குடும்ப வாழ்க்கையைக் குறுந்தொகைக் காட்சிப்படுத்துகிறது.

“முதிர்ந்த இனிய பழங்களை மரத்தின் மேலிருந்து ஆண் குரங்கு உதிர்க்க மரத்தின் கீழிருந்து தகுந்தவற்றை ஆர்வத்தோடு தின்னுகின்ற குட்டிகளுக்கும் பெண் குரங்குகளும் வாழும் மலை”[13] என்று பேரிச் சாத்தனார் விளக்கியுள்ளார். இக்காட்சியினைக் காணும் போது தலைவனுக்குத் தன் மனைவி, குழந்தைகளைக் காப்பாற்றும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும், தலைவியானவள் மந்தி போல் தன் குழந்தைகளோடும் கணவனோடும் இணைந்து வாழ வேண்டும் என்ற ஏக்கத்தையும் உள்ளுறையாக அமைத்துள்ளதை அறிய முடிகிறது.

### மந்தியின் கற்பு நெறி

பெண் மந்தி தன் கணவன் மீது கொண்டுள்ள பாச உணர்வை குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது. கடுவனாகிய ஆண் குரங்கு இறந்து விடுகின்ற சூழலில் அத்துயரினைத் தாங்க இயலாத பெண் குரங்கு தானும் இறக்கத் துணிகின்றது. தன் குட்டியின் பாசம் தடுத்தாலும் தன் கணவன் மேல் உள்ள பாசமே மேலெழும்ப மரம் ஏறத் தெரியாத தன் குட்டியினைத் தன் இனத்திடமே ஒப்படைத்துவிட்டு மரத்தின் உச்சியில் ஏறி தன் உயிரை மாய்த்துக் கொள்கிறது. இதனை,

**“கைம்மை உய்யாக் காமர் மந்தி”**

**(குறு-69)**

என்ற பாடல் வரி விளக்குகிறது. இவற்றில் இருந்து அன்பு மனிதர்களுக்கு மட்டும் உரியது அன்று. அன்பே எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாக திகழ்வது என்பதை அறிய முடிகிறது.

**"காதல் காதல் காதல்**
**காதல்போயிற் காதல் போயிற்**
**சாதல் சாதல் சாதல்"**[14]

என்ற பாரதியின் வரிகளை நினைவுபடுத்துவதாக இக்குரங்கின் செயல் அமைந்துள்ளதை உணர முடிகின்றது.

**புறாவின் அன்பு வாழ்க்கை**

பாலை நிலப் பறவைகளிலேயே மிகுந்த காதலுடைய பறவை புறாவாகும். வெப்பம் மிகுந்த பாலை நிலத்தில் இலை உதிர்ந்து போன மரங்களின் மேல் அன்புக் கொண்டதன் பெண் புறா வெப்பம் தாங்காது துன்புற்று வருந்துவதைக் கண்ட ஆண் புறா தன் சிறகால் நிழல் கொடுத்து அதனது வருத்தத்தை ஆற்றுவிக்கிறது. இதனை பாலை கலியில்,

**"அன்பு கொள் மடப்பெடை அசை இய வருத்தத்தை" (கலித்-11)**

என்ற பாடல் புலப்படுத்தும். மற்றொரு பாடலில் "இரைத்தேடி சென்றிருக்கும் ஆண் புறாவானது உரிய காலத்தில் வந்து சேராது இருக்கவே பெண் புறா கலங்கி துயருற்று கூவி அழைத்து வருந்துவதையும் பின்பு இணைந்து இன்புறுதலையும்"[15] குறுந்தொகையில் காண முடிகின்றது. இன்பம் துன்பம் இரண்டிலும் இயற்கையே காதலை மிகு விக்கும் என்பதை விளக்கும் விதமாக இக்காட்சி அமைந்திருப்பதை உணர முடிகிறது.

**ஆண் குருவியின் அன்பு வாழ்க்கை**

பெண் குருவி கருவுற்றிருக்கும் போது அதன் ஆண் குருவி செய்த செயலைக் குறுந்தொகைப் பாடல் புலப்படுத்தும்

**"உள்;ர்க் குரிஇத் துள்ளுநடைச் சேவல்" (குறுந்-85)**

என்ற பாடலில் ஊர் குருவியின் சேவலானது கருமுதிர்ச்சிப் பெற்று இருக்கும் போது தன் பேடைக்கு முட்டையிடுவதற்குரிய இடத்தை அமைக்க கரும்பின் மணக்காத வெண்மையான பூக்களைத் தன் அலகால் கோதி வந்து முட்டையிட இடம் அமைத்து துணையாய் காக்கும் என்று ஆண் குருவியின் அன்பு வாழ்க்கை விளக்கப்பட்டுள்ளது.

**பருந்தின் அன்பு வாழ்க்கை**

பாலை நிலப் பருந்தின் அன்பு வாழ்க்கை. ஓங்கி வளர்ந்த ஓமை மரத்தின் உச்சியில் பெரிய கிளையில் பெண் பருந்து கூடு கட்டிக்குஞ்சுப் பொரித்து இருக்கிறது. அந்நிலையில் மிகுந்த பசி வாட்டி எடுக்கவும் பெண் பருந்து தன் குஞ்சுகளை விட்டு பறந்து செல்லாமல் பசியோடு தவிக்கிறது. ஆண் பருந்தோ களைப்புற்று இருக்கும் தன் பேடையை விட்டுச் செல்லவும் மனம் இல்லாமல் பேடைப் படும் துன்பத்தைத் தாங்கவும் முடியாமல் தவித்துப் போனது. பின் இரை தேடத்துணிந்து சென்று மானின் புலால் நாற்றம் வீசும் இறைச்சியைக் கவர்ந்து வந்து தன்பேடைக்குக் கொடுத்து மகிழ்கிறது. இதனை,

**"கொடுவாய்ப் பேடைக்கு அல்குஇரைதரீஇய". (அகம்-3)**

என்ற அகநானூற்று பாடல் புலப்படுத்தும்.

மேற்கண்டவற்றிலிருந்து அஃறிணையில் கூட ஆண் பறவைகள் மனைவியின் கர்ப்பக் காலத்திலும் பேறுக் காலத்திலும் துணையாய் இருப்பதையே தன் கடமையாக கொண்டுள்ளது. ஆனால் ஆறு அறிவுடையத் தலைவன் தலைவி கருவுற்றிருக்கும் போதும் மகப்பேறு அடைந்த சமயத்திலும் பரத்தையை நாடிச் சென்று இன்பம் துய்ப்பதைக் காண முடிகிறது. அன்பை வெளிப்படுத்துவதில் அஃறிணை உயிர்களுக்கே முதலிடம் என்பதையும் மனிதனிடம் உள்ள சிறுமைக் குணம் அஃறிணையில் கூட இல்லை என்பதையும் வெளிப்படையாக இயற்கை மனிதனுக்கு உணர்த்துவதாக சங்க பாடல்களில் இயற்கை அமைந்துள்ளது.

**முடிவுரை**

அகப்பாடல்களில் அகச் செய்திகள் மட்டுமே இடம் பெறுவது இல்லை. அகத்தோடு சேர்ந்த வாழ்வியல் உண்மைகளும் வெளிப்படுகின்றன. இயற்கைப் பொருட்கள்

காதலை நினைப்பிக்கும் என்ற தொல்காப்பியம் அனைத்து இயற்கைப் பாடல்களுக்கும் ஏற்புடையதாகிறது. பிறர் கூறும் அறிவுரையை விட இயற்கை உயிர்களின் செயல்கள் மனதை அதிகம் ஆட்கொள்ளும் சக்திப் படைத்தவை அறிவுரை புகட்டுபவை அதனால் அகப்பாடல்கள் இன்புறுத்துதலைத் தவிர அறிவுறுத்தல் கருத்துக்களும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்றுள்ளதைச் சங்க இலக்கியங்களில் இயற்கை உயிர்களின் அக வாழ்வியல் என்ற தலைப்பில் ஆன ஆய்வுக்கட்டுரை மெய்ப்பிக்கும் விதமாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. பாலசுப்பிரமணியன்.கு.வெ., அகநானூறு (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை 98, அக்டோபர் 2011.
2. பாலசுப்பிரமணியன்.கு.வெ., கலித்தொகை (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை 98, அக்டோபர் 2011.
3. பாலசுப்பிரமணியன்.கு.வெ., குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை 98, அக்டோபர் 2011.

# தமிழர்களின் இயற்கை விஞ்ஞானமும் வானியல் அறிவும்

**முனைவர் நா. முருகன்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி), மேல்விஷாரம், இராணிப்பேட்டை*

**ஆய்வுச்சுருக்கம்**
*தமிழர்கள் மெய்ஞானத்தில் மட்டுமல்ல விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்கி இருக்கின்றனர். தமிழ் சமூகம் அறிவியலும், ஆற்றலிலும் மேம்பட்ட சமூகமாக விளங்கி இருக்கின்றது. இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டு இருந்ததன் காரணமாக இயற்கையையும் இயற்கை சக்திகளையும் மிக துல்லியமாக புரிந்து கொண்டு அவற்றைப் பற்றி இலக்கியங்களிலும், ஓவியங்களிலும், சிற்பங்கள் போன்றவற்றிலும் வெளிப்படுத்தி இருக்கின்றனர். குறிப்பாக தமிழர்களின் வானியல் அறிவு இன்றைய விஞ்ஞானிகளே வியக்கும் அளவிற்கு சிறந்து விளங்கி இருப்பதை இலக்கிய பதிவுகளின் மூலமாக காண முடிகின்றது. அவற்றை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

## முன்னுரை

தமிழர்கள் பண்பாட்டுச் செழுமையும், பன்னெடுங்கால வரலாற்றுத் தொன்மையும் உடையவர்கள் கல் தோன்றி மண் தோன்ற காலத்தில் வாளோடுமுன் தோன்றிய மூத்த குடி என்பது வெறும் புலவர் வாய் சொற்கள் மட்டுமல்ல. இன்று உலகமே ஏற்றுக் கொண்டு போற்றும் உண்மையாகவும் இருக்கிறது. அத்தகைய தமிழ் மக்கள் இயற்கை விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்கி இருக்கின்றனர் என்பது மறுக்க இயலாத உண்மை ஆகும். பழந்தமிழ் இலக்கியங்களும் காலங்காலமாக மக்கள் மத்தியில் புழங்கி வரும் வாய்மொழி வழக்காறுகளும் கூட தமிழரின் விஞ்ஞான அறிவோடு தொடர்புடையதாகவும், தமிழர்களின் விஞ்ஞான அறிவை பிரதிபலிப்பதாகவும் இருப்பதை அறிய முடிகிறது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தமிழரின் இயற்கை விஞ்ஞானத்தையும் வானியல் மதி நுட்பத்தையும் இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

## தமிழரும் இயற்கையும்

தமிழர்களின் வாழ்வு இயற்கையோடு இணைந்த வாழ்வாகும். இயற்கையின் கட்டுப்பாட்டில் வாழ்ந்தமனிதன் இயற்கையை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த கால கட்டமே மனித நாகரீகத்தின் தொடக்க காலம் என்பர் மானுடவியலாளர்கள். தொடக்க காலமனிதன் இயற்கைக்கு அஞ்சி வாழ்ந்த காட்டுமிராண்டி நிலையிலிருந்து படிப்படியாக மாறி இயற்கையை தன் வயமாக்கி வேளாண்மை செய்ய துவங்கிய ஆற்றங்கரை நாகரீகமே இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு எல்லாம் அடிப்படையாகும். தமிழர் கண்டறிந்த வேளாண் தொழில் நுட்பமும், பாசன முறைகளும், கால்நடைகளை அடக்கி தனக்கு உதவியாக பணி செய்ய பழக்கிய முறையும் தமிழரின் பண்பட்ட வாழ்க்கைக்கு ஆதாரங்களாகும். இயற்கையோடு இணைந்த வாழ்வும், அதனால் உண்டான அனுபவமும், அனுபவத்தால் விளைந்த அறிவும் உலக விஞ்ஞானிகளே கண்டுவியக்கும் அளவிற்கு இருந்திருக்கின்றது என்றால் அது மிகையல்ல. பழந்தமிழர்களின் அறிவியல் விஞ்ஞான நூல்கள் தனியாக எதுவும் கிடைக்கவில்லை என்றாலும் கிடைத்துள்ள இலக்கண, இலக்கிய நூல்களில் அறியப்படுகின்ற குறிப்புகளைக் கொண்டே அவர்களின் அறிவு நுட்பத்தை ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம்.

## இலக்கியமும் இயற்கையும்

மனித சமுதாயத்தின் ஆரம்பகால படைப்புகள் யாவும் இயற்கை பற்றியதாகவும் இயற்கைக்கும் அவனுக்குமான உறவு அல்லது

முரண் பற்றியதாகவுமே இருந்திருக்கின்றது. இதனை இயற்கை பொருட்களில் ஆவிசக்தி இருப்பதாகவும் அதை வணங்க சடங்குகளை கையாள்வதும் தேவை என எண்ணினான். இவற்றை மொழி படைக்கு முன் குகைகளில் ஓவியங்களாக தீட்டி வைத்தான். பின்னர் நாளடைவில் மொழி படைத்த போது விடை காண முடியாத புதிர்கள் யாவும் பல மரபுக் கதைகளாக உருவெடுத்தன. இவ்வகையில் பார்த்தால் புதிர் மயமான இப்பேருலகில் படைப்பு ரகசியம் பற்றிய பழமரபுக் கதைகள் ஆகியனவே மனிதன் படைத்த முதல் வகை இலக்கிய படைப்புகளாக திகழ்வன எனலாம் என்ற துரை சீனிசாமியின் கருத்து புலப்படுத்துகின்றது.[1]

படைப்பாளனுக்கு படைப்பு உந்தம் ஏற்பட காரணமாக அமைவது உள்ளுணர்வு எழுச்சியே ஆகும். இவ்வெழுச்சி எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. புறவய உலகின் மீதான கூர்நோக்கு அத்தகு உணர்ச்சிக்கு படைப்பாளனை ஆட்படுத்தி விடுகிறது. எனவே படைப்பாளன் தான் கண்ட இயற்கையை படைப்பு பொருளில் கையாளாமல் இருக்க முடிவதில்லை. சங்க இலக்கியங்களில் இயற்கை உள்ளுறையாகவும், இறைச்சியாகவும், உருவகமாகவும், உவமையாகவும் ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணரலாம். திணைக்குடிகளாக வாழ்ந்த இயற்கை நெறி வாழ்வியலில் இது தவிர்க்க இயலாத இயல்புடையதாக இருந்திருக்கலாம். இயற்கையை இலக்கியத்தின் பின்னணியாக ஒரு பகுதியாக பாட வேண்டும் என்பது ஒரு இலக்கிய கோட்பாடாகவே சங்ககாலத்தில் இருந்து வந்துள்ளது என்பதற்கு,

**முதல் கருஉரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறை சிறந்தனவே**
**பாடலுள் பயின்றவைநாடும் காலை**[2]

என்ற தொல்காப்பிய நூற்பாவே சான்றாகும். மனிதன் இயற்கையில் இருந்து தன்னை பிரித்துப் பார்க்க முடியாது. இயற்கையின் ஒரு பகுதியே மனிதன். அவன் வாழும் சூழலில் இருந்து தான் இலக்கியம் பிறக்கிறது. தான் வாழும் சூழலை, நிலத்தை, பொழுதை, உணவை, மரத்தை விலங்குகளை என எல்லாவற்றையும் தம் படைப்பியக்கத்தோடு ஒன்றிணைக்கும் போது தான் அப்படைப்பு முழுமை பெறுகிறது.

**வெள்ளி வீதி (பேரண்டம்)**

பேரண்டம் பால்வழி மண்டலம் என்றும் வெள்ளி வீதி என்றும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்திலேயே வெள்ளி வீதியார் என்ற பெயரில் ஒரு பெண்பாற் புலவர் அறியப்படுகின்றார் என்பது வியப்பிற்குரிய செய்தியாகும். நுண்மையும் விரிவும் காண்பதற்கு அரிய கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன்னரே நம் முன்னோர்கள் விரிந்த பேரண்டத்தைப் பற்றியும் நுணுகிய அணுவின் ஆற்றலையும் கண்டுணந்து வெளிப்படுத்தி இருக்கின்றனர். இப்பேரண்டம் தற்கால அறிவியல் ஆய்வுகளின் படி1300 கோடி ஒளியாண்டுகள் அளவு உடையதாகும் இதில் உள்ள அண்டங்கள் 100 கோடி. ஒரு சராசரி அண்டம் தன்னுள் 10000 கோடி விண்மீன்களை கொண்டு விளங்கும். ஒவ்வொரு அண்டமும் சுமார் நூறாயிரம் ஒளியாண்டுகள் அகலம் கொண்டவை. இந்த அளவுகளைப் பற்றி சிந்தித்தால் பேரண்டத்தின் பெருமை விளங்கும். நமது பேரண்டத்தை பற்றியும் அதில் விரிவடைந்து விரைவாக ஒன்றை விட்டு ஒன்று விலகிச் செல்லும் அண்டங்களைப் பற்றியும் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் எட்டாம் நூற்றாண்டிலேயே பதிவு செய்துள்ளார்.

**அண்டப் பகுதியின் உண்டைபிறக்கம்**
**அளப்பரும் தன்மைவலப்புறம் காட்சி**
**ஒன்றுநின்றெழில் பகரின் நூற்றாறு**
**கோடியின் மேற்படவிரிந்தன**
**இன்னுழைகதிரின்துன் அசைப்புரைய**
**சிறியதாகபெரியோன் தெரியின்.**

பேரண்டமானது என்னிறந்த கோள்களை உடையது. அக்கோள்களின் தன்மையை முற்றிலும் தெரிந்து கொள்ள முடியாது.

ஆராயும் அளவு அவைகளின் அழகும் சீரமைப்பும் கண்டு வியப்பதற்கு உரியவைகளாக இருக்கின்றன. ஒவ்வொரு கோளத்திலும் ஒரு தனி அழகு மிளிர்கிறது. விளக்கிச் சொல்லும் இடத்தில் கோடிக் கணக்கில் அவைகள் பேரண்டத்தில் விரிந்து போகின்றன. ஒரு பொத்தலில் வீட்டுக்குள் வருகிற சூரிய வெளிச்சத்தில் அணு போன்ற தூசிகள் அலைந்து திரிவது தென்படுகிறது. அது போன்ற கோலங்கள் வானத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. சிறியதாகிய அனைவருக்கும் பெரியதாகிய ஒன்றிற்கும் அமைப்பு ஒன்றேயாகும். ஆராய்ந்து பார்ப்பவருக்கு உண்மை விளங்குகின்றது.[3]

**உலகத் தோற்றம் பற்றிய அறிவியல்**

உலகமும் உலகத்து உயிர்களும் எவ்வாறு உருவாகின என்பது பற்றிய உலகத் தோற்ற கதைகளும் தொன்மங்களும் ஒவ்வொரு பழங்குடி சமூகத்திலும் நிலவி வந்துள்ளன. ஆயினும் அவை கற்பனையானவையாகவும் புரியாத புதிர் தன்மையிலானவையாகவும் இருந்திருக்கின்றன. ஆனால் தமிழ் அறிவு மரபில் உலகத் தோற்றம், அதன் உருவாக்கம் பற்றிய சிந்தனை இன்றைய அறிவியல் விஞ்ஞானத்திற்கு சவால் விடும் வகையில் இருந்திருக்கின்றது. கீரந்தையார் என்கிற புலவர் பரிபாடலில் உலகத் தோற்றம் குறித்து,

> **விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
> **கருவளர் வானத்து இசையில் தோன்றி,**
> **உருஅறிவாராஒன்றன் ஊழியும்**
> **உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்**
> **செந்தீச் சுடரியஊழியும் பனியொடு**
> **தண்பெயல் தலைஇயஊழியும் அவையிற்று**
> **உள் முறைவெள்ளம் மூழ்கிஆர்தருபு,**
> **மீண்டும் பீடுஉயர்புஈண்டி, அவற்றிற்கும்**
> **உள்ளீடுஆகிய இருநிலத்துஊழியும் ....**[4]

எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்றவானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப் பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்து போலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. பின்னர்ப் பூமி குளிரும் படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது.

அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியான ஊழிக்காலம் வந்தது. என்பது இப்பாடலின் பொருளாகும். இவற்றின் மூலம் தமிழரின் விஞ்ஞான அறிவும் இயற்கையை புரிந்து கொள்ளும் திறனும் நமக்கு புலப்படுகின்றது.

**வானமண்டலம் குறித்தஅறிவு**

காப்பியங்களில் வான் பொருட்களைப் பற்றிய கருத்துக்களையும் அவற்றின் எழிலையும், குறிப்பிட்ட காலங்களில் அவை அமைந்திருந்த இடங்களையும் நமது முன்னோர் குறிப்பிட்டுள்ளனர். புறநானூற்றின் முதல் பாடலேநிலவின் இளம்பிறை என்று தான் தொடங்குகிறது. மாளிகைகளில் வான் பொருட்களின் அமைப்புகள் சித்திரமாகத் தீட்டப்பட்டன.

> **“புதுவது இயன்றமெழுகுசெய் படமிசைத்**
> **திண் நிலைமருப்பின் ஆடு தலையாக**
> **விண் ஊர்புதிரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து**
> **முரண்மிகுசிறப்பின் செல்வனொடுநிலை இய**
> **உரோகிணிநினைவனள்**
> **நோக்கிநெடிதுஉயிரா,.......”**[5]

“பாண்டிமா தேவியின் கட்டிலின் மேற்கூரையில் இராசிமண்டலம் வரையப்பட்டிருந்தது. சந்திரன், உரோகிணி உருவங்களும் வரையப்பட்டிருந்தன. ஆகாயத் திடத்தே திண்ணிய நிலையுடைய கொம்பினையுடைய மேஷ ராசி முதலாக ஏனை ராசிகளில்

சென்று திரியும் மிக்க செலவுடைய ஞாயிற்றோடு மாறுபாடு மிகுந்த திங்களோடு திரியாமல் நின்ற உரோகிணி எழுதப்பட்டு இருந்தது“ என நெடுநல்வாடையில் நாம் காண்கிறோம்.

இது மட்டுமின்றி, ஒப்புமையாக வான்பொருட்கள் ஏராளமான சங்கத் தமிழ்ப்பாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஆய் அண்டிரன் என்ற மன்னனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் இவ்வாறு பாடுகிறார்.

**....அடுபோர் அண்ணல்**
**இரவலர்க்குஈத்தயானையின் கரவு இன்று**
**வானம் மீன்பலபூப்பின் ஆனாது**
**ஒருவழிக்கருவழி இன்றிப்**
**பெருவெள்ளென்னின் பிழையாதுமன்னே.**[6]

ஆய் அண்டிரன் இரப்போர்க்குக் கொடுத்த யானைகளின் எண்ணிக்கை பலவாகும். மேகம் மறைத்தலன்றி வானம் பல விண்மீனையும் பூக்குமாயின் கூட அந்த யானைகளின் தொகைக்கு நிகராகா. ஒரிடத்தும் கரிய இடம் இல்லாமல் விண்மீன்கள் 31/122 வெண்மையான ஒளிபரவி வானை வெண்மையாகச் செய்யுமாயினும், அவ்விண்மீன்களின் எண்ணிக்கையும் அவன் பரிசளித்த யானைகளுக்கு நிகராகா என்பது இப்பாடலின் பொருள்.

## முடிவுரை

நாகரிகத்திலும் பண்பாட்டிலும் செழித்து வாழ்ந்த தமிழ் மக்கள் வானியல் அறிவிலும் தலைசிறந்து விளங்கியிருக்கின்றனர் என்பதும் இன்றைய அறிவியல் ஆளர்கள் கண்டு வந்த உண்மைகளை தமிழ் மக்கள் அன்றே கணித்து துல்லியமாக கூறியுள்ளனர் என்பதும் இலக்கியத் தரவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

தமிழர்கள் மெய்ஞானத்தில் மட்டுமல்ல விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்கி இருக்கின்றனர். தமிழ் சமூகம் அறிவியலும் ஆற்றலிலும் மேம்பட்ட சமூகமாக விளங்கி இருக்கின்றது. இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டு இருந்ததன் காரணமாக இயற்கையையும் இயற்கை சக்திகளையும் மிக துல்லியமாக புரிந்து கொண்டு அவற்றைப் பற்றிய இலக்கியங்களிலும் ஓவியங்களிலும் சிற்பங்கள் போன்றவற்றிலும் வெளிப்படுத்தி இருக்கின்றனர். தமிழர் கண்டறிந்த வேளாண் தொழில் நுட்பமும் பாசன முறைகளும் கால்நடைகளை அடக்கி தனக்கு உதவியாக பணி செய்ய பழக்கிய முறையும் தமிழரின் பண்பட்ட வாழ்க்கைக்கு ஆதாரங்களாகும். நுண்மையும் விரிவும் காண்பதற்கு அரிய கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன்னரே நம் முன்னோர்கள் விரிந்த பேரண்டத்தைப் பற்றியும் நுணுகிய அணுவின் ஆற்றலையும் கண்டுணந்து வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

## அடிக்குறிப்புகள்


1. துரை. சீனிசாமி, இலக்கியத்தில் இயற்கை, அருசா வெளியீடு, மதுரை 1977.
2. எம் நாராயண வேலுப்பிள்ளை (தெளிவுரை) திருவாசகம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
3. சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம், இளம்பூரணார் உரை (எழுத்து - சொல் - பொருள்), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். 2009
4. புலியூர்க் கேசிகன், பரிபாடல், சாரதா பதிப்பகம். சென்னை. 2009, பா. எண். 2:4-12
5. பத்துப்பாட்டு மூலமும் நச்சினிர்க்கினியார் உரையும், திராவிடத்தாசர் அச்சுக்கூடம், சென்னை. 1889 (நெடுநல்வாடை, அடி 159-163)
6. புறநானூறு: மூலமும் உரையும் பதிப்பாளர். சென்னை, 1894, பா. எண் 129.

# சங்கத்தமிழர் வாழ்வில் நீர்

முனைவர் **கே. சி. ஆர். ஷிஜி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சேலையூர், சென்னை*

**முன்னுரை**

உலகம் ஐம்பூதங்களால் ஆனது, உலக உருவாக்க, இயக்கக் காரணிகளுள் ஒன்றான நீரின் அருமை பெருமைகளைச் சங்கத்தமிழர் நன்கு அறிந்திருந்தனர். 'நீர்சூழ் நிலவரை (புறம் 160: 29), நீரின்று அமையா யாக்கை' (புறம் 18:18), 'நீரின்று அமையா உலகம்' (நற் 1:6) என உயிரினங்களும் அவற்றின் உறைவிடமான உலகும் உயிர்ப்புடன் விளங்க நீரின் இன்றியமையாமையை உணர்ந்தமையால் தம் வாழ்விலும் பண்பாட்டிலும் மிகுந்த சிறப்பளித்துள்ளனர். இதனைச் சங்கப்பாக்கள் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளன. அவை தரும் குறிப்புகள் வழிச் சங்கத் தமிழரின் வாழ்வில் நீர் பெற்றுள்ள இடம் இங்கு இயம்பப்படுகின்றது.

**நீர், நீர்நிலை தொடர்பான சொற்கள்**

அறல், ஊறல், கலுழி, சலம், நீத்தம். பயம், புனல், பெயல், மலிர் எனப் பல சொற்களால்' நீர் குறிக்கப்பட்டுள்ளது. நீரின் இருப்பிடம் நீர் நிலை (புறம் 18:28) எனவழங்கப்பட்டுள்ளது. இயற்கை மற்றும் செயற்கை நீர்நிலைகள் காட்டப்பட்டுள்ளன. அருவி, ஆறு, ஊறல், கடல், சுனை. பொய்கை முதலான இயற்கை நீர்நிலைகள் பலவாறாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல அமைந்துள்ள இடம்" மற்றும் பெயர்களையும் சங்கப்பாக்கள் தருகின்றன.

அகழ், அகழி, இலஞ்சி, உவரி, ஊறல், கயம், கிடங்கு, கிணறு, குட்டம், குண்டுகுளம், கூவல், கேணி, சூழி, துறை, படு, பயம்பு எனப் பல்வகை செயற்கை நீர் நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைத் தெளிவாக அறுதியிட இயலவில்லை. நீரும் நீர்நிலைகளும் ஒரே சொல்லில் குறிக்கப் பெறுதலும் (ஊறல்) நோக்கற்பாலது. மீன்பிடித்தல், உப்புவிளைத்தல், வணிகம் எனப் பலவற்றிற்கு உறுதுணை;

**எல்லை காணாப்பரப்பு**

மழை வளத்திற்குக் காரணமாதல் எனப் பல தனிச் சிறப்புகளால் கடலுக்கு வழங்கியுள்ள மாற்றுச் சொற்களும் கருதத்தக்கனவாம். கடலே நீரெனக் குறிக்கப்படலும் (மது 369) எண்ணத்தக்கது மற்றும் சங்கப் புலவர் நீருக்கு வழங்கியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட அடைகளும் எண்ணத்தக்கன.

இவையும், சங்கத் தமிழர் வாழ்வில் நீர் பெற்றுள்ள சிறப்பினை உள்ளுணர்த்துகின்றன சொல்லாய்வுக் கல்விக்கு மிக்க சுவையானதாக இவை அமைதலும் சுட்டத்தக்கது

**நம்பிக்கைகளில் நீர்**

உலகில் உள்ள அனைத்து இன மக்களும் ஏதேனும் காரணம் பற்றிக் குறிப்பிட்ட சிலவற்றில் மாற்றுதற்கரிய எண்ணங்களை மிக உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கின்றனர். அவை நம்பிக்கைகளாகத் தொன்று தொட்டுத் தொடர்ந்து நிலவுகின்றன. தமிழர் தம் நம்பிக்கைகள் சிலவற்றிலும் நீர் முன்னிற்பதை அறிய முடிகிறது. நீர்நிலைகளில் அணங்கு உறைவதான நம்பிக்கை அவற்றுள் ஒன்றாகும்.

**“உண்துறைஅணங்குஇவள்உறைநோயாயின்”**
**(ஐங் 28:1)**

**“அணங்குடைப்பனித்துறைத்தொண்டி”**
**(ஐங் 174:1)**

**“பெருவரைஅடுக்கம்பொற்பச்சூர்மகள்**
**அருவிஇன்னியத்தாடுநாடன்”**
**(நற் 34:4-5)**

என்பனசான்றுகள்.

இவ்வணங்குவருத்தும் இயல்புடையதென நம்பியதையும் இவற்றால் அறியமுடிகிறது.

அருவிகளில் வானர மகளிர் பெருவிருப்புடன் நீராடி மகிழ்வர் என நம்பிக்கை கொண்டிருந்ததை

**“அருவிநுகரும்வானரமகளிர்**
**வருவிசைதவிராதுவாங்குபுகுடைதொறும்**
**தெரியிமிழ்கொண்டநும்இயம்போல்இன்னிசை”**
**மலைபடுகடாம் (294-296)**

என்று இசைக்கின்றது.

நீர்நிலைகளில் மட்டுமின்றி அவற்றின் கரையோர மரங்களிலும் கடவுள் தங்குவதாக நம்பிய நம்பிக்கையை

**"எம்வாயில்உண் துறைத்தடைஇய**
**கடவுள்முதுமரத்து"** **(நற் 83: 1:20)**

என்பதில் பெறலாம்.

அரசியல் செம்மை வாழ்வியல் செம்மைக்கு வழிவகுக்கும் அது நாட்டில் நீர் வளத்தைச் சிறப்பிக்கும் என்ற நம்பிக்கை.

**"கோஒல்செம்மையிற்சான்றோர்பல்கிப்**
**பெயல்பிழைப்பறியாப்புன்புலத்துவே"**
**(புறம் 117: 6-7)**

என்பதில் வெளிப்படக் காணலாம். இதன் காரணமாக நீர்நிலைகளை உருவாக்கித் தரலையும் அரசர் கடமையாகப் புலவர் அறிவுறுத்தியதை,

**"நிலநெளிமருங்கில்நீர்நிலைபெருகத்**
**தட்டோர்அம்மஇவள்தட்டோரே;**
**தள்ளாதோர்இவன்தள்ளாதோரே"**
**(புறம் 18: 28-30)**

என்பது உணர்த்துகிறது.

**பழக்கவழக்கங்களில் நீர்**

தனிச்சிறப்புடன் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட பழக்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு நீடித்து நின்று வழக்கமாகி விடும் பொழுது பழக்க வழக்கமாகிறது. இது தனி நபரிலும், குழுவினரிடையிலும் ஒட்டுமொத்த சமுதாயத்திலும் என அமையலாம். இங்ஙனம் தமிழரிடையே எழுந்துள்ள பழக்க வழக்கங்களில் சில நீருடன் தொடர்பு கொள்கின்றன. புது வெள்ளம் கரை புரண்டோடும் பொழுது அதனை வரவேற்கு முகமாக ஊரவர் புதுப்புனலாடி மகிழ்தல் சங்கப்பாக்களில் சிறப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**பரிபாடலின் வையைப் பாடல்கள்**

**"தண்டின்தண்டின்தாய்ச்செல்வாரும்**
**வெய்யதிமிலின்விரைபுளலோடுஒய்வாரும்**
**மெய்யதுழவின்எதிர்புனல்மாறாடிப்**
**பையவிளையாடுவாரும்"**
**(பரி 10: 100-104)**

என்பது போன்று விதந்தோதியுள்ளன.

இறைவழி பாட்டிற்காக விளக்கேற்றுதல் நீராடிய தன் பின்பே அமைதல்

**"கொண்டி மகளிர்உண்துறைமூழ்கிஅந்தி**
**மாட்டிய நந்தா விளக்கின்**
**மலரணிமெழுக்கம் ஏறிப்**
**பலர் தொழவம் பலர்சேக்கும் கந்துடைப்**
**பொதியில்"**
**(பட் : 242-248)**

என்பதில் உணர்த்தப்பட்டுள்ளது.

நீராடிய பின் இறைவழி பாடுசெய்வதைப் பதிற்றுப்பத்தும் (31:1-101 தருகிறது கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்குக் கொடை தருகையில் நீரிட்டு வழங்குவது

**"உரைசால்வேள்விமுடித்தகேள்வி**
**அந்தணர்அருங்கலம்ஏற்பநீர்பட்டு**
**இருஞ்சேறாடியமணல்மலிமுற்றத்து"**
**(பதி 64: 4-6)**

என உரைக்கப்படுகிறது

நெல்லிக்காய் தின்று அதன் சுவை மிகுவிக்க. நீர் அருந்தும் பழக்கமும் புன்கால் நெல்லிப் பைங்காய் தின்றவர் நீர் குடிசுவையில் தீவியமிழற்றி (அகம், 54: 15-161 என்பதில் காட்டப்படுகிறது. வழிப்போக்கற்கு நீர் வேட்கை தணிவித்து உயிர்ப்பிக்கும் அருமருந்தாக நெல்லியும் பயன்பட்டது.

**சடங்குகளில் நீர்**

வாழ்வில் அவ்வப்போது நிகழும் சிறப்பு நிகழ்வுகளில் சூழல்களில் மேற்கொள்ளப்படும் தனித்த காரணங்களின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் செயல்களைச் சடங்குகள் எனலாம். "பிறந்த வினாடி முதல் இறக்கும் வினாடி வரை அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒரு சடங்கைச் செய்து நிறைவடைகிறார்கள். கடவுளிடம் உள்ள அச்சமும் முன்னோர் வழக்கத்தை மீறாமல் நடந்து கொண்டால் தான் வாழ்க்கை வசதியானதாய்க் கவலையில்லாததாய் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து இந்தச் சடங்குகளை விடாமல் செய்ய மக்களைத் தூண்டுகின்றனர்" என்று குறிப்பிடுகிறார்சோமலே.5

இச்சடங்குகளின் செயற்பாட்டிலும் தமிழர் நீருக்கு இன்றியமையா இடமளித்துள்ளனர். எடுத்த காரியம் வெற்றி பெறுமா? அடுத்து நிகழ விருப்பது நன்மை தருமா? நினைப்பது நிறைவேறுமா எனப் பின் நிகழ்வை முன்னறிந்து கொள்ள விரிச்சி காணும் வழக்கம் தமிழரிடையே பரவியிருந்தது. அது 'நெல்நீர் எறிந்து விரிச்சியோர்க்கும் செம்முது பெண்டுபுறம்: 260 5-7) என்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இதனை ஒரு பழக்கமாகக் கருதலாம் எனினும் விரிச்சி காண்பதில் சிலமுறைமைகள் பின்பற்றப் படுதலினால் இங்குச் சடங்காக ஏற்கப்பட்டுள்ளது

மகளின் இயல்பு நிலையிலிருந்து வேறுபாடும் சோர்வும் கண்டவிடத்து தாய் அச்சமுற்று அதன் காரணமறிய வெறியாடல் நிகழ்த்துதல் மரபு அச்சடங்கிலும் நீருக்குச் சிறப்பிடம் அளிப்பதை

**“முருகெனஉணர்ந்துமுகமன்கூறி**
**உருவச்செந்தினைநீரொடுகூஉய்**
**நெடுவேள்பரவும்அன்னை”**

**(அகம் 272: 13-15)**

என்பது காட்டுகிறது.

வாழ்வின் திருப்பு முனையாக, புதிய பாதையைத் தோற்றுவிப்பதாக அமையும் திருமணத்தின் போது நிகழ்த்தும் சடங்குகளிலும் நீர் சிறப்பு பெறுகிறது. திருமணம் மங்கல நீராட்டாக அமைவதை.

**“நீரொடுசொரிந்தஈரிதழ்அலரிப்**
**பல்லிருங்கதுப்பின்நெல்லொடுதயங்க**
**வதுவைநன்மணம்கழிந்தபின்றை”**

**(அகம் 86: 15-17)**

எனும் வருணனையில் காணலாம்.

குழந்தை பெற்ற மகளிர் குறிப்பிட்ட சில நாட்களின் பின் நீராடித் தூய்மை பெறுதலும் குறிப்பிடத்தக்கது. இது

**“புலவுப்புனிறுதீர்ந்துபொலிந்தசுற்றமொடு**
**வளமனைமகளிர்குளநீர்அயர்”**

**மதுரைக்காஞ்சி (502-603)**

என நவிலப்பட்டுள்ளது.

### வழிபாட்டில் நீர்

சிக்மண்ட் பிராய்டு அவர்கள் "இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை காரணம் என்கிறார்". இதனை சக்திவேல் தனது நூலில் சுட்டி காட்டியுள்ளார். மழை வேண்டி நிகழ்த்தும் வழிபாட்டினை இங்கு எண்ணலாம். இதனை,

**“மலைவான்கொள்கெனஉயர்பலிதூஉய்**
**மாரியான்றுமழைமேக்குஉயர்கெனக்**
**கடவுள்பேணியகுறவர்மாக்கள்**
**பெயல்கண்மாறியஉவகையர்”**

**(புறம் 143: 1-4)**

எனப் புறநானூறு காட்டுகிறது.

நீர் நிலைகளைத் தெய்வ நிலைக்கு ஏற்றி இறைவழிபாடு போன்று அவற்றிற்கும் வழிபாடு நிகழ்த்துவது இங்குப் பேசப்படுகிறது. ஆறு மற்றும் கடல் வழிபாடே சிறப்பாகச் சுட்டப்பட்டுள்ளன. பரி பாடல் வையைப் பாடல் வழி ஆற்றுவழி பாட்டை இனங்காட்டல் போன்று அகநானூறு கடல்வழி பாட்டை இயம்புதல் சுட்டற்பாலது

**“புகைபூஅவிஆராதனைஅழல்பலஏந்தி**
**நகையமர்காதலரைநாளணிக்கூட்டும்**
**வகைசாலும்வையைவரவு”**

**(பரி 6: 11-13)**

**“நத்தொடுநள்ளிநடையிறவுவயவாளை**
**வித்திஅலையில்விளைகபொலிகஎன்பார்”**

**(பரி. 10: 85-86)**

என ஆற்றுவழிபாடு காணப்படுகிறது.

### மகளிரும் நீரும்

சடங்கு, நம்பிக்கை வழிபாடு எனப் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளில் நீரின் சிறப்பு மகளிரோடு ஒன்றி நிற்பதை மேற்கண்டன தெரிவிக்கின்றன. இவற்றுடன் தனித்து எடுத்துக் கூறத்தக்கனவாகச் சில கூறுகளும் சங்கப் பாடல்களில் பரந்துக் காணப்படுகின்றன. தகுந்த மணாளனை வேண்டி அமையும் தைந்நீராடல் அவற்றுள் முதன்மை பெறுகிறது. மகளிராடும். தைஇத்தண்கயம் (ஐங் 84: 3-4) எனச் சுட்டு நிலையிலும் தைந் நீராடுமுறைமை,

**“அம்பாஆடலின்ஆய்தொடிக்கன்னியர்**
**முனித்துறைமுதல்வியர்முறைமைகாட்டப்**
**பனிப்புலர்பாடிப்பருமணல்அருவியின்**
**ஊதைஊர்தரஉறைசிறைவேதியர்.**
**நெறிநிமிர்நுடங்குஅழல்பேணியசிறப்பின்**
**தையல்மகளிர்ஈரணிபுலர்தர**
**வையைநினக்குமடைவாய்த்தன்று” (பரி. 11: 81-87)**

என விரித்துரைக்கப்பட்டுள்ளது.

### தைந்நீராடலின் பலனைக் கலித்தொகை

**“மருளியான்மருள்உற.**
**'இவன்உற்றதுஎவன்' என்னும்**
**அருள்இலைஇவட்கு'**
**எனஅயலார்நிற்பழிக்குங்கால்**
**வைஎயிற்றவர்நாப்பண்,**
**வகைஅணிப்பொலிந்துநீ**
**தையில்நீர்ஆடியதவம்தலைப்படுவாயோ?**

**(கலி 59:10-13)**

எனக் காட்டுகிறது. நல்ல துணைவனைப் பெறுதல் தைந்நீராடலின் நோக்கமாக நம்பிக்கையாக வெளிப்படக் காணலாம்.

### நீருக்கு அளித்த சிறப்பு

தம்மை வாழ்விக்கும் நீருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்புச் செய்யும் உணர்வில் தமிழரின்

பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் வழிபாடுகளும் அமைந்துள்ள போதிலும் ஏனைய சிலவும் இதனை வலுச் செய்யும் முகமாக அமைந்துள்ளன.

தமிழரின் ஐந்நிலப் பாகுபாடு நீரினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது எனவும் எண்ண இடனுண்டு. நீரற்ற நிலம் பாலையாக அங்குக் குடியிருப்புகளும் இல்லையாயின. குடியிருப்புகள் தீர் நிலைகளைச் சார்ந்தே எழுந்தன என்பதனைப் புலப்படுத்துவதாகப் பிற நிலக்குறிப்புகள் பல அமைகின்றன.

**"அருவிப்பரப்பின்ஐவனம்வித்திப்**
**பருஇலைக்குளவியொடுபசுமரல்கட்கும்**
**காந்தள்அம்சிலம்பில்சிறுகுடி"**

**(குறுந். 100: 1-3)**

என்பதால் குறிஞ்சியும்,

**"பல்கால்,**
**யாம்கான்யாற்றுஅவிர்மணல்தண்பொழில்**
**அல்கல்அகல்அறைஆயமொடுஆடி**
**முல்லைகுருந்தொடுமுச்சிவேய்ந்து"**

**(கலி 113: 23-25)**

என்பதில் முல்லையும்.

**"படுவேல்மத்திகழாஅர்முன்றுறை**
**நெடுவெண்மருதொடுவஞ்சிசாய**
**விடியல்வந்தபெருநீர்க்காவிரி"**

**(அகம் 26: 8-10)**

என்பதில் மருதமும்

**"புதுமணல்கானல்புன்னைநுண்தாது**
**கொண்டல்அசைவளிதூக்குதொறும்குருகின்**
**வெண்புறம்மொசியவார்க்கும்தெண்கடல்**
**கண்டல்வேலியஊர்**

**(நற். 74: 7-10)**

என நெய்தலும் சான்றாகின்றன. ஆதிமனிதரின் நிலையான இருப்பிடங்கள் முதன் முதலில் ஆற்றங்கரைகளையொட்டியே அமைந்ததும் இங்கு இணைத்துக் காணத்தக்கதாம்.

நீர் வளம் மிக்க பெருமிதத்திற்குரியதானதை

**"பூவிரிபுதுநீர்க்காவிரிபுரக்கும்தண்புனற்**
**படப்பைஎம்மூர்" (புறம். 166:28-29)**

**"கோடைநீடக்குன்றம்புல்லென**
**அருவிஅற்றபெருவறற்காலையும்**
**நிவந்துகரைஇழிதரநனந்தலைப்பேரியாற்றுச்**
**சீருடைவியன்புலம்"**

**(பதி 28: 8-10)**

என்பன போன்றும் அமையும் குறிப்புகள் காட்டுகின்றன. நீர் நிலைகள் மிகுந்த கவனமுடன், பாதுகாக்கப்பட்டமையும்

**"சிறுகோட்டுப்பெருங்குளம்காவலன்"**

**(அகம். 252 11-12)**

**"காப்புடையசுயம்படியினை" (புறம். 15: 10)**

என்பனவற்றால் அறியலாம்.

பெருவெள்ளத்தால் கரையுடைப்பு நேரின் வாரார் கூடித்தம் பணியாக அதனை அடைக்க முற்பட்டதையும்,

**"வரைச்சிறைஉடைத்ததைவையைவையைத்**
**திரைச்சிறையுடைத்தன்றுகரைச்சிறைஅ**
**றைகெனும்**
**உரைச்சிறைப்பறையெழஊரொலித்தன்று"**

**(பரி. 6:22-24)**

எனும் குறிப்புத் தெரிவிக்கின்றது

### முடிவுரை

உயிர்வாழ்வின் அடிப்படைத் தேவை நீர் என்பதனை முழுதுணர்ந்த நிலையில் பண்டைத் தமிழர்தம் பண்பாட்டிலும் அதனை வெகுவாகச் சிறப்பித்துள்ளனர். அவற்றுள் நீராடல், நீராட்டு, வழிபாடு போல்வன இன்றும் தொடரக் காண்கிறோம். நீரால் நிகழ்த்தப்படும் வேளாண் தொழிலும், நீரில் நிகழும் மீன்பிடித் தொழிலும், உப்பு, விளைத்தலும் எனப் பிறிதொரு பார்வையிலும் தனித்து நோக்கிப் பண்டைத் தமிழரின் செயல் திறன் காண்பதற்கும் சங்கப் பாக்கள் இடனளிக்கின்றன. நீர்வழிப் பயணமும் வணிகமும் கூட தனி ஆய்வுக்களனாகும் சிறப்புக் காட்டுகின்றன.

### தொகுப்புரை

நீர், நீர்நிலை தொடர்பான சொற்கள் சொல்லாய்வுக் கல்விக்குச் சுவையானதாக அமையும் என்பது சுட்டப்பட்டுள்ளது.

நம்பிக்கை, சடங்கு, வழிபாடு எனப் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

நம்மை வாழ வைக்கும் நீருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அதன் சிறப்பும் தை நீராடலின் பலனும் குடியிருப்புகள் நீர்நிலைகளைச் சார்ந்தே எழுந்தது என்பதும் அறிய முடிகின்றன.

### கருவிநூல்

சங்க இலக்கியம் பாட்டும், தொகையும். புலியூர் கேசிகன் உரை – மூலமும் உரையும் டாக்டர். கதிர் முருகன் – மூலமும் உரையும்

**ஆராயப்பட்ட நூல்கள்**


1. தமிழில் ஆய்வு சிந்தனைகள், நாட்டுப் புறவியல், கலை மற்றும் பண்பாடு (பக்: 157)
2. தமிழில் ஆய்வு சிந்தனைகள், நாட்டுப் புறவியல், கலை மற்றும் பண்பாடு (பக்: 158)
3. இலக்கிய வகைமைகளும் வாழ்வியல் சிந்தனைகளும், முனைவர் சா.சதாசிவம் (பக்:316)
4. தமிழ்ப் பண்பாடு முனைவர். க. த. திருநாவுக்கரசு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (பக்:72)
5. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் (பக் :42)
6. சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு (பக் :222)

# ‘சிகரங்களை நோக்கி’ புதினத்தில் இயற்கையின் கோணம்

**பேரா. ஜ. ஹர்ஷத் பாஷா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (த), மேல்விஷாரம், இராணிப்பேட்டை (மா)*

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கை இறைவனின் வரமாகும். ஒவ்வொரு செயலோ அல்லது இயற்கை நிகழ்வோ அது பார்ப்பவர்களின் கோணத்தின் மூலமே மாறுபடுகிறது. அந்தக் கோணம் பார்ப்பவர்களின் மனநிலை, சிந்தனை, அவர்களின் வாழ்க்கை முறை இவற்றைப் பொருத்து அமையும் என்பது திண்ணம். சாதாரண மனிதர்களுக்கும் கவிஞர்களுக்கும் உள்ள மிகப்பெரிய வேறுபாடு, அவர்கள் அனைத்தையும் உவமைகளாக பார்ப்பது தான். அந்த வகையில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தன்னுடைய **‘சிகரங்களை நோக்கி’** என்னும் புதினத்தில் இயற்கையின் எழிலையும் அதன் செயல்களையும் எவ்வாறு பார்த்துள்ளார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

தமிழ் கூறும் நல்லுலகம் பெற்ற கவிஞர்களுள் வைரம் போன்றவர் வைரமுத்து. ஒருசிறிய கிராமத்தில் பிறந்து தனது படைப்புகளின் மூலம் உலகறியப் புகழ் பெற்றவர். திரைப்படத்திற்கு பாடல் எழுதுவதில் தொடங்கிய இவர், நாவல்களையும், கவிதைத் தொகுப்புகளையும் மற்றும் சிறுகதை நூல்களையும் எழுதியுள்ளார். இதன் மூலம் பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். தனது பேச்சிலும் எழுத்திலும் உவமைகளைக் கையாள்வதில் வல்லவரான இவர் தனது படைப்புகளிலும் பெரும்பாலானவரிகள் உவமைகளாக வேகையாண்டுள்ளார். இந்தப் போக்கே இவரது பக்கம் பலரையும் ஈர்க்கச் செய்கிறது. இவரது படைப்புகள் பொதுவாக எளிய மக்களின் வாழ்க்கைநிலை பற்றியும், மண்ணின் சிறப்பு பற்றியும் கூறுபவைகளாக அமைகின்றன. சாகித்திய அகாதெமி விருது பெற்ற இவரது “கள்ளிக்காட்டு இதிகாசம்” விடாமுயற்சியையும் மனிதத்தையும் பற்றி பேசுகிறது. இவர் படைப்புகள் ஆர்வத்தோடு, மனதில் தாக்கத்தையும் ஏற்படுத்தும் தன்மை உடையன. ‘சிகரங்களை நோக்கி’ என்னும் இந்த புதினத்தில் இயற்கையின் அழகையும், சிறப்பையும் அவருக்கே உரிய முறையில் உவமைகளோடு மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

**இயற்கையின் எழில்**

இயல்பாய் இருக்கும் தோற்றமே இயற்கை என்பதற்கு பொருள். அது மனிதனின் மன அமைதிக்கும், புதுப்பொலிவு பெறுவதற்கும் முக்கிய காரணியாக உள்ளது. இந்த உலகமானது இயற்கையின் கொடைகளாலேயே நிறைந்துள்ளது. பூமியை அழகுபடுத்தவும், மனிதர்களின் கண்களுக்கும் உள்ளங்களுக்கும் இன்பம் தருவதற்காகவே இறைவன் இயற்கையைப் படைத்துள்ளான் என்றே தோன்றுகிறது.

“**நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை (இயற்கையை) அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம்**”[1] என்று திருக்குரான் சூரா அல்-கா.்.ப் ஏழாவது வசனம் நிறைவடைகிறது. வள்ளுவரும் ஒரு செயலைச் செய்யும் முறையை அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கையை அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும் என்கிறார்.

> **“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
> **இயற்கை அறிந்துசெயல்”**[2]

இந்த உலகம் இயற்கையால் உருவானது என்பதை தொல்காப்பியர் ஐம்பெரும் இயற்பொருள்களின் சேர்க்கையே உலகம் என்று தனது நூலில் குறிப்பிடுகிறார்.

> **“நிலம் தீநீர் வளி விசும்போடுஐந்தும்**
> **கலந்தமயக்கம் உலகம் ஆதலின்”**[3]

மனிதன் மனஅழுத்ததிற்கு ஆளாகும் போது சுற்றுலா என்ற பெயரில் இயற்கையைக் கண்டு மன அமைதியும், வாழ்வில் புதுப்பொலிவும் அடைகின்றான். எனவே இயற்கையாக அமைந்த அனைத்தும் மனிதர்களுக்கு பலனுள்ளதாகவே உள்ளன. மனிதனால் யூகிக்க முடியதவற்றைத் தானாக பரிணாமம் அடைவதே இயற்கையின் சிறப்பு எனலாம். அந்த இயற்கையின் அழகையும், சிறப்பையும் மனிதர்கள் புரிந்துக் கொண்டால் இயற்கையைப் பாதுகாக்கவும் முடியும், மனிதர்களின் வாழ்க்கையும் சிறந்து விளங்கும் என்பதை அழுத்தமாகக் கவிஞர் தன் கதாபாத்திரங்கள் மூலம் சொல்லிச் செல்கிறார்.

## கதாபாத்திரங்களின் படைப்பு

வைரமுத்து அவர்கள் இந்தப் புதினத்தின் முக்கிய கதாபாத்திரங்கள் தங்கள் சாதாரண வாழ்க்கையை விட்டு இயற்கையை நேசிக்க மலைதேசத்திற்குத் தஞ்சம் அடைந்தவர்களாகவே படைத்துள்ளார். இயற்கை விரும்பியான திருஞானம் இயற்கையை நேசித்து அதையே சுவாசிப்பதற்காகவே மலை தேசம் செல்வதாக அமைத்துள்ளார்.

**“மனிதன் என்பவன் வெறும் எலும்பு, நரம்புகளால் பின்னப்பட்டவன் அல்ல–அவன் எண்ணங்களால் கட்டப்பட்டவன்”**[4]

என்கிறார். அந்த ஊரை ஓசையற்ற உலகம் எனவும், அப்படியே சத்தம் வந்தாலும் அது சங்கீதம் எனவும், நதியின் சத்தத்தை மலையின் ரகசியத்தை முணு முணுப்பதாகவே கூறிச் செல்கிறார். அதன் அழகை பின்வருமாறு வரைகின்றார்.

**“அந்தக் கிராமம் பள்ளத்தாக்கு மூடி இருக்கும் பச்சைமரகதப் பந்தல்”**

**“சொற்பக் கட்டணத்தில் ஒருசொர்க்கம்”**

**“பாறைகளின் பிளவிலிருந்து குதித்துக் கொண்டிருந்த குழந்தை அருவி”**

**“திரவப்பளிங்காய்த் தெறித்துச் செல்லும் சில்லோடைகள்”**

**“காதலியின் தாவணி போன்று மென்மையாய் உரசிப்போகும் மேகங்கள்”**

**“மண்ணே தயாரித்த ஏவுகணைப் போலவான் தடவிநிற்கும் நெடுமரங்கள்”**[5]

என்று இயற்கையை உவமைகளால் அழகாக அடுக்கிச் செல்கிறார்.

அடுத்த முக்கிய கதாபத்திரமான ஓவியாவும் வாழ்க்கையில் இயற்கையின் முக்கியத்துவத்தோடு மக்களின் முன்னேற்றத்திற்கான வழிகளை எடுத்துக் கூறும் இயல்புடையவளாகப் படைத்துள்ளார்.

**“இந்தஊரில் மனிதர்களுக்காக ஒரு வாழ்க்கை மறுக்கப்பட்டுள்ளது”**

**“அவர்களை நோக்கிவர வேண்டிய வாழ்க்கை நதி எங்கே தடுக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்தாள்”**

**“மூளையிலிருந்து மூடநம்பிக்கையை முள்ளெடுத்தாள்”**[6]

இவ்வாறு இயற்கையோடு இணைந்து மக்கள் வாழ வேண்டும் என்ற கோணத்தில் திருஞானம் மற்றும் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழத் தடையாக இருப்பவற்றைகளையும் எண்ணம் கொண்டவளாக ஓவியாவையும் பாத்திரப் படைப்புகளாக படைத்துள்ளார்.

## மனிதவாழ்வில் இயற்கையின் பங்கு

மனித வாழ்க்கையில் இயற்கை பெரிதும் பங்காற்றி வருகிறது. மனிதனுக்கு இன்றியமையாத சுவாசத்திற்கான காற்று, உணவுக்கு ஆதாரமான நீர், உலகிற்கு வெளிச்சம் தரும் நெருப்பு என இயற்கையின் பங்களிப்பில்லாமல் மனிதனால் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது என்பது உண்மை. ஆனால் அந்த இயற்கையை ஆதரிக்காமல் அதை வளமாக மாறவிடாமல் அதனை அழிப்பதையே மனிதன் செய்து வருகின்றான். இந்தப் புள்ளியை மையமாகக் கொண்டே ஆசிரியர் இந்த நூலில் முன்னோக்கிச் செல்கிறார்.

மனிதன் இயற்கையை அழிப்பதே அவன் வளமாக வாழ வேண்டும் என்பதற்குத் தான்.

ஆனால் இயற்கை வளமாக இருந்தால் தான் மனிதன் வாழவே முடியும் என்பதை சாதாரண மனிதன் அல்லகற்ற விஞ்ஞானிக்கும் தெரியவில்லை என்பதையும் கருவாக அமைத்துள்ளார். இயற்கையை வியக்கும் விதமாக தலைமை கதாபத்திரங்கள், அதனை அழிக்க நினைக்கும் விஞ்ஞானித் தந்தை, அவரிடமிருந்து இயற்கையைக் காப்பாற்றுவதோடு அதன் செறிவையும் எடுத்துச் சொல்லும் விதமாக இந்தக் கதை நகர்கிறது.

மனித வாழ்க்கைக்கு பங்காற்ற வேண்டியதைச் சேதப்படுத்துவதால் மனித வாழ்க்கை முடிவதற்கும் பங்காற்றிச் சென்று விடுகிறது என்பதை,

**“நேற்று பெய்தமழையில் மலையே ஊனமுற்றது”**

**“வெள்ளத்தின் அரிப்பில் மலையின் விலா எலும்புகள் வெளியே தெரிகின்றன”**

**“இங்கே மலைமக்கள் பலரை பூமியே கல்லறை தோண்டிப் புதைத்துவிட்டது.”7**

போன்ற வரிகளில் இயற்கையே பேரிடராக அமைவதைக் குறிப்பிடுகிறார்.

**இயற்கையின் அறிவியல் செயல்கள்**

சிகரத்தைத் தொட வேண்டுமானால் ஒரே துறையில் பல வருடங்கள் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை அழுத்தமாக சொல்லும் கவிஞர், தன்னுடைய விஞ்ஞானி கதாபாத்திரம் மூலம் தெளிவு பெறச் செய்கிறார். நுண்ணுயிர் ஆய்வாளர் மூலம் இயற்கையாக நுண்ணுயிர்கள் செய்யும் இன்றியமையாத செயல்களைக் குறிப்பிடுகிறார்.

**“வறட்டு பூமியை மலட்டுபூமியாய் மாறிவிடாமல் பாதுகாப்பவை நுண்ணுயிரிகள்”**

**“இறந்தஉடல்களைத் தின்று சுற்றுபுறத்தை சுத்திகரிப்பவை நுண்ணுயிரிகள்”**

**“செத்தக் கழிவுகளைச் சத்துக்களாய் மாற்றுபவை நுண்ணுயிரிகள்”**

**“திராட்சை ரசத்தை நொத்திக்க வைத்துமதுத் துளிகளாக மாற்றுபவை நுண்ணுயிரிகள்”[8]**

போன்றவற்றைக் கூறி இயற்கையான நுண்ணுயிரிகளால் மண்ணுக்கும் மனிதனுக்கும் ஏற்படும் பலன்களை விவரிக்கிறார். அறிவியலில் புதுமை செய்வதற்கும் இயற்கையே முக்கிய காரணியாக அமைவதையும் தெளிவுபடுத்துகிறார்.

**அறிவியலால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்பு**

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியால் உலகம் முன்னேற்றம் கண்டு வருகிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதே அறிவியலால் இயற்கைக்கு, பறவைகளுக்கு, விலங்குகளுக்கு ஏன் மனிதர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை, அறிவியலும் விஞ்ஞானமும் சேவைக்காக, மனிதகுல வளர்ச்சிக்காக என்பதை அறியாமல் பொருளீட்ட மட்டுமே என்று எண்ணும் சிலரிடம் அகப்பட்டால் அந்த அறிவியலாலேயே இந்த உலகமும் மனித குலமும் அழியும் என்பதை அடிகோடிட்டு காட்டவே விஞ்ஞானி கதாபாத்திரம் அமைத்துள்ளார்.

ஆனால் அதே விஞ்ஞானி முதலில் உலகிற்கு நன்மை தரக்கூடிய ஆராய்ச்சிகளைச் செய்வதாக காட்டியுள்ளார். ஒரு மனிதனுக்கு ஏற்படும் ஏமாற்றமும் அதனால் ஏற்படும் பிரதிபலன்களே அவர்கள் உலகை அழிக்க நினைக்கும் மனிதனாக மாற்றுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். எனவே மனிதனின் அடிப்படை நாகரிகம், ஒழுக்கம், பொறாமை போன்றவை அறிவியல் வளர்ச்சி மற்றும் இயற்கையின் அழிவு போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் பதிவு செய்கிறார்.

**முடிவுரை**

இயற்கை இறைவனின் அற்புதம், அதுவே இந்த உலகை பாதுகாக்கும் கேடயம் ஆனால் அதையே உலகிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாளாக மாற்றுவது மனிதர்களின் செயல்களே. இயற்கையை, அதன் அழகை உணர்வதென்பது மனிதர்களின் மனநிலையை பொருத்தே அமையும். அடிப்படைத் தேவை பூர்த்தியாகாத மனிதனால் இயற்கையை வியக்க முடியாது என்பதையும், மனித

மனநிலையின் சமநிலையாலேயே இயற்கையைப் பாதுகாக்க முடியும் என்பதையும் தன் கதாபாத்திரங்கள் மூலம் உலகறியச் செய்துள்ளார்.

### அடிக்குறிப்புகள்

1. திருக்குர் ஆன் - அத்தியாயம் 18 – அல்கா.ஃ.ப் வசனம் - 07
2. திருக்குறள் - அதிகாரம் - அமைச்சு குறள் எண் : 637
3. தொல்காப்பியம் - மரபியல்-91
4. சிகரங்களை நோக்கி – கவிஞர். வைரமுத்து–ப–05, பதிப்பு ஆண்டு – 2022 சூர்யாலிட்ரேச்சர் பி லிட்.
5. மேலது. பக் - 14,15,17,20
6. மேலது. ப - 63
7. மேலது. ப - 85
8. மேலது. ப – 92

# மணிமேகலை காப்பிய உருவாக்கத்தில் இயற்கை

**ர. விஜி**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம்*

**முனைவர் இரா. அச்சுதன்**
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*பெருங்காப்பிய இலக்கணங்களில் ஒன்றாக அமையப் பெற்றுள்ளது இயற்கை அமைப்பு. அத்தகைய இயற்கை அமைப்பு பற்றி மணிமேகலை காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனார் கையாண்டுள்ள நிலைக்களன்களை வெளிக்கொணரும் நோக்கில் 'மணிமேகலை காப்பிய உருவாக்கத்தில் இயற்கை' என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் தலைப்பாகத் தேர்வு செய்யப்பட்டது. இத்தலைப்பின் கீழ் வெளிப்படுத்தியுள்ள இயற்கை அமைப்புகளின் சுருக்கம் பின்வருமாறு அமைகிறது, உலகில் உள்ள உயிரினங்களின் வாழ்வியலுக்கு மூலாதாரமாக விளங்குவதில் முதன்மையானது நீராகும். அத்தகைய நீரின் மகத்துவம் மணிமேகலை காப்பியத்தின் வழி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் புகார் நகரில் தேவர்களும், பூதங்களும் தங்கி இருந்த நகர அமைப்புகள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் நகரில் இயற்கையின் ஓவியமாக விளங்கக் கூடிய சோலைகள் பற்றிய அழகியல் சாத்தனாரின் வழி நின்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மணிமேகலை காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை இனங்களின் செயல்பாடுகளும், புகார் நகரில் மாலைப்பொழுது மற்றும் காலைப் பொழுதுகளின் போது நிகழும் செயல்பாடுகளும் காப்பியத்தின் வழி விளக்கப்பட்டுள்ளது. மேலும் சக்கரவாளக் கோட்டத்தின் காட்சி அமைப்புகளும் மணிபல்லவத் தீவின் காட்சி அமைப்புகளும் சாத்தனாரின் வழிநின்று விளக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

இப்பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. இயற்கை இல்லாமல் மனிதனால் வாழ முடியாது. நாம் அருந்துகின்ற நீரிலிருந்து உண்ணுகின்ற உணவு வரை அனைத்தும் இயற்கையில் இருந்தே கிடைக்கிறது. இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம் என்பது இயற்கை பற்றிய அழகிய பொன்மொழி. காப்பியங்களில் இயற்கை வர்ணனைகள் இடம்பெறுவது இயல்பு. இயற்கை இனிமையானது, இன்பம் தருவது. இயற்கை மிக அழகானது, அற்புதமானது. மனதுக்கு இன்பத்தை வழங்கக் கூடியது. இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிரினங்களும் இயற்கையோடு இணைந்த வாழ்வினை மேற்கொள்கிறது. அந்த வகையில் மணிமேகலை காப்பியத்தில் வெளிப்படும் இயற்கை வளங்களை எடுத்துரைக்கும் நோக்கில் அமைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கையின் சிறப்பு

இந்தப் பூமியில் பரந்து விரிந்த நிலப்பரப்பும், கடல்களும், காடுகளும், ஆறுகளும், நீர் வீழ்ச்சிகளும் இயற்கை வளங்களாக அமைந்துள்ளன. அனைத்து உயிரினங்களும் நிலைபெற்று வாழ மழை, காற்று, தீ, நிலம், நீர் போன்ற பஞ்ச பூதங்கள் தேவை. அத்தகைய இயற்கையானது இல்லாவிட்டால் மனித இனமே அழிந்து விடும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இயற்கை காட்சிகள் காப்பியங்களில் காட்சிப்படுத்தப்படுவது காப்பிய இலக்கணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**"மலை கடல் நாடுவளநகர் பருவம்"1**
**(தண்டியலங்காரம், ப-25)**

என்பதில் ஓங்கி உயர்ந்த மலைகளையும், பரந்து விரிந்த கடல்களையும், நாட்டு வளம் மற்றும் நகர் வளங்களையும் கூறுவது காப்பிய மரபாக உள்ளமை புலனாகிறது.

**"பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல்"[2]**
**(தண்டியலங்காரம், ப-25)**

என்பதில் அழகிய பொழிலின் கண் மேவி மகிழ்ந்து ஆடுதலும், நீரில் மேவி ஆடல் புரிந்து மகிழ்தலும் காப்பியங்களில் இயம்புதல் வேண்டும் என்பது புலப்படுகிறது.

**இயற்கை பற்றி வள்ளுவர்**

**"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண்"[3]**
**(திருக்குறள்-742)**

என்ற குறளில் வள்ளுவர் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் கொண்டுள்ளது பாதுகாப்பான நல்ல அரணாகும் என்று இயற்கை பற்றி அழகுறக் கூறுகின்றார்.

**இயற்கை பற்றி தொல்காப்பியர்**

**"இயற்கைப் பொருளை இற்றெனக்கிளத்தல்"[4]**
**(தொல்.சொல்.கிளவியாக்கம், ப-33)**

இஃது இயற்கையாக அமைந்த பொருள்களை அதன் தன்மை மாறுபடாமல் ஒலிக்க வேண்டும் எனக் கூறும் வரி. இவ்வரியில் ஐம்பூதங்களின் தன்மையைத் தொல்காப்பியம் விவரிக்கின்றது.

**புகார் நகரின் நீர் வளம்**

**"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்**
**தான் நிலைதிரியாத் தண்தமிழ் பாவை"[5]**
**(மணி.பதிகம்.ப-17)**

புகழ்மிக்க சிறப்பினை உடைய புகார் நகரில் கோள்கள் திரிந்து மாறி மழை துறந்து கோடை காலம் நீடித்தாலும், காவிரி தன்னுடைய நிலையில் மாறுபடாது பெரு வெள்ளத்தை நல்கி நாட்டில் வளத்தைப் பெருக்குபவள் ஆவாள் என்று காவிரியின் வளம் பற்றி மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**புகார் நகரின் வளமை**

**"மெய்த்திறம் வழங்கு நன்பொருள் வீபெறும்**
**இத்திறம் தத்தம் இயல்பினில் காட்டும்**
**சமயக் கணக்கரும் தம்துறைபோகிய**
**அமயக் கணக்கரும் அகலறிசதகிக்**
**கரந்துரு எய்திய கடவுளாளரும்"[6]**
**(மணிமேகலை. விழாஅறை காதை.ப-26)**

வீடுபேறு என்று சாற்றப்படும் உறுதிப் பொருள்களைப் புலப்படுத்தும் சமயத் தலைவர்களும், காலத்தைக் கணிக்கும் ஜோதிடர்களும், எப்போதும் அகலாது வீற்றிருக்கும் தெய்வங்களும் புகார் நகரில் வீற்றிருப்பர் என்று புகாரின் சிறப்பினைச் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

**இலவந்திகைச் சோலை**

**"பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்**
**இலவந்திகையின் எயிற்புறம் போகின்"[7]**
**(மணி.மலர்வனம் புக்க காதை.ப-44)**

புகார் நகரில் உள்ள ஐவகை சோலைகளில் ஒன்றாக உள்ளது இளவந்திகை சோலையாகும். இச்சோலையானது பலவகையான மலர்களை அடுக்கி வைத்தாற் போன்று நான்கு மரங்கள் பந்தரைப் போன்று நிழல் கொண்டு விளங்குவது என்று சோலையின் வளம் பற்றி சாத்தனார் குறிப்பிடுவது இயற்கை வர்ணனையைப் பற்றியதாகும்.

**உவவனத்தின் தோற்றம்**

**"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்**
**திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்**
**நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்**
**பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்**
**குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்**
**செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண்பகமும்**
**எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி"[8]**
**(மணி.மலர்வனம் புக்க காதை.ப-52)**

புகார் நகரில் உள்ள உவவனத்தில் குரவம், வெண்கடம்பு, குருந்தம், கொன்றை, மஞ்சாடி, மகிழம், வெட்சி, நாரத்தம், சுரபுன்னை, புன்னை, பிடவம் செம்முல்லை, வாழை, வெப்பாலை, மூங்கில், அசோகம், செருந்தி, வேங்கை, சண்பகம், இலவம் ஆகியன விரிந்த மலர்களைப் பரப்பியன போன்று விளங்கிய உவவனம் ஓவியம்

தீட்டப்பட்டதைப் போன்று எழிலுடன் திகழ்ந்ததாகச் சாத்தனார் சோலைகளின் வளமை குறித்து மணிமேகலையில் புலப்படுத்துகிறார்.

**மலர்ச்சோலை மற்றும் பறவை இனங்களைப் பற்றி சுதமதி தெரிவித்தல்**

**"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு**
**இருள்வளைப் பூண்ட மருள்படுபூம் பொழியில்**
**குழல் இசைதும்பிகொளுத்திக் காட்ட**
**மழலைவண்டினம் நல்லியாழ் செய்ய**
**வெயில் நுழைவு அறியாக் குயில் நுழைபொதும்பர்**
**மயிலாடு அரங்கின் மந்திகாள் பனகாண்**
**மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்**
**பாசடைப் பரப்பின் பன்மலர் இடை நின்று**
**ஒரு தனி ஓங்கிய விரைமலர்த் தாமரை**
**அரசஅன்னம் ஆங்கு இனிதுஇருப்பக்**
**கரைநின்றுஆலும் ஒருமணல் தனக்குக்**
**கம்புள் சேவல் கணைக்குரல் முழவாக்**
**கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்"**[9]
**(மணி.மலர்வனம் புக்க காதை.ப-55)**

உவவனம் என்பது சூரியனின் வெண் கதிர்களாகிய படைப் பெருக்கத்திற்கு அஞ்சித் திரண்டெழுந்து இருள் செறிந்திருக்கும். வண்டினங்கள் யாழின் இசையை எழுப்ப, வெயில் நுழைய முடியாத அந்த மலர் வணத்தில் குயில்கள் நுழைந்து செல்லும் இளம் மரங்கள் பலவும் விளங்கின. மகளிரைப் போன்று மயில்கள் ஆடவும், அவற்றை மந்திகள் கண்டு இன்புறுவனவாகும். பளிங்கு போலும் தெளிந்த நீரில் உள்ள பொய்கையில் பசுமையான இலைகள், பரப்பினிடையே தனியாக உயர்ந்து காணப்படும் அரச அன்னமானது இனிது வீற்றிருக்கும். அக்காட்சியைக் கண்ட மயில்கள் கரையிலிருந்து நடனம் புரிய, கம்புள் சேவல் மத்தள ஒலி போன்று குரல் கொடுக்கும். கரிய குயில் இனிய இசையை எழுப்பும். சோலை என்பது மரம் செடி, கொடி பறவை இனங்கள் நீர்நிலைகள் கொண்டு விளங்குவதாகும். இவற்றைக் காப்பியங்களில் காட்சிப்படுத்துவது கவிஞனின் திறத்தை உலகறிய செய்வதாகும். அந்தவகையில் சாத்தனார் சோலைகளின் இயற்கை அழகை நம் கண்முன்னே காட்சிப்படுத்தியிருப்பது மணிமேகலை காப்பியத்தின் பளிங்கறை புக்கக்காதையின் வாயிலாகப் புலப்படுகிறது.

**புகார் நகரின் மாலைப்பொழுது**

**"குணதிசைமருங்கின் நாள்முதிர் மதியமும்**
**குடதிசைமருங்கின் சென்றுவீழ் கதிரும்**
**வெள்ளிவெண் தோட்டொடுபொன்தோடாக**
**எள்ளறுதிருமுகம் பொலியப் பெய்தலும்**
**அன்னம் சேவல் அயர்ந்துவிளையாடிய**
**தன்னுறுபெடையைத் தாமரைஅடக்கப்**
**பூம்பொறிதிதையக் கிழித்துப் பெடைகொள்**
**ஓங்கிடும் தெங்கின் உயர்மடல் ஏற**
**அன்றில் பேடைஅரிக்குரல் அழைஇச்**
**சென்றுவீழ் பொழுதுசேவற்கு இசைப்பப்**
**பவளச் செங்கால் பறவைக் கானத்துக்**
**குவளைமேய்ந்தகுடக்கண் சேதா**
**முலைப்பொழி தீம்பால் எழுதுகள் அவிப்பக்**
**கன்றுநினை குரலமன்று வழிப்படர"10**
**(மணி.மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை.ப-73)**

புகார் நகரின் கீழ்த்திக்கில் முழுமையாகத் தோன்றி வரும் நிலவும், மேற்குத் திக்கில் சென்று மறையும் சூரியனும், வெண்தோடும் பொன் தோடுமாய் இருபுறத்தும் விளங்குகின்ற அப்புகார் பெண்மகள் அத்தகைய இருவகையான ஒளியையும் பெற்று விளங்கினள். நீர் நிலையில் விளையாடியிருந்த பெண் அன்னமானது தாமரை மலரில் படிந்து இருக்க அம்மலர் குவிந்து அதனைத் தன்னகத்தே அடக்கிக் கொள்ள, ஆண் அன்னம் அப்பூவின் இதழ்களைக் கோதிக் கிழித்துத் தன் பெடையை வெளியே கொண்டு வரும். பின்னர் அது தென்னை மரக்கிளையிடத்தே ஏறி அமரும். அன்றில் பறவையானது சூரியன் மறைந்து சென்றதைத் தன் சேவலுக்கு உரைக்கும். பவளம் போலும் சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகள் விளங்கும். முல்லை வனத்தில்

குவளை மலர்களை மேய்ந்த பசுக்கள் தம் கன்றை நினைத்து திரும்ப வழியிடையே அவற்றின் மடிகளிலிருந்து பால் சுரந்து புழுதிகளை அவிக்கும் என்று கூறிய சாத்தனார் புகாரின் மாலை நேரம் வந்த பொழுது நிகழ்ந்தவைகளாக இயற்கையைக் காட்சிப்படுத்துகிறார்.

**சக்கரவாளக் கோட்டத்தின் காட்சிஅமைப்பு**

உவவனத்தின் மேற்குவாயிலின் வழியாகச் சென்றால் சக்கரவாளக் கோட்டத்தை அடையலாம் என்று மணிமேகலா தெய்வம் சுதமதிக்குக் கூறியது. சக்கரவாளகோட்டம் என்பது இறந்தவர்களை புதைப்பதற்கு அமைக்கப்பட்ட ஒருவகையான கோட்டம். அங்கு எழும் ஓசைகளைச் சாத்தனார் குறிப்பிடும் பொழுது,

**"நீள்முக நரியின் தீவிளிக் குரலும்**
**சாவோர்ப் பயிரும் கூகையின் கூவும்**
**புலவூண் பொருந்திய குராலின் குரலும்**
**ஊண்தலை துற்றிய ஆண்டலைக் குரலும்**
**நன்னீர்ப் புணரிநளிகடல் ஓதையின்**
**இன்னா இசையொலி என்று நின்று அறாது**
**தான்றியும் ஒடுவையும் உழுஞ்சிலும் ஓங்கிக்**
**கான்றையும் சூரையும் கள்ளியும் அடர்ந்து**
**காய்பசிக் கடும்பேய் களம்கொண்டு ஈண்டும்"[11]**

**(மணி.சக்கரவாள கோட்டம் உரைத்த காதை.பக்-80-81)**

நரியின் ஊளையும், கோட்டானின் குரலும், பருந்துகளின் தாக்கமும், துன்பத்தின் முழக்கமாக சக்கரவாளக் கோட்டத்தில் காணப்படும். மேலும் தான்றி, ஒடுவை, வாகை முதலிய உயர்ந்த மரங்களும், சூரை, சுள்ளி, கள்ளி ஆகியனவும், பேய்கள் கூட்டமும் அங்கு சேர்ந்திருப்பதாகச் சாத்தனார் கூறுவது அன்றைய சுடுகாட்டின் தோற்றத்தைநம் கண்முன்னே காட்சிப்படுத்தி நம்முள் ஒருவகை அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

**சக்கரவாளக் கோட்டத்தின் தன்மை**

**"சூழ்கடல் வளைஇய ஆழியங் குன்றத்து**
**நடுவு நின்றமேருக் குன்றமும்**
**புடையில் நின்ற எழுவகைக் குன்றமும்**
**நால்வகை மரபின் மாபெருந் தீவும்**
**ஓர் ஈராயிரம் சிற்றிடைத் தீவும்**
**பிறவும் ஆங்கதன் இடவகை உரியன"12**

**(மணி.சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை.ப-90)**

கடலால் சூழப்பட்ட சக்கரவாளம் என்னும் மலைக்கு உட்பட்ட நடுவிடத்தே மேவும் மேருமலையை அடுத்து ஏழு வகையான குல மலைகளும், நான்கு வகையான தீவுகளும், சிறிய தீவுகள் இரண்டாயிரமும் மற்றும் பிற தீவுகளும் உள்ளது சக்கரவாள கோட்டம் என்று சாத்தனார் கடல், மலை, தீவு என இயற்கை அமைவிடங்களைக் காப்பிய வர்ணனைக்கு ஏற்ப குறிப்பிட்டுள்ளமை போற்றுதலுக்கு உரியதாகும்.

**புகாரின் விடியல் பொழுது**

**"புலம்புரிச் சங்கம் பொருளோடுமுழங்கப்**
**புகர்முகவாரணம் நெடுங்கூ விளிப்பப்**
**பொறிமயிர் வாரணம் குறுங்கூவிழிப்பும்**
**பணைநிலைப் புரவிபலஎழுந்துஆலப்**
**பணைநிலைப் புள்ளும்பல எழுந்துஆலப்**
**பூம்பொழில் ஆர்கைப் புள்ளொலி சிறப்ப"[13]**

**(மணி.துயில் எழுப்பிய காதை.பக்-98-99)**

புகார் நகரில் விடியற் பொழுதுகளில் வலம்புரிசங்குகள் முழங்கின. யானைகள் பிளிறச்சேவல்கள் குரல் எழுப்ப, குதிரைகள் எழுந்து ஆரவாரம் செய்ய பறவைகள் மரக்கிளையிலிருந்து ஒலிக்க, மலர் வனங்களில் வண்டுகள் ஒலி செய்ய என இயற்கையின் அழகியலைச் சாத்தனார் நம் மனக்கண் முன் கொண்டு வந்தது அவரின் கவித்திறனைக் காட்டுவதாக உள்ளது.

**மணிபல்லவத்தீவின் இயற்கை வளம்**

**"ஈங்கிவள் இன்னணம் ஆக இருங்கடல்**
**வாங்குதிரை உடுத்த மணி பல்லவத் திடைத்**
**தத்துநீர் அடைக்கரைச் சங்குழுதொடுப்பின்**
**முத்துவிளைகழனி முரிசெம் பவளமொடு**
**விரைமரம் உருட்டும் திரையுலாப் பரப்பின்**
**ஞாழல் ஓங்கிய தாழ்கள் அசும்பின்**

**ஆம்பலும் குவளையும் தாம் புணர்ந்து மயங்கி**
**வண்டுண் மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி**
**முடக்காற் புன்னையும் மடல்பூந் தாழையும்**
**வெயில் வரவுஒழித்த பயில்பூம் பந்தர்"14**
**(மணி.மணிபல்லவத்து துயர் அடைடைந்த காதை.ப-102)**

மணிபல்லவத் தீவில் கடலலைப் புரண்டு விளங்கும் கரையில் சங்கினங்கள் சென்று விளங்கவும், முத்துகள் விளங்கும் இடங்களில் செம்பவளத் துண்டுகள் விளங்கின. சந்தனமரங்கள் அங்கு விளங்கவும், புலிநகக் கொன்றை வளர்ந்துள்ள இடத்தின் கீழ்ச் சேற்றிடையே குவளையும் ஆம்பலும் நெருங்கித் தோன்றும். வண்டுகள் உண்ண மலர்ந்திருக்கும் பூக்கள் மிகுந்து காணப்படப் புன்னை மரங்களும், தாழை மரங்களும் பந்தரிட்டாற் போன்று திகழு, வெண்மணற் பரப்பில் விடப்பட்ட மணிமேகலை கண் விழித்து எழுந்தாள். இவ்வாறாக மணி பல்லவத் தீவின் இயற்கை எழிலைப் படிப்போரின் கண்முன் காட்சிப்படுத்தியிருக்கிறார் காப்பியக் கவிஞரான சாத்தனார்.

**முடிவுரை**

இயற்கையோடு இயைந்து வாழ்வதே மனித வாழ்க்கையின் இன்றியமையாமை ஆகும். அந்த வகையில் மணிமேகலை காப்பியமும் வாழ்வியலோடு இணைந்தது இயற்கை என்பதைப் புலப்படுத்துவதை இவ்வாய்வு கட்டுரை வெளிப்படுத்துகின்றது. ஒரு நாட்டின் வாழ்வாதாரங்களாகச் சொல்லப்பட்ட நிலம், நீர், மழை, கடல், சோலை என அனைத்து இயற்கைக் காட்சிகளும் இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

- உலக உயிரினங்கள் அனைத்தும் இயற்கையோடு இணைந்தே வாழ்கின்றன என்பது எடுத்தாளப்பட்டுள்ளது.
- பெருங்காப்பிய இலக்கணங்களில் இயற்கை பெருகின்ற இடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- இயற்கையின் மகத்துவம் பற்றி தொல்காப்பியரும் திருவள்ளுவரும் குறிப்பிடுகின்ற செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- புகார் நகரின் நீர் வளம் பற்றியும்,நாட்டு வளம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- புகார் நகரில் உள்ள இலவந்திகை சோலை, உவவனம் பற்றியும் அங்கு விளங்கக் கூடிய மரம் செடி கொடிகள் பற்றியும் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன.
- சக்கரவாளக் கோட்டத்தில் இடம் பெறக்கூடிய பறவை இனங்களின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைக்கப் பட்டுள்ளன.
- சக்கரவாளக் கோட்டத்தில் இடம் பெற்றுள்ள மரங்கள், தீவுகள், மலைகள் போன்ற இயற்கை காட்சி அமைப்புகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.
- புகார் நகரில் மாலைபொழுதுகளின் போதும், விடியற் பொழுதுகளின் போதும் காணப்படக்கூடிய இயற்கை நிகழ்வுகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளன.
- மணிபல்லபத் தீவின் இயற்கை வளம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. இராம சுப்பிரமணியம் வ.த.தண்டியலங்காரம் மூலமும் தெளிவுரையும், ப-25. பதிப்பாசிரியர்-பேராசிரியர்
2. மு.சண்முகம் பிள்ளை,முதற் பதிப்பு-ஏப்ரல் 1998, மறுபதிப்பு-2009, முல்லை நிலையம், 9, பாரதிநகர் முதல் தெரு, திநகர், சென்னை-17.
3. மேலது, ப-25.
4. இராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் நாமக்கல் கவிஞர் உரை, ப-377. வ.உ.சி. நூலகம், பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள் ஈடன்டேல் அப்பார்ட்மெண்ட், 1B, முதல் தளம், மயிலாப்பூர், சென்னை-4.
5. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப-33. மணிவாசகர்

பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. முதல் பதிப்பு-15, ஜுன், 1994, நான்காம் பதிப்பு-ஜனவரி, 2009.

6. இராமசுப்பிரமணியம் வ.த.மணிமேகலை மூலமும் உரையும், ப-17. பூம்புகார் பதிப்பகம், 127,
7. பிரகாசம் சாலை, சென்னை-600108. முதற் பதிப்பு- ஏப்ரல் 2010.
8. மேலது, ப-26.
9. மேலது, ப-44.
10. மேலது, ப-52.
11. மேலது, ப-55.
12. மேலது, ப-73.
13. மேலது,பக்-80-81.
14. மேலது, ப-90.
15. மேலது,பக்-98-99.
16. மேலது, ப-102.

# சங்க இலக்கியத்தில் மலர்கள்

**ரா. அர்ச்சனா**
*இளங்கலை கல்வியியல் மாணவி*
*யுனிவர்சல் கல்வியியல் கல்லூரி, வள்ளியூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க கால மக்களின் வாழ்வியல் பெரும்பாலும் இயற்கை சார்ந்ததாகவே இருந்துள்ளது. உணவு, உடை, இருப்பிடம், வாழ்வாதாரம் என அனைத்துமே இயற்கையை மையமிட்டே இருந்துள்ளன. எனவே இலக்கியங்களிலும் இயற்கை அதிகளவில் இடம்பெற்றுள்ளது. சங்ககாலப் புலவர்கள் இயற்கையை வருணிப்பிலும், உவமையாக பயன்படுத்துவதிலும் வல்லமை கொண்டு திகழ்ந்தனர். எனவே, மனிதன் வாழ்வில் இயற்கை பெரும்பங்கு வகிப்பதனால் சங்கப் புலவர்கள் மரங்கள், செடி, கொடிகள், மலர்கள் என பற்பல தாவரங்கள் சார்ந்த பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருக்கும் மலர்களைக் குறித்து ஆராய்வது இக்கட்டுரையாகும்.*

## முன்னுரை

மனிதன் வாழ்வில் உடலிலும் உயிரிலும் கலந்து நிற்பன மலர்கள். மனிதன் பிறப்பது முதல் இறப்பது வரை மலர்களின் தொடர்பு கொண்டே வாழ்கிறான். இயற்கையும் மனிதனையும் பிரித்தல் இயலாது. இயற்கையைச் சார்ந்தே மனிதன் வாழ இயலும். ஊரிலும் மலர் பெயர்கள் பேரிலும் கூட மலர் பெயர்கள் இடம் பெறுகின்றன. நம் வாழ்வில் இரண்டற கலந்துள்ளன மலர்கள். சங்க இலக்கியத்தில் பண்டைய கால மலர்கள் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றைக் குறித்து ஆராய்வது இக்கட்டுரையாகும்.

## மலர்கள்

இயற்கையின் படைப்பில் எல்லா உயிர்களும் தனித்துவமானவை. அவற்றுள் தாவர இனங்களுள் ஒன்றான பூக்களை நோக்குகையில் அவை வடிவம், வண்ணம், பூக்கும் இயல்பு, பூக்கும் காலம் போன்றவற்றால் பல்வேறு தனித்துவங்களைக் கொண்டுள்ளன. அவற்றைக் குறித்து நுட்பமான பதிவுகளை இலக்கியங்கள் நம் கண்முன் கொணர்கின்றது.

சங்க இலக்கியத்துப் பாடல்களிடையே மலர்களைக் குறித்த பாடல்கள் பலவாம். நனை, அரும்பு, போது, மலர், செம்மல் என்ற அத்துணை நிலைகளும், அவற்றின் வண்ணமும் வடிவமும் மணமும் பிற குணமும் பண்டைத் தமிழ்ச் சான்றோரால் தெளிவுற உணரப்பட்டன. எழில்பெற இலக்கிய உருவும் பெற்றன. மலர்களின் மணத்தையும் வண்ணத்தையும் நெஞ்சம் நினையும் பொதே கனிவும் களிப்பும் கொள்வது இயற்கையன்றோ? மலர்களைப் பாடும் முயற்சியின் கண் கவிஞர்கள் காட்டும் ஆர்வத்திலே உள்ளார்ந்த ஒரு பற்றும் சுவையும் ஈடுபாடும் இருக்கிறது. மலர்கள் மலரும் பெரும்பொழுது சிறுபொழுதும் எவ்வெவை என்பது பற்றிப் பண்டைத் தமிழ்ச்சான்றோர் தெளிவான அனுபவ அறிவைப் பெற்றிருந்தனர்.[1]

## மலர்களின் சிறப்பு

மலர்கள் என்றாலே மனதைக் கவர்பவை. ஒரு மரத்தின் இலையோ, கிளையோ, காயோ, விழுதோ, மாந்தரின் மனத்தைக் கவர்வதில்லை. மலர்கள் மட்டுமே தங்கள் மனத்தாலும், நிற பொலிவாலும் மக்கள் மனத்தை மலரச் செய்கின்றன. மனதை மலரச் செயவதால் அது மலரென காரணப்பெயர் ஆயிற்று. மனிதன் பிறந்தது முதல் காதல் வாழ்வு நடத்தி இறப்பது வரை ஒவ்வொரு கோணத்திலும் மலர்கள் பங்குபெறுகின்றன.

### குறிஞ்சிப்பூ

சங்க இலக்கியங்களில் அகத்துறை தழுவிய நூல் குறுந்தொகை. இதன்கண் அக்காலத்து தமிழகத்தில் சிறப்புற வழங்கிய மலர்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சிறப்பாக குறிஞ்சி மலரைப் பற்றித் தலைவி கூறியதாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்:3)**

இப்பாடலில் தலைவன் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு குறிக்கப்படுகிறான். குறிஞ்சி மலர்கள் மலைச்சாரலில் பூப்பது. கரிய காம்புகளை உடையது. 12 ஆண்டுக்கு ஒரு முறையே மலர்வது. இது பூக்கும் ஆண்டில் குடம் குடமாக தேனடைகளில் தேன் தரவல்லது. இக்குறிப்பு கருங்கோல் குறிஞ்சிப் பெருந்தேன் என்ற சொற்றொடர்களில் சுட்டப்பட்டுள்ளது.

### காந்தள் பூ

வண்டு என்ற ஒன்று, மலர் என்ற ஒன்று இல்லை எனவும், உண்டு எனவும், இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. வண்டுகள் உண்ணாத மலர்களும் உண்டு என்று பெரும்புலவர்களின் இலக்கியங்கள் பேசுகின்றன. காந்தள் மலரில் வண்டுகள் மொய்த்தது இல்லை என்பதை,

**"சுரும்புமூசாச் சுடர்ப்பூங் காந்தள்"**
**(திருமுரு:43)**

என திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

### கைதை

கைதை என்ற சொல்லிற்கு,"கைதை-தாழை, வயல்"[2] என்று பொருள் தருகிறது தமிழ்மொழி அகராதி.

**"நீல்நிறப் புன்னைத் தமியொள் கைதை"**
**(நற்:163:8)**

புன்னையின் அருகில் இருக்கும் தாழையைக் குறிப்பிடுமிடத்தில், 'கைதை' என்னும் மலர் இடம் பெற்றுள்ளது. தாழை என்பது தாழம்பூவாகும்.

**"கைதையும் படுசினைப் புலம்பொடு வதியும்"**
**(நற்:178:5)**

இப்பாடலிலும், தாழையைக் குறிக்க 'கைதை' என்னும் சொல்லை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

**"கைதையம் படப்பைஎம் மழுங்க லூரே"**
**(அகம்:100:18)**

தாழை வேலிகளையுடைய அழகிய தோட்டங்களை உடையது எமது ஊர்என்று கூறுமிடத்து, 'கைதை' என்பது தாழை மலரைக் குறித்ததை அறிய முடிகிறது. இம்மலர் 203, 211, 235, 270, 299, 335, 349 ஆகிய பாடல்களிலும் பயின்று வந்துள்ளது.

### தாழை

**"சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை"**
**(நற்:19:2)**

இப்பாடல் வரியில், தாழைப்பூவானது, சுறாமீனின் முகத்தில் உள்ள முட்களைப் போன்று இலையைக் கொண்டுள்ளது என்கிறார் புலவர். இங்கு தாழை மலர் இடம்பெற்றுள்ளது.

### வாழை

வாழை என்னும் பொதுச்சொல் பூ மற்றும் மரத்தைக் குறிக்க பயன்படுத்தப்படும். இங்கு நற்றிணையில் வாழைப்பூவைக் குறிக்க வாழை என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

**"குலைவாய் தோயுங் கொழுமடல் வாழை"**
**(நற்:355:2)**

இப்பாடல் வரியில், 'வாழை' என்னும் சொல் வாழைப்பூவைக் குறிக்கும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

### எருக்கலம் பூ

எருக்கு, நீலம், வெள்ளை என்று இரு நிறங்களில் காணப்படும் சிவபெருமானுக்கு உரிய பூவாகும். பூக்களில் நல்லனவும்,

தீயனவும் உள்ளன. மணமில்லாதது. பாலை நில கூத்தர்கள் பூ கிடைக்காத இடங்களில் எருக்கம் பூவைத் தலையில் சூடுவர்.[3]

**“குவியனது எருக்கின் ததர் பூங்கண்ணி**
**ஆடுஉச் சென்னி தகைப்ப”**

என்ற அகநானூற்று வரிகளால் அறிந்து கொள்ளலாம்.

எருக்கலம் பூவை, “குறுமுகழ் எருக்காங் கண்ணி” என நற்றிணையிலும், “குவியினார் எருக்கு” என கபிலரும், “புல்லெருக்கங் கண்ணி நறிது”[4] என தொல்காப்பியமும் குறிப்பிடுகிறது.

**பீர்**

பீர் என்ற பதத்திற்கு, “பீர் - அச்சம், முலைப்பால், பாலை, பீர்க்கு”[5] என்று விளக்கம் தருகிறது இலக்கியச் சொல்லகராதி.

**“பெருநல் ஆய்கவின் ஒரீஇச் சிறுபீர”**
**(அகம்:57:12)**

தலைவியின் நெற்றி பீர்க்கம் பூவின் நிறத்தில் காணப்படுவதைக் கூறுமிடத்து, ‘பீர்’ என்பது பீர்க்கம்பூவைக் குறிக்கும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

**“பீர்இவர் மலரிற் பசப்பூர்ந் தன்றே”**
**(நற்:197:2)**

தலைவனைப் பிரிந்த தலைவி, பிரிவின் துயரால் அடையும் நோய் பசலையாகும். தலைவியின் நெற்றியில் படர்ந்திருக்கும் பசலை நோய் பீர்க்க மலரைப் போல இருந்தது என்று இப்பாடலில் உவமிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் வரியில், ‘பீர்’ என்பது பீர்க்கம் பூவைக் குறிக்கும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

**குவளை**

குவளை மலர் குளத்தில் பூக்கும். மலைப்பகுதி மகளிர் பறித்துக் குவித்து விளையாடியதாகச் சங்க நூல் குறிப்பிடும் மலர்களில் ஒன்று. குவளை மலரின் மொட்டு மகளிரின் கண்ணுக்கு உவமையாகக் கூறப்படும்.

**“குவளை உண்கண் கலுழப்**
**பசலை யாகா வூங்கலங் கடையே”**
**(குறுந்.339)**

என்னும் குறுந்தொகைப் பாடலில், தலைவன் பலவகை மலர்கள் கலந்த மாலையையணிந்த நின் நல்ல மார்பைத் தழுவுதல் கரிய இதழையுடைய குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்கள் அழும்படி பசலை உண்டாகாத தன் முன்பு மிக இனியதாயியற்று என்னும் பொருளில் குவளை மலர் உவமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**காவி**

‘காவி’ என்ற சொல் கருங்குவளை மலரைக் குறிக்கும் பொருளில் குறுந்தொகைப் பாடல்களில் புலவரால் கையாளப்பட்டுள்ளது.

**“கழிய காவி குற்றும் கடல” (குறு:144:1)**

கழியின்கண் காணப்படும் கருங்குவளை மலர்களைப் பறிக்கும் காட்சியைக் கூறும் போது, ‘காவி’ என்னும் பதம் கருங்குவளை மலரைக் குறித்ததை அறியமுடிகிறது.

**காயா**

காயா என்ற சொல்லிற்கு,“காசாமரம், காசா, அஞ்சனி, அல்லி, காசை, புன்காலி, பூவை” என்று பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி.

**“காயா கொன்றை நெய்தன் முல்லை”**
**(ஐங்:412:1)**

காயா என்பது காயாம்பூ என்னும் நீல வண்ணம் கொண்ட மலர். காடுகளில் காணப்படும் காயா, முல்லை, கொன்றை போன்ற பல மலர்களைக் குறித்து வந்த இப்பாடல் வரியில், காயா என்பது மலரைக் குறிக்கும் பொருளில் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

**“தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு”**
**(ஐங்:420:2)**

தேனை மிகுதியாகக் கொண்டு மலரும் காயா மலர் என்ற வரியில்,‘காயா’ என்பது மலரைக் குறிக்கும் விதமாய் கையாளப்பட்டுள்ளது.

**போது**

'போது' என்ற சொல்லிற்கு, திருமகள் அகராதி, "அரும்பு, மலர், செவ்வி, காலம், பொழுது"[7] என்று பொருள் தருகிறது.

**"தாதுண் வேட்கையிற் போதுதெரிந் தூதா"**
**(நற்:25:11)**

மேற்கண்ட பாடல் வரியில், வண்டானது தேனை உண்ணும் ஆர்வத்தினாலே போதின் மீது விழுகிறது. இங்கு போது என்பது மலரின் படிநிலையைக் குறிக்கும்.

**"நீலப் பைம்போ துளரிப் புதல"**
**(குறு:110:3)**

'நீரிலுள்ள நீலத்தினது பசுமையான போதுகளை மலரச்செய்தது' என்னும் பொருளில் 'போது' என்பது மலரைக் குறித்து வந்துள்ளது.

**"காசி னன்ன போதீன் கொன்றை"**
**(குறு:148:3)**

அரும்பினைக் கொன்றைமரங்கள் தோற்றுவித்தன என்னும் வரியில் கொன்றை மரங்களின் மலர்களைக் குறிக்கும் பொருளில் 'போது' என்னும் பதம் பயின்று வந்துள்ளது.

**"விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்"**
**(குறு:155:2)**

கார்ப்பெயல் வீழப் பெய்யும் மழையால் பூத்த முல்லை மலர்களைக் குறித்து பாடிய புலவர் என்னும் பொருளில் 'போது' என்பது முல்லைப் பூவைக் குறிக்கும் பொருளில் கையாண்டுள்ளார்.

**"ஏதி லாள ரிவண்வரிற் போதிற்"**
**(குறு:191:5)**

தலைவன் பிரிவினால் தலைவி சினமுற்று கூந்தலை மலர்களால் அழகுசெய்வதைத் தவிர்க்கிறாள். இங்கு 'போது' என்பது பூவைக் குறித்தது.

குறுந்தொகைப் பாடலில், தலைவியின் கறுத்த கூந்தலிலே கமழும் மலரைக் குறிக்கும் பொருளில் 'போது' என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**"தளையவிழ் பல்போது கமழும்"**
**(குறு:209:6)**

மலர்கள் மணக்கின்ற கூந்தலையுடைய தலைவி என்ற பாடல் வரியில் 'போது' என்பது மலரைக் குறித்து பயின்று வந்துள்ளது.

**முகை**

முகை என்ற பதத்திற்கு, "அரும்பு, மொட்டு, குகை, கூட்டம், மிடா"[8] என்று பொருள் தருகிறது திருமகள் அகராதி.

**"முகையேர் இலங்கெயிற்று இன்நகை மடந்தை" (நற்108::6)**

இப்பாடலில் தலைவியின் அழகு வருணிக்கப்பட்டுள்ளது. தலைவியின் முல்லை அரும்பு போன்ற பற்களை வருணிக்குமிடத்து, முல்லையரும்பினை உவமைப்படுத்தி ஆசிரியர் கூறுகிறார். எனவே 'முகை' என்பது முல்லையரும்பைக் குறிப்பதாய் அமைவதைக் காணலாம்.

**"மனைநடு மௌவலொடு ஊழ்முகை அவிழக்" (நற்:115:6)**

இப்பாடலில், முற்றத்தில் மலர்கள் மலர்ந்திருந்த காட்சியை வருணிக்கும் போது, முல்லை மொட்டுக்களோடு இதழ் விரிந்த மலர்களும் கிடந்தன என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இங்கு, 'முகை' என்ற பதம் முல்லை மலரையே குறித்தது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்துப் பாடல்களிடையே மலர்கள் குறித்த பதிவுகள் ஆராயப்பட்டன. குறிஞ்சிப்பூ, காந்தள் பூ, கைதை, தாழை, வாழை, எருக்கலம் பூ, பீர், குவளை, காவி, காயா இன்னும் பல மலர்களும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. இதைத் தவிர, போது, முகை போன்ற மலர்களின் பருவ நிலையைக் குறிக்கும் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

**குறிப்புகள்**

1. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.292-293

2. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.525
3. மா.மகாலெட்சுமி (க.ஆ.), சங்க இலக்கியத்தில் மலர்கள், ப.37
4. pookaltrust.blogspot.com
5. இலக்கியச் சொல்லகராதி, ப.153
6. கழகத் தமிழ் அகராதி, ப.325
7. திருமகள் அகராதி, ப.744
8. மேலது, ப.783

**துணைநூற்பட்டியல்**


| | |
|---|---|
| 1. இராமசுப்ரமணியம்.வ.த., | திருமகள் தமிழகராதி, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை, ஐந்தாம் பதிப்பு செப்டம்பர் 2012. |
| 2. குமாரசாமி பிள்ளை அ. சன்னகம், (ப.ஆ.) | இலக்கியச் சொல்லகராதி, புக் சர்விசஸ், சென்னை, |
| 3. செயபால் இரா., (உ.ஆ) | அகநானூறு (தொகுதி 1&2), நியூ செஞ்சுரி புத்தகநிலையம், சென்னை, மூ.ப, பிப்.2007. |
| 4. நாகராசன் வி., (உ.ஆ) | குறுந்தொகை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூ.ப. பிப் .2007. |
| 5. வரதராசன்.மு., | பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு 2018. |
| 6. கழகப்புலவர் குழுவினர் (தொகுப்பு), | கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 101-ஆவது பதிப்பு 2017. |
| 7. மா.மகாலெட்சுமி (க.ஆ.), | சங்க இலக்கியத்தில் மலர்கள், தமிழ்த்துறை, சிவந்தி ஆதித்தார் கல்லூரி, ஆய்த எழுத்து – பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 01.06.2019. |

# வண்ணதாசன் படைப்புகளில் இயற்கைச் செய்திகள்

**ஏ. ஷைனி**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம், சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**

*இன்றைய அவசர உலகத்தில், அறிவியல் அற்புதங்களாலும் நவீனத் தொழில் நுட்பத்தாலும் நாம் எங்கு நோக்கிப் பயணிக்கிறோம் என்று தெரியாமல் திசைமாறிச் சென்று கொண்டிருக்கிறோம். இயற்கை, இயற்கைக்கு அப்பால் என்று இவைகளைக் கடந்து வெகுதொலைவு வந்துவிட்டோம். நம் வாழ்வும், வாழ்க்கை முறையும் செயற்கைத்தனமாகி விட்டது. உணவு, இருப்பிடம், சூழல், நீர், காற்று அனைத்தும் நவீன முறையில் செயற்கையாகிவிட்டது. இயற்கையான ஆரோக்கிய வாழ்வை வாழாமல், செயற்கை ஆரோக்கிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விளைவு? நமது உள்ளமும், உடலும் ஆரோக்கியமான வாழ்வைவிட்டு, மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் நாடுகின்றன. நேரம், செல்வம், அமைதி இழந்து நடமாடுகிறோம்.*

*இதற்கெல்லாம் முடிவு காணும் நோக்கில் நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தாவரங்களின் அற்புத குணங்களை அறிந்து அதனுடன் வாழ்வதை தனது இலக்காகக் கொண்டவர்களே இயற்கை வாழ்வாசிகள் ஆவார். வண்ணதாசன் அவர்கள் தனது சிறுகதைகளில் பல இடங்களில் இயற்கைப் பற்றிய வருணனைகளையும், அவற்றின் பயன்பாடுகளையும், சாமான்ய மக்களின் வாழ்வியலோடு இணைத்துப் பேசியுள்ளார். அவருடைய சிறுகதைகளில் இடம்பெறும் இயற்கை வருணனைகளை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.*

**முன்னுரை**

இயற்கை என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றை குறிப்பிடுகின்றது. ஒரு நாட்டின் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்களை தான் இயற்கை வளம் என அழைக்கிறோம். நாம் வாழும் பூமியானது காடு, நீர், கனிம வளங்கள், மலைகள், புல்வெளிகள், மரங்கள், விலங்குகள், பறவைகள் போன்ற எண்ணற்ற இயற்கை வளங்களால் நிறைந்தவையாகும். இத்தகைய இயற்கை வளங்களைப் பற்றி பேசாத இலக்கியங்களே இல்லை எனலாம். இலக்கியம் பேசும் படைப்பாளர்களும் இயற்கையையும் அதன் வளத்தை சார்ந்த வருணனைகளையும் தமது எழுத்தில் அதிகமாகவே படைத்திருப்பார்கள். அவ்வரிசையில் கவிஞர் வண்ணதாசனும் ஒருவரே. அவருடை சிறுகதைகளில் எங்கெல்லாம் இயற்கை மிகுந்துள்ளதோ அதனை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**கவிஞர் வண்ணதாசன்**

வண்ணதாசன் என்ற புனைப்பெயரிலும், கல்யாண்ஜி என்றும் அழைக்கப்படும் கவிஞரின் இயற்பெயர் சி.கல்யாணசுந்தரம். நவீன தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளரான வண்ணதாசன் தீபம் எனும் இதழிலே முதலில் தனது பயணத்தைத் தொடங்கினார். இவரது சிறுகதைகள் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியச் சிந்தனை உள்ளிட்ட பல முக்கிய விருதுகளைப் பெற்றிருக்கிறார். கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் எனும் அமைப்பு தமிழ் இலக்கியத்திற்கான **'வாழ்நாள் சாதனையாளர்'** விருது வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. மேலும் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டத்தையும் வழங்கியுள்ளது.

வங்கி ஊழியராக இவர் பணி இட மாற்றங்களின் பொருட்டு நகர்ந்து சென்ற இடங்களில் காணும் மனிதர்களே வாழ்க்கை சார்ந்த தேடலின் பாடமாகவும், பாட

பேதங்களாகவும் இருந்துள்ளனர். அவரது வாழ்வில் அவர் சந்தித்த மனிதர்களின் வாழ்வையும், அவர் அறிந்த செய்திகளையும், நேரில் கண்ட நிகழ்வுகளையுமே தனது சிறுகதைகளில் எடுத்துரைத்துள்ளார். ஆனால் வங்கி வாழ்க்கை எவ்விதத்திலும் அவரது இயல்பு வாழ்க்கைக்கு எதிராக இருந்ததில்லை என்பதை அவரது படைப்புகளே நிரூபிக்கின்றன. உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு பெருமூச்சும், பெருவியப்பும் இவருக்கு வெவ்வேறு அனுபவங்களாகின்றன. அவரது அனுபவம் குறித்து சந்தியா பதிப்பகத்தின் உரிமையாளரான சந்தியா நடராஜன் அவர்கள்,

> **"'வாழ்க்கைக்கென்ன அது பாட்டுக்கு என்னென்னவோ சொல்கிறது. வாழ்க்கை மாதிரி அலுக்காத கதை சொல்லி கிடையவே கிடையாது என்று பேசுகிற வண்ணதாசன் கதைகளும் கவிதைகளும் கடிதங்களும் மனித வாழ்க்கையையும் அதன் அனைத்து சாத்தியப்பாடுகளையும் நமக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன. 'தானாக நிகழ்வது தான் தரிசனம்' என்கிற லா.ச.ராவின் வரிகள் வண்ணதாசனின் வாழ்வுக்கும் அவரை வந்தடைகிற வாசகர்களுக்கும் முற்றழலும் பொருந்தும் எனச் சொல்லத் தோன்றுகிறது"1**

என்று வண்ணதாசன் அவருடைய சிறுகதைத் தொகுப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் அவரது எதார்த்தத்தைப் பெருமையுடன் கூறியுள்ளார். மனித உணர்வுகளின் நோக்கை நுண்ணுணர்வைக் கண்டு சொல்கிற விந்தையும், அவர் பதிவு செய்யும் மொழியும் நம்மை வாய்மை நிறைந்த மாய வலைக்குள் தள்ளுகிறது எனலாம். இதில் சிக்கிய கவிஞர்கள் ஏராளம். கவிஞர்களுக்குள் அன்பு விளியாக இவரை 'ஆசான்' என்று அழைக்கிறார் கவிஞர் சாம்ராஜ். 'அப்பா' என்றழைக்கிறார். இவ்வாறு பல கவிஞர்களை தனது வாய்மொழியாகக் கவர்ந்தவரே கவிஞர் வண்ணதாசன்.

**வண்ணதாசன் சிறுகதைகளில் இயற்கை அறிமுகம்**

இறைவன் மனிதனுக்கு அளித்த விலை மதிப்பற்ற அன்பளிப்பே இயற்கையாகும். இயற்கையே மனிதனின் உயிர் மூச்சாகும். அ∴து இல்லையேல் மனிதகுலத்தால் வாழ இயலாது. இயற்கை என்பது நம்மைச் சுற்றியுள்ள பகுத்தறிவுள்ள உயர்திணை, பகுத்தறிவில்லாத அ∴றிணை மட்டுமல்லாமல் உயிரற்ற திணைகளையும் குறிப்பதாகும். செயற்கையாக உருவாக்கப்படாதவையே இயற்கை ஆகும்.

> **"இயற்கை என்ற சொல்லிற்கு இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை என்று பல பொருள்கள் உண்டு"[2]**

என்கிறது கழக அகராதி. வண்ணதாசன் அவர்கள் அவருடைய கதைகளில் அறிமுகப்படுத்தும் கதாப்பாத்திரங்களை இயற்கை அழகுடனே வருணித்துக் கூறுகின்றார். கதாப்பாத்திரங்களை பறவைகள், நிலப்பரப்பு, மழை, காற்று, ஆறு, தோட்டம் என்பன போன்ற இயற்கை வளத்துடனே அறிமுகப்படுத்துவது அவருடைய இயல்பாகும். வயதானவர்களை மழையை ரசித்தபடியே வெற்றிலையை இடிக்கும் பாட்டி என்றும், குழந்தைகளை வீதியில் கோழி குண்டு விளையாடுவதாகவும், சேற்றில் புரளவதாகவும் அறிமுகப்படுத்துவார். திருமணத்திற்கு முன் காதலித்த முன்னாள் காதலர்களை ஆற்று வெள்ளத்தில் சந்திப்பதாக **'அகிலம்'** கதையில் அறிமுகப்படுத்தியிருப்பார். அதிகப்பட்சம் தனிமைகளில் வாழும் வயதானவர்களை மரங்களுடனோ, நீர் நிலைகளுடனோ, அ∴றிணை உயிர்களுடனோ தனது சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்வது சில கதைகளை **'அகிலம்'** சிறுகதைத் தொகுப்பில் இணைத்துள்ளார். அதற்குச் சான்றாக, **'இனிமேல் தான்'** எனும் சிறுகதையில்,

> **"வீட்டு முன் வாசலில் இருந்த செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சியபடி, காலையில் என்ன உணவு சமைக்க**

**வேண்டும் என்ற கேள்விக் கேட்ட அவரை நோக்கி தனது இலைகளை ஆட்டி ஆட்டி பேசும் வேப்பங்கன்றை குளிப்பாட்டும் அண்ணாச்சியை பார்த்து, நிலத்தில் நீரோட்டம் பார்க்கிறவர்கள் ஒரே இடத்தில் டக்கென்று அசையாமல் நிற்பது போல வியப்புடன் நின்றேன்" 3**

எனும் வரிகளில் அண்ணாச்சி என்பவரை தன் வீட்டின் முற்றத்தில் இருக்கும் வேப்பமரத்துடன் உரையாடுவது போல் கதை அமைகிறது. என்ன உரையாடல் என்று கேட்ட அந்த நபரிடம் அண்ணாச்சி கூறிய விளக்கத்திற்கு அவர், மனதிற்குள் அவ்வேப்பங்கன்று பேசுவது நமக்கு இனிமேல் தான் புரியுமோ என்று கேள்வியோடுப் புறப்படுவதாக இக்கதை முடிகிறது. இவ்வாறு பல கதைகளில் செடி, மரம், இலை தழைகளுக்கும் உயிரும், உணர்வும் இருப்பதாக வண்ணதாசன் சிறுகதைப் படைத்துள்ளார்.

**இயற்கைச் சார்ந்த சிறுகதைகள்**

கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், பெயர் தெரியாமல் ஒரு பறவை, மனுஷா மனுஷா, கனிவு, நடுகை, உயரப்பறத்தல், கிருஷ்ணன் வைத்த வீடு, பெய்தலும் ஓய்தலும் ஒளியிலே தெரிவது ஆகிய பத்துச் சிறுகதைத் தொகுதிகளிலும் வண்ணதாசனின் இயற்கை சார்ந்த பதிவுகள் நிரம்பக் கிடைக்கின்றன. வற்றாத ஜீவ நதி தாமிரபரணி, வெட்டப்படும் மரங்கள், அதிகாலையை அழகாக்கும் பூக்கள், வானில் சுதந்திரமாய் பறக்கும் பறவைகள், அடிக்கடிக் கனவில் வரும் யானைகள் இவைகளே வண்ணதாசன் சிறுகதைகளை அழகு செய்வனவாக அமைகின்றன. **'வெளியேற்றம்'** சிறுகதையில் வீட்டுவேலை செய்ய வந்த சிறுமி யாரோ அங்கிருந்த மரத்தை வெட்டுவதைக் கண்டு வருந்துகிறாள். அவளது துடிப்பை வண்ணதாசன்,

**"இது வெட்டப்பட்டு முறிய முறிய அவளுக்குள் இருந்து பறவைகளின் சப்தம் 'சலார்' என்று ஒரே சமயத்தில் வேட்டுக்கு அதிர்ந்து இறக்கையடித்துப் புறப்பட்டு, ஆனால் முடியாமல் முட்டுவது போலத் தோன்றியது"4**

என்கிறார். மேலும் இரைச்சலில்லாத அலுவலகத்தில் சத்தமில்லாமல் ஓடுகிற நதியின் கரையில் நிற்பது போல நிற்கிறேன் எனறும், தாத்தா முகம் பசலிக்கொடி மாதிரி குளிர்ச்சியாக இருந்தது என்றும், டம்ளருக்குள் ஒரு புழுவைப் போல் சேமியா இருந்தது போன்ற உவமைகளைக் கையாண்டுள்ளார் வண்ணதாசன் அவர்கள். **'சூரியன் அருகில் பறக்கிறவர்கள்'** எனும் கதையில் சூரியனுக்கு அருகே பறக்க ஆசைப்பட்டு எரிந்துப் போகிற **'இக்காரஸ்'** எனும் கிரேக்கத் தொன்ம கதையைப் படைத்துள்ளார். **'தாமிரபரணி'** எனும் கதை வண்ணதாசன் அவர்களுடைய சில சிறுகதைகளின் மையப் புள்ளியாகத் திகழ்கிறது. கதைத் தொகுப்பிற்கு வண்ணதாசன் எழுதியுள்ள முன்னுரையில்,

**"நதியும் மணலற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. இதுவரை அது தன் நீர்மையை மணலால் உச்சரித்துக் கொண்டு வந்தது. அள்ளப்பட்ட மணல், கலக்கிற சாயக் கழிவுகளில் மீன்கள் மூச்சுத் திணறுகின்றன. நீந்துகிற மீன்களையல்ல, அதிகாலையில் இறந்து ஒதுங்கியிருக்கிற மீன்களைப் பற்றியே இந்தத் தினத்துக் கவிதை இருக்க முடியும்"[5]**

இவ்வாறு மண் அள்ளும் அசுர எந்திரங்களால் மொட்டையடிக்கப்படும் தாமிரபரணியின் தற்கால நிலையைப் படைப்பாளி வேதனையோடு பதிவு செய்துள்ளார்.

**நாட்டு நடப்பும் அவரது கதையும்**

புறவுலகின் அதிர்வுகள் அவரது அக உலகை உலுக்கும் போது அதைப் படைப்பாக மாற்றுகிறார். 1984 ஆம் ஆண்டு, அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பின், நாட்டில் நடைபெற்ற இனக்கலவரத்தில் இறந்து போனோரின் சடலங்களை ஒப்புமைப்படுத்துகிறார். 'பெயர் தெரியாமல் ஒரு பறவை' கதையில், பெயர் தெரியாமல் இறந்து கிடக்கும் பறவையை வண்ணதாசன் இவ்வாறு வருணிக்கிறார். நாட்டில் நடைபெற்ற துயரமான சம்பவத்தைப் பறவையோடு இணைத்து வண்ணதாசன் சிறுகதையாகப் படைத்தார்.

> **"குழந்தைகளை மனிதர்களையெல்லாம் அடித்து இரவோடிரவாக இப்படி வாசல்களில் நிர்த்தாட்சண்யமின்றி எறிந்து போகிற சமீபத்திய இனக்கலவரங்கள் ஞாபகம் வந்தது. வயலில் அகோரமாய்ச் செத்துக் கிடக்கிற கிழவி, வரிசையாக வயிறூதிக் கிடத்தப்பட்டிருக்கிற சிசுக்களின் வரிசையை அதிகப்படுத்தி ஒருத்தன் கைகளில் ஏந்திவருகிற இன்னொரு மல்லாந்த குழந்தையின் ஊதின வயிற்றுத் தொப்பூழ், இறந்து கிடக்கிற தன் குழந்தையின் உடலைக்கண்டு, அதனருகே உட்கார்ந்து அழுகிற தகப்பனின் கிழிந்த முகம், அப்படிக் கிழிந்த நிலையில் ஒரு கைத்துப்போன சிரிப்புப் போலப் புகைப்படத்தில் பதிவாயிருப்பது எல்லாம் கலந்து அந்த ஒற்றைப் பறவையாகக் குப்புறக் கிடந்தது"[6]**

இவ்வாறு நாட்டில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை தனது எழுத்து மூலம் மக்களுக்கு மறைமுகமாக எடுத்துரைக்கிறார் வண்ணதாசன். இதில் சில நேர்த்திகளும் அடங்கியுள்ளது. அவரது சிறுகதைகளில் செறிவாக்கப் பயன்படுத்தும் உவமைகளில் இயற்கை சார்ந்த உவமைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. வண்ணார்பேட்டையில் தாமிரபரணியின் வட்டப்பாறையை, முங்கிப் படுத்திருக்கும் யானையின் முதுகோடு ஒப்பிட்டு ஆசிரியர் ஓரிடத்தில் ஒப்புமைப்படுத்துகிறார்.

கதைச் சொல்லிகள் எப்போதும் ஒரு தளத்தை, மொழிநடையை தேர்ந்தெடுப்பார்கள். மாறாக வண்ணதாசன் மக்களை, மரங்களை, உயிர்களை தோந்தெடுத்தார். சிந்தித்து கொண்டிருப்பவனை கடந்து செல்லும் **'அணிலை'** அதன் சரசரப்பை, நிலையில்லாமல் அங்கும் இங்கும் அலையும் மனித மனத்தோடு உருவகிக்கிறார். மீண்டும் மீண்டும் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் மண் பரப்பைப் பார்த்துக் கொண்டே கதை எழுதுவதில் வல்லவர். அவருடைய கதைமாந்தர்கள் அனைவரும் சாதனையாளர்கள் அல்ல. சாதாரணமானவர்களும் அவர்களை சுற்றி இருப்பவர்களுமே தான். அவரது கதைகளில் இடம் பெறும் மொத்த வரலாற்றிலும் நிறைந்து இருப்பது இந்த சாமான்யர்களே. இவர்கள் அனைவரும் அறம் கொண்ட மனிதர்களாக இருக்கிறார்கள். இந்த மனங்களே வரலாற்றின் மனசாட்சிகள். இவ்வாறு உலக நடப்புகளையே தனது எழுத்து மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றார் வண்ணதாசன்.

**கல்யாண்ஜி கவிதைகளில் 'இயற்கை' சித்தரிப்பு**

கல்யாண்ஜியின் கவிதைகள் ஆழமான சிந்தனைக்களத்தில் சொற்சித்திரங்களாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. அழகியல் தன்மை மிகுந்தனவாக, இயற்கையைக் கொண்டாடும் தன்மையுடையனவாக அமைகின்றன. தாமிரபரணி மண்ணை விட்டுப்பிரிந்த பிரிவின் வருத்தமும், இயற்கை மீதான தாக்குதல் குறித்த வருத்தமும் அவரது கவிதைகளில் பதிவாகியுள்ளன. சிமெண்ட் ஆலையால் திருநெல்வேலி படும் பாதிப்பினை,

> **'செப்பறைத் தேரிலும்**
> **படியும்**
> **சிமெண்ட் ஆலைப்புழுதி"[7]**

என்று எழுதும் கல்யாண்ஜி இயற்கையின் மீது தொடக்ககாலம் முதலே பாசம்

கொண்டிருந்தார் எனலாம். அது காலப்போக்கில் வளர்ந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அக்கறையாக மாறியது. மொழியின் சுருக்கெழுத்தாக கவிதைகள் படைப்பது அவரது இயல்பாகும். அறுபதுகள் முதலே கல்யாண்ஜி அழகியல் கவிஞராக இயற்கைக் கவிஞராகத் திகழ்ந்ததை அறிய முடிகிறது. புலரி, கல்யாண்ஜி கவிதைகள், முன்பின், அந்நியமற்ற நதி, நிலா பார்த்தல், உறக்கமற்ற மழைத்துளி, கல்யாண்ஜி தேர்ந்தெடுத்த கவிதைகள், இன்னொரு கேவிச் சித்திரம் ஆகிய எட்டுத் தொகுதிகளிலும் இயற்கை சார்ந்த மானுட வளர்ச்சிச் சிந்தனைகளைக் காணமுடிகிறது. அவரது கவிதைகளில் இடம்பெறும் பூக்கள் நிறத்தாலும், மணத்தாலும், தோற்றத்தாலும் உள்ளாந்த ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டே இருக்கின்றன.

**“மார்கழி மாத அதிகாலையில் போனால்**
**பீர்க்கம் பூக்களையும் நட்சத்திரங்களையும்**
**நாமே எட்டிப் பறித்துக் கொள்ளலாம்”8**

என்று எவரும் இரசிக்காத பீர்க்கம்பூவை கவிஞர் வருணித்துக் கூறப்பட்டுள்ளது சிந்திக்கலானது. தமிழர் பண்பாட்டில் அகவாழ்விலும், புறவாழ்விலும் பூக்களே நிறைந்திருக்கின்றன. போர்ச் செய்திகளை அறிவிக்கும் ஊடகமாக வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, ஊழிஞை, நொச்சி போன்ற மலர்களைச் சங்க இலக்கியம் சொல்கிறது. அகப்பாடல்களிலும் பூக்கள் உள்ளுறையும் செய்திகளோடு அழகியல் நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

வண்ணதாசன் ஓவியம் வரைவதிலும் வல்லவரே. கதைகளிலும், கவிதைகளிலும் அவர் விவரிக்கும் காட்சிகள் மற்றும் கதாபாத்திரங்களின் துல்லியமும் நிகழ்விடத்தின் நிறங்களும் நுட்பங்களும் ஓவியனின் கண்களால் பார்த்து எழுதப்பட்ட சொற்சித்திரங்களாகும். வண்ணதாசன் அவர்கள் தான் வரைந்த கோட்டோவியங்களை முகநூலில் பதிவிட்டு வருகிறார். அதில் அவருக்கு தீவிர வாசகரும் உண்டு.

### முடிவுரை

இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடியாக அமைகிறது. ஓர் உயர்ந்த இலக்கை நோக்கி மனிதனை அழைத்துச் செல்கிறது. மானுட வளர்ச்சிக்கான மதிப்பீடுகளைக் காலந்தோறும் வழங்கிக் கொண்டே இருக்கிறது. ‘நான் எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறேன். அவரவரின் பலங்களோடும், பலவீனங்களோடும்’ என்று கூறும் வண்ணதாசனின் படைப்பிலக்கியங்கள் அன்பிலக்கியங்களாக அமைகின்றன. இயற்கையைப் போற்றுதலே மானுட வளர்ச்சியின் முதல்படி என்ற கருத்தியலை வலியுறுத்துகின்றன. யாவற்றையும் இரசிக்கக் கற்றுத்தருகின்றன. வண்ணதாசனின் இயற்கையைப் பாதுகாக்கத் துடிக்கும் உயர்ந்த சிந்தனையே அவரது சிறுகதைகளிலும், கவிதைகளிலும், கட்டுரைகளிலும் இடம்பெற்றுள்ளது என்பதே இவ்வாய்வு கட்டுரையில் கண்டறியப்பட்ட முடிவாகும்.

### தொகுப்புரை

இன்று தமிழ் சிறுகதையின் வளர்ச்சி பன்னாட்டுத் தரத்தோடு ஒப்பிடுமளவிற்கு வளர்ந்துள்ளது. அதில் வண்ணதாசன் கதைகளிலும், கவிதைகளிலும் வாழ்வியல் கூறுகளே நுட்பமாகவும், ஆழமாகவும் வெளிப்படுகிறது எனலாம். அவருடைய கதைக்களம் நமக்கு மிகவும் நெருக்கமானவையாகும். நம்மிடையே எப்பொழுதும் காணப்படும் சாதாரண உலக வாழ்கையை அதன் போக்கில் எதிர்கொள்ளும் மனிதர்கள் அவர்களுக்கிடையிலான உறவுகள், முரண்கள், மோதல்கள், அவை ஏற்படுத்தும் அதிர்வுகள், சோகங்கள் என வட்டச்சூழலில் சிக்குண்ட மனிதப்பாடுகளை, அதன் இயல்பு இயக்கத்தில் கோர்த்துப் புனையும் பண்பு தான் வண்ணதாசனின் படைப்பாளுமையாகும். ஆனால் இவைகளை கூறுகையில், இயற்கையோடு தொடர்புள்ள ஏதேனும் ஓர் பாகுபாட்டை ஒப்பிட்டே கூறுவது அவரது வழக்கமாகும். கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும் போதும், கவிதைகளை

வார்ப்பதிலும் அவர் பல்வேறு இயற்கைக் கூறுகளை தொடர்புப்படுத்துகையில் அவர் கையாளும் மொழி வளம் புதுமையாகும்.

**"சுவை புதிது, பொருள் புதிது,**
**வளம் புதிது, சொற் புதிது, சோதிமிக்க**
**நவகவிதை"[9]**

என்று கவிதைக்குப் பாரதி வகுத்த இலக்கணம் கல்யாண்ஜி படைப்புகளுக்குப் பொருந்தத் தக்கவனவாக உள்ளது என்றால் அது மிகையாகாது. இவ்வாய்வுக் கட்டுரை வண்ணதாசன் பற்றிய குறிப்புகளை எடுத்துரைப்பதோடு மட்டுமின்றி அவரது கதை சாரம்சத்தையும் ஒரு சில சான்றுகளுடன் விளக்குகிறது. மேலும் வண்ணதாசன் சிறந்த கவிஞர், கதாசிரியர் மட்டுமில்லை ஓவியரும் கூட என்பதையும் அறிந்து கொண்டோம். இயற்கை மீது அவருக்கு ஏற்பட்ட ஈர்ப்பை எவ்வாறு தனது எழுத்தின் மூலம் உலகிற்கு எடுத்துரைத்தார் என்பதை தொகுக்கிறது இவ்வாய்வு கட்டுரை.

### அடிக்குறிப்புகள்

1. கமழ்ச்சி - வண்ணதாசன் - முன்னுரை - ப.எண்:(i) - முதற்பதிப்பு 2017 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
2. கழக அகராதி - கா.அப்பாதுரை பிள்ளை - ப.114 - பதிப்பு 2002 - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - சென்னை - 18
3. கமழ்ச்சி - வண்ணதாசன் - முன்னுரை - ப.எண்:130 - முதற்பதிப்பு 2017 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
4. வண்ணதாசன் கதைகள் - வண்ணதாசன் - ப.எண்:344 -முதற்பதிப்பு 2017 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
5. பெய்தலும் ஓய்தலும் - வண்ணதாசன் - ப.எண்:7 - இரண்டாம் பதிப்பு 2019 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
6. வண்ணதாசன் கதைகள் - வண்ணதாசன் - ப.எண்:358 -முதற்பதிப்பு 2017 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
7. கடைசி மழைத்துளி - வண்ணதாசன் - ப.எண்:12- முதற்பதிப்பு 2014 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
8. இன்னொரு கேலிச்சித்திரம் - கல்யாண்ஜி -ப.எண்:71- முதற்பதிப்பு 2022 - சந்தியா பதிப்பகம் - சென்னை - 083
9. பாரதியார் கவிதைகள் (முழுவதும்) - பாரதியார் - ப.எண்: 28 - இரண்டாம் பதிப்பு 2019 - திருமகள் நிலையம் (விசா பப்ளிகேஷன்ஸ்) - சென்னை -17

# நாலடியார் சுட்டும் இயற்கை உவமைகள்

**முனைவர் ஞா. செந்தில்**
*உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி*

**ஆய்வுச் சுருக்கம்**

*பதினெண்கீழ்க்கணக்கு நூலகளில் ஒன்று நாலடியார். இதை எழுதியவர் சமணமுனிவர்கள். இந்நூல் அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பிரித்து அறத்தை வலியுறுத்துகின்றது. அவ்வகையில் அறக்கருத்துகள் மக்கள் மனதில் எளிதில் நிலைத்து நிற்பதற்கு இந்நூலில் பல இலக்கிய நயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவ்வகையில் உவமை நயத்தின் மூலம் இயற்கையோடு இயைந்த அறக்கருத்துகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. அவற்றை வெளிப்படுத்துவதற்கு இக்கட்டுரை முன்னுரை, விழுதூன்றி ஆங்கு, நிழல் (பழு) மரம், புல்நுனி மேல் நீர்த்துளி, வாய்க்கால் அணையர் தொடர்பு, நெல்லினும் சிறந்தது உப்பு, நீரொழியப் பாலுண் குருகு, நீர் கொண்ட வெப்பம் ஆகிய உட்தலைப்புகளுடன் முடிவுரை, கொண்டு அமைகிறது.*

## முன்னுரை

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாகப் பிரித்து வாழ்ந்தனர். அவ்வாழ்க்கையில் களவும் பொய்யும் பெருகி, துன்பத்தில் சிக்குண்டனர். அதனை நெறிப்படுத்தும் பொருட்டு தோன்றிய இலக்கியம்தான் சங்க மருவிய இலக்கியம் இதனைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பர். இவற்றுள் அறம் 11, அகம் 6, புறம் 1 என மூன்றாகப் பகுத்து, நாலடியார் முதல் கைந்நிலை ஈறாக 18 நூல்கள் அமையப்பெற்றுள்ளன. அவற்றுள் அற இலக்கியங்கள் அறத்தை உணர்த்துவதற்குஉவமை, உருவகம், அணி முதலிய பல்வேறு இலக்கிய நயங்கள் பயன்படுத்தியுள்ளன. அந்நயங்களில் சிறப்பாக எடுத்துரைக்கும் தன்மை கொண்டது உவமையாகும். உவமை என்பது தெரிந்த பொருளை வைத்துத் தெரியாத பொருளை விளக்குவதாகும். நாலடியாரில் இயற்கையுடன் இணைந்த உவமைகள் மூலம் அறக்கருத்துகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. அக்கருத்துக்களை ஆராய்ந்து எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## விழுதூன்றி ஆங்கு

வயது முதிர்ந்த ஆலமரத்தைக் கரையான்கள் சிறிது சிறிதாக அரித்துச் சிதைக்கும். இதனால் ஆலமரம் வலிமை இழந்து நிற்கும். புயல்காற்று, பெருமழை முதலிய பேரிடர்கள் ஏற்படும்பொழுது கீழே விழாமல் தாங்கிப் பிடிப்பது அதன் விழுதுகள் ஆகும். அதுபோல பெற்றோர்கள் வயது முதிர்வின் காரணமாக நோயிற்று துன்பப்படுவார்கள். அச்சமயத்தில் பிள்ளைகள் துணை நின்று அந்த நோயினைப் போக்கி அவர்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதை

> **சிதலை தினப்பட்ட ஆல மரத்தை**
> **மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்**
> **குதலைமை தந்தைகண் தோன்றில் தான்பெற்ற**
> **புதல்வன் மறைப்பக் கெடும்.**[1]

என்ற பாடல் அறிவுறுத்துகிறது. இதனை ஆராய்ந்து நோக்கும் பொழுது அன்றையச் சூழலில் பெற்றோர்களைப் பாதுகாக்க முடியாமல் தனியாக இல்லத்திலே விட்டுச் சென்று இருக்கிறார்கள். அன்றைய நிலையைத் தகர்த்தெரிந்து நல்வழி படுத்துவதற்காக, ஒவ்வொரு பிள்ளைகளின் மனதிலும் ஆலம் விழுதுகள் போல் பெற்றோர்களைத் தாங்க வேண்டும் என்பதை இயற்கைச் சார்ந்த உவமையுடன் வலியுறுத்திருப்பது இங்குப் புலனாகின்றது. மரம் முதலில் விழுதுகளைத் தாங்கும் பின்பு விழுதுகள் மரத்தைத் தாங்கும் என்று உறவுகளைக் குறித்துச் சொல்ல வந்த கவிஞர் கண்ணதாசன்

**ஆலம் விழுதுகள் போல் உறவுகள்**
**ஆயிரம் வந்ததுமென்ன**
**வேறென நீ இருந்தால் அதில் நான்**
**விழுந்து விடாமல் இருப்பேன்**[2]

என்று கவிதை எழுதிருப்பது இங்கு உய்த்துணர உணரமுடிகின்றது.

### நிழல் (பழு) மரம்

கோடைக்காலத்தில் வெப்பம் கடுமையாக இருக்கும். அவ்வெப்பத்தின் கடுமைத்தாங்க முடியாமல் பல உயிரினங்கள் தவிக்கும். அந்தத் தவிப்பினை போக்கி பாதுகாக்கும் இதமான நிழல் மரம் போல தன் உற்ற உறவினர் துன்பப்படும் காலத்தில் பாதுகாக்க வேண்டும். பசியுடன் தன்னைத் தேடிவரும் பல்வேறு உயிரினங்களுக்கு, நன்கு முற்றிய பழங்கொடுத்துப் பசியினைப் போக்கும் பழுத்த மரம் போல பலர் பயனுற உழைத்து கொடுத்து வாழவேண்டும். அவ்வாறு வாழ்வது ஒவ்வொரு ஆண்மகனின் கடமையாகும் என்பதை,

**அழன்மண்டு பொழுதின் அடைந்தவர்கட் கெல்லாம்**
**நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் - பழுமரம்போல்**
**பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே**
**நல்லாண் மகற்கு கடன்**[3]

என்னும் பாடல் விளக்குகிறது. எனவே ஒவ்வொரு மனிதனும் தன் சுற்றத்தை உற்ற சமயத்தில் தாங்கி, பசியினைப் போக்கிப் பாதுகாக்க வேண்டும் என்பதை இந்த உவமையின் மூலம் வலியுறுத்துகின்றது.

### புல் நுனிமேல் நீர்த்துளி

அதிகாலைப் பொழுதில் புற்களின் நுனிமேல் பனித்துளிகள் படர்ந்திருக்கும். அப்பனித்துளி கதிரவனின் கதிர் பட்டு, மெல்ல மெல்ல கரைந்து காணாமல் போகும் அதுபோல இந்த உடலும் மெல்ல மெல்ல பருவங்களை அடைந்து இறுதியில் காணாமல் சிதைந்துப் போகும் என்பதை உவமைத்துக் காட்டுகிறார். எனவே உடம்பில் உயிர் நிலைத்திருக்கும் பொழுதே மற்றவருக்கு அறச்செயலை ஆற்றி விடவேண்டும் என்பதை,

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறவினை!**[4]

என்ற பாடல் விளக்குகிறது. எனவே பனித்துளிகள் போல உடல்கள் சிதையும் என்பது தெளிவாகிறது. இதே உவமையை வேறொரு பாடலில் நல்லினம் சேர்தல் என்ற அறச்செயலை வலியுறுத்துவதற்கு அறியாதப் பருவத்தில் அடங்காதவரோடு சேர்ந்து, பிறருக்கு இழைத்தப் பாவச்செயல்கள் அனைத்தும், நல்லவர்களுடன் சேர்ந்து நற்செயல்களை ஆற்றுகின்றப் பொழுது அந்தப் பாவச்செயல்கள் அனைத்தும் மெல்ல மறைந்து போகும் என்பதை

**அறியாப் பருவத்து அடங்காரொடு ஒன்றி**
**நெறியல்ல செய்து ஒழுகியவ்வும், நெறியறிந்த**
**நற்சார்வு சாரக் கெடுமே - வெயில் முருகப்**
**புற்பனிப் பற்று விட்டாங்கு**[5]

என்ற பாடல் அறிவுறுத்துகின்றது. எனவே தீயவர்களோடு சேர்ந்து, தவறு செய்து விட்டோம் என்று வருந்துவதை விட, செய்தத் தவறை உணர்ந்து, நல்லவர்களோடு சேர்ந்து நற்செயல்கள் ஆற்ற வேண்டும் என்பதை இந்த இயற்கைச் சார்ந்த உவமைவழி புலனாகிறது. மேற்கூறிய இரண்டு பாடல்களிலும் புல் நுனிமேல் பனித்துளி என்ற இயற்கை சார்ந்த உவமை, இருவேறு அறக்கருத்துகளை வலியுறுத்துகின்றன. ஒன்று யாக்கை நிலையாமையைக் குறித்து வலியுறுத்திருப்பது, இயல்பான தன்மையுடன் சரியாகப் பொருந்திருக்கிறது. இரண்டாவது தன்னிடம் உள்ளத் தீயப் பழக்கங்களைப் போக்கிக் கொள்வதற்கு, தூய்மையான பனித்துளியைப் புலவர் பயன்படுத்திருப்பது முரணாக உள்ளது. ஏனென்றால் தூய்மையின் அடையாளமாகப் பனித்துளியைக் கருதுகின்ற இந்த காலகட்டத்தில் தீமையின் அடையாளமாகப் புலவர் பயன்படுத்தி இருப்பது பல்வேறு ஆய்வுக்கு வழிவகுக்கிறது. சமகாலத்தில் தோன்றிய திருக்குறளின்

பெருமையை உணர்த்த வந்த திருவள்ளுவ மாலையும்

**திணையளவு போதாச் சிறுபுல் நீர்நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால்**[6]

என்ற பாடலின் மூலம் பனிநீர் குறித்த உவமையை எடுத்துரைக்கிறது. புல்லின் நுனியில் இருக்கும் பனிநீர் திணையின் அளவைவிட சிறியதாக இருக்கும் ஆனால் அதனுள் நீண்டு வளர்ந்திருக்கும் பனைமரத்தை முழுவதும் தன்னில் தெளிவாகக் காட்டும் தன்மை உடையது. அத்தகு தூய்மையும் தெளிவும் உடையது திருக்குறள் என்பது இந்த உவமையின் மூலம் புலனாகிறது.

**வாய்க்கால் அணையர் தொடர்பு**

நாயின் கால்கள் இணைந்திருக்கும் சிறுவிரல்கள் போல நெருக்கம் உடைய நட்புறவாக இருந்தாலும் ஈயின் கால் அளவு உதவி செய்யாதவர் நட்பினால் எந்தப் பயனும் இல்லை. ஆனால் வயல்களை நன்றாகப் பயிர் செய்வதற்குத் தேவையான நீரைத் தூரத்தில் இருந்து எடுத்து வருவது வாய்க்காலாகும். வாய்க்கால் போன்ற நட்பு உடையவர்கள் தூரத்தில் இருந்தாலும் தேடிச்சென்று நட்பு பாராட்ட வேண்டும் என்பதை

**நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்**
**ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?**
**சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைவிக்கும்**
**வாய்க்கால் அணையார் தொடர்பு**[7]

என்ற பாடல் வலியுறுத்துகிறது. எனவே வயல்களால் வாய்க்காலுக்கு எந்தப் பயனும் இல்லை என்றாலும் வயலுக்குத் தேவையான நீர்த் தூரத்திலிருந்தில் இருந்தாலும் பாதுகாப்பாக வயலில் சேர்க்க உதவுவது வாய்க்காலாகும். அத்தகு வாய்க்கால் போன்று எதிர்ப்பார்ப்பு இல்லாத உறவைத்தேடிச் சென்று நட்புப்பாரட்ட வேண்டும் என்பதை இந்த இயற்கைவழி உவமை பகுத்தறியத் தூண்டுகின்றது.

**நெல்லினும் சிறந்தது உப்பு**

களர்நிலம் இழிவான தன்மையுடையது. அந்நிலத்தினுடைய மண்ணில் உப்பு மிகுதியாக இருக்கும். அம்மண்ணைப் பதப்படுத்திச் சுண்டக்காய்ச்சி அதிலிருந்து உப்பு எடுப்பர். விளைநிலத்தின் உயர்ந்த விழுமியமாக விளங்குவது நெல்லாகும். கற்றறிந்த சான்றோர் பெருமக்கள், விளைநிலத்தின் உயர்ந்த விழுமியமான, நெல்லைக் காட்டிலும் களர் நிலத்தில் விளைந்த உப்பைச் சிறந்த விழுமியமாகக் கொள்வர். அதுபோல கடைநிலத்தோர் ஆயினும் கல்விக் கற்றறோரைத் தலைநிலத்தோராக வைத்துப் போற்றுவர் என்பதை

**களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்**
**விளைநிலத்து நெல்லின் விழுமியதாகக் கொள்வர்**
**கடைநிலத்தோ ராயினும் கற்றோரைத்**
**தலைநிலத்து வைக்கப் படும்**[8]

என்ற பாடல் விளக்கிக் காட்டுகிறது. எனவே கல்விக் கற்பதன் வழியாகத் தான் ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெரிந்து, சமத்துவத்தை நிலைநிறுத்தி, மேன்மையுற வாழ முடியும் என்பதை இந்தப் பாடலின் உவமை வலியுறுத்துகின்றது. இதேக் கருத்தினைப் புறநானூற்று பாடலும் வலியுறுத்தியுள்ளது. ஒரு தாய் பல பிள்ளைகளைப் பெற்றாலும் கல்விக் கற்றப் பிள்ளையிடத்தில் மிகுதியான அன்பினைக் காட்டுவாள். அரசனும் கற்றறிந்தவரின் பரிந்துரையைப் பின்பற்றிச் செல்வர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வகைப் பிரிவுகளில் தாழ்க்குலத்தில் பிறந்த ஒருவன் கல்விக் கற்றால், அவரிடத்தில் உயர்க் குலத்தில் பிறந்த யாவரும் சென்றுக் கல்விக் கற்பர் என்பதை

**அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே**[9]

என்ற பாடல் வரிகள் அன்பு, அதிகாரம், சமத்துவம் முதலியன கல்விக் கற்பதன்

மூலம் தான் பெற முடியும் என்பதை வலியுறுத்திருப்பது உணரமுடிகின்றது.

**நீரொழியப் பாலுண் குருகு**

கல்வியை அளவிடுவதற்கு அரியது, எல்லையில்லா முடிவற்றது, கல்வியால் பெறுகின்ற அறிவுக்கு அளவில்லை ஆனால் கல்விக் கற்பவரின் வாழ் நாட்கள் மிகக் குறைவு. சற்று அமைதியாக நினைத்துப் பார்த்தால், வாழ்நாட்களில் நோய்கள் பல சூழ்ந்து அழித்து விடுகின்றன. பாலுடன் கலந்த நீரினை அன்னப்பறவையிடம் வைத்தால் நீரினை நீக்கிப் பாலினை மட்டும் அருந்தும் அதுபோல வாழ்கின்ற காலத்தில் நல்ல நல்ல நூல்களைத் தேடித்தேடி ஆராய்ந்து கற்க வேண்டும் என்பதை

> **கல்வி கரையில; கற்பவர் நாள்சில;**
> **மெல்ல நினைக்கின் பிணிபல; - தெள்ளிதின்**
> **ஆராய்ந்து தமையுடைய கற்பவே நீரொழியப்**
> **பாலுண் குருகின் தெரிந்து** [10]

என்ற பாடல் மூலம் வலியுறுத்துகிறது. எனவே கற்பது எதுவாக இருந்தாலும் அதிலிருந்து நல்ல கருத்துகளை மட்டும் எடுத்துக்கொண்டு, தீயகருத்துகளை விட்டு விட வேண்டும் என்பதை இந்த உவமையின் வழியாக புலனாகின்றது.

**நீர் கொண்ட வெப்பம்**

நீர் எப்பொழுதும் குளிர்ந்த தண்மையாக இருப்பதால் அதனைத் தண்ணீர் என்பர். அந்நீரில் கதிரவனின் வெப்பத்தால் சூடேரும். கதிரவன் மறைந்தால் சூடேரியநீர் தானாக குளிரும் அதுபோல கற்றறிந்த சான்றோர் பெருமக்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக சினம் கொண்டால் சிறிது நேரத்தில் தணிந்து மன்னித்து விடுவார்கள். ஆனால் அறிவில் கடையோர்கள் சினம் கொண்டால் எவ்வளவு நாட்கள் கடந்தாலும் மறக்காமல் நினைவில் வைத்து பழி தீர்ப்பர் என்பதை,

> **நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி**
> **கெடுங்காலம் இன்றிப் பரக்கும் - அடுங்காலை**
> **நீர்கொண்ட வெப்பம் போல் தானே தணியும்**
> **சீர் கொண்ட சான்றோர் சினம்**[11]

என்னும் பாடல் விளக்குகின்றது. இதனை ஆராய்ந்து நோக்குகின்றபொழுது, பிறர் இன்னல் ஏற்படுத்தும் பொழுது சினம் ஏற்படும். அச்சினம் சிறிது நேரத்தில் தணிந்து மன்னிக்கப்பட வேண்டும். அவ்வாறு மன்னிப்பவர் கல்லாதவர் ஆயினும் சான்றோர் ஆவர். மன்னிக்காமல் பழி வாங்குபவர் கற்றறிந்த சான்றோர் ஆயினும் கல்லாதவரில் கடையர் ஆவர் என்பதை உவமை உணர்த்துகின்றது.

**முடிவுரை**

அறம் உணர்த்தும் நூல்களில், சிறப்பிடம் பெற்று விளங்குவதில் ஒன்று நாலடியாராகும். அவ்வகையில் இயற்கையோடு இயைந்த நிகழ்வுகளை ஒப்பிட்டு அறக்கருத்துக்களை மென்மையாக வலியுறுத்தும் பாங்கினை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. நாலடியார், பாடல்-197, புலியூர்க்கேசிகன் தெளிவுரை, சராதா பதிப்பகம், மு.ப. டிசம்பர் 2010
2. கவிஞர் கண்ணதாசன், “வியட்நாம் வீடு” திரைப்படப் பாடல்
3. நாலடியார், பாடல் - 202 புலியூர்க்கேசிகன் தெளிவுரை, சராதா பதிப்பகம், மு.ப. டிசம்பர்2010
4. மேலது, பாடல்-29:1,2
5. மேலது, பாடல்-171
6. திருவள்ளுவமாலை, கபிலர் பாடியது.
7. நாலடியார், பாடல்-218 புலியூர்க்கேசிகன் தெளிவுரை, சராதா பதிப்பகம்,மு.ப. டிசம்பர் 2010
8. மேலது, பாடல்-133
9. புறநானூறு பாடல்-183:6,10
10. நாலடியார்பாடல்-135:11 புலியூர்க்கேசிகன் தெளிவுரை, சராதா பதிப்பகம், மு.ப. டிசம்பர் 2010
11. மேலது, பாடல்-68

# குறுந்தொகையில் இயற்கை வளமும் வருணனையும்

**முனைவர் அ. ம. ஜெ. ர.ஃ.பீக் பாஷா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி), மேல்விசாரம், இராணிப்பேட்டை*

**ஆய்வுச்சுருக்கம்**
*சங்கப்பாடல்கள் மனிதப் பண்புகளையும் வாழ்வியலில் பின்பற்றக் கூடிய முறைகளையும் போதிக்கின்றன. மனிதன் பழங்காலந் தொட்டே சூழலை அனுபவப்பூர்வமாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். அதில் அதிக கவனமும் செலுத்தியிருக்கிறான். நாகரீகம் வளராத காலந்தொட்டே ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்கு இயற்கையின் ஆற்றலைப் பெற்றிருந்தான். ஒவ்வொரு காலகட்டத்திலும் மனித சமுதாயத்தின் நாகரிக்களம் பெரும் சிக்கல்களைக் கொண்டுள்ளது. அதிலிருந்து தீர்வு பெற்ற அறிவு படிமலர்ச்சி எய்துகிறது. அது இலக்கியங்கள் வாயிலாகக் காலம் கடந்த ஆவணங்களாகப் பரிமாணம் கொண்டுள்ளது என்றே கூற வேண்டும். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இயற்கை ஒன்றியிருந்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழந்தமிழர்கள் இயற்கையை தெய்வமாகப் போற்றினர். காரணம் இயற்கை அன்னை நல்வினை செய்வாள் என்ற நம்பிக்கை அவர்களிடத்து இருந்தது. இவற்றின்வழி இறைவன் இயற்கையில் உறைகிறான் என்பது புலனாகிறது. சங்க இலக்கியங்களுள் தொகை நூலான குறுந்தொகையில் இயற்கை மிகுந்துள்ளதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**முன்னுரை**

தமிழர்கள் இயற்கை மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். இயற்கையை மையப்படுத்தியே இவ்வுலகம் இயங்குவதால் அவர்கள் இயற்கை சார்ந்த வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பழந்தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதிகளை அணுஅணுவாக இரசித்து வாழ்ந்துள்ளனர். தாங்கள் வாழ்ந்த பகுதிகளின் கருப்பொருள், உரிப்பொருள் இவற்றின் அடிப்படையில் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். சங்க கால மக்கள் வானம், மழை, ஞாயிறு, தாவரங்கள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றோடு இயைந்த வாழ்க்கையைப் பாடியுள்ளனர். தொகை நூல்களுள் நல்ல என்ற அடைமொழி கொண்ட குறுந்தொகையில் பழந்தமிழர்கள் இயற்கை மீது கொண்ட பார்வையை விளக்க முற்படுவதே இக்கட்டுரையின் அம்சமாகும்.

**இயற்கை**

உயிரினங்கள் இயற்கையாகத் தோன்றியது. மனித இனம், பிற விலங்கினங்கள், தாவரங்கள் போன்றவை ஒன்றோடொன்று தொடர்புடையன. மனித உறவையும் செயல்படுத்தும் ஆற்றுல் இயற்கையின் இன்னொரு நிலையாகக் காண்பதுண்டு. ஒரு வரையறைக்குள் அடக்க இயலாததே இயற்கை. இது இறைவனை தவிர வேறு எவராலும் படைக்கப்பட்டதல்ல. இயல்பாகவே உள்ளது. எல்லா இலக்கிய வகைகளையும் தொல்காப்பியத்தில் அடக்கிக் காட்டுதல் மரபு. தொல்காப்பியம் இயற்கையை,

> **“இயற்கை பொருளை இற்றெனக் கிளத்தல்”**[1]

என்கிறது. இயற்கையானது பண்டு, இயல்பு என்ற பொருளிலேயே எடுத்தாளப்பட்டுள்ளது. இயற்கை குறித்து பலவாறாகச் சொல்லிக் கொண்டே போகலாம். இயற்கை அழகு என்றும் அது கடவுள் என்றும் கூறப்படுகிறது. இயற்கை என்பது,

> **“கையால் செய்யப்படுவது செயற்கை கையால்**
> **செய்யப்படாதது இயற்கை மலையும் ஆறும்**
> **காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன?**

**ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால்**

**செய்யப்பட்டன...?''[2]**

எனும் இக்கூற்றின்வழி இறைவனால் மட்டுமே இயற்கையை படைக்க முடியும். இயற்கையும் வாழ்க்கையும் ஒன்று எனக் கருதி இயற்கையோடியைந்த வாழ்வை பழந்தமிழர்கள் வாழ்ந்தனர். இதனை,

**''தமிழரின் வாழ்வு இயற்கையில் தோன்றி இயற்கையில் வளர்ந்து இயற்கையில் இன்புற்றது''[3]**

எனக் கூறுவதின் மூலமாக மனிதனுக்கு இயற்கை இன்றியமையாதது என்பதை உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

**பல்லுயிர் ஓம்புதல்**

ஓம்புதல் என்பதற்கு பாதுகாத்தல் என்பது பொருள். அது மட்டுமல்லாது உயிர் நேயத்தோடு ஏனைய உயிர்களைப் போற்றுவதுமாகும். உள்ள உணவை பலரோடு பங்கிட்டு உண்ண வேண்டும் என்ற உயரிய கருத்து உள்ளது. இதனை,

**''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை''[4]**

எனும் குறள் எடுத்துரைக்கிறது. இங்கு பல்லுயிர் என்று உயிர் ஓம்புலை நாகரிக சமூகத்தின் தலைமை குணமாகக் கருதப்படுகிறது. இத்தலைமை குணத்தையே வள்ளுவம் கூறியுள்ளது.

புல உயிர்கள் உயிர் வாழ காரணகர்த்தாவாக இருப்பது இயற்கை. பல்வேறு வகையான செடி, கொடி, விலங்கினங்கள், தாவரங்கள் போன்ற உயிரினங்களாலேயே ஒரு நாடு செழுமையடைகிறது. ஒரே வகையான தாவரம் இருப்பின் அது தோட்டமாகிறது. மந்தை என்பதற்கு ஒரே வகையான விலங்குகள் காரணமாகின்றன. பல வகையான உயிரினங்கள் இருப்பின் அது செறிவான பல்லுயிர்த் தொகுப்பாக விளங்கும். ஒரு சோலையில் நாம் பயணித்தால் அங்கு பலவகையான செடிகள், கொடிகள், பூக்கள் எனத் தாவர வகைகள் நிறைந்திருக்கும். உயிரினங்களான எறும்புகள், சிலந்திகள், பட்டாம் பூச்சிகள், சில் வண்டுகள் போன்றவை அங்கு வாழும். அதுபோன்று முயல்கள், நரிகள், மான்கள் என விலங்கினங்களும் காணப்படுகின்றன. இவ்வாறாக, வன விலங்குகள் இயல்பாகத் திரிந்ததை அன்றைய புலவர்கள் குறுந்தொகையில் பதிவு செய்துள்ளனர். இதன்வழி பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

பாலை நிலத்தில் பிடி எனும் பெண் யானை நீர் வேண்டி தவிக்கிறது. இதையறிந்த வேழமானது தன் இணைக்காக யா என்ற மரத்திலிருந்து பட்டைகளை உரிக்கிறது. அதை கசக்கி அதிலிருந்து வரும் நீரை தன் இணைக்கு கொடுப்பதாக ஆய்வறிஞர்கள் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. வலிமை மிக்க வேழத்தையே பிடி யானைகள் விரும்புவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கருத்தை பின்வரும் பாடலின்வழி உணரலாம்.

**''பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**

**மென்சினை யாஅம் பொளிக்கும்''[5]**

விலங்கு வகையில் புலி குறிக்கத்தகுந்தது. இதன் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்துள்ளது என்றே கூற வேண்டும். புலியினம் காணப்படின் பிற விலங்கினங்களான யானை, காட்டெருமை, நரி, மானினங்கள் என இருப்பதுண்டு. தாவர வகைகள், புல்வெளிகள், நீராதாரங்கள், சுனைகள் அதிகமாக இருக்குமென உயிரியியல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். புலிகள் குறித்து பல இடங்களில் குறுந்தொகை பேசுகிறது. சிவந்த கண்களையுடைய பெரிய புலி ஊர் மன்றத்தின்கண் உள்ள மரையாவானது நீங்க அதன் ஆணைக் கொன்று செவ்விய கண்களையுடைய கரிய புலி முழங்கும். இதன்வழி புலிகளோடு மக்கள் மோதலின்றி வாழ்ந்துள்ளது விளங்கும். மேலும் புலிகள் ஊருக்குள் வருவது இயல்பாகவே இருந்துள்ளன. இதனை,

**“.........................**
**.........................**
**மன்ற மரையா இரிய, ஏறுஅட்டுச்**
**செங்கண் இரும்புலி குழுமும் அதனால்**
**.........................**
**.........................”[6]**

எனும் பாடலின் வழி அறியலாம்.

**மலர்கள்**

மலர், பறவை, விலங்கு, மரம் போன்றவை ஒவ்வொரு நாட்டிற்கும் அடையாளங்களாகத் திகழ்கின்றன. நமது தேசத்திற்கு தேசிய மலராகத் தாமரை விளங்குகிறது. தேசிய பறவையாக மயிலும் தேசிய விலங்காக புலியும் காணப்படுகிறது. ஆலம் தேசிய மரமாக உள்ளது. இது போன்று மாநிலத்திற்கென மாநில மலராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் தமிழகத்திற்கு செங்காந்தள் மலர் அடையாளமாக உள்ளது. இது குறித்து,

**“நுதல் பசப்பு இவர்ந்து திதிலை வாடி**
**.............................**
**.............................**
**நன்மா மேனி அழிபடர் நிலையே”[7]**

வரிகள் விளக்கி நிற்கின்றன. பல வரிகளை உடைய பாம்பினது படம் ஒடுங்கியதைப் போலக் குவிந்து, கீழ்க்காற்றால் வீழ்த்தப்பட்ட ஒளி பொருந்திய செங்காந்தள் மலர் பாறையின் மேல், கவிழ்ந்து கிடக்கும். தனித்தன்மை வாய்ந்த இம்மண்ணுக்குரிய அச்செங்காந்தள் மலரின் சிறப்பை உணர்ந்த நம் முன்னோர்கள் இவ்வாறாகக் கூறியுள்ளார்கள் என்பதை உற்று நோக்குதற்குரியது. இதனை எடுத்துரைக்கும் வகையில்,

**“பொருத யானைப் புகார்முகங் கடுப்ப**
**.............................**
**.............................**
**இன்னா திருந்தவிச் சிறுகுடி யோரே”[8]**
**(குறுந்தொகை - 284)**

பாடல் அமைந்துள்ளது. குறுந்தொகையில் இயற்கைச் சூழலின் வாயிலாக உரிப்பொருள் உணர்த்தப்படுவது பரவலாக இருப்பதை அறியலாம். குறிஞ்சிப் பூவின் பயன்பாட்டை,

**“கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”[9]**
**“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்”[10]**

என்பதன் வழி மலர்கள் பற்றிய செய்திகள் மிகுந்திருப்பதை அறியலாம். பலவகையான மலர்கள் இருந்துள்ளதும், அம்மலர்கள் உதிர்வதும் அவற்றில் வண்டுகள் ஊடுருவி செல்வதையும் உவமை நயத்தோடு அகநானூற்றில் இடம் பெற்றிருப்பதும் குறிக்கத்தகுந்தது. அதனை,

**“... ... ... ... ... ... ... ... ... ... ... ..**
**... ...**
**குறும்புதற் பிடவின் நெடுங்கால் அலரி**
**செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப**
**......... ... ... ... ... ... ... ... ... ...**
**...”[11]**

எனும் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

**ஞாயிறு, மலை குறித்த செய்திகள்**

தலைவனோடு உடன்போக்கில் செல்ல தலைவி விரும்புகிறாள். அவள் செல்லும் வழியானது பாலை நிலமாகும். அங்கு சூரியனின் வெம்மை சுட்டெரிக்கும். தலைவி அவ்வழி செல்வாளேயானால் துன்பம் அடைவாள். அது சாத்தியப்படுமா எனத் தாய் கலங்குவதை,

**“ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇய**
**.........................**
**.........................**
**மடமா அரிவை போகிய சுரனே”[12]**

இவ்வரிகள் பாலை நில வெம்மையின் கொடுமை தம் மகளுக்கு கூடுமோ என்பதாகக் குறுந்தொகையில் அமைந்துள்ளது. வெம்மையான சூறைக் காற்று வேகமாக வீசுகிறது. அது மரக்கிளையுடன் பறக்கிறது. அவ்வாறு பரவி வரும் காற்று உலர்ந்து இருக்கும் வாகை நெற்றுகளைத் தாக்கி ஒலியை கிளர்ந்தெழச் செய்கிறது என்பதை,

**“வெந்திறல் கடுவெளிபொங்கர்ப் போந்தென**

**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை, அருஞ்சுரம் என்ப - நம்**
**முலையிடை முனிநர் சென்ற ஆறே''[13]**

பாடலால் ஔவையார் இயற்கை மீது விருப்பத்தையும் ஆர்வத்தையும் கொண்டிருந்தார் என்பது புலப்படுகிறது. தலைவன், தலைவி மீது கொண்ட காதலால் அவளைக் காணாது முடங்கிக் கிடக்கிறான். அவனை காண வரும் நண்பர்களிடம் காதலை உணர்த்துகிறான். அதை,

**''ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்**
**கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போல''[14]**

எனும் வரிகள் விளக்கி நிற்பதை அறியலாம்.

## இயற்கையான மழை

இறைவனால் இப்புவிக்கு வழங்கப்பட்ட ஒரு வரமே மழை. ஒவ்வொரு முறையும் பூமியை அழகாகக் காட்டுவதோடு பயிர்கள் வளர்ந்து உணவிற்கு உறுதுணையாகவும் இருக்கிறது. இதனை,

**''வானிலிருந்து மழையைப் பெய்யச் செய்து, அதன் மூலம்**
**பலவகையான கனிகளிலிருந்து உங்களுக்கு உணவை**
**வெளிப்படுத்தினான்''[15]**

எனும் கூற்றின் வழி அறியலாம். ஒரு நாட்டின் விவசாய உற்பத்தியை நிர்ணயிப்பதில் மழைக்கு பெரும் பங்குண்டு. மழை நீரின் துணையுடன் செழிக்கும் பயிர்கள் மக்களுக்கு உணவாகிறது. அவர்களை வாழ வைக்கிறது. மழை பெய்து விட்டால் உயிர்கள் வாழும். மழையை நம்பியே விவசாயிகள் இருப்பதை,

**''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றவரெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல்லு வார்''[16]**

குறள் விவசாய மக்களின் மேன்மையை உணர்த்தும் வகையில் உள்ளது. வானில் பறந்து செல்லும் பறவைகள் கூடுகளில் தஞ்சமடைகின்றன. முகில் கூட்டங்கள் நீரை அள்ளிக் கொண்டு வானில் வீசும் காற்றுடன் கலக்கிறது. அப்போது இடி முரசு போல ஒலிக்க முருகனின் வேல் போன்ற மின்னல் தோன்றுகிறது. மேகத்தில் மழை பொழிகிறது. இதை,

**''விசும்பு ஆடு பறவை வீழ் பதிர் படர**
**… … … … … … … … … … … …**
**… … … … … … … … … … … …**
**பின் இருங் கூந்தல் பிழிவனம் துவரி**
**உள்ள சிவந்த கண்ணேம்''[17]**

வரிகளால் உணரலாம். வானில் மேகக்கூட்டங்கள் கூடுவதும் மழை பொழியும் போது இடியும் தோன்றுகிறது. அப்போது மழை வருவதை,

**''கடுவிசை உருமின் கழறு குரல் அளைஇக்**
**காலொடு வந்த கமஞ்சூல் மாமழை''[18]**

எனும் அடிகள் விளக்கி நிற்கின்றன. மழை நீர் செம்மண்ணில் விழுந்து கலந்து பிரிக்க முடியாத இரு உள்ளங்கள் உணர்வுக் குறியீடாக இயற்கை இடம் பெற்றிருப்பதை,

**''செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''[19]**

எனும் குறுந்தொகை பாடல்வழி அறியலாம்.

## முடிவுரை

இயற்கை மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே அவனுக்குண்டான உணவு, உடை, உறையினை வழங்கி காத்து வருகிறது. பழந்தமிழர்கள் இயற்கையோடு தன்னை இணைத்து வாழ்க்கையை நகர்த்தினர். நமது இறப்பிற்கு பின்னும் கூட இயற்கையான மண்ணோடு மண்ணாகத் தான் மனிதன் கலக்கிறான். மனித வாழ்வும் இயற்கையும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. இரண்டையும் பிரிக்க முடியாது எனில் அது மிகையாகாது.

## தொகுப்புரை

மனித குல வாழ்விற்கு இயற்கை ஒரு வரமாகும். சங்க காலப் புலவர்கள் இயற்கையை பாடியமை போற்றத்தக்கது. தமிழர்கள் இயற்கை வளங்களைப் பாதுகாத்தனர். உயிரினங்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் விலங்கினங்களுக்கு

வாழ இடம் விட்டு இயற்கையைத் துல்லியமாக அறிந்துள்ளார்கள். இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையை பேரிடர் என்ற பெயரில் இறைவன் அழிப்பதை தவிர வேறு எவராலும் அழிக்க முடியாது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், சொல், கிளவி - ப.33 மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. திரு. வி. கல்யாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, ப.38 பாரி நிலையம், சென்னை.
3. சு. துரைச்சாமிப்பிள்ளை, தமிழர் வாழ்வு, ப.106, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை.
4. திருக்குறள் - 322 தென்றல் நிலையம், சிதம்பரம்.
5. குறுந்தொகை பாடல் எண். 37 சாரதா பதிப்பகம், சென்னை.
6. மேலது, பாடல்எண். 321 மேலது
7. மேலது, பாடல் எண். 185 மேலது
8. மேலது, பாடல் எண். 284 மேலது
9. மேலது, பாடல் எண். 03 மேலது
10. மேலது, பாடல் எண். 167 மேலது
11. அகநானூறு, பாடல் எண். 154 மேலது
12. குறுந்தொகை, பாடல் எண். 378 மேலது
13. மேலது, பாடல் எண். 39 மேலது
14. மேலது, பாடல் எண். 58 மேலது
15. பஷாரத் பப்ளிஷர்ஸ், குர்ஆன் தர்ஜமா, ப.13 பஷாரத்பப்ளிஷர்ஸ், சென்னை.
16. திருக்குறள் - 1033 தென்றல் நிலையம், சிதம்பரம்.
17. குறிஞ்சிப்பாட்டு, பாடல் எண். 46 கௌரா பதிப்பகம், சென்னை.
18. மேலது, பாடல் எண். 158 சாரதா பதிப்பகம், சென்னை.
19. மேலது, பாடல் எண். 40 மேலது

# சிலப்பதிகாரத்தில் இயற்கை சித்தரிப்பு

**ஆ. சுதா**
*இளங்கலை கல்வியியல் மாணவி*
*யுனிவர்சல் கல்வியியல் கல்லூரி, வள்ளியூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை நெறியையும், நாட்டின் இயற்கை வளத்தையும் அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் திகழ்ந்தன. அகப்பொருள் சார்ந்தும் புறப்பொருள் சார்ந்தும் சங்க இலக்கியங்கள் இயற்றப்பட்டன. தொல்காப்பியம் முதல் இன்று வரையிலான இலக்கியங்கள் அனைத்திலும் இயற்கைக் காட்சிகளும் அறிவியல் சிந்தனைளும் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் காணப்படும் இயற்கை சித்தரிப்புகளையும் வருணனைகளையும் ஆராய்வது இக்கட்டுரையாகும்.*

## முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களது சுற்றுச்சூழல்களையும் எடுத்துரைக்கும் காலப்பெட்டகங்களாக அமைந்துள்ளன. ‘நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்’ என்று பாரதியாரால் உளநெகிழ்வோடு பாராட்டப் பெற்ற சிலப்பதிகாரம் தமிழின் முதற் பெருங்காப்பியமும் தனிப் பெருங்காப்பியமும் ஆகும். முத்தமிழ்க்காப்பியம் என்றும், உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பாகப் பேசப்பெறும் சிலப்பதிகாரத்தில் இயற்கை சார்ந்த செய்திகளை விளக்குவதாய் இக்கட்டுரை அமைகிறது.

## சிலப்பதிகாரம்

கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகமென்ற முத்தமிழுக்கு முதன்மை நல்குகிறது. குடிமக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு படைக்கப்பட்ட இக்காப்பியம் சேர, சோழ, பாண்டிய நாட்டின் நாட்டுவளம், நகர்வளம் போன்றவற்றை விளக்குகின்றது. இக்காப்பியம் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.

## இயற்கை வருணனை

> **“ஐவன வெண்ணெலும் அறைக்கண் கரும்பும்**
> **கொய்பூந் தினையும், கொழும்புன வரகும்**
> **காயமும், மஞ்சளும், ஆய்கொடிக் கவலையும்,**
> **வாழையும், கமுகும், தாழ்கலைத் தெங்கும்,**
> **மாவும், பலாவும், சூழ் அடுத்து ஓங்கிய”[1]**

என்னும் சிலப்பதிகார வரிகள், ஐவனமென்னும் வெண்ணெல்லும், கணுக்கள் அற்றுப்போன கரும்பும், கொய்யும் பருவத்தினையுடைய பூந்தினையும் கொழுமையான புனத்தில் விளைந்த வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், அழகிய கொடியினையுடைய கவலையும் வாழையும் கமுகும், குலைதாழ்ந்து தொங்கும் தெங்கும், பலாவும் ஆகிய இவைகள் எனப் பொருளைத் தருகின்றன. இதன்மூலம் இயற்கை சார்ந்த சூழலைப் பதிவு செய்துள்ளார் இளங்கோவடிகள். இயற்கையைக் கலைக்கண் கொண்டு ரசித்தது புலனாகிறது.

## நானில வருணனை

தமிழ்க்காப்பியங்களில் நிலங்கள் பற்றிய வருணனை பின்புலமாகப் புனையப்படுகிறது. கதைத் தலைவர் முதலானோர் மேற்கொள்ளும் பெரும் பயணத்தின் போது நிலங்கள் பற்றிய வருணனை இடம் பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் புகார் நகரத்திலிருந்து மதுரைக்குச் செல்லும்போது நில வருணனை அமைகிறது. இதனைப்

பற்றிப் பின்தோன்றிய வடநாட்டில் நடந்த வரலாற்றினைப் பொருளாகக் கொண்ட காப்பியங்களிலும் நிலங்கள் பற்றிய வருணனையைத் தமிழ் மரபோடு புனைந்திருப்பதைக் காண முடிகிறது. தொல்காப்பியர் நானிலம் பற்றிய கொள்கையையே அகத்திணையில் முன்னிறுத்துகிறார். ஆனால் சங்க அகப்பாடல்களில் பாலைத்திணை பற்றியப் பாடல்களே மிகுதியாக இடம்பெறுகின்றன. சிலப்பதிகாரம் பாலையை,

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து**
**நல்லியில் பிழந்து நடுங்குதுய ருருத்துப்**
**பாலை யயன்பதோர் படிவங் கொள்ளும்”**[2]

என்று விளக்குகிறது.

**தாவரங்கள் பற்றிய வருணனை**

புகார்க்காண்டத்தில் முதல் காதையில் தாவரங்கள் பற்றிய வருணனை இடம் பெற்றுள்ளது.

உலகில் நிகழும் சாதாரணச் செயல்கள் அனைத்திலும் வேதியியலின் நிகழ்வுகள் உண்டாகின்றன. இவ்விளைவுகளை நம்மால் உணரமுடிகிறது. ஆனால் ஏன் என்ற வினாவிற்கு கற்றவர்கள் தவிர கல்லாதவர்கள் விடை அளிக்க இயலாது. தமிழ்ச் சான்றோர் பல்துறை அறிவுடையவராய் விளங்கியமையால் இயற்கை நிகழ்வுகளை உற்று நோக்கிப் பாடல்களில் தம்முத்திரைகளைப் பதித்துள்ளனர். சூரிய ஒளியினால் தான் தாவரங்கள் ஆற்றலைப் பெறுகின்றன. தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்குச் சூரிய ஒளி பெரிதும் உதவுகிறது. இக்கருத்தை உணர்ந்தவர் இளங்கோவடிகள். ஆதலின்,

**“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடாண் திகிரிபோல்**
**பொற்கோட்டு மேரு வலந்தரிதலான்”**[3]

என்று ஞாயிற்றைப் போற்றினார். உயிரியல் துறை பற்றிய சிந்தனையும் தமிழ் இலக்கியங்களில் சிறப்புற அமைந்துள்ளதைத் தொல்காப்பியம் மூலம் உணரலாம். ஒரு செல்லானது செல் பிரிதலின் மூலம் பல்கிப் பெருகிப் பல உயிர்கள் உருவாகின்றன. பல செல் உயிர்களில் ஒரு செல்லே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு வேலையும் ஒரு குறிப்பிட்ட செல் தொகுப்பு செல் தொகுப்புகளால் செய்யப்பெறுகின்றது என்பதைச் சிலப்பதிகாரம் அறிவியல் வருணைனையுடன் எடுத்துரைத்து தாவரங்கள் பற்றிய சிந்தனைப் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

மனையறம் படுத்த காதையில்,

**“கழுநீர், ஆம்பல், முழுநெறிக் குவளை,**
**அரும்பு பொதி அவிழ்ந்த சுரும்புஇமிர் தாமரை**
**வயற்பூ வாசம் அளைஇ அயற்பூ**
**மேதகு தாழை விரிய் வெண்தோட்டுக்**
**கோதை மாதவி, சண்பக் பொதும்பர்த்**
**தாது தேர்ந்த உண்டு, மாதர்வாள் முகத்துப்”**[4]

என்னும் பாடல், செங்கழுநீர், சேதாம்பல், முழுவதும் இதழ்விரிந்த குவளை, அரும்பு கட்டவிழ்ந்து சுரும்பினம் இமிர்கின்ற தாமரை, வயல்களிலே மலர்ந்துள்ள நீர்ப்பூக்கள், பிறவான பூக்கள், மேன்மை பொருந்திய தாழையின் விரிந்த வெண்ணிறப் பூவிதழ்கள், சண்பகக் காவிலே மாலைபோலப் பூத்துக்கிடக்கும் மலர்கள் என்ற கருத்தினை விளக்குமிடத்தில் இயற்கை சார்ந்த வருணனையை அறிய முடிகிறது.

**“இல்வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த**
**பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து”**[5]

என்ற பாடல் வரிகள் மனையிடத்தே வளர்கின்ற முல்லை மலரோடு, மல்லிகையும் வேறு பலவகைப் பூக்களும் தூவிய மலர்ச்சேர்க்கையினிடத்தே கோவலனும் மாதவியும் அழகமாக அமர்ந்திருந்தனர் என்ற பொருளைத் தருகின்றன. இதிலிருந்து தாவரங்களைப் பற்றியப் பதிவுகள் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

**மலர்கள்**

**"இல்வளர் முல்லை, மல்லிகை, மயிலை,**
**தாழிக் குவளை, சூழ்செங் கழுநீர்"[6]**

என்னும் சிலப்பதிகார வரிகள் இல்லத்தில் வளரும் முல்லை, மல்லிகை, இருவாட்சி, தாழிக்குவளை, வண்டினம் சூழும் செங்கழுநீர் ஆகிய பூக்களைக் கூறுகின்றன. இவ்வரிகளிலிருந்து பழந்தமிழர்கள் பலவித மலர்களைப் பற்றிய அறிவு இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

வேனிற் காதையில்,

**"சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,**
**வெண்பூ மல்லிகை, வேரொடு மிடைந்த**
**அம்செங் கழுநீர்,ஆய் இதழ்க் கத்திகை"[7]**

என்னும் வரிகள், சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை, வெண்பூ, மல்லிகை, வெட்டிவேர், செங்கழுநீரின் மெல்லிதழ்கள் ஆகியவற்றால் தொடுக்கப்பட்ட பூக்களின் மணம் என்ற பொருளினைத் தருகின்றன. இதன்மூலம் பல வகையான மலர்கள் இங்கு கூறப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

**மரங்கள்**

வேட்டுவ வரியில்,

**"செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்**
**கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன**
**பொங்கர் வெண்பொரி சிந்தின புன்குஇளம்**
**திங்கள் வாழ்சடை யாள்திரு முன்றிலே!"[8]**

என்னும் வரிகள் செம்பொன் மலர்களை வேங்கை மரங்கள் சொரிந்தன. சிவந்த இதழ்களை நல்ல இலவ மரங்கள் உதிர்த்துக் குவிந்தன. புன்னை மரங்கள் பழம்பூக்களாகிய வெண்பொரிகளைச் சிந்தின. இளந்திங்கள் வாழ்கின்றன. வெண்கடம்பும் பாதிரியும் புன்னையும் மணம் கமழ்கின்ற குரவமும் கோங்கமும் மலர்ந்துள்ளன எனப் பொருள் தருகின்றன. இதன் மூலம் இக்காதையில் பதிவாகியுள்ள இடம் குறித்த சூழலை இயற்கையின் வழியாக விளக்கப்பட்டுள்ளது.

**ஐம்பூதங்கள்**

நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐந்தும் ஐம்பூதங்களாகும். இவற்றைக் குறித்த வருணைன சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

**"சிமையத்து இமையமும் செழுநீர்க் கங்கையும்**
**உஞ்சைஅம் பதியும், விஞ்சத்து அடவியும்**
**வேங்கட மலையும், தாங்கா விளையுள்**
**காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்**
**பூவிரி படப்பைப் புகார்மருங்கு எய்திச்"[9]**

என்ற வரிகள் கொடுமுடிகளையுடைய இமயமும், வளமான நீர்ப்பெருக்கினையுடைய கங்கையும், அழகியதான உஞ்சை நகரும், விந்தியமலை சூழ்ந்த காடும், வேங்கட மலையும், நிலம் பொறாத விளையுள் மிகுந்த காவிரி பாயும் சோழவள நாடும் ஆகிய எல்லாம் என்னும் பொருளினைத் தருகின்றன. ஒரு நாட்டின் பெருமையைக் கூற, மலை, நீர்வளம், நிலம் அனைத்தையும் வருணிக்கும் பாங்கை அறியமுடிகிறது.

காடுகாண் காதையில்,

**"வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோர்"[10]**

என்ற வரிகள் வளமான நீர்நிறைந்த வயல்களும் பொய்கைகளும் அழகாக விளங்கின. இதன் மூலம் சிலப்பதிகாரத்தில் நீர்வளம் பற்றியக் கருத்துக்கள் பதிவாகி உள்ளன என்பது அறியமுடிகிறது.

**மழை**

**"இடியுடைப் பெருமழை எய்தாது ஏகப்**
**பிழையா விளையுள் பெருவளஞ் சுரப்ப,**
**மழைபிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க! எனத்**
**தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி"[11]**

என்னும் சிலப்பதிகார வரிகள், இடியுடைப் பெருமழையானது பாண்டிய நாட்டிலே சிலகாலம் பெய்யாது ஒதுங்கிப் போயிற்று. தன் நாட்டிலே தப்பாத விளையுளும் பெருவளமுஞ் சுரக்குமாறு, அம்மேகங்களைச்

சிறையிட்டு மழை பெய்விக்கச் செய்து வளம்பெருக்கி ஆண்டவன் பாண்டியன் என்ற பொருளினைத் தருகின்றன. இதன்மூலம் மழையின் சிறப்பினைப் பதிவு செய்துள்ளார் இளங்கோவடிகள்.

**மலை, அருவி வருணனை**

குன்றக்குரவையில்,

> **“குருவி ஒப்பியும் கிளி கடிந்தும்**
> **குன்றத்துச் சென்று வைகி**
> **அருவி ஆடியும் சுனை குடைந்தும்**
> **அலவுறறு வருவேம்முன்”[12]**

என்னும் சிலப்பதிகார வரிகள், தினைப் புனங்களிலே வந்த படிகின்ற குருவிகளை ஒட்டியும், கிளிகளைத் துரத்தியும் மலையிடத்திலே செயல் புரிந்துவிட்டு, அருவி நீராடியும், சுனை நீரிலே குடைந்தும் வருகின்றோம் என்ற பொருளினைத் தருகின்றன. இதன் வாயிலாக மலை, அருவி, பறவைகள் என இயற்கை சார்ந்த வருணனையைக் காண முடிகிறது. மேலும் இதே போன்றதொரு கருத்தினை வள்ளுவரும்,

> **“இருபுனலும் வாய்நத மலையும் வருபுனலும்**
> **வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு”[13]**

என்ற குறட்பாவின் மூலம் மழைநீர், ஆற்றுநீர் போன்றவையும் அலை, அரண் போன்றவையும் நாட்டிற்கு மிக முக்கிய உறுப்புகளாகத் திகழக் கூடியது. ஆகவே இயற்கையைப் பாதுகாத்தல் அவசியம் என்கிறார்.

> **“புரைதீர் புனல்குடைந்து ஆடின், நோமாயின்**
> **உரவுநீர் மாகொன்ற வேல் ஏந்தி ஏத்தி”[14]**

என்ற சிலப்பதிகார வரிகள், மாசற்ற புதுப்புனலிலே நாம் குடைந்து குடைந்து நீராடினோம் என்னும் பொருளினைத் தருகின்றன. இதன் மூலம் புதுப்புனலிலே வரும் நீரானது மாசற்றது என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

இயற்கைக் காட்சிகள் குறித்த வருணனைகள், ஐம்பூதங்களின் வருணனைகள், நானில வருணனைகள், மழை சார்ந்த பதிவுகள், தாவரங்கள் பற்றிய வருணனைகள், மலர்கள் பற்றிய சிந்தனைகள், நீர்வளம், நிலவளம், பற்றிய கருத்துக்கள், மரங்கள் பற்றிய குறிப்புகள் போன்ற இயற்கை சார்ந்த பதிவுகள் சிலப்பதிகாரத்தில் குவிந்து காணப்படுகின்றன என்பது இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

**குறிப்புகள்**


1. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், ப.161, பாரி நிலையம், சென்னை, 2009.
2. மேலது, ப.161
3. புலமை வேங்கடாச்சலம் (உ.ஆ.), சிலப்பதிகாரம், ப.48, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2007.
4. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், ப.30
5. மேலது, ப.56
6. மேலது, ப.75
7. மேலது, ப.120
8. மேலது, ப.177
9. மேலது, ப.81
10. மேலது, ப.156
11. மேலது, ப.157
12. மேலது, ப.313
13. புலவர் நாராயணசாமி, திருக்குறள், குறள் எண்.737 ப.151, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011
14. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், ப.317

# எட்டுத்தொகை அக இலக்கியங்களில் மரங்கள்

**செ. சிவசூர்யா**
*இளங்கலை கல்வியியல் மாணவி*
*யுனிவர்சல் கல்வியியல் கல்லூரி, வள்ளியூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றையும், பின் இயற்கையோடு இணைந்த மரங்களையும் வழிபடத் தொடங்கினான். சங்க கால வாழ்வும் பெரும்பாலும் இயற்கையைச் சார்ந்த வாழ்வாகவே இருந்துள்ளது. எனவே அக்காலகட்டத்தில் எழுந்த இலக்கியங்களில் மரங்களைப் பற்றிய செய்திகள் பொதிந்துள்ளன. எட்டுத்தொகை அக இலக்கியங்களில் காணப்படும் மரங்கள் குறித்து ஆராய்வது இக்கட்டுரையாகும்.*

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் சில மரங்கள் கடவுள் மரங்களாகக் காட்டப்படுகின்றன. வேங்கை, பனை மரங்களைக் கடவுளாகவும், ஆல் போன்ற மரங்களின் அடிகளில் ஊர்பொதுமன்றங்களும் நடைபெற்றன. பழந்தமிழர்களுக்கு மரங்களுடனான தொடர்பு என்பது பாரம்பரியமிக்கது. எனவே பழந்தமிழ் புலவர்கள் தாங்கள் இயற்றும் இலக்கியங்களில் மரங்களைத் தவறாமல் குறிப்பிட்டுள்ளனர். எத்தனை வகையான மரங்கள் தமிழ்நாட்டில் இருந்துள்ளன என்பதை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. எட்டுத்தொகை அக இலக்கியங்களில் எந்தெந்த மரங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

**மரங்கள்**

தமிழர் பண்டுதொட்டு அரசமரம், ஆலமரம், வேப்பமரம், கடம்பமரம், வாகைமரம், வில்வமரம், கொன்றை மரம் முதலிய பல்வேறு மரங்களை வணங்கி வந்திருக்கின்றனர். அத்தகைய மரங்கள் காக்கப்பெறும் என்பதை,

**“எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி” (நற்.216)**

என நற்றிணை குறிப்பிடுகின்றது. இதிலிருந்து சங்க இலக்கியங்களில் மரங்களைக் குறிக்கும் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன என்பது புலனாகிறது.

**அமை**

‘அமை’ என்னும் சொல் மூங்கில் மரத்தைக் குறிக்கும் பொருளில் குறுந்தொகைப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**“வாங்கமை பழுனிய நறவுண்டு”**
**(நற்:276:11)**

வளைந்த மூங்கிலாலாக்கிய குழாயில் நிரப்பிய, ‘முற்ற வைத்த கள்’ என்ற பொருளில் இவ்வரி அமைகிறது. இவ்விடத்தில் மூங்கிலைக் குறிக்க அமை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**“ஆடமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்”**
**(குறு:115:4)**

அசைகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்திருக்கும் என்று கூறுமிடத்து, ‘அமை’ என்ற பதம் மூங்கிலைக் குறிக்கும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

**“ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்”**
**(குறு:131:1)**

தலைவியின் அழகிய தோள்களை அசையும் மூங்கிலோடு ஒப்பிட்டுக் கூறுமிடத்து, அமை என்பது மூங்கிலைக் குறிக்கும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**“இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்”**
**(குறு:385:4)**

பெரிய மூங்கிலது நெடுங்கழைகள் அசையும் தன்மையை விளக்குமிடத்து, ‘அமை’ என்பது மூங்கில் மரத்தைக் குறித்ததைக் காணமுடிகிறது.

**ஆல்**

'ஆல்' என்னும் ஆலமரம் குறுந்தொகைப் பாடலில் காணப்படுகிறது.

**"தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய"**

**(குறு:15:2)**

தொன்மையான ஆலமரத்தின் அடியில் உள்ள பொதுவிடம் பற்றி கூறும்போது 'ஆல்' என்ற பதம் ஆலமரத்தைக் குறித்ததை உணரமுடிகிறது. இம்மரம் நீண்ட ஆண்டுகள் வாழும் தன்மையுடையதாகும்.

**உகா**

உகா என்னும் மரம் அகநானூறு பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

**"உகாஅ மென்சினை உதிர்வன கழியும்"**

**(அகம்:293:8)**

பொன்னிறமுடைய பெருங்கனிகள் உகா மரத்தின் மெல்லிய கிளைகினின்றும் உதிர்ந்து வீழ்ந்து கொண்டிருக்கும் என்று கூறுமிடத்து, 'உகா' என்பது பாலைக் கண்ணுள்ள ஒரு மரத்தைக் குறித்தது. உகா- கோடைப்பட்ட பகுதிகளிலே வளரும் ஒருவகை முள்மரம் என்று பொருள் கூறுகிறார் புலியூர்க்கேசிகன்.

**உடை**

உடைமரத்தைக் குறிக்கும் உடை என்னும் பதம் நற்றிணைப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

**"ஊசல் ஒண்குழை உடைவியத்து அன்ன"**

**(நற்:286:1)**

குழையானது மரத்தில் ஊஞ்சல் போன்று ஆடியது என்னும் பொருளில் 'உடை' என்ற மரத்தைக் கையாண்டுள்ளார்.

**ஓமை**

'ஓமை' என்பது ஒருவகை மரமாகும். இம்மரப்பெயர் நற்றிணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. "ஓமை-மாமரம்"[1]

**"ஓமையங் காட்டு**
**வெயில்வீற் றிருந்த வெம்பல் அருஞ்சுரம்"**

**(நற்:84:11-12)**

மரங்கள் இல்லாத நீண்டவிடத்தில் மான் கூட்டம் விரும்பி செல்லாது என்னும் விளக்கத்தை நோக்கும் போது, 'ஓமை' என்னும் பதம் மரத்தைக் குறிக்க கையாளப்பட்டதைக் காணமுடிகிறது.

**"புல்லிலை ஓமைய புலிவழங்கு அத்தஞ்"**

**(நற்:107:6)**

என்னும் பாடலில், காதலர்கள் சென்றவிடத்தை விளக்கும் போது, புல்லிய இலைகளைக் கொண்ட ஓமை மரத்தைக் குறித்து பேசுகிறார் ஆசிரியர். இப்பாடலில், 'ஓமை' என்பது மரத்தைக் குறிக்கின்றது.

ஓமை என்பது பாலை நிலத்து மரங்களுள் ஒன்று. இதன் அடிமரம் பொரிந்து பொலிவற்றிருக்கும். இம்மரம் செந்நிறம் உடையது. இதன் பட்டையை யானை உரித்து உண்ணும். இதன் கவட்டினிடையே பருந்துகள் இருந்து ஒலிக்கும்.[2]

ஓமை என்ற சொல்லுக்கு திருமகள் தமிழகராதி, "மாமரம், உகாமரம், ஒரு பாலைநிலத்து மரம்"[3] என்று பொருள் தருகிறது.

'ஓமை' என்னும் மரப்பெயர் குறுந்தொகைப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**"ஓமை குத்திய உயர்கோட் டொருத்தல்"**

**(குறு:396:4)**

'உலர்ந்த கொம்புகளையுடைய ஓமை மரம்' என்னும் பொருளில் 'ஓமை' என்னும் மரம் வந்துள்ளது.

**"அத்த ஓமை அம் கவட்டிருந்த இனந்தீர் பருந்தின்"** (குறு:207:2)

'பாலைநிலத்திலுள்ள ஓமைமரம் குறித்து பாடியுள்ளார் புலவர். இப்பாடலிலிருந்து ஓமைமரமானது பாலை நிலத்தில் தான் காணப்படும் என்பதை அறியமுடிகிறது.

**"புன்றா ளோமைய சுரனிறந் தோரே"**

**(குறு:260:8)**

தலைவன் நடந்துசெல்லும் பாலை நிலத்தில் காணப்படும் ஓமை மரத்தைக் குறித்து இப்பாடல் அமைந்துள்ளது.

**“ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு”**
**(குறு:124:2)**

உப்பு வாணிகர்கள் செல்லும் பாதையில் காணலாகும் ஓமை மரங்கள் குறித்து கூறுமிடத்து,‘ஓமை’ என்னும் மரப்பெயர் கையாளப்பட்டுள்ளது.

**“பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை”**
**(குறு:79:2)**

‘காட்டு யானையால் பட்டை விரும்பி உண்ணப்பட்ட தாளையுடைய ஓமைமரம்’ என்னும் பொருளில் ‘ஓமை’ மரம் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

**கழு**

கழு என்ற சொல்லிற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி, “கழு - கழுகு, கழுமரம், கழுவென்னேவல், சூலம், புற்பற்றை, கறவாத பசுவைக் கறப்பதற்கு அதன் கழுத்தில் இரண்டு தலையுஞ்சீவி மாலைபோற் கட்டியிடுமொரு கழி, மூங்கிற்பிளப்பு”[4] என்று விளக்கம் தருகிறது.

**“கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை”**
**(அகம்:176:5)**

கழுமரம் உயர்ந்திருப்பது போல கொழுமையான தாமரை மொட்டுக்கள் காணப்படும் என்று ஒப்புமைப்படுத்தும் போது, ‘கழு’ என்பது ஒருவகை மரத்தைக் குறித்ததை காணமுடிகிறது.

**கழை**

“‘கழை’ என்ற சொல்லிற்கு, ‘கரும்பு, புநர்பூசம், மூங்கில், கோல்’”[5] என்று தமிழ் மொழி அகராதி பொருள் தருகிறது.

‘கழை’ என்பது மூங்கில் மரத்தைக் குறிக்கும் பொருளில் குறுந்தொகைப் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு, “மூங்கில், கரும்பு, புனர்பூசம்” என்று பொருள் தருகிறது பவானந்தர் அகராதி. நற்றிணையில் ‘கழை’ என்ற சொல் பெரும்பாலும் மூங்கில் மரத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**“கழை அமல்பு நீடிய வானுயர் நெடுங்கோட்டு” (நற்:257:3)**

இப்பாடல் வரியில் நெடிய மிக உயர்ந்த மரம் மூங்கில் என்பதனைக் குறிக்க கழை என்ற சொல் கையாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**“கழைகவின் அழிந்த கல்லதர்ச் சிறுநெறிப்”**
**(நற்:333:2)**

மூங்கில், வெப்பம் மிகுதியால் கவின் இழந்தது என்று மூங்கில் மரத்தின் தன்மையைக் கூறுமிடத்து, இவ்வரியில், ‘கழை’ என்ற மரம் எடுத்தாளப்பட்டுள்ளது.

**“கான யானை கைவிடு பசுங்கழை”**
**(குறு:54:3)**

தலைவியைப் பிரிந்த தலைவனின் செயலை யானையால் வளைக்கப்பட்டு கைவிடப்பட்ட மூங்கிலோடு ஒப்பிட்டுக் கூறுமிடத்து, ‘கழை’ என்னும் பதம் மூங்கிலைக் குறித்ததை அறியலாம்.

**“விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்”**
**(குறு:74:2)**

‘வளைத்துவிடப்பட்ட வானத்தைத் தீண்டும் பசிய மூங்கிலையுடைய’ என்னும் பொருளில் ‘கழை’ என்பது மூங்கிலைக் குறித்தது.

**“குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்”**
**(குறு:179:5)**

உயர்ந்த மலைப்பக்கத்தே இருந்த மூங்கிலை யானை சுவைத்த செய்தியினைக் கூறுமிடத்து, ‘கழை’ என்பது மூங்கிலைக் குறித்தது.

**கணி**

‘கணி’ என்ற சொல்லிற்குத் தமிழ் மொழி அகராதி, “ஒரு சாதி, மருதநிலம், மூங்கில், வேங்கை மரம்”[7] என்று பொருள் தருகிறது.

**“காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்” (நற்:373:6)**

‘கணி’ என்பது வேங்கை மரத்தைக் குறிப்பதாய் நற்றிணை பகர்கிறது.

**காயா**

**“பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞலக்” (நற்:242:4)**

நீலமணி போன்ற மலர்களையுடைய காயா மரம் என்று கூறுமிடத்து, காயா என்னும் மரத்தைக் குறித்து பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**“காயாங் குன்றத்துக் கொன்றை போல” (நற்:371:1)**

நீலநிறத்தில் மலர்ந்திருக்கின்ற காயா மரங்களையுடைய மலை என்று பொருள்படும் பாடல் வரியில், ‘காயா’ என்பது மரத்தைக் குறித்து நின்றது.

**பனை**

**“பனைக்கான்று ஆறும் பாழ்நாட்டு அத்தம்” (நற்:126:6)**

பொருளீட்டச் சென்ற தலைவன், தலைவியின் பிரிவால் தான் கொண்டிருந்த சினத்தைப் பனைமரத்தின் மோதி பிறகு அடங்குகின்ற பாழ்ந்த நாட்டினையுடைய பாலை நிலத்திலே சென்று பொருளீட்டுவது இன்பத்தைத் தருமா இல்லை இளமையில் நுகரும் காம இன்பத்தைவிட சிறந்த இன்பமாகுமோ? என்று எண்ணுகிறான். இப்பாடலில்,‘பனை’ என்பது பனைமரத்தைக் குறிக்கும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

**வழை**

**“வாழை ஓங்கிய வழையமை சிலம்பில்” (நற்:222:7)**

வாழையோடு, வழையும் சேர்ந்து ஓங்கிய சிகரம் என்று அமைந்த பாடல் வரியில், வழை என்பது புன்னையைக் குறித்து அமையப்பெற்றுள்ளது.

**“வழையம லடுக்கத்துக்” (குறு:260:6)**

மலைப்பக்கத்தில் சுரபுன்னைகள் மிகுந்து காணப்படுவதைக் கூறும் போது, ‘வழை’ என்னும் சுரபுன்னை மரங்களைக் குறித்தது.

**“வழை அமல் அடுக்கத்து வலன் ஏற்பு வயிரியர்” (அகம்.328:1)**

சுரபுன்னை மரங்கள் அடர்ந்திருக்கும் மலைச்சாரலிலே மழை பொழியும் காட்சியினை விளக்கும் இப்பாடல் வரியில், ‘வழை’ என்பது சுரபுன்னை மரத்தைக் குறித்து நின்றது.

**“கழை அமல் சிலம்பின் வழை தலைவாட” (அகம்.177:7)**

மூங்கில்கள் செறிந்திருக்கின்ற மலைகளிலே, அங்குள்ள சுரபுன்னையின் உச்சியெல்லாம் வாடி போகும்படியாக ஞாயிற்றின் கதிர்கள் இருக்கும் என்று கூறுமிடத்து, வழை என்ற பதம் சுரபுன்னை என்னும் மரத்தைக் குறிக்கும் பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

இம்மரம் மூங்கில், வாழை முதலியவற்றுடன் வள்வதாகக் கூறப்படுகின்றது. வற்கடம் உறுதலை அறியாத வழை என்று இதனைக் கலித்தொகை குறிப்பிடுமாயினும் மூங்கில் நிறைந்த மலைப்பாதையில் வளரும் இம்மரமும் சற்று வாடிப்போகும் என்று கூறப்படுகிறது.

**வாழை**

**“கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை” (அகம்:2:1)**

வளமையான இலைகளையுடைய வாழையின் காய்கள் மிகுதியாக விளங்கும் பெருங்குலை என்ற இப்பாடல் வரியில், ‘வாழை’ மரம் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**“வாழை ஓங்கிய வழையமை சிலம்பில்” (நற்:222:7)**

மேற்காணும் பாடல் வரியில் வாழை மரத்தைக் குறித்து வந்துள்ளது.

**வேய்**

**“வெவ்வளி வழங்கும் வேய்பயில் அழுவத்து” (நற்:46:8)**

தலைவனைப் பிரிந்த தலைவி தன் துன்பநிலையை வெளிப்படுத்துகிறாள். தலைவன் பிரிவினால் வெங்காற்று வீசும் மூங்கில் மரங்கள் மிகுந்து இடங்கள் துன்பமிக்கவையாக தெரிகின்றன என்று தலைவி கூறுமிடத்து, 'வேய்' என்பது மூங்கிலைக் குறிக்கும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### ஞெமை

பாலை நிலத்துக்குரிய மரங்களுள் ஒன்று. இம்மரத்தின்மேல் ஆண்பருந்து தன் பெடையோடு சேர்ந்து இன்புற்றிருக்கும் செய்தி குறுந்தொகைப் பாடலில் காணப்படுகிறது. ஞெமை என்ற சொல்லிற்கு, "மரவகை"[8] என்று பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி.

**"......................ஞெமைத்தலை**
**ஊன்நசைஇப் பருந்து இருந்து உகக்கும்"**
**(குறு:285:6)**

பருந்து இறந்தவர்களின் ஊனை ஞெமை மரத்தின் உச்சியில் இருந்து தின்கின்றது என்னும் பொருளில் 'ஞெமை' என்னும் மரம் இடம்பெறுவதை அறியமுடிகிறது.

### முடிவுரை

சங்க இலக்கியங்களில் மரங்களைக் குறிக்கும் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன என்பது இக்கட்டுரையின் வழி புலனாகிறது. அமை என்னும் மூங்கில் மரமும், ஆல் என்னும் ஆலமரமும், உகா என்னும் முள்மரமும் சங்க இலக்கிய அகப் பாடல்களில் காணப்படுகின்றன. உடை, ஓமை, கழு கழை, கணி, காயா, பனை, வழை, வாழை, வேய், ஞெமை போன்ற மரங்களும் அகப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் அமை, ஓமை, கழை, வழை ஆகிய மரங்கள் அதிகளவில் எடுத்தாளப்பட்டுள்ளன.

### குறிப்புகள்


1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.354, சாரதா பதிப்பகம், சென்னை, 2016.
2. உ.வே.சா.(ப.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், ப. xxxix
3. திருமகள் தமிழகராதி, ப.239, திருமகள் நிலையம், சென்னை, 2012.
4. மதுரைத் தமிழ்ப்பேரகராதி, ப.554, சந்தியா பதிப்பகம், சென்னை, 2004.
5. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.418
6. பவானந்தர் அகராதி, ப.121, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
7. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.373
8. கழகத் தமிழ் அகராதி, ப.506, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2017

# அண்மைக்காலச் சூழலியல்சார் தமிழ்க் கட்டுரைப் பனுவல்களின் உள்ளடக்கப் பொருண்மைகள்

**முனைவர் ஆ. பூமிச்செல்வம்**
*இணைப்பேராசிரியர்*
*தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை*

***ஆய்வுச் சுருக்கம்***
*நடப்புக் காலகட்டத்தைய உலகலாவிய மானுட இயங்கியலில் சுற்றுச் சூழலியல் பற்றிய பேச்சுக்கள், மறுபேச்சுக்கள், தொடர் உரையாடல்கள், நுணுக்கமான சிந்தனைப் பகிர்வுகள், ஆழ்ந்த அவதானிப்புகள் எனப் பன்முகச் செயல்பாடுகள் அதிதீவிரமாக நடந்து வருகின்றன. இவற்றின் விளைவுகளாக சூழலியல்சார் விழிப்புணர்வுப் பிரசுரங்கள், பிரச்சாரங்கள், பாடத்திட்டங்கள், பயிலுதல் சார்ந்த வழிகாட்டல்கள், ஆய்வரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் என உலகமே அல்லோலகல்லோல பட்டவிதமாக ஆகியுள்ளது. இவற்றின் உப விளைவுகளாக, பசுமை இலக்கியம் படைத்தல், கருத்தரங்குகள் நடத்துதல், கதை, கவிதை, கட்டுரைகள் எழுதுதல் என்பனவும் உடன் எழுந்துள்ளன. இவ்விதத்திலான வெளிப்பாட்டு முயற்சிகளின் விளைச்சல் என்னவாக இருக்கின்றது என்பதை அவதானித்தறிவது நடப்புத் தேவையாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொள்வதாக இவ்வாய்வின் பொருண்மை அமைகிறது.*

**முன்னுரை**

ஈராயிரமாண்டுத் தமிழ் இலக்கியப் படைப்புப் பாரம்பரியத்தில் இயற்கையைப் பற்றிய பதிவுகள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. ஆனால் அவ்விதப் பதிவுகள் திட்டமிட்டு உருவாக்கப்படாதவையாக, இயற்கையைத் தன்னியல்பாகப் பேசுவபவையாக, சில வேளை முதன்மைக் கருத்தியலுக்குப் பின்புலங்களாக மட்டும் அமைபவையாகப் பெரிதும் காணப்படுகின்றன. ஆனால், இவ்வித நிலைமை நடப்புக் காலச் சூழலில் சற்று மாறுபட்டு, இயற்கையை மட்டுமே தனித்துப் பேசுவது, அதனை அறியவென பிறரை ஆற்றுப்படுத்துவது, அதனுடன் ஒத்திசைய வழிவகுப்பது என்கிற நோக்கங்களுடன் பசுமை இலக்கியம் படைத்தல் என்கிற போக்கு ஒன்றும் உருவாகியிருக்கிறது. இவ்விதப் போக்கு இயற்கைச் சூழலை அறிதல், சூழல் சார்ந்த விழிப்புணர்வைப் பெறுதல், சூழல் மேம்பாட்டைக் கண்டடை தல் என்கிற செயல்நிலைகளை எல்லாம் கிளர்த்தியுள்ளது. இவ்விதமான கிளர்த்துதல் முயற்சிகளில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள பல காரணிகளில் படைப்பிலக்கிய வகைமைகளும் இருக்கின்றன. இவற்றில் நாவல்களாக, சிறுகதைகளாக, கவிதைகளாகவெனப் பலவிதப் பிரதிகள் நவீனத் தமிழ்ப் படைப்பு வெளியில் உருப் பெற்றுள்ளன. இத்தகு வரிசை நிரலின் மற்றொரு பரிமாணம்தான் சுற்றுச் சூழல் சார்ந்த கட்டுரையாக்கப் பிரதிகள் என்பன. ஏனைய நவீனத்தமிழ்ப் படைப்பு வகைமைகள் போன்றே கட்டுரைப் பனுவல்களின் உள்ளடக்கப் பொருண்மைகளானவை பன்முகத் தன்மை நலன்களையும் கொண்டனவாகவே அமையப் பெற்றுள்ளன. அவற்றின் உள்ளடக்கப் பொருண்மைகளையும் அளவிட்டுக் காண்பதாய் இவ்வாய்வு அமைகிறது.

**சூழலியல், சுற்றுப்புறச் சூழலியல் - விளக்கம்**

நடப்புக்கால நவீன உலக வாழ்வுப் போக்கில் பெரிதும் பேசப்படும் ஒரு துறையாக விளங்குவது சூழலியல் (Ecology) என்கிற சிந்தனையேயாகும். இச்சிந்தனை “உயிரினங்களுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையே நிலவக்கூடியத் தொடர்புகளைப் பற்றிப் பேசுவதாக இருக்கிறது”[1]. இதன் நீட்சியாக அமைந்து, மனித இனத்துக்கும் இயற்கைகப் பொருட்களுக்கும் இடையே உள்ள இடைத் தொடர்புகள் பற்றிய ஒரு முறையான கற்கை நெறியாக விளங்கும்

செயல் நிகழ்வைச் சுற்றுப்புறச் சூழலியல் (Environment) என்று அழைக்கின்றனர். இவ்விரு சிந்தனைகளும் இயற்கையை மையமிட்டு விவாதிப்பவையாகவே அமைந்திருப்பமை குறிப்பிடத்தக்கதாகிறது.

## கலை இலக்கியப் பனுவல்களில் இழைவுறும் சூழலியல் சிந்தனைகளின் அடிப்படை அம்சங்கள்

பொதுவாக, மனிதனால் உருவாக்க முடியாத அனைத்து அம்சசங்களும் இயற்கை என்றாகும் என்பர். இவ்வியற்கைசார் அம்சங்களை அறிவியல்பூர்வமாக ஆய்ந்து, கோட்பாட்டுக் கூறுகளாகப் பகுத்தும் கண்டுள்ளனர். அவை பின்வருமாறு:

இயற்கை சூழ் உலகைக் காட்சிக்குத் தருதல், இயற்கையின் உன்னதங்களையும் பேராற்றல்களையும் புலப்படுத்துதல், சூழல் வாதத்தை வலியுறுத்தல், சூழலைப் பாதிக்கும் மனித மைய வாதத்தை மறுத்தல், சூழலை நசிப்பதில் தொழிற்படும் உலகளாவிய அரசியல் ஊடாட்டத்தை அடையாளம் காட்டுதல், உயிரினச் சமத்துவத்தைப் பேணுதல், பசுமை மேம்பாடு சார்ந்த படைப்புகள் உருவாக ஆவண செய்தல், மானுடத்தை இயற்கையை நோக்கித் திருப்புதல், சூழல் சிதைவுகளை இனங்காட்டுதல், சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ஆற்றுப்படுத்துதல் உள்ளிட்டவை சூழலியலின் அடிப்படை அம்சங்களாக அமைவுறுகின்றன.

## தமிழில் சூழலியல்சார் நவீனப் படைப்புப் பனுவல்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளைக்கடந்த தமிழ்ப் படைப்புப் பாரம்பரியத்தில் இயற்கை சார்ந்த அம்சங்களை இயல்பாகவே உள்ளீடு செய்து படைத்திருப்பமை என்பது கண்கூடு. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே தமிழில் இயற்கையை, முன் திட்டமிட்டு இடம்பெறச் செய்கிற போக்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதனையும் கூட பாரதியே தனது செந்தமிழ் நாடு என்னும் கவிதைப் படைப்பு வழி தொடங்கி வைத்திருக்கிறார். இவரைத் தொடர்ந்து பாரதிதாசன், சஞ்சீவி பர்வதத்தின் சாரல் போன்ற சில கவிதைகளின் வழிப் படர விட்டிருக்கிறார். இவை மரபுக் கவிதை வடிவங்களில் அமைய, அப்துல் ரகுமான், ஆதவன் தீட்சண்யா, கண்மணி குணசேகரன், சிற்பி, நாஞ்சில் நாடன், வைரமுத்து, வைகைச் செல்வி உள்ளிட்டோரின் சில சூழலியலை உள்வாங்கிய படைப்புகள் புதுக் கவிதைகளாக இருக்கின்றன. இவர்களின் வரிசையில் அன்பாதவனின் துளிர்கட்டும் பசுமை, ஆண்டாள் பிரியதர்ஷியினின் பஞ்ச(ம்) பூதங்கள், ந.முத்துக்குமாரின் ஒரு பட்டாம்பூச்சியின் நாட்குறிப்புகளில் என்போரின் கவிதைப் பிரதிகள் கவனிப்புக்குரியனவாகின்றன.

தமிழ்ப் புதுக்கவிதைப் பனுவல்கள் மட்டுமின்றி புனைகதைகளும் சூழல்சார் அம்சங்களை விரிவும் ஆழமுமாகப் பேசியிருக்கின்றன. அவ்விதத்தில் சிறுகதைப் பனுவல்களாக, சா.சந்தசாமியின் உயிர்கள், கி.ரா.வின் நிலைநிறுத்தல், சு.ரா.வின் மறியா தாமுவுக்கு எழுதிய கடிதங்கள், நாஞ்சில் நாடனின் வனம், காடு, பிரபஞ்சனின் பிரும்மம், அ.முத்துலிங்கத்தின் தொடக்கம், கோணங்கியின் கைத்தடி கேட்ட நூறு கேள்விகள், ஜெயமோகனின் படுகை, எஸ்.ரா.வின் தாவரங்களின் உரையாடல், பிரேம் ரமேஷின் முன்பொரு காலத்தில் 108 கிளிகள் இருந்தன. சு.வேணுகோபாலின் தாய்மை, உயிர்ச்சுனை உள்ளிட்டவை காணக்கிடைக்கின்றன.

தமிழில் சூழலியல் நாவல்களாக சா.கந்தசாமியின் சாயாவனம், ஆ.மாதவனின் புனலும் மணலும், ஜெயமோகனின் ரப்பர், காடு, நக்கீரனின் காடோடி, சோ.தர்மனின் சூல், இரா.முருகவேளின் மிளிர்கல், வைரமுத்துவின் மூன்றாம் உலகப் போர், சுப்ரபாரதிமணியனின் சாயத்திரை, நீர்த்துளி, புத்துமண், சுபாஷ் சந்திரபோஸின் பயிர் முகங்கள், வெ.இறையன்புவின் ஆத்தங்கரை ஓரம், சி.ஆர்.ரவீந்திரனின் தேயிலைக்கொழுந்து, ஆர்.எஸ்.ஜேக்கப்பின் பனையண்ணன், மேலாண்மைப் பொன்னுச்சாமியின் உயிர்நிலம், டி.செல்வராஜின் தோல்,

ச.பாலமுருகனின் சோளகர் தொட்டி, ஜோடி.குரூஸின் ஆழிசூழ் உலகு, சு.தமிழ்ச் செல்வியின் கீதாரி, எஸ்.அர்ஷியாவின் பொய்கைக்கரைப்பட்டி, ஏக்நாத்தின் கெடைகாடு, லட்சுமி சரவணக்குமாரின் கானகன், விநாயக முருகனின் சென்னைக்கு மிக அருகில், நீர்த்துளி, கவிப்பித்தனின் நீவாநதி என்பன அடையாளப்படுகின்றன.

சூழலியல் நாவல்களை அடுத்து, சுற்றுச் சூழல்சார் தமிழ்க் கட்டுரைப் பனுவல்கள் எவையென அறிய முற்படுமுத்து, ரேய்ச்சல் கார்சனின் மௌன வசந்தம், மசானபு புகாகோவின் ஒற்றை வைக்கோல் புரட்சி, ராமச்சந்திரா குஹாவின் நுகர்வெனும் பெரும்பசி, ஜான்பொல்லமி பாஸ்டரின் சூழலியல் புரட்சி என்கிற மொழிபெயர்ப்புக் கட்டுரை நூல்களை முன்னோடிகளாகக் கொண்டு தமிழில் உருப் பெற்றுள்ள பழ.கோமதி நாயகத்தின் தமிழகம் : தண்ணீர் தாகம் தீருமா, வறீதையா கான்ஸ்தந்தின் நெய்தல் சுவடுகள், இரா.முருகவேளின் கார்பரேட் என்.ஜி.ஓக்களும் புலிகள் காப்பகங்களும், பொன் தனசேகரனின் நிகழ்காலம், கு.வி.கிருஷ்ணமூர்த்தியின் தமிழரும் தாவரமும், ச.முகம்மது அலியின் இயற்கை : செய்திகள் - சிந்தனைகள், க.ரத்னத்தின் தமிழ்நாட்டுப் பறவைகள், சதாசிவத்தின் உயிர்ப் புதையல், மா.கிருஷ்ணனின், மழைக்காலமும் குயிலோசையும், சு. தியோடர் பாஸ்கரனின் சோலை என்னும் வாழிடம், தாமரை பூத்தத் தடாகம், பொ.ஐங்கர நேசனின் ஏழாவது ஊழி, பாமயனின் திணையியல் கோட்பாடுகள், அணுகுண்டும் அவரை விதைகளும், வந்தனா சிவாவின் உயிரோடு உலாவ, நக்கீரனின் திருடப்பட்ட தேசம், ஜனகப்பிரியாவின் உலராக் கண்ணீா. க.ஜவகரின் திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும், சுப்ரபாரதி மணியனின் மேக வெடிப்பு, மூன்றாம் உலகப் போர் உள்ளிட்டவை நிரல்படுகின்றன. இவ்வரிசையில் க.ஜவகரின் திணையுணர் பருவம், சுப்ரபாரதி மணியனின் சூழல் அறம், நக்கீரனின் இயற்கை 24x7 – சுற்றுச் சூழல் வழிகாட்டி நூல், எஸ்.ராமகிருஷ்ணனின் காண் என்றது இயற்கை, தியோடர் பாஸ்கரனின் இன்னும் பிறக்காத தலைமுறைக்காக, கிருஷ்ணன் ரஞ்சனாவின் இப்போது அவை இங்கு வருவதில்லை என்கிற, சமீபத்தில் வெளியான, சூழல் சார்ந்து விவாதிக்கிற ஆறு கட்டுரை நூல்களின் உள்ளடக்கப் பொருண்மைகள் பின்வருமாறு புலப்படலாகின்றன.

புதுப்புனல் வெளியீடாக, 2017இல் வெளிவந்துள்ள க.ஜவகரின் திணையுணர் பருவம் என்னும் கட்டுரை நூல் பதினாறு கட்டுரைகளை உள்ளடக்கி இருக்கிறது. தற்காலத் தமிழ்த் திறனாய்வுச் சூழலில் வெகுவாகப் பேசப்படுபவராக இருக்கிற பாமயனின் வரிசையில் வைத்துப் பார்க்கப்படுகிற க.ஜவகரை அதே பார்வையில் அணுகும் போது இவரின் இந்நூல் ஏமாற்றத்தைத் தருவதாக அமைந்து விடுகிறது. ஏனெனில், முதல் எட்டு கட்டுரைகள் மட்டுமே நூலின் தலைப்பிற்குப் பொருந்திடும் வகையில் அமைய, ஏனைய பிற கட்டுரைகள் நூலின் அளவை நிறைவு செய்யும் நோக்கில் மட்டுமே தொடர்பற்றுக் கோர்க்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், திணையுணர் பருவம் என்னும் கலைச்சொல்லுக்கான விளக்கம், திணைக்கோட்பாடு என்பது சூழலியத்தின் மறுவுருவாக விளங்கும் விதம், ஏனைய இஸங்களிலும் இலக்கியங்களுடனும் இச்சிந்தனை செலுத்தியுள்ளத் தாக்கம் குறித்து இவ்வெட்டிலும் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுடன் “இயற்கையை முதன்மைப்படுத்தும் அறவியல் பண்பே திணைக்கோட்பாட்டினதும், சூழலியத்தினதும் மைய நோக்கமாக அமைந்துள்ளன. மனித குலம் இயற்கையைச் சிதைப்பதன் வழியே தனது வாழ்வையும் எவ்வாறு சிதைத்துக் கொள்கிறது என்பதை உணர்த்துகின்றன. இன்றைய தொழில் பெருக்கம், உலகமயமயம் முதலியவற்றிலிருந்து மனித குலம் உய்யும் வழியையும் இவ்விரு கோட்பாடுகளும் முன் வைக்கின்றன”[2] என்கிற விளக்கத்தினைத் தந்து இதிலுள்ள இரண்டாம் கட்டுரை நுட்பமாக நீள்கிறது. என்கிற விதத்தில், சூழல்சார் சிந்தனை முறைக் கட்டுரைப்

படைப்பு வகைமையில் இந்நூல் தன்னை இணைத்துக் கொள்கிறது.

எங்கும் நீக்கமற நிறைந்து பெருகி வளரும் மாசுக்களாலும், பலவிதமான சுற்றுச் சூழல் சீர்குலைவுகளாலும் பருவ நிலை மாறுபாடுகள், புதிது புதிதாகத் தோன்றும் உடல் நலக்கேடுகள், இன்னபிற குளறுபடிகள் என அனைத்து ஜீவராசிகளும் அச்சுறுத்தப்பட்டு வரும் அபாயகரமான காலகட்டம் இது. இவற்றை உணர்ந்து, சூழலைக் காக்கும் விதத்தான் விரைந்து செயலாற்ற வேண்டிய வழிமுறைகளைச் சுட்டி, சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தைக் கவனப்படுத்தும் 24 கட்டுரைகளை உள்ளடக்கிய ஒன்றாகத் திகழ்வதுதான் சுப்ரபாரதிமணியணின் சூழல் அறம் என்னும் கட்டுரை நூல்.

“மனிதனின் பேராற்றலும் பிறவற்றைக் கட்டுப்படுத்தும் ஆசையும் காடு, மலை, கடல், மண் என எல்லாவற்றையும் அழிக்கின்றன. இவ்வுலகில் எல்லாவகை உயிரினங்களுக்கும் வாழ உரிமை உள்ளது. ஒவ்வொரு உயிரினமும் தனக்கான பணியைச் செய்து கொண்டிருக்கிறது. ஒரு சிறு பாக்டீரியா கூடத் தான் சார்ந்த வேறொரு நுண்ணுயிருக்கு உணவையும் பாதுகாப்பையும் தரக்கூடியது. அனைத்து உயிர்களும் வாழ எதிர்நோக்கும் அறத்தைக் கொல்லுவது, காடுகளை அழிப்பது, ஆறுகளை மாசுபடுத்துவது எனச் சுற்றுச் சூழலைக் கெடுப்பதன் மூலம் மனிதன் தீமை செய்கிறான்.”[3] இவற்றிலிருந்து மனிதன் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமெனச் சுட்டி, இயற்கைப் பொருட்களின் மேன்மை, இ-குப்பை, நெகிழிக் குப்பைகள் தரவிருக்கும் துயர்கள் போன்ற பலவற்றையும் அடையாளங்காட்டி நிறைகிறது.

சுற்றுச்சூழலை அடிப்படையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும் என விரும்புவரா நீங்கள்? அப்படியெனில் இதுவே உங்களுக்குப் பொருத்தமான நூல் என்கிற கோஷத்துடன் தொடங்கும் இந்நூல், 18 சூழல் விழிப்புணர்வு கட்டுரைகளை உள்ளடக்கியதாகக் காணக்கிடைக்கிறது. சுற்றுச் சூழல் கிலோ என்ன விலை? என்று கேட்பவர்கள் ஒருபுறம்; சுற்றுச் சூழல் ஆர்வலராக இருந்தும் அதன் அரசியல் புரியாது வெறும் ∴பேசன் சூழலியலாளராக மட்டுமே நீடிப்பவர்கள் மறுபுறம்; இவர்கள் அனைவருக்கும் புரியும் வகையில் அறிவியல், அரசியல், அறவியல் அடிப்படையில் இந்நூல் சுற்றுச் சூழலைச் சொல்லித் தருகிறது. “இயற்கைதானே நம்மைக் காப்பாத்துது. இவங்க எப்படி இயற்கையைக் காப்பாத்துவாங்க”[4] என்கிற பகடி சார்ந்த வினாவை ∴பேசன் சூழலியலாளர்களை நோக்கி வினவுவதாகத் தொடங்கி, “ஓர் அறிவியல் அமைப்புப் பேசும்போது, அது யாருடைய குரலை ஒலிக்கிறது; அறிவியலின் குரலையா ஆலையின் குரலையா? அதை நாம்தான் உற்றுக் கேட்க வேண்டும். அதுவே இயற்கையின் குரல்”[5] என வலியுறுத்தி முடிகிறது. இந்நூல்.

இயற்கை பற்றிய ஆழ்ந்த புரிதலை உண்டு செய்யும் விதமாக உருவாக்கப்பட்டிருக்கும் எஸ்.ராமகிருஷ்ணனின் காண் என்றது இயற்கை என்னும் நூல், நாம் எவ்வளவோ முறை கண்டுங் கூட விலகிப் போன இயற்கையின் உன்னதங்களை நின்று, மிக நுட்பமாக அவதானித்து, துல்லியமாக அடையாளம் காட்டி, எளிய புரிதலை உண்டு செய்யும் விதமாய் அமைந்திருக்கிறது. மலையின் தோற்றத்தை விவரிப்பது தொடங்கி, ஆறுகளின் நடனத்தை வர்ணிப்பது வரையிலுமாகப் பரவி 15 கட்டுரைகளின் தொகுப்பாக முடிகிற இப்பயண நூல், “நகர வாழ்வில் இயற்கை என்பது தொட்டிச் செடியாகச் சுருங்கிப் போயிருக்கிறது. இந்த மூச்சுத் திணறலில் இருந்து விடுபடுவதற்காகவே பயணம் அவசியமாகிறது. கடற்கரையோரம் அதிகாலை நேரம், தனித்துப் பயணம் செய்து பாருங்கள். காற்றும் நிலக்காட்சியும் எவ்வளவு அற்புதமானவை என்பதை உணர்வீர்கள். மீன்கள், பறவைகள், கடல் ஆமைகள், புழு பூச்சிகள் என்று உயிரினங்கள் யாவும் பயணம் செய்து கொண்டே இருக்கின்றன. மனிதர்கள் மட்டுமே அவரவர் கூண்டுகளை விட்டு வெளியே வர

மறுக்கிறார்கள்"[6] எனப் பேசித் தொடங்கும் இந்நூல் இயற்கை குறித்த ஈடுபாடும் இலயிப்புமே மானுட அக விடுதலையின் ஆதார உணர்வுகள் ஆகும் எனச் சுட்டி நிறைகிறது. இத்துடன், இயற்கையானது மனிதனுக்கு இயல்பாக வாழவென எவ்வெவ் விதங்களில் எல்லாம் கற்றுத் தருகிறது என்பதையும் சொல்லியிருப்பதில்தான் இந்நூலின் தனித்துவமே அடங்கியிருக்கிறது எனலாம்.

சுற்றுச்சூழல் மற்றும் காட்டுயிர்ப் பாதுகாப்புப் பிரச்சினைகள் சார்ந்த அபூர்வமான தகவல்களைச் சுயமான பார்வையுடன், 32 கட்டுரைகளாக ஆக்கி, இன்னும் பிறக்காதத் தலைமுறைக்காக என்னும் தலைப்பின் கீழ்த் தரப்பட்டுள்ள கட்டுரைத் தொகுப்பாக இருப்பதுதான் சு.தியோடர் பாஸ்கரனின் இச்சூழல் மேம்பாட்டுப் பனுவல். இயற்கைக்கு எதிரான மனிதர்களின் குற்றங்கள் குறித்த வினாக்களைப் பலவாறு எழுப்புவதுடன் வன உயிர்கள் மற்றும் தாவரங்களின் அழிவுத் தொடர்பாக இப்பனுவலின் ஆசிரியர் முன் வைக்கின்ற எச்சரிக்கைகள், இயற்கையின் மீதான பேரன்பிலிருந்தும் இயற்கையின் நீதி, அறம் குறித்த தார்மீக உணர்வெழுச்சிகளிலிருந்துமே பிறக்கின்றன. "சுற்றுச் சூழல் பிரச்சினைகளை சமூக நீதி நோக்கில் அணுகுவதுதான் எல்லா மக்களுக்கும் பாகுபாடு இல்லாமல் பயனளிக்கும். வரும் சந்ததிகளுக்கு இப்பூவுலகில் நலமான வாழ்வு அமைய வேண்டும் என்றால் அதற்கு வளரும் நாடுகளில் சூழல்சார் விழிப்புணர்வு ஏற்பட்டு அது அரசின் திட்டங்களிலும் பிரதிபலிக்கப்பட வேண்டும்"[7] என வலியுறுத்தும் இப்பனுவலானது, சுற்றுச் சூழல் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழில் எழுதப்பட்ட அரிய ஆவணமாகவே காட்சிப்படுகிறது.

இயற்கை வேளாண்மை, காட்டுயிர்கள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்த அக்கறைகளும் மிகவும் விரிவடைந்துவரும் நடப்புச் சூழலில் கிருஷ்ணன் ரஞ்சனாவின் 53 சிறு கட்டுரைகள் அடங்கிய இப்போது அவை இங்கு வருவதில்லை என்னும் பனுவல் கவனத்திற்குரியதாகப்படுகிறது. "தேவையைக் குறைப்பதன் மூலம் ஆசையைக் குறைக்கலாம். ஆசையைக் குறைப்பதின் மூலம் ஆதிக்கத் தன்மையைக் குறைக்கலாம். ஆதிக்கத் தன்மையைக் குறைத்தால் ஆரோக்கியம் வளரும்"[8] என்கிற மையப் பொருண்மையின் கீழ் கட்டப்பட்டிருக்கும் இவ்வனைத்துக் கட்டுரைகளும், நாம் வாழும் பூமியின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிப்பவையாக இருப்பதுடன், இந்த உலகத்தை அழிப்பதிலும் காப்பாற்றுவதிலும் நமக்குள்ள பொறுப்புகளை இனங்காட்டிச் செல்கின்றன; என்கிற விதத்தில் இப்பனுவல் சிறந்த ஓர் இயற்கை மேம்பாட்டு நூலாகக் காணக்கிடைக்கிறது.

## தொகுப்புரை

இன்று முன்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும் துறைகளில் சூழலியல், சுற்றுப் புறச் சூழலியல் என்பன முக்கிய இடங்களை வகிக்கின்றன. இவை தமிழில் திணையியல் என்ற பெயரில் மாற்றுருவும் பெற்றிருக்கின்றன. இவை அனைவற்றின் நோக்கம், மனித இனத்துக்கும் இயற்கைப் பொருள்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் பற்றியான முறையான கற்கை நெறியாகச் செயல்படுவதேயாகும். இவற்றின் அடிப்படை அம்சங்களை உள்வாங்கி தமிழில் நாவல், சிறுகதை, கவிதையெனப் பல வகைமைகள் உருவாகியிருப்பினும், கட்டுரைப் பனுவல்களின் படைப்பு முறையானத காத்திரமானதாகப் படுகிறது. நவீனத் தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில் இரண்டு டசன்களுக்கு மேலான சூழலியல் கட்டுரையாளர்கள் இருப்பினும், கல்விப் புலம் சார்ந்தவரான க.ஜவகர், நிறுவனம் சாராப் புனைவாளர்களான சுப்ரபாரதிமணியன், எஸ்.ராமகிருஷ்ணன், நக்கீரன், கட்டுரையாளர்களாக மட்டுமே தம்மை வெளிப்படுத்திக் சு.தியோடர் பாஸ்கரன், கிருஷ்ணன் ரஞ்சனா முதலியோர் கட்டுரைப் படைப்பு முயற்சிகளில் காத்திரமானவாகளாகக் காணக்கிடைக்கின்றனா். இவர்கள் அனைவரின் நோக்கங்களும் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், இயற்கையைப்

பாதுகாத்தல் என்பவற்றில் நிலைகொள்வது தான் இவர்கள்தம் கட்டுரைப் பொருண்மைகளின் தனித்துவங்களாகப்படுகின்றன.

## முடிவுரை

நம் மூதாதையர் இயற்கையின் அம்சங்களையும், சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதன் அவசியத்தையும் இயற்கைச் சமனைப் போற்ற வேண்டியதன் தேவையையும் இயல்பிலேயே உணர்ந்திருக்கின்றனர் என்பதற்கு அவர்கள் படைத்துச் சென்றுள்ள கலை இலக்கிய வகைமைகளே சான்று பகர்கின்றன. ஆனால், நடப்புச் சூழலில் அவற்றைக் கற்கை நெறியாக ஆக்குவது, நிர்ப்பந்தித்துப் புகுத்துவது, பன்முகச் செயல்பாடுகளின் வாயிலாகப் பிரச்சாரப்படுத்துவது என்கிற நிலைமைகள் எட்டப்பட்டுள்ளன. என்கிற நிலையில்தான் போலிச் சூழலியல்வாதிகளை விடுத்து சில உண்மைத் தன்மை வாய்ந்த இயற்கை ஆர்வலர்களால் சூழலியத்தின் அவசியம், படைப்பிலக்கியங்களின் வாயிலாக பயனாளிகளிடம் கொண்டு சேர்க்கப்பட்டு வருகின்றன. இதற்குத் தற்காலச் சூழலியல் கட்டுரையாளர்களே சான்றாகின்றனர். எனினும் ‘கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சு வார்த்தை நடத்து’ என்பது சமூக வழக்கு. இதனைத்தான் அரசுடன் இணைந்து சில சூழல் ஆர்வலர்களும்கூட செய்து வருகின்றனரோ என்று எண்ணத் தோன்றாமலும் இல்லை. நமக்கிருப்பது ஒரே பூமி; நமது வாழ்வின் முதல் - முழு ஆதாரமும் கூட இதுதான். இதைச் சீரழித்தால் அதுவே நம் வாழ்வின் நசிவுக்குக் காரணமும் ஆகி விடும் என்பதையும் இவ்விடத்துக் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

## சான்றெண் விளக்கக் குறிப்புகள்

1. சுற்றுச் சூழல் கல்வி, ஜி.ராஜா, ப.1, மணிமேகலை பிரசுரம், சென்னை, முதல் பதிப்பு -2014.
2. திணையுணர் பருவம் ‘சூழலியமும் திணைக்கோட்பாடும்’, க.ஜவகர், பக்.24-25, புதுப்புனல், சென்னை, முதல் பதிப்பு, ஏப்ரல் 2017.
3. சூழல் அறம், சுப்ரபாரதி மணியன், ப.2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு நவம்பர் 2014.
4. இயற்கை 24x7 – சுற்றுச் சூழல் வழிகாட்டி நூல், ‘ஆறாம் அறிவு’, நக்கீரன், ப.11, காடோடி, திருவாரூர், முதல் பதிப்பு அக்.2015.
5. மேலது, சுற்றுச் சூழல் அரசியல், ப.129.
6. காண் என்றது இயற்கை, எஸ்.ராமகிருஷ்ணன், ப.6, உயிர்மை பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு செப்.2012.
7. இன்னும் பிறக்காத தலைமுறைக்காக, ‘சமூக நீதியும் சுற்றுச் சூழல் சர்ச்சையும்’, சு.தியோடர் பாஸ்கரன், ப.134, உயிர்மை பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு டிசம்.2006.
8. இப்போதுஅவை இங்கு வருவதில்லை, ‘குப்பை தேசம்’, கிருஷ்ணன் ரஞ்சனா, ப.185, உயிர்மை பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு டிசம்.2010.

# சங்கப் பெண்பாற் புலவர்கள் கூறும் இயற்கை

**திருமதி ம. மாதவி**
*முனைவர்பட்ட ஆய்வாளர்*
*பாத்திமா கல்லூரி, மதுரை*

## முன்னுரை

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தும் இயற்கை என்றுரைப்பது ஆன்மீகம் மனிதனால் உருவாக்க முடியாதவை இயற்கை, என்றுரைப்பது அறிவியல், என்றாலும், மனிதனும் இறைவனின் படைப்பே என்றுணர்வதே அழிவு. இதனை நன்குணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள் என்பதால் தான், ‘சங்கத் தமிழன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான்’, என்று கூறுகின்றனர். எல்லா உயிர்களும் ஒன்றுடன் ஒன்று சங்கிலிப்பிணைப்பானவை என்பதை மறுக்கமுடியாது. பஞ்சபூதங்களும், சிறுபூச்சிகளும், தாவரங்களும், விலங்குகளும் பறவைகளும் மற்றும் மனிதர்களும் என எல்லா உயிர்களும் இயற்கையே. இயற்கை அழகானது வியப்பானது, அதே சமயம் ஆபத்தானது. இவ்வியற்கையை சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களின் வழி நயம்பட எடுத்துரைத்துள்ளனர் என்றாலும், அதில் பெண்பாற் புலவர்கள் இயற்கையை கையாண்டு உள்ள விதத்தினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கை – விளக்கம்

இயற்கை தனித்தியங்கும் ஆற்றலுடையது. காலச் சுழற்சியில் அதன் ஆற்றல் மிளிருகின்றது. இயற்கையை விஞ்சும் சக்தி எதற்குமில்லை என்பதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், தாம் வாழும் இயற்கைச் சூழலுக்கேற்ப உணவு, உடை மற்றும் உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை தெரிவு செய்து கொண்டனர்.

இயற்கை பற்றி, “கவிஞனை உருவாக்கும் மாபெரும் கவிஞன் இயற்கை. கவிஞர்கள் இயற்கையைப் பல கோணங்களில் கண்டனர். தங்கள் உணர்வுக்கும், விருப்புக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப இயற்கையை விளக்கினர். ஒரு புலவனும் இயற்கையில் கொடுமையைக் காணவில்லை. கால்ரிட்ஜ் எனும் புலவர் இயற்கையையும், மனிதனையும் ஒன்றாகக் கண்டார். நாமே இயற்கை, நம் காட்சிக்குத் தென்படும் இந்த உலகு நம் எண்ணத்தின் உருவமே என்பது அவர் தத்துவம்'' என்பர். (பக்கம் 25 அன்னிமிருதல குமாரிதாமசு, பரிபாடலில் இயற்கை)

சங்க இலக்கியங்கள் முதல், இக்கால இலக்கியங்கள் வரை இயற்கையினைப் பின்னணியாகக் கொண்டே பாடல்கள் மற்றும் கதைகள் இயற்றப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியங்களின் மையம் மானிட வாழ்வே. அதனை இயற்கைச் சூழலோடு அழகுற இயம்பியுள்ளனர் புலவர்கள்.

## இயற்கை – சொல்லாட்சி

இயற்கை என்ற சொல் பழந்தமிழில், ‘இயல்பு’ என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. காலமாற்றத்திற்கு ஏற்ப இச்சொல் மொழி வரலாற்றில் பல்வேறு பொருளுடையதாகத் திகழ்கின்றது. தொல்காப்பியத்தில், இயற்கை, இயற்கைத்து, இயற்கைய, இயற்கையின் மற்றும் இயற்கையும் என எழுபது இடங்களில் ‘இயற்கை’ எனும் சொல்லாட்சி கையாளப்பட்டு உள்ளது. சங்க இலக்கியங்களில்,

**“ஒருவர் தோற்பினுந் தோற்பதுங் குடியே**
**இருவீர் வேற லியற்கையு மன்றே……”**
**(புறம். 45)**

என்றும்,

**“நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு….”**
**(திருமுரு. 187 வரி)**

என்றும்,

**“இரவும் எல்லையும் அசைவின் றாகி**
**விரை செலல் இயற்கை வங்கூ ழாட்டக்….”**
**(அகம். 255)**

என்றும், 'இயற்கை' எனும் சொல்லாட்சியை சங்கப்புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இயல்பானது இயற்கை என்பதினால் இயற்கையினைப் போற்றி வாழ்ந்தனர் நம் முன்னோர்கள்.

**சங்கப் பெண்பாற் புலவர்கள்**

சங்கப் பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கை, முப்பது அல்லது முப்பத்தி மூன்று என ஆய்வாளர்கள் வரையறுக்கின்றனர். பெண்பாற் புலவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர் 'ஔவையார்' ஆவார். அதிகப் பாடல்களை இயற்றியவரும் இவரே. இவரைப்போல், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், பாரிமகளிர் மற்றும் ஆதிமந்தி போன்றோரும் தம் பாடல்களாலும், மரபு வழியினாலும் சிறப்பு பெறுகின்றனர். நப்பசலையார், நன்னாகையார், மாற்பித்தியார் போன்ற பலப் பெண்பாற்புலவர்களில், அஞ்சியத்தை மகள் நாகையார், ஊண்பித்தை, குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி போன்ற சில புலவர்களின் பாடல்கள் சான்றாக்கப்படுகின்றன.

**அஞ்சியத்தை மகள் நாகையார்**

கடையேழு வள்ளல்களில் ஒருவரும், ஔவையாரின் நெருங்கிய நண்பருமான அதியமான நெடுமான் அஞ்சியின் அத்தை மகளாக இப்புலவர் கருதப்படுகின்றார். இவர், இயற்றியதாக, அகநானூற்றில், தலைவி கூற்றாக பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. தலைவி ஒருத்தி, தன் தலைவனின் சிறப்பினை, தோழிக்கு கூற முனைகின்றாள்.

'குன்றநாடன், நற்குடியில் பிறந்தவன், சுற்றத்தார் பலரையும் போற்றிப் பாதுகாக்கக் கூடியவன், என்பால் பேரன்பு உடையவன், சுடுசொல் பேசாதவன், மிகுந்த அன்பினன்' என்றெல்லாம் தலைவனின் உயர்பண்பினை எடுத்துரைக்க விளைந்த தலைவி, 'பாடி வரும் அருவி, அதற்கு ஏற்ப நடனமாடி வரும் மயில், அதன் பின்னர் வந்த பல சுற்றத்தாருக்கும் தலைவனாக விளங்கும் கடுவன், பலா மரத்திலுள்ள பெரும் பழத்தை தழுவிக் கொண்டு தன் துணையான பெண் குரங்கினை அழைக்கும் மலைநாட்டின் தலைவன் என இயற்கை நிகழ்வினை எடுத்துரைக்கின்றான். இதனை,

**"முடவுமுதிர பலவின் குடம்மருள் பெரும்பழம்**
**பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்**
**பாடுஇமிழ் அருவிப் பாறை மருங்கின்**
**ஆடுமயில் முன்னது ஆக, கோடியர்**
**விழவு கொள் மூதூர் விறலி பின்றை**
**முழவன் போல அகப்படத் தழீஇ**
**இன்துணைப் பயிரும் குன்ற நாடன்….."**

**(அகம். 352)**

எனும் வரிகளால் அறியலாம். தலைவனின் பண்பிற்கு, குரங்கின் செயலை இணைத்துக் காட்டுகின்றார் புலவர். இதன் வழி, தலைவி தன் தலைவனை போற்றிப் புகழ்கின்ற பாங்கு அறியப்படுகின்றது. மேலும், இல்லறக் கடமைகளில் ஒன்று சுற்றத்தாரைப் பேணுதல், அதை தலைவனும், தலைவியும் இணைந்து செய்ய வேண்டும் என்பதனை 'இன்துணைப் பயிரும்' என்றதன் வழி உரைத்துச் செல்கின்றார் புலவர். இல்லறக் கடமைகளை, தலைவனும், தலைவியும் இணைந்தே செய்ய வேண்டும் என்பதனை,

**"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,**
**துறவோர்க்கு எதிரதலும், தொல்லோர் சிறப்பின்,**
**விருந்து எதிர்கோடாலும், இழந்த என்னை, நும்…."**

**(சிலப். கொலை.)**

என இளங்கோவடிகளும் குறிப்பிடுகின்றார்.

**ஊண் பித்தையார்**

குறுந்தொகையில் இவர் இயற்றியதாக ஒரு பாடல் காணப்படுகின்றது. இவர் ஒரு பெண்பாற் புலவர் என்றும், உணவின் மேல் அதிக விருப்பம் உடையவர் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பொருள் தேடி பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தும் தலைவியிடம் தோழி கூறுவதாய் அமைந்த பாடல்.

**"உள்ளார் கொல்லோ? தோழி உள்ளியும்**
**வாய்ப் புணர்வு இன்மையின் வாரார் கொல்லோ ?**

**மரற் புகா அருந்திய மாளருத்து இரலை**
**உறற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய**
**யாஅ வரி நிழல், துஞ் சும்**
**மாஇருஞ் சோலை மலை இறந்தோரே"**
**(குறுந். 232)**

இதில், மரல் என்னும் கொடியை உண்ட ஆண் மான், யானை ஒடித்து உண்டு விட்டுச் சென்ற யா மரத்தின் சிறிய நிழலில் தங்கி ஓய்வெடுக்கும் என்பது இயற்கை நிகழ்வு. இதனை, தலைவன் மற்றும் தலைவி நிலைக்கு சான்றாக்குகின்றார் புலவர். இரை உண்டு யாமர நிழலில் ஓய்வெடுக்கும் ஆண்மான் போல, தலைவனும் பொருள் தேடுகின்ற வினை முடித்து தலைவியிடம் வந்து சேர்வான் என்பது தலைவனுக்கு, வறண்டபாலை நிலம் காட்சிப்படுத்தப்படுகின்றது. மழை பெய்தால் அந்நிலம் செழிப்படைவது போல, தலைவன் வரவால் தலைவி மகிழ்வாள் என்பதும் உணர்த்தப்படுகின்றது. தலைவனும், தலைவியும் இணைந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதனை சுட்டுச்செல்கின்றார் புலவர். இதனை,

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது."** (குறள். 45)

என்கின்றார் வள்ளுவர்.

**"வரிமரல் கறிக்கும் மடப்பிணைந்**
**திரிமருப்பு இரலைய காடு இறந்தோரே"**
**(அகம். 133)**

மற்றும்,

**"செய்பொருட்கு அகன்றனர் ஆயினும்**
**பொய்யலர் வருவர்"** (நற். 246)

என்னும் வரிகளும் மேற்கூறிய குறுந்தொகைப் பாடலுக்கு துணை நிற்கின்றன.

**குறமகள் இளவெயினி**

குறமகள் என்பதனால் குறவர் குடியில் பிறந்தவர் என்பது அறியப்படுகின்றது. இவர் பாடியதாக புறநானூற்றில் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது. ஏறைக்கோன் என்பானின் பண்பினை மற்றொரு மன்னனிடம் எடுத்துரைக்க விளைந்த புலவர்,

**"தமர் தற் தப்பின் அது நோன்றல்லும்**
**பிறர் கையறவு தான் நாணுதலும்,**
**. . . . . . . . . . . . . . . . . . .. . .**
**எல்படு பொழுதின் இனம் தலை மயங்கி,**
**கட்சி காணாக் கடமான் நல் ஏறு**
**மடமாண் நாகுபிணை பயிரின் விடர்முழை**
**இரும்புலிப் புகர்ப் போத்து ஓர்க்கும்**
**பெருங் கல் நாடன்- எம் ஏறைக்குத் தகுமே"**
**(புறம். 157)**

என்கின்றார்.

மாலை வேளையில் காட்டகத்தே, கூட்டத்தில் இருந்து பிரிந்து சென்ற கலைமான் ஒன்று தன் பெண் மானை அழைக்கின்ற குரலை, மலைக் குகையில் வாழும் ஆண் புலி செவி தாழ்த்திக் கேட்டது என்பது இயற்கை நிகழ்வு. இதனை, ஏறை கோனின் பண்பிற்கு நிகராக்குகின்றார். புலி, மானை வேட்டையாடும். பொழுதோ மாலை பொழுது என்பதனால் ஒலியை கேட்கின்றது என்கின்றார் புலவர். ஏறைக்கோன் அப்புலியைப் போன்றவன். எவ்வாறெனில், தன்னைச் சார்ந்தவர்கள் தனக்குச் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்கின்றான். அவர்களின் பிழைக்காக தான் வருந்துகின்றான், பிறர் வறுமை கண்டு நாணுகின்றான். இத்தகைய சிறப்பு யாருக்கும் வாய்க்காது. அது எம் ஏறைக் கோனுக்கே உரியது என பாராட்டுகின்றார் புலவர். அதற்கு,

**"அன்பெனப் படுவது தன் கிளை செறாமை..."** (கலி. 133)

**"குற்றம் பார்க்கின் சுற்ற மில்லை"**
**(கொன்றை. 18)**

**"குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை"**
**(வில்.பா. கிருட்டிணன் தூது. 17)**

எனும் வரிகளும் வலுசேர்க்கின்றன.

**குறமகள் குறியெயினி**

குறிஞ்சித் திணையை இருப்பிடமாகக் கொண்டு, குறக்குடியில் பிறந்து, குறி சொல்லக் கூடியவராக இருத்தல் வேண்டுமென, இவரின் பெயர்கொண்டு ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். மேலும், இவர் பெண்பாற் புலவர் எனவும், இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் தலைவிக் கூற்றாய் இடம் பெற்றுள்ளது எனவும் கூறுவர்.

பெரும்பாலும் சங்க அகப்பாடல்களில், தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தி உடல்மெலிவாள் பசலை படரும் என்றெல்லாம் கூறகின்றனர். ஆனால் இப்புலவர் சுட்டும் தலைவி, வருத்தம் கொள்ளாது, தலைவன் வருவான் என நம்பிக்கை கொண்டு, மனத்திடத்துடன் இருப்பதாக சித்திரிக்கப்படுகின்றாள்.

**"நின் குறிப்பு எவனோ ? – தோழி – என் குறிப்பு**
**என்னொடு நிலையாது ஆயினும், என்றும்**
**நெஞ்சு வடுப்படுத்துக் கெட அறியாதே**
**. . . .. . . . . . . . . . . . . . . . .**
**பீலி மஞ்ஞை ஆலும் சோலை,**
**அம் கண் அறைய அகல் வாய்ப்பைஞ் சுனை**
**. . . . . . . . . . . . . . . . . . . . . .**
**சாரல் நாடனொடு ஆடிய நாளே."**

**(நற். 357)**

முன்னொரு நாள், மழையில் நனைந்த மயில், ஆடிய சோலையிலுள்ள சுனை நீரில் தலைவனோடு நீராடி மகிழ்ந்த இன்பம் போதும். அந்த நினைவில், தலைவன் வரும் வரை பசலை படராது மன உறுதியுடன் இருப்பதாக தோழியிடம் தலைவி கூறுகின்றாள். மழை பெய்ய மயில் நனைந்து, சோலையில் உலாவி வருமென்றது, தலைவன், முன்பொரு நாள் செய்த அன்பினால் மகிழ்ந்த தலைவியின் உள்ளம் இப்போதும் சோர்வடையாமல் உள்ளதைச் சுட்டுகின்றது. தலைவியின், இம் மனநிலைக்கு,

**"அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்**
**பின்இருந்து வாழ்வார் பலர்"**

**(குறள். 1160)**

என வள்ளுவரும் கருத்துரைக்கின்றார்.

## முடிவுரை

வாழ்வை அகம், புறம் என வகுத்து வாழ்ந்த நம் தமிழர்கள், இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பர். மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றையும், இயற்கைச் சார்ந்து அல்லது துணை கொண்டு அமைத்து வாழ்ந்தனர். அவ்வாழ்வியலைக் கூறும் புலவர்களும் தங்கள் கருத்துக்களை இயற்கைப் பின்னணியில் எடுத்துரைத்துள்ளனர் ஆண்களுக்கு, பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதனைச் சங்க காலம் முதற்கொண்டே நம் தமிழ் சமூகம் குறிப்பிட்டுக் கொண்டு தான் வருகின்றது. பெண்பாற் புலவர்கள், தங்களின் கருத்தை இயற்கையோடு இணைத்தே எடுத்தரைத்துள்ளனர். அவ்வாறு அவர்கள் இயற்கையை கையாண்டுள்ள விதம் இன்று வரையிலும் போற்றுதற்குரியதாய் அமைந்து சிறக்கின்றது.

# தொல்காப்பியம் காட்டும் இயற்கை

**த. மகேஸ்வரி**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலம்*
*எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்*
*காட்டாங்குளத்தூர்*

**முனைவர் தா. ஜெயந்தி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல்புலம்*
*எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்*
*காட்டாங்குளத்தூர்*

***ஆய்வுச் சுருக்கம்***

*இலக்கண நூல்களில் தலைமைச் சான்ற நூலாக விளங்கும் தொல்காப்பியமானது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களை கொண்டு அமைகின்றது. இம்முன்று அதிகாரங்களிலும் இயற்கை பற்றிய செய்திகள் இடம் பெற்றாலும் பொருளதிகாரம் இயற்கைக்கு தனித்தச் சிறப்பினை தந்துள்ளது. "திணை" என்ற பொருளில் நிலங்களை வகுத்து, அந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலோடு இயைந்த இயற்கையையும், அவைக்குரிய இயற்கைப் பின்னணியையும், இயற்கையோடு இயைந்த இசையயும், இசைக்கருவிகள் பற்றிய செய்திகளையும் விளக்கிச்செல்வதில் தொல்காப்பியம் தனித்த இடத்தை பெறுகின்றது. இதனை ஆராயும்விதமாக இக்கட்டுரை அமைகின்றது.*

**முன்னுரை**

ஒரு தனிமனிதனும் அவன் சார்ந்திருக்கும் சமுதாயமும் இணைந்து வாழத் துணைசெய்வது இயற்கையாகும். உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் இயற்கையைச் சார்ந்தே வாழ்கின்றன. உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படைத் தேவைகள் கிடைப்பதற்கு ஆதாரமாக இருப்பதே இயற்கைத் தான் என்று கூறுவது மிகையாகாது. அவ்வகையில் தொல்காப்பியம் காட்டும் ஐம்பூதங்கள் பற்றிய செய்திகள், மக்கள் வாழ்வியலில் இயற்கை, நிலப்பாகுபாடு, இயற்கை வளங்கள், உயிரினப் பாகுபாட்டில் இயற்கை, தாவரங்களின் இனங்கள் முதலியவை இக்கட்டுரையின் ஆய்வுப் பொருண்மைகளாக அமைகின்றது.

**ஐம்பூதங்கள்**

உலகமானது ஐம்பூதங்களோடு கலந்த கலவையாகும். இவ்வுண்மையை தொல்காப்பியர் நிலம், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம், என்னும் ஐந்தும் தன் நிலையில் இருந்து மாறுபாடு இல்லாமல் ஒன்றோடொன்று இனணந்தவையே உலகம் என்றும் இவ்வைந்தும் தன் நிலையில் மாறுபாடு இல்லாமல் இயங்கும் போது உயிரினங்கள் எவ்வித துன்பமும் இல்லாமல் வாழ முடியும் என்பதை,

**நிலந்தீ நீர்வளி விசும்போடைந்துப்**
**கலந்த மயக்கமுலக மாதலி**
**னிருதினையைம் பாலியனெறிவழா அமைத்**
**திரிவில் சொல்லொடு தழாஅல்வேண்டும்[1]**

எனவும்,

சங்க இலக்கியம் இதனை,

**மண்திணிந்த நிலனும்**
**நிலன்ஏந்திய விசும்பும்**
**விசும்பின்தை வருவளியும்**
**வளித்தலை இயதீயும்**
**தீமுரணியநீரும் என்றாங்கு**
**ஐம்பெரும்பூதத்து இயற்கைப் போல[2]**

எனவும்கூறுகிறது.

ஐம்பூதங்கள் தன் நிலையில் இருந்து மாறுபட்டு செயல்படும் போது இயற்கை பேரழிவுகள் நிகழ்கின்றன. நிலநடுக்கம், ஆழிப்பேரலை, வெள்ளம், புயல் முதலியவை உண்டாகின்றன. இக்கருத்தினையே தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் வலியுத்துகின்றது.

### நிலம் பற்றிய செய்திகள்

தொல்காப்பியத்தில் நிலம் என்னும் பொருளை விளக்கும் பகுதி திணை எனப்படுகிறது. திணை என்ற சொல் பல தரப்பட்ட இயற்கை செய்திகளைக் கொண்டுள்ளதாக விளங்குகின்றது. நிலம் எனும் சொல்லை தொல்காப்பியம் பூமி, இடம் என்ற பொருளில் கையாளுகிறது.

**திணைதொறும்மரீ இயதிணை நிலப்பெயரே[3]**

ஐம்பூதங்களில் ஒன்றான நிலம் பற்றி தொல்காப்பியம் பல இடங்களில் பேசுகிறது.

**வினைசெய்இடத்தின்நிலத்தின் காலத்தின்[4]**
**நிலப்பெயர்குடிப் பெயர்குழுவின் பெயரே[5]**
**இருநிலத்தீண்டா அருநிலை[6]**

நிலம் என்பதை நாடு என்ற பொருளிலும் தொல்காப்பியர் பயன்படுத்துகிறார். அன்றைய தமிழ்நாடு பகுதி எது என்று” வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறு நல்லுலகு ”என்ற பாயிரத்தில் மூலமும், அதனுடன் சேர்ந்த அல்லது சுற்றியுள்ள பன்னிருநிலம் அல்லது நாட்டை பற்றிய கருத்தை,

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தம்குறிப்பின வேதிசைச்சொல் கிளவி[7]**

என்ற வரிகளிலும் எடுத்துரைக்கின்றார்.

### முப்பொருட்களில் இயற்கை

தொல்காப்பியர் அகத்திணைகளை (கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை) ஏழாகவரையறுத்து அவற்றுள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகளுள் பாலைத்திணை தவிரமற்ற நான்கும் நிலம்பெறும் எனவும் முதல், கரு, உரி ஆகிய மூன்றும் ஐந்துதிணைகளில் அடங்கும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**“முதல் கருவுரிப்பொருளென்ற மூன்றே**
**நுவலுங்காலை முறைசிறந் தனவே[8]**

முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும். நிலங்களின் பாகுபாட்டை எடுத்துரைக்கும் போது இயற்கை வளங்களாகிய காடு, மலை, கடல், மணல் முதலியவை இடம்பெறுகிறது.

**முதல் எனப்படுவது நிலம்பொழு திரண்டின்[9]**
**மாயோன்மேய காடுறை உலகமும்**
**சேயோன்மேய மைவரை உலகமும்**
**வேந்தன்மேய தீம்புனல் உலகமும்**
**வருணன்மேய பெரும்மணல் உலகமும்[10]**

நிலங்களுக்கு உரியபொழுதுகளாக பெரும்பொழுது சிறும்பொழுது என வகைப்படுத்தப்பட்டு இயற்கையின் பருவங்கள் பற்றியும் பேசப்பட்டுள்ளது. பருவத்திற்கு ஏற்றவாறு மனிதர்களின் செயல்பாடுகள், தொழில்கள், பயன்படுத்திய

உணவுகள், இயற்கை வளங்களாகிய மரங்கள், இயற்கையோடு இயைந்த இசை பற்றிய செய்திகள், அந்த நிலங்களுக்குரிய மக்கள் வழிபட்ட தெய்வங்களின் பெயர்கள் முதலியவை பற்றியும் கூறுகின்றது.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறவை**
**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப[11]**

நிலம் மற்றும் பருவச் சூழல்களை அடிப்படையாகவைத்தே புணர்வு, பிரிவு, ஆற்றியிருத்தல், இரக்கம், ஊடல் முதலிய மக்கள் வாழ்வியலின் ஒழுக்க நிலையும் அமைந்துள்ளது. தொல்காப்பியம் இயற்கையை மட்டும் தனியே பேசாமல் இயற்கையோடு இணைந்த மனிதவாழ்வையும் சேர்த்து எடுத்துரைக்கின்றது. இதன் காரணமாகவே திணை வைப்பு முறைகளும் இருந்தன.

தொல்காப்பியர் திணை என்ற சொல் குறித்து வரையறை செய்யவில்லை. உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் திணை என்னும் சொல்லை ஒழுக்கம் அல்லது நடத்தை என்று வகைப்படுத்திக் கூறுகின்றார். திணை என்ற சொல் முதலில் நிலத்தைக் குறித்து அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை ஒழுக்கலாற்றைப் பற்றி பேசுகின்றது. இதன் வழி மக்களின் வாழ்வியல் இயற்கையோடு இயைந்தவையாகும் என்பது புலனாகின்றது.

## மரபியல் காட்டும் இயற்கை

தொல்காப்பியம் இயற்கைப் படைத்தளித்த ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிரினங்களைப் பற்றி எடுத்துரைகின்றது. அவற்றுள் ஓரறிவு உயிகள் பற்றிபேசும்போது புல்வகைகளும் மரவகைகளும் கொடிவகைகளும் இடம்பெறுகின்றது.

**புல்லும்மரனும் மோரறிவினவே**
**பிறவுமுளவேயக்கிளைப் பிறப்பே[12]**

அவற்றோடு மட்டுமல்லாமல் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை, இலை, தளிர், குலைகள், பூக்கள், அரும்பு, காய், பழம், செதில், மரப்பட்டை முதலிய புல்லினத்திற்கும் மரத்தினத்திற்குரிய உறுப்புகளையும் பற்றி மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

**தோடேமடலேயோலையென்றா**
**வேடேயிதழேபாளையென்றா**
**வீர்க்கேகுலையென நேர்ந்தென[13]**
**இலையேதளிரேமுறியேதோடே**
**சினையேகுழையேபூவே யரும்பே[14]**
**காயேபழமேதோலே செதிளே[15]**

இதன்வழி தமிழர்களின் நுண்ணறிவுப் புலனாகின்றது.

## முடிவுரை

பஞ்சபூதங்களின் தன்மையறிந்து மரஞ்செடி, கொடிகள் நட்டு இயற்கைவளத்தைப் பண்படுத்தியவர்கள் பண்டையத்தமிழர்களே என்று கூறுவது மிகையாகாது. தொல்காப்பியத்தில் இடம்பெற்ற இயற்கைப் பற்றியச் செய்திகளை வைத்துப்பார்க்கும் போது பண்டையத் தமிழர்கள் சுற்றுப்புற ஆர்வலராக இருந்துள்ளமையை அறிய முடிகிறது. இயற்கையின் அழகையும் இயற்கையை பாதுகாக்கவிட்டால் ஏற்படும் விளைவுகளையும் அறிந்து செயல்பட்டுள்ளனர். பண்டையத் தமிழர்கள் பேணிப் பாதுகாத்த இயற்கையின் முக்கியத்துவத்தை அறிந்து இயற்கையையும் இயற்கைவளங்களையும் போற்றிப் பாதுகாப்பது நமது கடைமையாகும்.

## தொகுப்புரை

ஐம்பூதங்களின் வழியாக இவ்வுலகமானது இயங்குகிறது. இவை ஐந்தும் தன்நிலையிலிருந்து

மாறி பேரழிவுகளை உண்டாக்காமல் தடுப்பதற்கு இயற்கையப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

தொல்காப்பியத்தில் நிலங்கள் பற்றி பேசும்போது முக்கியமாக ஐந்துநிலங்களுக்குரிய இசைகளையும், இசைக்கருவிகளையும் பற்றியும் குறிப்பிடுகின்றது.

இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கையை நடத்திய பழந்தமிழர்கள் தமது இலக்கியங்களில் இயற்கை பற்றிய வர்ணனைகளை எடுத்துரைத்துள்ளார்கள். தம்மைச் சுற்றி உள்ள இயற்கையில் உள்ள மரங்கள், தாவரங்கள், மலர்கள், பற்றியும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து எழுதிவைத்துள்ளார்கள்.

மிக நுண்ணிய புல்லிற்கும் உள்ள அறிவினை ஆராய்ந்துக் கூறும்போது பழந்தமிழர்கள் நுண்ணறிவு பெற்றவர்களாகவும், அறிவியல் புலமைப் பெற்று விளங்கியவராகவும் இருந்தனர் என்பதை அறியலாம்.

பண்டையத் தமிழர்கள் இயற்கை ஆர்வலராக இருந்துள்ளமையை இலக்கண இலக்கியங்கள் வழி அறியலாம்.

**அடிக் குறிப்புகள்**

1. தொல்காப்பியம் பொருளதிகரம் மூலமும் உரையும், உரை. பேராசிரியர், கணேசையர் பதிப்பு, நூ.எண் 644, ப.எண் 676, ப.ஆண்டு 2007, உலக தமிழாரய்ச்சி நிறுவனம், தரமனி, சென்னை
2. புறநானூறு மூலமும் உரையும், பா.எண் 2, ப. எண் 3, ப.ஆண்டு 2010, சாரதாபதிப்பகம், சென்னை
3. தொல்காப்பியம் பொருளதிகரம். இளம்பூரணர் உரை, நூ.எண் 22, ப.எண்19, ப.ஆண்டு 1969, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 1
4. தொல்காப்பியம் சொல்லதிகாரம் மூலமும் உரையும், கணேசையர் பதிப்பு, நூ.எண்77, ப.எண் 65, ப.ஆண்டு 1927, நமச்சிவாய முதலியார் பதிப்பு, காக்ஷ்டன் பிரெஷ், சென்னை.
5. தொல்காப்பியம் சொல்லதிகாரம் மூலமும் உரையும், கணேசையர் பதிப்பு, நூ.எண்162, ப.எண் 109 ப.ஆண்டு 1927, நமச்சிவாய முதலியார் பதிப்பு, காக்ஷ்டன்பிரெஷ், சென்னை.
6. தொல்காப்பியம் பொருளதிகரம். இளம்பூரணர் உரை, நூ.எண்71, ப.எண் 103, ப.ஆண்டு 1969, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 1.
7. தொல்காப்பியம் சொல்லதிகரம் இளம்பூரணர் உரை, நூ.எண் 394, ப.எண்212, ப.ஆண்டு 1927, நமச்சிவாய முதலியார் பதிப்பு, காக் ஷ்டன்பிரெஷ், சென்னை.
8. தொல்காப்பியம் பொருளதிகரம். இளம்பூரணர் உரை, நூ.எண்3, ப.எண்4, ப.ஆண்டு 1969, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை- 1
9. மேலது, நூ.எண் 4, ப.எண் 8.
10. மேலது,நூ.எண் 5, ப.எண் 9.
11. மேலது,நூ.எண் 20, ப.எண் 17.
12. மேலது, நூ.எண் 582, ப.எண் 639.
13. மேலது, நூ.எண் 583 , ப.எண் 641.
14. மேலது, நூ.எண் 641, ப.எண் 673.
15. மேலது, நூ.எண் 642, ப.எண் 674.

# தொல்காப்பியத்தில் இயற்கை

**ஜெ. செந்தில்குமாரி**
*உதவிப் பேராசிரியர்*
*பி.எஸ்.ஆர் பொறியியல் கல்லூரி, செவல்பட்டி*

***ஆய்வுச்சுருக்கம்***

*“நீலவான ஆடைக்குள் உடல் மறைத்து*
*நிலாவென்று காட்டுகின்றாய்*
*ஒளிமுகத்தை!*
*கோல முழுவதும் காட்டிவிட்டால்*
*காதல் கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?!*

*என்ற பாரதிதாசனின் கவிதை நிலவின் இயற்கை அழகினைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ளது. இப்படி கவிதைகளிலும், கதைகளிலும் காவியங்களிலும் இயற்கை ஆட்சி செலுத்துகிறது என்றால் அதற்குக் காரணம் இலக்கியப் படைப்பாளிகளே எனலாம். இயற்கை அன்னையின் மடியில் தோன்றி அதன் உடனேயே பயணம் செய்து இறுதியில் இயற்கையின் வசமே சென்றடையும் உயிர்களில் மனிதனுக்கு மட்டுமே சிந்திக்கும் ஆற்றல் அமைந்துள்ளது. அவ்வாற்றலின் துணைகொண்டு இலக்கியங்களைப் படைத்த மனிதன், அவ்விலக்கியங்களில் தான் வாழும் உலகில் காணும் காட்சிகளையும், அதன் மூலம் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் எடுத்துரைக்க முற்பட்டான். படைப்பாளியின் அனுபவத்தின் வெளிப்பாடே இலக்கியமாக மாறுகிறது எனலாம். இதனை “படைப்பு ஆற்றல் திறன் உடையவர்கள் தாம் வாழ்வில் பெற்ற இன்ப துன்பங்களாகிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கின்றனர் இந்நிலையில் மொழியின் மூலம் தங்கள் அனுபவங்களை அவர்கள் எடுத்துரைக்கின்றனர்” என்ற அ.ச ஞானசம்பந்தனின் கூற்று மேலும் தெளிவுபடுத்துகின்றது.*

*(இலக்கியக்கலை – பக்கம் -24)*

**முன்னுரை**

“இள நெஞ்சே வா தென்றல் தேரில்
எங்கும் போய் வரலாம் - அட
அங்கே பார் மஞ்சள் வான்முகில்
கையால் நாம் தொடலாம்
கண்ணோடு ஒரு சந்தோஷம்
என்னோடு ஒரு சங்கீதம்”

என்ற இக்காலக் கவிஞர்களின் கற்பனைக்கு மூல வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் விளங்கியவை சங்க இலக்கியங்கள். ஒவ்வொரு நூலிலும் பல இயற்கை சார்ந்த கற்பனை இடம் பெற்றிருக்கும். சங்க இலக்கிய நூல்களுள் முதல் தமிழ் இலக்கண நூலாகத் திகழ்கிறது தொல்காப்பியம். எழுத்து, செல் பொருள் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்நூல் பொருள் இலக்கணத்தை, அகம், புறம் என்று பிரித்து, மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறியுள்ளது. இயற்கையின் எழில் கொஞ்சும் காட்சிகளை எடுத்து இயம்புகிறது தொல்காப்பியம். இயற்கையில் தோன்றிய பொருட்களை இவை இவை என்பதை

**“இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்”**

**(தொல்காப்பியம் பக்கம் 24)**

என்ற நூற்பா வழி விளக்குகிறது.

**தொல்காப்பியமும் இயற்கையும்**

இயற்கை என்பது இயல்பாக இருப்பது. மனிதனால் உருவாக்கப்படாத அனைத்துமே இயற்கையில் அடங்கும். மாறாத தன்மையுடையதாக இருப்பதே இயற்கை எனப்படுகிறது.

**“இயல்பில் திரியாது நின்ற நிறை பொருள்”**

என்று சேனாவரையர் இயற்கைக்கு விளக்கம் அளித்துள்ளார். உலகம் எதனால் ஆனது என்பதை

**"நீரும் நிலமும் தீயும் மிக விசும்போடு**
**ஐந்துடன் இயற்றி"**

**(தொல்காப்பியம் பக்கம் 36)**

என்ற நூற்பா வழி விளக்குகிறது - இவ்வுலகம் நீர், நிலம், தீ, வானம் ஆகிய ஐம்பூதங்களால் உருவானது என்பதை அன்றே கண்டு சொல்லிய நூல் தொல்காப்பியம். மேலும் புறநானூற்றுப் பாடலிலும்,

**"இருமுந்நீர் குட்டமும்**
**வியல் ஞாலத்து**
**வளி வழங்கு திசையும்**
**வறிது நிலைஇய**
**காயமும் என்றாங்கு"**

**(புறம் - 20-1-5)**

**தொல்காப்பியமும், நிலப்பாகுபாடும்**

நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகைப்படுத்திய தொல்காப்பியம் அவற்றிற்கு,

**"வட வேங்கடம் தென்குமரி – ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகு"**

என்று எல்லை வகுத்துள்ளது. ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஒரு இடத்தைத் தீர்மானித்துள்ளது. மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்றும் காடு சார்ந்த பகுதி முல்லை, வயல் சார்ந்த நிலம் மருதம், கடல் சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் மணற்பாங்கான நிலத்தைப் பாலை என்றும் பெயரிட்டு அழைத்தது தொல்காப்பியம். இதையொட்டியே நம்பியகப் பொருளும்

**"குறிஞ்சி பாலை முல்லை மருதம்**
**நெய்தல் என திணைக் கெய்திய பெயரே"**

**(அகப்பொருள் - 14)**

என்று இந்நிலப் பகுதிகளையும் அங்கு நிலவும் கால நிலைகளையும் முதற்பொருள் என்று குறிப்பிடுகிறது. முதற்பொருள் என்பது முழுக்க முழுக்க இயற்கை சார்ந்து அமைந்த ஒன்று. அடுத்து கருப்பொருள் என்ற செயற்கையை உருவாக்கி ஐவகை நிலங்களில் உள்ள பொருள்களுக்கு பெயரிட்டு அழைக்கிறது தொல்காப்பியம். மூன்றாவதாக உரிப்பொருள் என்னும் பகுதியில் மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கூறியுள்ளது. இவ்வாறு நெறிப்படுத்தப்பட்டதை திணை என்னும் பெயரில் இந்நூல் குறிப்பிடுகிறது.

**தொல்காப்பியத்தில் உயிர்ப் பொருளும் உயிரல்லாப் பொருளும்**

உலகில் தோன்றிய அனைத்து தாவர வகைகளுக்கும் உயிர் உண்டு என்பதை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்த நூல் தொல்காப்பியமே. அத்தகைய உயிருடைய பொருட்களை ஆறு வகைப்படுத்தியுள்ளது.

**"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே**
**இரண்டறிவதுவே அவற்றோடு நாவே**
**மூன்றறிவதுவே அவற்றோடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே**
**ஆறறிவதுவே அவற்றோடு மனனே"**

**(தொல்காப்பியம் - மரபியல் - 2)**

அதுமட்டுமின்றி உயிருள்ளவற்றை உயர்திணை என்றும் உயிரல்லாத பொருட்களை அஃறிணை என்றும் வகைப்படுத்தியுள்ளது. இக்கருத்தினை பின்வரும் நூற்பா வழி அறியலாம்.

**"உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே"**

**(தொல்காப்பியம் - அகம் - 12)**

மனிதர்களை உயிர் திணையிலும் பிற உயிர்களை அதாவது சிந்திக்கும் திறனற்ற உயிர்களையும் உயிரல்லாதவற்றையும் அஃறிணை என்று குறிப்பிட்டுள்ளது.

**தொல்காப்பியமும் இயற்கைக் காதலும்**

**"காதல் காதல் காதல்**
**காதல் போயின் காதல் போயின்**
**சாதல் சாதல் சாதல்"**

**(குயில்பாட்டு – பக்கம் - 102)**

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப காதல் என்பது உயிரின் முக்கியமான தேவையாக இருக்கிறது. அன்பு, நேசம் முதலிய உணர்வுகள் இல்லையேல் மனிதன் மனிதனாக வாழ இயலாது. அதே போலத்தான் காதல் என்ற

ஒன்று இல்லாவிட்டால் உலகில் உயிர்களின் தோற்றம் இல்லை. எனவே காதல் என்பது உயிர் இயற்கை, உயிரின் தேவை. இப்படிப்பட்ட காதலை இயற்கைப் புணர்ச்சி என்கிறது தொல்காப்பியம். ஒத்த இயல்புடைய ஒரு ஆணும், பெண்ணும் சந்திந்துக் கொள்வது இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். அதில் செயற்கையும் கிடையாது, ஆணும், பெண்ணும் முதலில் பார்த்துக் கொள்வது ஊழின் வலிமையாலோ அல்லது தெய்வசக்தியின் முயற்சியாலோ தான் நடைபெற வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்து. இதனை

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"**

**(தொல்காப்பியம் - பக் - 102)**

என்றும்

**"தெய்வத்தின் எய்துழி**
**முயற்சியின்றி முடிவதாகும்"**

**(நம்பியகப்பொருள் - பக் - 93)**

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயற்கைப் புணர்ச்சி அடுத்த நிலைக்குச் சென்று வளர்ச்சி அடைவதைக் களவு என்றும் தலைவன், தலைவியின் களவு திருமணத்தில் முடிவதைக் கற்பு என்றும் குறிப்பிட்டுள்ளது. மேலும் களவில் ஈடுபடும் ஆண், பெண்ணின் பெயரைக் குறிப்பிடுதல் முறையன்று என்கிறது தொல்காப்பியம். இதனை

**"மக்கட் நுதலிய ஐந்திணையுள்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாா்"**

**(தொல்காப்பியம் - அகம் - 68)**

## முடிவுரை

**"பிறப்பதும் இறப்பதும்**
**அந்த இயற்கையோட கையிலே"**

என்ற பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் உலகில் உயிர்கள் தோன்றுவதும், மறைவதும் இயற்கையே. அதில் மனிதன் பிற உயிர்களிடமிருந்து அறிவிலும், ஆற்றலிலும் உயர்ந்து நிற்கிறான். எனவே தான் மற்ற உயிர்களை அடக்க ஆளும் தன்மை கொண்டவனாக இருக்கிறான். எத்தனை திறன்கள் கொண்டவனாக இருக்கிறானோ அதே அளவு பொறுப்பு வாய்ந்தவனாகவும் மனிதன் திகழ வேண்டும். இயற்கை தரும் கொடைகள் ஏராளம். அதை அனைத்தையும் கொண்டு இயற்கைக்கு எதிராகச் செயல்படக்கூடாது என்பதை வலியுறுத்தவே இலக்கியங்களில் இயற்கை இறைவனுக்கு நிகராகப் போற்றது ஏன் இறைவனாகவே வணங்கப்பட்டது.

**"திங்களைப் போற்றுதும்**
**திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும்"**

**(சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப்பாடல் - பக் - 2)**

என்று நிலவினையும், கதிரவனையும் போற்றி சிலப்பதிகார கதையைத் தொடங்கிய இளங்கோவடிகள் இறைவனாக இயற்கையைப் போற்றியதால்தான் இயற்கை வாழ்த்துப் பாடியுள்ளாா். இலக்கியங்கள் போற்றி வணங்கிய இயற்கையையும் நாமும் போற்றிப் பாதுகாத்து இயற்கையின் அருளையும் ஆற்றலையும் பெற்று சிறப்பாக வாழ்வோம்.

## துணை நூற்பட்டியல்

1. இலக்கியக் கலை அ.ச.ஞான சம்பந்தன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 154 டி.டி.கே சாலை, சென்னை
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம்
3. இளம்பூரணம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி
4. அகப்பொருள் விளக்கம், மூலமும் உரையும் 1907
5. புறநானூறு, மூலமும் உரையும், ஔவை துரைசாமிப்பிள்ளை, சாரதா பதிப்பகம்
6. குயில்பாட்டு, மூலமும் உரையும், கே.ரா.கமலா முருகன், கௌரா பதிப்பகம்
7. சிலப்பதிகாரம் - புலியூர்க் கேசிகன், பாரி நிலையம், சென்னை

# நாட்டுப்புற இலக்கியங்களில் இயற்கை

**சு. முத்துமாரி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*ம.சு.பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

***ஆய்வுச் சுருக்கம்***

*"காக்கை குருவி எங்கள் ஜாதி*
*நீள் கடலும் மலையும் எங்கள்*
*நோக்கும் திசையெல்லாம் கூட்டம்*
*நாமன்றி வேறில்லை"*

*என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப, மனிதனின் வாழ்வு இயற்கையோடு பின்னிப் பிணைந்து உள்ளது. மனிதன் தோன்றுவதும் மறைவதும் இயற்கையின் செயலே. உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் இயற்கையின் படைப்பே. இயற்கையிலிருந்து தோன்றிய மனிதன் இயற்கையை வியந்து இயற்கை தனக்கு வழங்கிக் கொண்டிருக்கும் கொடையை எண்ணி மகிழ்ந்தான். அதே மனிதன் இயற்கை சிலவற்றைத் தன்னிடமிருந்து எடுத்துக்கொண்ட போது துயரம் அடைந்தான். இவ்வாறு தனக்கு ஏற்படும் இன்ப, துன்ப நிகழ்வுகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க விரும்பி, இலக்கியங்களைப் படைக்கலாயினான். எழுத்து வடிவில் இலக்கியம் தோன்றுவதற்கு முன்பே வாய்மொழி இலக்கியங்களை படைத்தான். ஏட்டில் எழுதப்படாத இவ்விலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் எனப்பட்டது. இயற்கையின் எழிலோவியமாகத் திகழும் நாட்டுப்புறக் கலை இலக்கியத்தில் இயற்கை எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் பொருண்மையாகும்.*

## முன்னுரை

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தியின் துணையின்றித் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

**"நிலம் நீர் தீ வளி விசும்பொடு**
**ஐந்தும்**
**கலந்த மயக்கம்"**

**தொல்காப்பியம் மரபியல் - 90**

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது. இத்தகைய இயற்கை காட்சிகளையும் இயற்கையிலிருந்து கிடைக்கும் நன்மைகளையும் மண்ணின் மணம் மாறாத கிராமப்புறங்களில் தான் அனுபவித்து மகிழ முடியும். எனவே, "கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு" என்று அண்ணல் காந்தியடிகள் கிராமங்களின் சிறப்பை உணர்த்தியுள்ளார். இப்படி கிராமங்களில் வாழும் மக்களின் இலக்கியமாகக் கருதப்படும் நாட்டுப்புற பாடல்களில் இயற்கை பற்றிய சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் காண்போம்.

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற பாடல்களை நாட்டார் பாடல்கள் (அ) நாடோடிப்பாடல்கள் எனலாம். நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப் பாடல், குழந்தைப் பாடல், காதல் பாடல், கொண்டாட்டப் பாடல், ஒப்பாரிப் பாடல் எனப் பல வகைப்படுத்தியுள்ளனர். இப்பாடல்கள் அனைத்திலும் கிராமியச் சாயலும், கிராமிய மணமும் நிறைந்து வழிந்து ஓடுவதைக் காண்கிறோம். உதாரணமாக,

**"மண்ணு வீசும் வாசனையும் - எங்க**
**மக்களோட யோசனையும்"**

என்ற பாடல் எல்லா இடங்களிலும் பிரபலமாக ஒலித்துக் கொண்டிருப்பதை அறிகின்றோம்.

## தாலாட்டுப் பாடல்களில் இயற்கை நயம்:

குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக அன்னை பாடும் பாடல் தாலாட்டு பாடல் எனப்பட்டது. தால் என்றால் நாக்கு என்றும் ஆட்டு என்றால் அசைத்தல் என்றும் பொருள் கொண்டு நாவை அசைத்துப் பாடுவதால்

தாலாட்டு என்று பெயரிடப்பட்டுள்ளது எனலாம்.

**“கண்படை கண்ணிய தன் படை நிலையும்”**
**(தொல்காப்பியம் - புறம் - 24)**

என்று தொல்காப்பியம் தாலாட்டுப் பாடலைக் குறிப்பிட்டுள்ளது. குழந்தை அழுகின்ற போது அதனைச் சமாதானப்படுத்தித் தூங்கச் செய்ய

**“ஆராரோ ஆரிராரோ**
**ஆரடிச்சா ஏனழுதாய்**
**மாமன் அடிச்சாரோ**
**மல்லிகைப் பூ செண்டாலே**
**அத்தை அடிச்சாளோ**
**அரளிப் பூச்செண்டாலே”**
**(நாட்டுப்புறப் பாடல்கள் பக் - 102)**

என்று பாடும் போதே இயற்கையோடு சேர்ந்த பொருள்களைப் பற்றியும் உறவு முறைகளைப் பற்றியும் பாடுவது இயல்பு. அப்பாடல்களில் தாய்மாமன் வீட்டு இயற்கைப் பொருட்களின் பெருமை பேசப்படும். தாய்மாமன் குழந்தைக்கு முறைகள் செய்ய வேண்டியன் ஆதலால் அவரது சிறப்புகளும் பாடலின் முக்கிய அம்சமாகத் திகழும்.

**“ஏலக்காய் காய்க்கும்**
**இலை நாலு பிஞ்சு வரும்**
**ஜாதிக்காய் காய்க்கும்**
**உன் மாமன் வாசலிலே**
**(நாட்டுப்புறப்பாடல்கள் - பக் 252)**

**வளர்ச்சி நிலைப் பாடல்களில் இயற்கை**

குழந்தை வளர்ந்து விளையாடும் பருவத்தில் அவர்கள் தாங்களே பாடிக்கொண்டு விளையாடும் மரபு இருந்து வருகின்றது. அப்பாடல்கள் யாவும் வினா விடையால் அமைந்திருக்கும்.

**“அம்புலி அம்புலி எங்க போன**
**ஆவாரங் காட்டுக்கு**
**ஏன் போன**
**குச்சி ஒடிக்க**
**ஏன் குச்சி**
**சோறாக்க---”**

இதனைப் போலவே மற்றுமொரு பாடல்,

**“தேன் தேன்**
**என்ன தேன்**
**கொம்புத் தேன்**
**என்ன கொம்பு**
**மான் கொம்பு”**
**நாட்டுப்புறவியல்லூர் ஆய்வு பக்கம் - 214**

இப்பாடல்களில் இயற்கைப் பொருள்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பது சிறப்பு.

**தொழில் பாடல்களில் இயற்கை நயம்**

காட்டிலும் மேட்டிலும் உழைத்துக் களைத்துவிட்ட மக்களின் களைப்பைப் போக்கி உற்சாகம் தரும் அருமருந்தாகத் தொழில் பாடல்கள் இருந்தன என்றால் அது மிகையில்லை. அப்படி வேலை செய்யும் இடங்களில் உருவாகும் பாடல்களிலும் இயற்கையின் அழகினை அள்ளிப் பருக இயலும்.

**“நாலு மூலை சமுக்க வயல்**
**அதில் நடும் குட்டப்புள்ளே**
**நான் போடும் நாத்துக்களை**
**நீ சேர்த்து நட்டலாகாதோ?**
**நாத்துப் பிடுங்கி வச்சேன்**
**நடுவத் தொளி ஆக்கி வச்சேன்**
**நாத்து நடும் பொம்பளையா**
**சேத்து நட மாட்டியளோ**
**(நாட்டுப்புறவியல்**
**ஓர் ஆய்வு பக்கம் - 302)**

**“அடிக்கும் அலையே நம் தோழன் - ஜலசா**
**அருமை மேகம் நமது குடை - ஜலசா**
**பாயும் புயல் நம் ஊஞ்சல் - ஜலசா**
**பனி மூட்டம் உடல் போர்வை – ஜலசா”**
**(நாட்டுப்புறவியல் ஆய்வு பக்கம் - 325)**

என்ற பாடலில் உணரலாம்.

என்னும் நடுகைப் பாடலில் வேலை செய்யும் இடத்தின் இயற்கைத் தன்மை இடம் பெற்றுள்ளது. வயல் வேலையில் ஈடுபடுவோர் மட்டுமின்றி கடலில் சென்று மீன் பிடிக்கும் தொழிலாளர்களின் பாடல்களில் கூட இயற்கையின் அழகு மின்னுவதை,

**“விடிவெள்ளி நம் விளக்கு - ஜலசா**
**விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா”**

**விளையாட்டுப் பாடல்களும் இயற்கையும்**

விளையாட்டு என்பது உடலுக்கும், மனதிற்கும் உற்சாகம் அளிக்கக் கூடிய ஒரு கலையாகும். அதிலும் குழந்தைகள் பாடல் பாடிக் கொண்டே விளையாடும் போது அது அவர்களின் சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுவதாக அமைகின்றது. அத்தகைய பாடல்களும் இயற்கையை வைத்தே பாடப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"தேன் தேன்
என்ன தேன்
கொம்புத் தேன்
என்ன கொம்பு
மான் கொம்பு"

(நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு பக்கம் -)

"ஒரு குடம் தண்ணியெடுத்து
ஒரு பூ பூத்தது
இரண்டு குடம் தண்ணியெடுத்து
இரண்டு பூ பூத்தது……"

**காதல் பாடல்களும் இயற்கையும்**

**யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளீர்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந் தாம் கலந்தனவே**

குறுந்தொகை 202

என்று குறுந்தொகைப் பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது போல காதல் என்பது அறிமுகம் இல்லாத ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அறிந்தபின் மனங்களை பறிமாறிக் கொண்ட பின் செம்மன் நிலமும் நீரும் கலந்தது போல் பிரிக்க முடியாத உறவாக மாறிவிடுகிறது. நாட்டுப்புறப் பாடலிலும் இத்தகைய இயற்கை காதல் வெளிப்படுவதைக் காணலாம்.

**"ஏரிக் கரையிலே
ஊருக்குத் தெரியாம ஒதுக்குபுறமா
உன்னைப் பாக்கயில தூண்டிலிலே
மாட்டிக் கொண்ட மீனு போல
துடிக்குதடா ஏ மனசு"**

என்ற பாடலிலும்,

**"தங்கத்துக்குத் தங்கம்
பெண்ணே
தனித் தங்கம் நான் இருக்கப்
பித்தளைத் தங்கத்துக்கு
வீணாசைப் பட்டாயோ?**

என்ற பாடலிலும் இயற்கை வருணணையே அதிகம் இடம் பெற்றுள்ளது.

**முடிவுரை**

இலக்கியங்கள் அனைத்தும் இயற்கை சார்ந்தே படைக்கப்பட்டன. இறைவனையும் இயற்கையின் படைப்பாகவே இலக்கியங்கள் கருதுகின்றன. எனவேதான் சூரிய வழிபாடு என்ற ஒன்றை உருவாக்கி சூரியனைக் கடவுளாக வழிபடும் முறை இன்றளவும் காணப்படுகிறது. இதையே நாட்டார் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. மனிதன் தான் வளர்க்கும் விலங்குகளைக் கூட இறைவனாகப் பாவித்து வழிபடும் மரபினை நாட்டார் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் இயற்கை வாழ்ந்தால் தான் மனிதனும், பிற உயிர்களும் பூமியில் வாழ இயலும். எனவே இயற்கையைப் பேணி பாதுகாக்க வேண்டும் என்னும் சமூக அக்கறை கொண்ட இலக்கியங்களே வாய்மொழி இலக்கியங்களாக மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

# நற்றிணையில் இயற்கை

**முனைவர் கு. அழகேசன்**
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்*
*சிவந்தி ஆதித்தனார் கல்லூரி, பிள்ளையார்புரம்*

## முன்னுரை

சமுதாய வாழ்வு மேம்பாடு அடைவதற்குச் சமய வழிபாட்டு முறைகள் வழிகோலுகின்றன. எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும், எவ்வாறு தெய்வத்தை வணங்க வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் வரையறை செய்துள்ளனர். யாருக்கெல்லாம் வழிபாடு செய்தல் வேண்டும் என்பதை விரிவாக எடுத்துக்கூறியுள்ளனர். இறைவனை வணங்குதல், அரசன் சான்றோர்களை வணங்குதல் போன்ற வழிபாட்டு பண்பாடுகளை வகுத்துக் கூறியுள்ளனர். எட்டுத்தொகை நூல்களிலொன்றான நற்றிணையில் வழிபாட்டு முறைகள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## தொல்காப்பியம்

தமிழ் மக்களின் வாழ்வியலின் அனைத்து அங்கங்களினதும் மூலத்தை அறிவதற்கு நாம் இன்று நாடும் ஒரே ஆவணம் தொல்காப்பியம் ஆகும். ஒரு மொழியின் பழமையை, பெருமையை எடுத்துரைக்கும் ஆவணங்களுள் முதன்மையானது அம்மக்கள் விட்டுச் சென்ற இலக்கியங்களாகும். அவை அம்மக்கள் வாழ்ந்த காலத்துப் பண்பாட்டின் சான்றுகளாகும். ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையை வணங்கினான். இயற்கை நம்பிக்கைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தான். அதுவே காலப்போக்கில் அவ் இயற்கையின் ஆற்றலே கடவுளாக மாற்றம் பெற்று உருவெடுத்து செயல்படுகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இயல்பில் அவரவர் தேவைக்கேற்ப கடவுள் வழிபாடு அமைந்திருந்தது.

## நற்றிணையில் குறிப்பிடப்படும் தெய்வங்கள்

பழந்தமிழர்களால் வழிபாட்டு நிலையில் வைத்து வணங்கப்பட்ட தெய்வங்களை அவற்றின் இயல்பு நோக்கி இரண்டு வகையாகப் பாகுபடுத்தி நோக்கலாம்.

1) நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்
2) இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்

## நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்

தொல்காப்பிய காலத்தில் தெய்வம் வாழ்வின் ஒரு அங்கமாக இருந்திருக்கிறது. சங்க அகப்பாடல்களில் திணைகளுக்கு நிலங்களை கூறி அவற்றிற்குரிய கருப்பொருளில் ஒன்றாகத் தெய்வத்தைக் கற்பித்து தொல்காப்பியம் என்றே கூறலாம்.

சங்க கால மக்கள் தம்முடைய தொழில் அடிப்படையிலேயே தெய்வத்தை உருவாக்கினர். மக்கள் வாழும் இடம், காலம் இவைகளுக்கு ஏற்பவே அவர்களுடைய அக வாழ்க்கையும், புற வாழ்க்கையும் அமைந்திருந்தன. இந்நிலையில் நானில மக்களிடம் இருப்பிடம், சமுதாய அமைப்பு தொழில் இவைகளுக்கு ஏற்பவே தெய்வங்களும் அமைந்து இருந்த தன்மையை அறியமுடிகின்றன.

தொல்காப்பியம் குறிப்பிடும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலான தெய்வங்களைப் பற்றியும் அத்தெய்வங்களின் வழிபாடு முறைமைகள் பற்றியுமே நற்றிணை பாடல்களில் அறிந்து கொள்ள முடிகின்றது.

## முல்லை நிலத்துத் தெய்வம் மாயோன்

மாயோன் என்பது கருமை திறமுடையவன் திருமால் எனப் பொருள்படும். மாயோன் என்ற சொல்லுக்கு ஆச்சர்ய சக்தி உடையோர் என்ற பொருளும் உண்டு. பரிமேலழகர் பரிபாடலில் மாயோன் என்பதற்கு கரிய நிறமுடையவர் என்று

பொருள் தருகிறார். சங்க காலத்தில் மாயோன் முல்லை நிலத்துத் தெய்வமாக வணங்கப்பட்டான் மாயோன் வழிபாடு தமிழ்நாட்டின் பூர்வீக வழிபாடுகளில் ஒன்றானதாகும்.

நற்றிணையில் கடவுள் வாழ்த்து மாயோனைப் பற்றியதாகக் காணப்படுகின்றன. இதை பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவராகும். இவர் பாடிய பாடல்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, திருவள்ளுவமாலை முதலான நூல்களிலும் காணப்படுகின்றன. இக்கடவுள் நூல்களிலும் திருமாலின் திருமேனதி வர்ணனையுடன் அவனது தொழில் பற்றியும் குறிப்பிடப்படுகின்றன.

### குறிஞ்சி நிலத்துத் தெய்வம் சேயோன்

சேயோன் என்பது முருகக் கடவுள் சிவன் முதலிய தெய்வங்களைக் குறிக்கும் சொல்லாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் சேயோன் என்ற சொல் பெரிதும் முருகனையே குறித்து நிற்கின்றன. சேயோன் மேயமை வரை உலகு என்பதனால் முருகன் குறிஞ்சி நிலத்துத் தெய்வமானது புலப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் முருகன் மலைத் தெய்வமாகவே சிறப்பித்துக் கூறப்படுகின்றான். தமிழரின் முதல் தெய்வம் முருகன் என்பர். குறிஞ்சி நில மக்கள் தமக்கு அவ்வப்போது ஏற்படும் துன்பங்களை நீக்க முருகக் கடவுளை வழிபாடு செய்து தமது பரிகாரங்களுடன் குன்றிக்குரவைக் கூத்தாடுவர். முருகனைப் பூச்சிப்பவன் “வேலன்” எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. முருக கடவுளுக்கு பலி கொடுப்பது இக்கால வழக்கமாயிருந்தது.

காதல் நோயால் பிடிக்கப்பட்ட தலைவியின் மேனி மாறுதல்களை இன்னதென்று அறிய மாட்டாத தாய் அதனைத் தெய்வக் குற்றமோ என்று அஞ்சி முருகனை வழிபட்ட செய்தியினை நற்றிணைப் பாடல்கள் தருகின்றன.

**“இளனம தீர்ந்தனள் இவளென வளமனை**
**அருங்கடிப்பதனை ஆயினும் சிறந்து இவள்**
**பசுந்தனள் என்பது உணராய் பன்னொள்**
**எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி”**

(நற்.351 : 1-4)

### இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வம்

மரம், குன்று, ஞாயிறு, திங்கள், தீ முதலான இயற்கை பொருட்கள் சங்க கால மக்களால் வணங்கப்பட்ட செய்தியை இலக்கியங்கள் தருகின்றன. இயற்கை வழிபாடு பெரும்பான்மை அளவிற்கு சங்க கால மக்களின் வாழ்க்கையிலே அடிமையானதாக அமைந்திருந்தது. இயற்கை அவர்களது வாழ்க்கை பின்னணியாக இருந்ததனால் இயற்கைப் பொருட்கள் அவ்வழிபாட்டுக்கு உரியனவாக இருந்தன.

இயற்கையுடன் போராடி வாழ வேண்டி இருந்த இயற்கையையே தன் வாழ்விடமாகக் கொள்ள வேண்டிய நிலை அவன், தன் வாழ்வதற்கு இடம் தந்த குன்றுகளையும், இருட்டில் விலக்கிய சூரியனையும், நீரையும், வானையும் வணங்கத் தொடங்கினான். இயற்கை தொடர்பான அச்சமும் அவனை இவற்றை தோற்றுவித்து என்கிறார். உரோமானிய எழுத்தாளர் பெட்ரோனியஸ்.

### மர வழிபாடு

இயற்கைப் பொருட்களின் மரங்களை மிகுதியாக உலக மக்கள் வணங்கப்பட்டன. இயற்கை நிலையில் மரவழிபாடு தமிழர் வாழ்வியலோடு இணைந்திருந்தமையைப் பண்டைய இலக்கியச் சான்றுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மரவழிபாடானது நன்றியுணர்வு அல்லது அச்ச உணர்வு காரணமாகவே தோன்றியிருக்க வேண்டும். வழிபடும் மரங்களில் பெரும்பாலானவை பழங்கள் நல்குவனவாகவும், பரந்த அளவில் கிளை பரப்பி நிழல் தருவனவாகவும் காணப்படுகின்றன. எனவே நன்மை நல்கும் மரங்கள் மீது அன்பும் நன்றியுணர்ச்சியும்

மேலிட வழிபாடு உருவாகிற்று. நச்சுமரம் பற்றிய அச்ச உணர்வு, நச்சுமர வழிபாட்டைத் தூண்டியது எனலாம்.

தீ முதலான இயற்கைப் பொருட்கள் சங்க கால மக்களால் வணங்கப்பட்ட செய்தியைச் சங்க இலக்கியங்கள் தருகின்றன. இயற்கை வழிபாடு பெரும்பான்மையான அளவிற்கு சங்க கால மக்களின் வாழ்க்கையிலே அடிப்படையானதாக அமைந்திருந்தது. இயற்கை அவர்களது வாழ்க்கைக்கும் பின்னணியாக இருந்ததால் இயற்கைப் பொருட்கள் அவர்களது வழிபாட்டுக்கு உரியனவாக இருந்தன.

இயற்கையுடன் போராடி வாழ வேண்டி இருந்தால் இயற்கையே தன் வாழ்விடமாகக் கொள்ள வேண்டிய நிலையில் அவன் தான் வாழ்வதற்கு இடம் தந்த குன்றுகளையும், இருட்டினை விலக்கிய சூரியனையும், நீரையும், வானையும் வணங்கத் தொடங்கினான்.

மரவழிபாட்டின் தொன்மையை நற்றிணைப் பாடலொன்றின் அடிகள் சுட்டி நிற்கின்றன.

**“தொன்று உரை கடவுள் சேர்ந்தி பாரரை**
**மற்றப் பெண்ணை. . . . ”** (நற்.3-4)

இப்பாடல் மூலம் பனை மரத்தை வணங்கும் நடைமுறை அறியப்படுகின்றன.

**மலை வழிபாடு**

பழந்தமிழரிடையே நிலவிய மலை வழிபாடு பற்றிச் சங்க இலக்கியங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. மலைகளில் தெய்வங்கள் உறைவதாகக் கருதிய மக்கள் மலைகளை வணக்கத்தக்குரிய நிலையில் வைத்து வழிபடத் தொடங்கினார்கள். சங்க இலக்கியங்களில் மலையைக் குறிப்பதற்கு வரை, கல், குன்று, கோடு, அடுக்கம், சாரல், பொருப்பு, சிலம்பு, வெற்பு முதலான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மலைப்பகுதியினரான குறிஞ்சி நில மக்கள் உணவுப் பொருள் சேகரித்தலையும், வேட்டையாடுதலையும் தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். இக்குன்றுகள் அவர்களுக்குப் பயன்தரும் பொருட்களையும், வாழிடங்களையும் வழங்கின. இதற்காக இக்குன்றுகள் இம்மக்களால் தொழப்பட்டிருக்கலாம்.

பழந்தமிழரிடையே மாத்திரமன்றி உலகின் பல்வேறு இனமக்களிடையேயும் இக்காலப் பகுதியில் மலை வழிபாடு சிறப்பிடம் பெற்றிருந்ததனை ஆராய்ச்சியாளர்கள் பலர் வெளிப்படுத்தியுள்ளனர். மலையை மாயப்பானியர் பெண்ணாக உருவகித்து வழிபட்டனர். கிரேக்கர்கள் மலையைத் தாய்த்தெய்வமாக வழிபட்டனர்.

**முடிவுரை**

பழந்தமிழ் மக்களிடையே நிலவும் நம்பிக்கைகள் குறித்து இங்கே கூறப்பட்டுள்ளது. கடவுளே உலகத்தைப் படைத்தான் எனவும், கடவுள் என்பவன் மறைந்திருக்காமல் எங்கும் நடமாடிக் கொண்டிருப்பவன் எனவும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் எனவும் கூறப்பட்டுள்ளது. காக்கைக்கு உணவினைப் படைத்து வழிபடும் முறையும் இதில் கூறப்பட்டுள்ளது.

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

## Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Hosted by**

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

**T.Kallikulam**

(Accredited by NAAC with 'A' Grade)

(Affiliated to Manomaniam Sundaranar University)

(Co-Educational Institution)




Impact Factor 4.650

Articles should be mailed to
bodhijournal@gmail.com

**BODHI**
**International Journal of Research in Humanities, Arts and Science**
www.bodhijournals.com

Powered & Published by
**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**
www.crrps.in